# உயிரே உயிரே

## *நாவல்*

## *ஆனதி*

**சமர்ப்பணம்**

தம்மை
இறுதிவரை அர்ப்பணித்து
காணாமல்போன
உறவுகளுக்கு

### என்னுரை

இது நான் எழுதிய நாவல்களில், வெளிவரும் முதலாவது நாவல். சிறிலங்காப் படையினரால் தடுத்துவைக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் இதை எழுதினேன். என் போர்க்கால வாழ்க்கையில் கவிதைகளும் சிறுகதைகளும் எழுதியிருக்கிறேனே தவிர நாவலெதுவும் எழுதவில்லை. மனசுக்குள் நாவலுக்கான வடிவங்கள் இருந்தாலும் ஆறஅமர்ந்து எழுத நேரமிருக்கவில்லை. என் கவிதைகள் நூலாக்கப் பட்டிருக்கின்றன. கவிதை நூலை வெளியிட்டதுபோல இதை வெளியீடு செய்யமுடியாத சூழலில் இப்போதிருக்கிறேன். அடிப்பெட்டிக்குள் ஒளித்துவைத்திருந்த இந்நாவலை அவனிக்குத்தர இப்போதும் எனக்குத் தயக்கம்தான். காரணம் நான் எழுதவேண்டிய கதைகள் இன்னும் இருக்கின்றன. அதற்குள் நான் இனங்காணப்பட்டு என்முன்னால் நீண்டிருக்கும் துப்பாக்கி என்னைத் தீர்த்துக்கட்டிவிட்டால் இனிமேல் என்னால் எழுதமுடியாமல் போய்விடுமே. அந்தக் கவலைதவிர வாழும் ஆசை அதிகம் இல்லை எனக்கும். ஏனெனில் மரணம் வராதவரைக்கும் வாழவேண்டி இருக்கிறதே என்ற கட்டாயவாழ்க்கை வாழும் தமிழர்களில் ஒருத்திதான் நானும்.

இங்கே நான் வடித்திருக்கும் பாத்திரங்களில் எல்லாப் பாத்திரங்களும் உண்மையானவையே. வாழும் சாட்சிகளாக இருக்கும் பல மனிதர்களின் உண்மையான உணர்வுகளைத்தான் சில பாத்திரங்களில் கோர்த்திருக்கிறேன். இதில் வரும் எந்த சிறிய சம்பவத்தை கேட்டாலும் இது இன்னாருடைய சம்பவம்தான் என்று என்னால் சொல்லமுடியும். போரின் இறுதிநாட்களில் முள்ளிவாய்க்கால் பகுதியில் வாழ்ந்தவர்கள் எவரும் இப்பாத்திர படைப்புகளை உண்மை என்று ஏற்றுக்கொள்வார்கள். அந்த வாழ்க்கையை நான் மீள எழுதும்போது மீண்டும் வன்னிமண்ணில் குருதி நெடியோடும் பிணவாடையோடும் எறிகணை வீச்சுக்குள்ளும் வாழ்ந்த உணர்வை பெற்றேன். வலியோடும் வேதனையோடும் இதனை எழுதிக்கொண்டிருந்த நாட்களில் வீதியில் பயணித்த ஐ.சி.ஆர்.சி வாகனத்தின் கொடியினால் ஏற்பட்ட சத்தம்கூட எறிகணை பராஜ் பண்ணப்படுவதாய் நினைத்து என்னை நிலத்தில் விழவைத்திருக்கிறது. காற்றால் அசைக்கப்பட்ட தகரத்தின் சத்தம்கூட எறிகணை கூவிக்கொண்டு வருவதாய் நெஞ்சை படபடக்கச் செய்திருக்கிறது. அந்த உயிராபத்தான சூழலுக்குள் மீண்டும் வாழ்ந்த உணர்வு எழுதி முடித்தபோது இருந்தது. இதை பதிப்பாக்கத்திற்காக கணணியில் பொறித்தபோதும் அதை மீள்வாசிப்புச் செய்தபோதும் மீண்டும் மீண்டும் குருதி பாய்ந்த வன்னிக்குள் கிடந்து எப்படித் துடித்திருப்பேன் என்பதை இதை வாசிக்கும் ஒவ்வொருவரும் புரிந்துகொள்வீர்கள்.

இந்த நாவல் எப்படி, எங்கு வெளிவரும் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. 'வாய்ப்புக் கிடைத்தால் வாழ்ந்து காட்டலாம் மரணத்திலாவது' என்ற சின்ன விருப்பத்தோடு இதை பிரசுரிக்க ஒப்புகிறேன்.

சொந்தப்பெயரில் வாழமுடியாத சூழலில் வாழ்வதால் புனைபெயர்களில் வாழும் வாழ்க்கை எனக்கும். வாசகர்கள் என்னைப் புரிந்துகொள்ளவேண்டும் என்பது எனது நோக்கமல்ல. என் செய்திகளை புரிந்துகொண்டால் போதும். அது மட்டுமே என் விருப்பம், வேண்டுகோள்.

நன்றி

**ஆனதி**
09.09.2011

E- Mail :- aanathy10@gmail.com

## 01 புறப்பட்டாள் சுமதி

இப்படியொரு பயணத்திற்குத் துணிவாள் என்று சுமதி கற்பனையில்கூட நினைத்திருக்கவில்லை. என்ன வேகமாய் வீட்டைவிட்டே புறப்பட்டு விட்டாள். அவளுக்கே அது ஆச்சரியமாகத்தான் இருந்தது. பிறந்து வளர்ந்த இந்த இருபத்தெட்டு ஆண்டுகளில் எவருடைய வீட்டிலும் போய் ஒருநாள்கூட தங்கியிராத அவளா இப்படி வீடே வேண்டாம் என்று புறப்பட்டு வருகிறாள்? பதினெட்டு வயதுப்பெண் இப்படிச் செய்தால் அதை வயதுக்கோளாறு என்பார்கள். இவள் அந்தக் கோளாறுக்குரிய வயதினள் அல்லவே. ஆனால் அந்த வயதுக்கேயுரிய கோளாறான காரணம்தானே அவளைப் புறப்பட வைத்தது. காதலுக்குக் கண்மண் தெரியாதென்பது உண்மைதான்போலும்.

சுமதி வீட்டைவிட்டுப் புறப்பட்டபோது இருந்த மன வைராக்கியத்தில் அவளுக்கென்றான எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டேதான் வந்தாள். அவளே உழைத்து தனக்கென்று செய்த நகைகள், அவள் படித்துப்பெற்ற சான்றிதழ்கள், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், அடையாள அட்டை போன்ற அவசியமானவற்றோடு மேலதிகமாக நான்கைந்து உடைகள்தான் எடுத்துக்கொண்டாள். ஒற்றைப்பையினுள் அனைத்தையும் திணித்துத் தூக்கிக்கொண்டு, போகிறேன் என்றுகூடச் சொல்லாமல் வீட்டைவிட்டு வெளியேறிவிட்டாள்.

சுமதி இயல்பிலேயே பிடிவாதக்காரிதான். எவருக்காகவும் தான் பிடித்த பிடியைத் தளர்த்த மாட்டாள். அவளது வீட்டில் எல்லோருக்கும்தான் அந்தப்பிடிவாதம் இருக்கிறது. அவரவர் அவரவருக்கான தனித்துவங்களோடு திக்கொன்றாய்த்தான் வாழ்கிறார்கள். அம்மாவும் அப்பாவும் மட்டும்தான் ஒற்றுமையின் சிகரங்கள். பிள்ளைகள் ஆறுபேரும் நவக்கிரகங்கள்போலத்தான் தனிப்பிறவிகளைப்போல வாழ்கிறார்கள். இவள் சுமதி நான்காவது பெண். கடைக்குட்டி மட்டும்தான் ஆண்பிள்ளை. பெற்றோரின் அளவுகடந்த செல்லம் அவன். மூத்த சகோதரிகளுக்கும் இன்னும் திருமணம் கூடவில்லை. அதைப்பற்றியெல்லாம் எவருக்கும் அக்கறையில்லை. மூத்தவளுக்குச் செவ்வாய் குற்றமாம். இளையவளுக்கு மணம்முடிப்பதில் விருப்பமில்லையாம். மூன்றாமவள் மூளைவளர்ச்சி குன்றியவள் என்பதால் வாழ்க்கைக்கு லாயக்கற்றவளெனக் கருதப்படுபவள். நான்காமவளான இவளோ தலைக்கனத்தின் இலக்கணம். எப்படி இப்படி வளர்ந்தார்களோ தெரியவில்லை. யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய கௌரவத்தை இவர்களும் கட்டிக்காப்பவர்கள். சாதி, சமய, சமூக கௌரவங்களை சுமந்துகொண்டு அவற்றுக்காக எதையும் இழக்கத் துணிந்தவர்கள். கௌரவம் என்று கட்டிக்காக்கப்படும் அவற்றுக்காக தங்கள் சொந்தப் பிள்ளைகளையே தெருவில் எறியவும் தயங்காதவர்கள். இப்படிப்பட்ட காரணங்களால்தானே சுமதியும் வெளியே எறியப்பட்டாள். அவர்களென்ன எறிவது? இவளேதான் வீட்டைவிட்டு வெளியேறிவிட்டாள்.

இயல்பிலேயே சாதியும் சமயமும் குடியிருந்த வீட்டில் நட்புக்கெல்லாம் இடமிருக்கவில்லை. பாடசாலை நட்பெல்லாம்கூட பாடசாலைச் சூழலோடு சரி. ஆளாளுக்கு வீட்டுக்கு ஆட்களை அழைத்துக்கொண்டு வந்தால் கண்டது கடியதுகளும் வந்துபோகுமாம். சுமதியும் இவற்றைப் பற்றியெல்லாம் அலட்டிக்கொள்வதில்லை. அதையிட்டு அவளுக்கு எந்தப்பிரச்சினையும் வந்ததில்லை. அவளுக்கு நட்பும் கிடையாது. தோழியும் கிடையாது. அவளது தனிப்போக்கு எந்த நட்பையும் அவளுக்கு ஏற்படுத்தவுமில்லை. அதையிட்டெல்லாம் அவளுக்கு வெட்கமுமில்லை துக்கமுமில்லை, அக்கறையுமில்லை. ஆனால் அமுதாவை ஏனோ பிடிக்கும். சுமதி படிப்பில் ஒன்றும் அதிகமான உச்சத்தைத் தொடவில்லைத்தான். அதற்காக வீட்டில் முடங்கிக்கிடக்க விரும்பவில்லை. அவளது தாயார் வேலை செய்த மருத்துவமனையில் கதைத்து சலுகையின் அடிப்படையில் தாதியாக வேலைக்கமர்ந்தாள். என்றாலும் அந்தவேலை அவளுக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. நோயும் நொடியுமான மனிதர்களை எந்தநேரத்திலும் பார்த்துக்கொண்டிருப்பது அவளுக்கு எரிச்சலூட்டியது. மருந்துகட்டிவிடுவது, ஊசிமருந்தேற்றுவது என்பதெல்லாம் அவளுக்கு ஒருதுளியும் விருப்பமில்லாத வேலை. எப்படியும் தன்னுடன் துணையாக வேலை செய்பவர்களை ஏவி தன் வேலைகளைப் பாதியாகக் குறைத்துக்கொள்வாள். அதற்காக கடமையே கருத்தாக இருக்கக்கூடிய தாதிகளோடேயே தனக்கான கடமை நேரத்தையும் ஏற்பாடுசெய்துகொள்வாள். அப்படி நெருக்கமானவர்களில் ஒருத்திதான் அமுதாவும்.

எந்நேரமும் வேலை வேலை என்று மாயும் அமுதா நல்ல பண்புள்ளவளாக இருந்தாள். சுமதியோடு நட்புடன் பழகினாள். ஊசிபோடுவது எப்படியென்று சுமதிக்குப் பழக்கியவள் அமுதாதான். நோயாளிகளை

அனுசரித்துப்போகும் பக்குவத்தைத்தான் அமுதாவால் அவளுக்குப் பழக்கவே முடியாமல் போயிற்று. அமுதாவை தன் நண்பி என்று சுமதி சொன்னது கிடையாது. அமுதா சுமதியை விளங்கிக் கொள்கிறாள். அதனால் முரண்பாடுகள் இல்லை.

சுமதியைக்கண்டால் நோயாளிகள் கப்சிப் என்று அடங்கிவிடுவார்கள். தப்பித் தவறி சுமதிதான் அன்று மருந்துகட்ட வருகிறாள் என்றால் காயத்தின் கட்டை அவிழ்க்க முன்னரேயே கதறத்தொடங்கிவிடுவார்கள். வலியைப்பற்றி கொஞ்சம்கூட பொருட்படுத்த மாட்டாள். வெடுக்கென்று இழுத்துக்கழற்றி, தேய்த்துவிட்டு இறுக்கிக்கட்டுவாள். இவளெல்லாம் ஒரு தாதி இவளுக்கெல்லாம் ஒரு கூலி என்று இவளின் காதுபடவே பலர் புறுபுறுத்திருக்கிறார்கள். அந்த வார்த்தைகளெதுவும் இவளைத் தாக்கியதில்லை. உண்மையாகவே அமுதாவைப் போன்றவர்கள்தான் இந்தத் தொழிலுக்கு ஏற்றவர்கள் என்று சுமதிக்கும் தெரியும். சுமதியையும் அமுதாவைப் படைத்த கடவுள்தானே படைத்திருக்கிறார். இதுவரைக்கும் துன்பதுயரங்களென்று தராமல் அவளை சுயமாக வாழவைக்கும் கடவுளுக்கு விரதங்கள் இருந்து நன்றி தெரிவித்துக்கொள்வாள். அது அவளது குடும்ப வழமை. ஆனால் அந்த வழமைகளைக்கூட மீறிவிட எப்படித்துணிந்தாள்.

புதிதாக வேலையில் இணைந்த வாமன்தான் அவளை மாற்றினான். வாமனின் இளநகை, அவனது மாநிறம், அவனது உயரம், அவனது பேச்சு என்று எல்லாமுமே சுமதியை கவர்ந்தன. அமுதாவைப்போல அவனும் கடமையில் கருத்தாகத்தான் இருந்தான். ஆனாலும் அவன் அவளை வசீகரித்தான். சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போதெல்லாம் 'ஹாய், குட்மோனிங், டியூட்டி முடிஞ்சிதா? இப்பதான் வாறிங்களா? என்று ஒற்றைச் சொற்களில் அவளுடன் பேசியிருக்கிறான். ஆனால் அந்த ஒற்றைச் சொற்களுக்காக சுமதி காத்திருக்கத் தொடங்கிவிட்டாள். அவனுக்கு குட்மோனிங் சொல்வதற்காகவே வாசலில் காத்துக்கொண்டும் நின்றிருக்கிறாள்.

எப்படியோ ஊர் பேர் கேட்டு, வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் கொஞ்சம் அதிகமாகப்பேசி உறவை வளர்த்துக்கொண்ட பின்புதான் அவளது உள்மனம் சொன்னது 'அடியேய் சுமதி நீ வாமனைக் காதலிக்கிறாய்' என்று. உள்ளுக்குள் பட்டாம்பூச்சிகள் சிறகடித்தன. அவளது நடையில் புதிதாக ஒரு துள்ளல் தெரிந்தது. முகத்தில் மகிழ்ச்சி பொழிந்தது. மாற்றங்கள் அப்பட்டமாய்த் தெரிந்தன. அவளை அவளே அதிசயமாகப் பார்த்தாள். கண்ணாடியின் முன்னால் அதிக நேரத்தைச் செலவழித்தாள். தன்னையே தான் ரசித்தாள். அதைவிட வாமனை ரசித்தாள்.

வாமன்கூட சுமதியை விரும்பத்தான் விரும்பினான். எதற்காக என்று தெரியாது. வாமனைக்கவரும் ஏதோவொன்று சுமதியிடம் இருக்கிறது. அது என்னவென்பது அவனுக்கே புரியவில்லை. அதை புரிந்துகொள்வதற்காகவே அவன் சுமதியுடன் நிறையத்தடவைகள் கதைத்திருக்கிறான்.

சுமதிக்கு தான் செய்யும் வேலையில் அதிக ஈடுபாடு இல்லை என்பது வாமனுக்கும் தெரியும். அவனோ தான் செய்யும் கடமைக்காக உயிரையே விட்டுவிட வேண்டுமானாலும் விடக்கூடியவன். இப்போதும் தன் கடமை நிமிர்த்தமாகத்தான் தொழில் கற்க வந்திருக்கிறான். அதைப்பற்றியெல்லாம் இன்னமும் அவன் சுமதிக்குச் சொல்லவில்லை. சொன்னால் அவள் அவனையே புறக்கணித்துவிடவும் கூடும். இருவரும் கதைக்கும் நேரங்களில் போராட்டம் பற்றிய கதை வந்தால்சரி சுமதிக்கு முகம் கடுகடுத்துவிடுகிறது.

'உதுகளப்பத்தி என்னோட கதைக்க வேண்டாம்.' என்று கறாராகச் சொல்லிவிடுவாள்.

வாமன் ஒருநாள் அவளை இருத்திவைத்து விளக்கம் கேட்டான்.

'எனக்கு இயக்கமெண்டாலே பிடியாது. அவங்கள் செய்யிறதெல்லாம் அநியாயம். வரி, வட்டி எண்டுகொண்டு நிப்பாங்கள். தாங்கள் போராடுறம் எண்றதுக்காக மற்றாக்களையும் வரச்சொல்லி பிரச்சாரம் பண்ணிக்கொண்டு நிக்கிறாங்கள். உதுகளெல்லாம் எனக்குப் பிடியாது.'

'பிடிக்கும்.' என்றான் அவன்.

'இல்ல பிடிக்காது.' என்று உறுதியாகச்சொன்ன சுமதியைப்பார்த்து அவன் கொடுப்புக்குள் சிரித்துக்கொண்டு எழுந்துசென்றான்.

இரவு படுக்கையில் கிடந்தபோது சுமதி வாமனுடன் அன்று கதைத்ததைப்பற்றி நினைத்தாள். அப்போதுதான் அவளுக்கு அவனது அந்தச் சிரிப்பில் ஏதோ பொருள் இருப்பதாகப்பட்டது.

'உதுகளெல்லாம் எனக்குப் பிடியாது.'

'பிடிக்கும்.

'இல்ல பிடிக்காது.'

அவனது மர்மப் புன்னகை.

அப்படியானால்…..? சிலவேளை அவனுக்கு இயக்கத்தை பிடிக்குமோ? அவனை இவளுக்குப் பிடிக்கும் என்றால் அவனுக்குப் பிடித்தது இவளுக்கும் பிடிக்கத்தானே வேண்டும் என்ற அர்த்தத்தில் சொன்னானோ?

பலவாறான கேள்விகளோடேயே உறங்கி, விழித்து, சுமதி அடுத்தநாள் வேலைக்குச் சென்றபோது வாமன் பலவிதமான வேலைகளோடு ஓடித்திரிந்தான். அன்று கதைப்பதற்கு நேரமே கிடைக்கவில்லை.

பின்பொருமுறை ஆறுதலாகக் கதைக்கக் கிடத்தபோது கேட்டாள்.

'ஏன் அண்டைக்கு அப்பிடிச் சொன்னியள்?'

'எப்பிடிச் சொன்னனான்?'

'இயக்கத்தை எனக்குப் பிடிக்கும் எண்டு?'

'ஏன் பிடிக்காதா?'

'இல்ல. பிடிக்கவே பிடிக்காது. அதைப்பற்றித்தான் தெளிவாய் சொல்லியிருக்கிறனே.'

'……….'

'அவங்கள் தேவையில்லாமல் மினக்கெடுறாங்கள்.'

'………….'

'ஏன் அப்பிடிச் சொன்னிங்கள் எண்டெல்லோ கேட்டனான்? ஏன் உங்களுக்கு அவையளப் பிடிக்குமே?'

அவனது முகத்தில் பலவாறான சிந்தனைக் கோடுகள்.

'சொல்லுங்களன். இயக்கத்துக்கும் உங்களுக்கும் ஏதும் தொடர்பிருக்கோ?' என்று சுமதி சந்தேகத்துடன் கேட்டாள். அவன் இல்லை என்பதுபோலத் தலையசைத்தான்.

'ஏன் இதச்சொல்ல இவ்வளவு யோசிக்கிறிங்கள்?'

'இயக்கத்தப்பற்றித்தான் யோசிச்சன்.'

'நீங்களேன் அதைப்பற்றி யோசிக்கணும்? எங்களுக்கும் அவைக்கும் எந்தத் தொடர்பும் தேவையில்லை. அவங்களோட எந்தச் சோலிக்கும் போகக்கூடாது.' என்றாள் சுமதி.

இவர்களது காதலை அமுதாவும் அறிவாள் என்பதால் சுமதி வாமனைப்பற்றி அமுதாவுடன் மட்டும்தான் கதைப்பாள். அமுதாவுக்கு இருவரையும் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் பொருத்தப்பாடற்ற இடங்களில் அவசரப்பட்டு அன்பைப் பகிர்ந்துகொண்டார்களோ என்று யோசிப்பாள். ஏனெனில் சுமதியின் சுயநலப் போக்குகள் வாமனுக்குக் கொஞ்சமும் ஒத்துவரப்போவதில்லையே.

## 02 வரவேற்றது கிளிநொச்சி

வாமன் மருத்துவமனையில் இருந்து புறப்படும்போது சுமதியிடம் சொல்லிக்கொள்ளாமல்தான் புறப்பட்டான். அவளிடம் சொன்னால் அவள் கேட்கும் ஆயிரம் கேள்விகளுக்கும் விளக்கம் சொல்லிக்கொண்டிருக்க அவனால் முடியாது. அதனால்தான் அவளின் விடுமுறை நாளாகப்பார்த்து புறப்பட்டுவிட்டான். அந்தப் பயணத்தைப்பற்றி அவனேகூடத் திட்டமிட்டிருக்கவில்லை. திடீரெனத்தான் அவனுக்கான அழைப்பே வந்திருந்தது. சொன்ன திகதியில் அவன் புறப்பட்டுவிட்டான். எப்படியும் சுமதி தன்னை தேடுவாள் என்பதால் அமுதாவிடம் கடிதமொன்றைக் கொடுத்துவிட்டுத்தான் புறப்பட்டான்.

அடுத்தநாள் காலை சுமதி கடிதத்தை அவசரமாக பிரித்துப்படித்தபோது, உடனடியாக வீட்டுக்கு போகவேண்டி இருக்கிறது. புறப்பட்டுவிட்டேன். நேரில் சொல்லவில்லை என்று கோபிக்க வேண்டாம். அதற்கு அவகாசம் இருக்கவில்லை என்று தகவலாக மட்டுமே இருந்தது. கீழே ஒரு முகவரியும் இருந்தது. அவனது பயணம்பற்றி அமுதாவிடம் கேட்டபோது அதைப்பற்றி தெரியாது என்றாள்.

அவனது வீட்டில் ஏதும் சிக்கலோ? யாரும் செத்துக்கித்துப் போனார்களோ? அல்லது யாருக்கும் வருத்தம் என்றுதான் அழைத்தார்களோ? பலவாறான காரணங்களைச் சொல்லி தேற நினைத்தாலும் அவன் சொல்லாமல் சென்றது அவளுக்கு வேதனையாகத்தான் இருந்தது. அவளிடம் தொலைபேசியில்கூட கதைக்கமுடியாத அளவுக்கு அப்படி என்ன அவசரம் நேர்ந்தது அவனுக்கு? அந்த முகவரியை மட்டும் கொடுத்துவிட்டுப் போனவன்தான், ஒருமாதம் கழித்து கடிதமொன்றை அனுப்பியிருந்தான். தான் நலமாக இருப்பதாகவும் ஏன் அவள் கடிதம் எதுவும் எழுதவில்லை என்றும் அதில் கேட்டிருந்தான்.

'உங்கள் கடிதம் கிடைத்தது. என்னிடம் விபரம் சொல்லிவிட்டுச் சென்றதுக்கு நன்றி' என்று மட்டும் எழுதி பதிலனுப்பினாள். சுமதிக்கு அவனில் கோபம் இருந்தது. அவளெழுதிய அந்த இரண்டுவரிகள் அவனுக்குக் கிடைத்ததா இல்லையா என்றுகூட சுமதிக்குத் தெரியவில்லை. ஏனெனில் பல மாதங்களாக அவனிடமிருந்து எந்தத் தகவலுமில்லை. சுமதிக்குள் ஒரே குழப்பம். வாமன் பொறுப்பற்று

நடந்துகொள்வதாகவே அவளுக்குப்பட்டது. எனினும் சில கடிதங்களை அவள் எழுதியனுப்பினாள். அவற்றிலெல்லாம் விரைவில் யாழ்ப்பாணத்துக்கே திரும்பிவரச்சொல்லி வற்புறுத்தியிருந்தாள். நீண்ட நாட்களின் பின் அவனிடமிருந்து இன்னுமொரு மடல் வந்தது.

என்னால் இப்போதைக்கு யாழ்ப்பாணத்துக்கு வரமுடியாது. நீ ஏன் இங்கு வரக்கூடாது? வன்னிக்கும்தான் ஒருதடவை வந்துபாரேன் என்றெல்லாம் எழுதியிருந்தான்.

வன்னிக்கெல்லாம் என்னால் வரமுடியாது. அந்தக் காட்டுக்குள் வந்தெல்லாம் என்னால் வாழமுடியாது. வாம், தயவுசெய்து நீங்கள் இங்கேயே வந்துவிடுங்கள் என்று அவளும் கெஞ்சிக் கேட்டு எழுதினாள்.

அவனும் வந்தபாடில்லை, அவளும் போனபாடில்லை. எப்போதாவது இருந்துவிட்டுத்தான் கடிதங்களைக்கூட பரிமாறிக்கொண்டார்கள். தொலைபேசி இருப்பதுகூடவா அவனுக்கு நினைவுக்கு வராமல் இருக்கிறது என்று அவளுக்கு எரிச்சல் வரும். அவனது கணீரென்ற குரலைக்கேட்க அவள் எவ்வளவு ஏங்குகிறாள் தெரியுமா? அவனை பார்க்கவேண்டும்போல இருக்கும் சமயங்களில் அவளுக்கு அழுகைகூட வந்துவிடுகிறது. ஆனால் அவனுக்கு தான் துடிப்பது புரியவில்லையே என்று சுமதி தனக்குள் குமுறுவாள். அவன்மீதான அந்த ஆசை உணர்வுகளை கடிதத்தில் கொட்டியனுப்ப அவளால் முடியவில்லை. ஏதோ உள்ளுணர்வு அவற்றையெல்லாம் எழுத தடுக்கிறது. என்ன மண்ணாங்கட்டிக் காதல் இது என்று விட்டுத்தள்ளவும் முடியவில்லை. ஏதோ ஒன்று அவன்மேல் அன்பை பொழிய வைக்கிறது. மந்தமாய்க் கிடக்கும் தன் காதலின் நிலைபற்றி அமுதாவிடம் சொல்லி அழுவாள் சுமதி.

‘கவலப்படாத சுமதி. வாமன் உன்னை ஒருநாளும் ஏமாத்தமாட்டான். அவன் நல்ல பெடியன். தனக்கே தான் விசுவாசமாய் நடந்துகொள்ளுறவன். அவனிட்ட நேர்மை இருக்கு. நீ நம்பியிரு.’

‘என்னை வன்னிக்கு வரச்சொல்லி எழுதியிருந்தான் அமுது. எனக்கென்னவோ அங்க போக பிடிக்கேல்ல.’

‘ஏன் பிடிக்கேல்ல? பட்டிக்காடெண்டு நினைக்கிறியா?’

‘………’

‘நீ நினைக்கிற மாதிரி வன்னி ஒண்டும் அவளவு மோசமான இடமில்ல சுமதி. அங்கயும் இங்க இருக்கிறதப்போல எல்ல்ல்லாமே இருக்கு.’

‘அது இயக்கத்தின்ர இடம்’

‘ம்…. அதுவா பிரச்சினை? ஒருக்கா வந்துதான் பாரன்.’

‘நீ உன்ர இடம் என்றதால விட்டுக்குடுக்க மாட்டாய்தானே. எனக்கென்னமோ இயக்கத்தை கண்ணிலயும் காட்டாது. அவங்களப்பற்றி கதைச்சாலே பிடிக்குதில்ல. அதான்….’

‘அதான் சொன்னனே சுமதி ஒருக்கா வந்துபார் எண்டு.’ என்று அமுதா புன்சிரிப்போடு சொன்னாள். என்னதான் சொன்னாலும் சுமதிக்கு வன்னிக்குப்போகும் எண்ணமெல்லாம் வரப்போவதில்லை என்று அமுதாவுக்கு நன்றாகத்தெரியும்.

‘இந்தா சுமதி. இதான் என்ர முகவரி. நான் அடுத்த மாதம் மாற்றலாகுறன் போல. பெரும்பாலும் வன்னியிலதான் ஏதாவதொரு கொஸ்பிட்டல்ல வேலை செய்வன். அதால நீ எப்ப வந்தாலும் என்ர வீட்டுக்கு வரணும்.’

‘ஏனப்பா இந்தத் திடீர் மாற்றம்?’ என்று அதிர்ந்து கேட்டாள் சுமதி.

‘சொந்த ஊர்ல வேலை செய்றதும் ஒரு திருப்திதான். இங்க விட அங்க வேலை கூட. நிறைய கஸ்ரப்படணும். அனாலும் அதில நிறையவே மனநிறைவு கிடைக்கும் சுமதி.’

‘எனக்கெல்லாம் இப்பிடிப்பாக்க முடியாதப்பா. நீயொரு விசித்திரப் பிறவிதான் அமுது. சும்மா இருப்பதே சுகம் என்றதுதான் என்ர பொலிசி.’

‘வாமனத்தேடி ஒருநாள் இல்லாட்டிலும் ஒருநாள் வன்னிக்கு வரத்தானே போறாய் சுமதி. அப்ப என்னட்டயும் வா.’ என்று அவளின் கன்னத்தில் தட்டிவிட்டுச்சென்றாள் அமுதா.

பிரச்சினைதான் அவளை வீட்டைவிட்டே கிளப்பியது. அக்காமார் திருமணம் செய்யாததெல்லாம் பிரச்சினையே இல்லையாம். இப்போது பெண்கேட்டுவரும் மாப்பிள்ளைக்கு இவள்தான் தலையாட்ட வேண்டுமாம். அதுவும் வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு. உறவு விட்டுப்போகக்கூடாதாம். பரம்பரை சொத்துகள் தங்கள் பரம்பரையோடேயே இருக்க வேண்டுமாம். அதற்கு இவளா கிடைத்தாள்? மாட்டேன் என்று மறுத்தாள் என்பதற்காக அவளை என்னவென்றெல்லாம் ஏசிவிட்டார்கள்.

‘எவனுக்காவது தலையாட்டிப் போட்டியோடி?’ என்று எவ்வளவு அசிங்கமாய் கேட்டார்கள்.

‘ஓம். தலையாட்டி விட்டேன்தான்.’ என்று அவளும் திமிராகத்தான் சொன்னாள்.

‘உனக்கு உழைக்கிறன் என்ற திமிரடி.’ என்று அம்மா முதுகில் அறைந்தாள்.

‘ஓம். அதே திமிர்தான். நீங்க சொல்றவனுக்கு கழுத்தை நீட்ர ஆள் நானில்ல. அதுக்கு வேற யாரையும் பாருங்கோ.’

‘வாயப்பார். குடும்பத்தின்ர மானத்தையே வாங்கவெண்டு பிறந்திருக்கு சனியன்.’

‘அம்மா அசிங்கமாய் கதைக்காதேங்கோ.’

‘என்னடி அசிங்கமாய் கதைக்கிறன்? எந்தச்சாதியோ என்ன சமயமோ எண்டு தெரியாதவனுக்கு தலைய ஆட்டிப்போட்டு வந்து நிக்கிறியே அதாண்டி அசிங்கம்.’

‘சாதி சமயமெல்லாம் சோறு போடுறதில்லை.’ என்று கராராகச் சொன்னாள் சுமதி.

‘யாரு சொன்னா? அப்ப நீ திங்கிறது எது போடுறது?’

‘சே. இந்த வீட்டுல வந்து பிறந்தது என்ர குற்றம், என்ர குற்றம்.’ என்று தன் தலையில் அடித்துக்கொண்டாள் சுமதி.

‘ஓகோ. வளந்திட்டாய்தானே. இதுவும் சொல்லுவ இன்னும் சொல்லுவ.’ என்று பெரியக்காவும் கத்தத் தொடங்கினாள்.

‘இப்ப என்ன? இந்த வீட்டுல நான் இருக்கிறதுதானே பிரச்சின? எங்கயாவது நான் போய்த்துலையுறன்.’

‘போவன். போக்கத்தவளே போ. இஞ்ச உனக்காக ஒருதரும்  அழுதுகொண்டிருக்க மாட்டம்.’ என்று அந்தக் கடூர வார்த்தையைச்சொன்னது அவளின் அம்மாவேதான்.

கலங்கிவிட்டாள் சுமதி. பற்களை இறுக கடித்துக்கொண்டு சொன்னாள்,

‘அம்மா, போகத்தான் போறன்.’

‘போ. ஆனா சொத்து சீதனம் எண்டு கேட்டுக்கொண்டுமட்டும் இங்க வராத. எக்கேடும் கெட்டுத் துலை.’

‘உன்ர ஆசீர்வாதத்துக்கு நன்றியம்மா.’ என்றுவிட்டு அறைக்குள் புயலாகப்புகுந்து கதவை அறைந்து சாற்றினாள். உள்ளே கிடந்து அழுவாள் அவ்வளவுதானே என்று வீட்டார் நினைத்தது தப்பாகிப்போனது. அடுத்த பத்தாவது நிமிடமே ஒற்றைப்பையுடன் வேளியே போன அவளை எல்லோரும் புதினமாக பார்த்தார்கள்.

எங்கே போய்விடுவாள்? மருத்துவமனையில் வேலைசெய்யும் தெரிந்தவர்கள் வீட்டில் எங்காவது நிற்கலாம் என்று போகிறாள். இவள்தான் எவருடனும் ஒத்திருக்க மாட்டாளே. விரைவில் திரும்பி வருவாள். சிலவேளை மருத்துவமனையிலேயே இடம்கேட்டு தங்கிக்கொள்வாள். நிச்சயமாக காதலனின் வீட்டுக்குப் போகமாட்டாள். இன்றைய நிலையில் எந்த ஆண்மகனும் சீதனமே இல்லாமல் வந்திருக்கிறேன் என்றால் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று ஆளாலுக்குப் புறுபுறுத்து மனதைத் தேற்றிக்கொண்டார்கள்.

ஆனால் சுமதியோ வீதிக்கு வந்த வேகத்தில் ஓட்டோவைப்பிடித்து, பேருந்து நிலையத்திற்குச் சென்றாள். அதே வேகத்தில் முகமாலைப் பேருந்தில் ஏறி கடைசி இருக்கையில் குந்திவிட்டாள். அவளது மனம் இன்னமும் படபடத்துக்கொண்டிருந்தது. இரத்தம் கொதிப்பதாக உணர்ந்தாள். அம்மா, பெற்றநெடுத்த அம்மாவே எப்படி ஏசிவிட்டாள்? நினைக்க நினைக்க நெஞ்சம் குமுறியது. அழுகையும் ஆத்திரமுமாக வந்தது. பொது இடத்தில் கலங்கிக்கொண்டு நிற்பது அவளுக்குப் பிடிக்கவில்லை. அதனால் மனதை தேற்றிக்கொள்ள முயன்றாள்.

பேருந்து புறப்பட்ட சில விநாடிகளிலேயே அவளுக்கு வீடு மறந்துபோனது. வன்னி எப்படி அவளை வரவேற்கப்போகிறதோ? வன்னியை பசுமையான இடம் என்று கேள்விப்பட்டிருக்கிறாள். எல்லாம் காடாக இருந்தால் பசுமையாகத்தானே இருக்கும் என்று நினைத்தபோது வாமனின் ஊர் எப்படியோ என்று ஏக்கமாய் இருந்தது. பொதுவாக கிளிநொச்சியை அண்டியபகுதிகள் நகராகத்தான் இருக்கும். நகர்ப்புறத்தை அண்டிய கிராமம்தானே வாமனின் ஊர். அதென்ன உ….. உ….. உதயநகர். உதயநகர். நல்ல பெயர்தான். உதயநகர் காடோ வீடோ என்று எண்ணிக்கொண்டு வந்ததில் நேரம் கடந்ததே தெரியவில்லை.

முகமாலை இராணுவ சோதனைச்சாவடி கடந்து போராளிகளின் சோதனைச்சாவடியிலும் பதிவுகளை செய்துவிட்டு கிளிநொச்சிப்பேருந்தில் ஏறிக்கொண்டாள். பேருந்து ஆனையிறவை நோக்கி வேகமெடுத்தது. சுமதி பசுமையை தேடினாள். ஏமாற்றம்தான். கடலும் காய்ந்த நிலமும், தலையறுந்த மொட்டைப்பனைகளுமே கண்ணுக்கெட்டிய தூரம்வரை தெரிந்தன. பரந்தன்வரைக்கும் இதே கோலம்தான். அவள் வன்னிபற்றி அதுவரை நினைத்திருந்ததுகூட தப்போ எனப்பட்டது. அவளுடைய கற்பனையையும் மீறிய வரட்சியைத்தான் அவள் கண்டாள். பரந்தனில் இருந்த சிலப்பல கடைகள் தவிர வேறு எதுவுமே அவளுக்கு இரசிக்கவில்லை.

இப்படி இன்னும் எத்தனை ஏமாற்றங்களை சந்திக்கவேண்டி வருமோ என்று நினைத்துக்கொண்டு பெருமூச்செறிந்தாள்.

தொடர்ந்த பயணத்தில் அவளின் கண்களுக்குப் பசுமையான காட்சிகள் தெரிந்தன. வயல்நிலங்களின் பசுமை. இனித்தானே கிளிநொச்சி வரப்போகிறது என்று கொஞ்சம் ஆர்வமானாள்.

அவள் எதிர்பார்த்திருந்ததற்கு மாறாக கிளிநொச்சி ஓகோவென்றிருந்தது.

## 03 ஓவியர் வீடு

பேருந்து நிலையத்தில் இறங்கியபோது சுமதிக்கு களைப்பாய் இருந்தது. தலை வலித்தது. தேநீர் பருகினால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. எப்படிக்குடிப்பது? வாழ்நாளில் ஒருதடவைகூட கடையில் தேநீர் குடித்தறியாதவள் ஆயிற்றே. என்றாலும் கடைக்குச்சென்று தண்ணீர்ப்போத்திலொன்றை வாங்கிக்கொண்டாள். பேருந்து நிலையத்தில் நின்ற பெண் ஒருவரிடம் உதயநகர் எங்கே இருக்கிறது என்று கேட்டாள். அந்தப்பெண் நின்ற இடத்தில் நின்றே கைகாட்டி

'அதுதான். நீங்க யார்ர வீட்டுக்குப் போகணும்?' என்று விசாரித்தாள். சுமதி தன் டயறியை எடுத்துப்பார்த்து முகவரியை தெளிவாகச்சொன்னாள்.

'அது ஓவியர் வீடுதான். இதுதான் ரயில் ரோட். இதாலயே போங்க. கல்லுப்பாதையாலயே நேராப்போக கோயில் இருக்கு. கோயிலடியால வலப்பக்கம் திரும்புங்க. அவடத்த கேளுங்களன். கேற்றையே காட்டுவாங்க.' அவ்வளவு விளக்கமாக வழிகாட்டிய பெண்ணுக்கு நன்றி சொல்லிவிட்டு சுமதி நடக்கத்தொடங்கினாள். ஆனால் அந்தப்பெண் சொன்னதுபோல அதுவொன்றும் கிட்டிய தூரமாக இருக்கவில்லை. நடக்க நடக்க பாதை நீள்கிறதே தவிர வீட்டை நெருங்க விடவில்லை.

இடத்தை இனங்கண்டு படலையடியில் நின்றபோது வீட்டாரை எப்படி அழைப்பது என்று புரியவில்லை. அழுகை வந்துவிடுமோ என்று பயமாக இருந்தது. வாமனின் அப்பாவே வந்து யார் நீ என்று கேட்டால் அவள் என்ன சொல்வாள்? அச்சம் அவளை நடுங்கச்செய்தது. இலகுவில் எதற்கும் கலங்கிவிடாத அவள் இப்போது அழுவதற்கு ஒரு மடிகிடைத்தால் ஓவென்று கதறியே விடுவாள். வீதியில் வந்த சின்னப்பையன் ஒருவன் அவளை புதினமாகப் பார்த்தபடி அருகில்வந்து கேட்டான்,

'யாரையாவது தேடி வந்திருக்கிறிங்களா அக்கா?'

'ம். இந்த ஒழுங்கையில் ஓவியர் வீடு......?'

'இதுதானக்கா. உள்ளுக்க வாங்க.' என்றவன் படலையை தள்ளிக்கொண்டு உள்ளே போனான்.

'ராசண்ணோய்.......ராசண்ணோய்....' என்று அந்தப்பையன் சத்தமாய் அழைத்துக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்தான். சுமதி வாசலிலேயே நின்றுகொண்டாள்.

'என்ன சின்னவா?' என்ற ஓவியரின் குரலும்

'இராசண்ண யாரோ ஒரு அக்கா வந்திருக்கு' என்று சின்னவன் சொல்வதும் அவளுக்குத் தெளிவாகவே கேட்டது.

'யார்ரா?'

'தெரியாதண்ண. ஊருக்குப் புதுசுபோல.'

'புதுசா?' என்றபடி ஓவியர் வாசலுக்கு வந்தார். நீலநிற ரீசேர்ட்டும் மடித்துக்கட்டிய சாறமுமாகநின்ற அந்த ராசண்ணையில் பல வர்ணங்களில் பெயின்ற், தெளிப்புச்சித்திரம் வரைந்திருந்தது. அவரது கையில் தூரிகை ஒன்று 'இப்போதுதான் மஞ்சள் நிறம் தீட்டிக்கொண்டிருந்தேன்' என்று சொன்னது.

‘வந்து.. நான் ஐ.்.வ்னால இருந்து வாறன். என்ர பேர் சுமதி…… இஞ்ச வாமன் எண்டு…..’ என்று தயக்கத்துடன் கேள்வியை முடிக்காமலேயே நிறுத்தினாள்.

‘வாமனா? எந்த வாமன்?’ என யோசனையோடு அந்த ஓவியர் கேட்டார். சுமதிக்கு வயிற்றில் புளியை கரைத்தது. என்ன எந்த வாமன் என்கிறார். வாமனையே தெரியாதென்கிறாரா அல்லது இங்கே ஐந்தாறு வாமன்கள் இருக்கிறார்கள் அதில் எந்த வாமன் என்று கேட்கிறாரா?

‘வந்து…. அவர் ஒரு ரெண்டு வருசம் ஐ.்.வ்னா கொஸ்பிட்ரல்ல வேலை செஞ்சார்.’

‘கொஸ்……பிட்ரல்லயா…? அவர் இந்த ஊரா?’

‘ம். அப்பிடித்தான்,’ என்றுவிட்டு பற்களை இறுக்கிக்கொண்டாள். தான் இந்த ஊர் என்று வாமன் சொன்னானா? இல்லையே. முகவரி மட்டும்தானே கொடுத்தான். என்னை ஏமாற்றி விட்டானோ என்று சுமதிக்குள் பீதி கிளம்பியது. பொழுது வேறு இருட்டிக்கொண்டு வருகிறது.

‘இருங்க அக்கா’ என்று சின்னவன் கதிரை ஒன்றை கொண்டுவந்து முற்றத்தில் வைத்தான். அந்தச்சிறுவனே இரக்கப்படும் அளவுக்கு தான் பாவியாக தெரிகிறேனா என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள். கதிரையில் இருந்தெல்லாம் யோசித்துக்கொண்டிருக்கும் அளவுக்கு அவளுக்கு பொறுமை இருக்கவில்லை. நின்றுகொண்டே கதைக்குமளவுக்கும் திடமில்லை. கதிரையை கையால் பிடித்துக்கொண்டு தன் தோள்ப்பையை கழற்றி கதிரையில் வைத்தாள்.

‘வாமன்தான் உங்கட முகவரிய தந்தவர்.’

‘நீங்க யாரைச்சொல்றிங்க எண்டே விளங்கேல்லையே’ என்று ஓவியர் தன் பிடறியை சொறிந்தார்.

‘டேய் ஓடிப்போய் பெரியம்மாவ வரச்சொல்லு’ என்று சின்னவனை ஏவினார். சின்னவன் வில்லிலிருந்து புறப்பட்ட அம்பென வெளியேறினான்.

‘எனக்கு யாரெண்டு ஞாபகம் வரயில்ல தங்கச்சி. கொஞ்சம் இருங்க…… யாழ்ப்பாணத்தில இருந்து நேரா இங்கதான் வாறிங்களா?’

‘ம்’

‘வேற தெரிஞ்சாக்கள், உறவு…. யாரும் கிளிநொச்சியில இருக்கிறாங்களா?’

‘இல்ல’ என்றவளின் கண்கள் பொசுக்கென கலங்கின.

ஓவியர் உள்ளே சென்றார். சற்றுநேரத்தில் பெற்றோல்மக்ஸ் விளக்கொன்றுடன் வந்து திண்ணையில் அமர்ந்துகொண்டார். மளமளவென அதனைத்துடைத்து, எண்ணெய் பார்த்து, தீக்குச்சியை தட்டிவைத்து, காற்றடித்தார். படலையால் சின்னவனுடன் அந்த பெரியம்மாவும் வந்தார். அந்த வயோதிப மாதினுடைய பார்வை எல்லாவற்றையும் சின்னவன் சொன்னான் என்பதாகத் தெரிந்தது. சுமதிக்கு தயக்கமும் கொஞ்சம் குற்றவுணர்வுமாக இருந்தது.

‘பெரியம்மா வாமன் எண்டு யாரையும் தெரியுமா? நானும் கனநேரமாய் மூளையப்போட்டுக் கசக்கிறன். விளங்கலையே’ என்று சோகமாக இழுத்தார் ஓவியர்.

‘அவனே எழுதிக் தந்தானாம்மா இந்த முகவரி?’ என்றார் அந்தப்பெரியம்மா.

‘ம்’ என்றபடி கைப்பையை திறந்து வாமனின் கடிதத்தை எடுத்து, முகவரி தெரியும்படி மடித்து நீட்டினாள். அதைப்பார்த்தவுடன் பெற்றோலைக்கண்ட நெருப்புப்போல தாவிப்பற்றிக்கொண்டது ஓவியருக்கு வாமனின் நினைவு.

‘பெரியம்மா இது நம்மட வானவர்மனின்ர கையெழுத்து’ என்று சிரித்தார்.

‘அட அவனா? அவன இங்க வர்மன் எண்டாத்தான் எல்லாருக்குந் தெரியும்.’ என்று பெரியம்மா விளக்கினார்.

‘இப்ப எங்க இருக்கிறார்?’ என்று சுமதி ஆவலோடு கேட்டாள் எங்கோ பக்கத்தில்தான் இருக்கிறான் என்ற நம்பிக்கையோடு. அவர்களது முகத்தில் சற்றுமுன் இருந்த சிரிப்பை காணவில்லை.

‘பெரியம்மா அடுப்பில தண்ணி வைச்சிருக்கு. தேத்தண்ணி போட்டு குடுங்க.’ என்ற ஓவியர் ராசனின் குரல், சுமதிக்கு எந்த ஆறுதலையும் தரவில்லை. விறாந்தையோடு இருந்த குசினிக்குள் கேற்றில் நீர் சுடும் ஸ்…….. என்ற விசில் மெதுவாய் கேட்டது. அமைதியாக வெளியிலும் அலைபுரண்டோட உள்ளேயுமாக இருந்த சுமதி மீண்டும் ராசனின் முகத்தில் பார்வையை நிறுத்தினாள்.

‘ஏனண்ணா வாமன் இப்ப எங்க இருக்கிறார்?’ என்று தவிப்புடன் வந்தது அவளது வார்த்தை.

‘இருக்கிறான். அவனுக்கொரு ஆபத்துமில்ல எண்டுதான் நினைக்கிறன். ஆனா…’

‘ஆனா?’

‘அவன் இங்க வந்து ஆறேழு மாசமாச்சிது.’

‘ஆறேழு மாசமா?’ சுமதிக்கு ஒரே பதற்றமாக இருந்தது.

‘ஆனால் அவனுக்கு இங்கதான் கடிதமெல்லாம் வாறது ஆ…… யாழ்ப்பாணத்தில இருந்தும் அவனுக்குக் கடிதமெல்லாம் வாறதுதான். சு…மி… அ. அது நீங்கதானா?’ என்று அவளை இனங்கண்டுவிட்ட மகிழ்ச்சியில் புன்னகைத்தார் ஓவியர். அந்தப்புரிதலுடன் அவருக்கு அவள்பற்றிய பல முடிச்சுகள் அவிழ்ந்தன.

‘அவர் எங்க நிக்கிறார் எண்டு…?’

‘எங்கநிக்கிறானெண்டு தெரியேல்லம்மா. ஆனால் கண்டுபிடிச்சிரலாம்.’ என்று சொல்லிக்கொண்டே பெரியம்மா ஆவிபறக்கும் தேநீரை நீட்டினார். புரியாத குழப்பங்கள் அலைக்கழித்ததால் மிகவும் களைத்துப்போயிருந்த சுமதி தேநீரை வாங்கி பருகினாள். ஓவியரும்கூட தனக்கான தேநீரை பருகியபடி ஏதோ யோசித்துக்கொண்டிருந்தார்.

‘ராசண்ணோய்…..’ என்ற குரலும் சைக்கிள் மணியும் ஒன்றாக அழைத்தது ஓவியரை. அந்தக் குரலிலேயே அழைப்பவரை இனங்கண்ட ஓவியர் ஒரு நீலநிறத்துணியை உதறி மடித்துக்கொண்டு வெளியே சென்றார். அதில் ஏதோ வெளியீட்டு விழா என்று சிவப்பு வர்ணத்தால் எழுதப்பட்டிருந்ததையும் அவதானித்தாள் சுமதி.

சீமெந்துத்தரையில் அந்த நீலத்துணியில் இருந்த எழுத்துக்கள் இருந்தன. நிலத்தில் விரித்துவைத்தே வர்ணம் தீட்டியிருக்கிறார் என்று நினைத்தபடி அப்போதுதான் விறாந்தையை நோட்டமிட்டாள். நிலம் முழுவதுமே தாறுமாறான எழுத்துக்களும் சிந்திய வர்ணங்களும்தான். துணிகள் சில மடித்தபடி ஆங்காங்கே கிடந்தன. எழுதப்பட்ட சில பதாகைகள் கயிற்றில் தொங்கின. சிவப்பு மஞ்சள் வர்ணங்கள்தான் சுவரில் அதிகம் இருந்தன. தொங்கிய துணிகளில் இருந்த எழுத்துக்களை வாசித்தாள். எல்லாமே போராட்டம் பற்றிய வாசகங்களும் ஏதாவது வெளியீட்டு விழாக்களும் படையணிகளின் பெயர்களும்தான்.

‘ராசண்ணோய்….’ என்ற குரலுடன் ஒருவன் உள்ளே வந்தான். உள்ளே பெண்ணொருத்தி இருப்பதை அவதானித்துவிட்டு அமைதியாக நின்றான்.

‘கொஞ்சம் பொறு தம்பி. இப்ப தாறன்.’ என்ற ஓவியர் மஞ்சள் தூரிகையை கையில் எடுத்துக்கொண்டு தரையில் விரித்திருந்த துணிக்கு குனிந்தார். சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி என்று சிறிய எழுத்தில் அழகாகவும் விரைவாகவும் அசைத்துவிட்டு நிலத்தில் கிடந்தது தூரிகை.

‘இப்ப காஞ்சிடும். கொண்டு போகலாம்.’ என்று சிரித்தார் ஓவியர். வந்திருந்த பையன், தான் கொழுவியிருந்த துப்பாக்கியை கழற்றி திண்ணையில் வைத்துவிட்டு அதன் பக்கத்திலேயே அமர்ந்து கொண்டான்.

‘நாங்கள் பொல்லாத ஆக்கள் என்னண்ணை? அஞ்சு நிமிசத்துக்குள்ள தா, பத்து நிமிசத்துக்குள்ள வை எண்டு அடம்பிடிச்சுக்கொண்டு நிப்பம் என்னண்ணை?’ என்றுவிட்டு குறும்பாகச் சிரித்தான்.

‘நீங்கதான்ராப்பா எங்களுக்கு வேகமெண்டால் என்ன எண்டதையே படிப்பிச்ச ஆக்கள்.’ என்று ஓவியரும் சிரித்தார். சுவரில் மாட்டியிருந்த படமொன்றை சுமதி அப்போதுதான் உற்றுப்பார்த்தாள். தலைவர் பிரபாகரன் அவர்களுக்கு அருகில் ஓவியர் பரிபக்குவமாக நின்றார். சுமதியின் முகம் கோணியது. புலியின் குகை ஒன்றுக்குள் தானாகவே வந்து வீணாக நுழைந்துவிட்டேனோ என்று யோசித்துக்கொண்டிருந்தவளின் கையிலிருந்த குவளையை வாங்கிய பெரியம்மா,

‘இந்தப்பிள்ளைய இப்ப எங்க விடப்போறிங்க?’ என்றார்.

‘யாரண்ண இந்த அக்கா?’ என்று வந்திருந்த போராளி ஓவியரிடம் குசுகுசுத்தான்.

‘உனக்கு வாமனத் தெரியுமா? வானவர்மன்.’

‘வான வர்மன்…. வானவர்மன்…. எந்த வானவர்மன்? எங்கட படையணியா? இம்ரான் பாண்டியனா அல்லது மாஸ்ரர் டீமா?’

அட இத்தனை வானவர்மர்களா என்று சுமதி அசந்தே போனாள். அடுத்த கணமே அதிர்ந்தும்போனாள். காரணம் அவர்கள் சொல்லும் அத்தனை வாமனர்களும் போராளிகள்போல் இருக்கிறதே.

‘ஆள் மருத்துவப் பிரிவுபோல.’ என்று ஓவியர் சொன்னது கிணற்றுக்குள் இருந்து கேட்பதைப்போன்றிருந்தது சுமதிக்கு.

‘வாமன் டொக்டரா?’

‘இல்ல. இவருக்குக் கால் இருக்கு. கிளிநொச்சிப் பெடியன்.’

‘ம்…. தெரியல்லையே. இவ அவற்ர தங்கச்சியா?’ என்று வந்தவன் கேட்க ஓவியர் இவளைப் பார்த்தார். அந்தப் பார்வையால் கூனிக்குருகிப்போய் நின்றாள் சுமதி.

## 04 நண்பியைத் தேடி

அமுதாவின் நினைவு அப்போதுதான் வந்தது சுமதிக்கு.

'அமுதாவ தெரியுமா? நேஸ். இங்கதான் எங்கயோ ஒரு கொஸ்பிட்ரல்ல வேலை செய்யிறா? முதல் ஜ.்.வ்னாவில வேலை செய்தவ.'

'அப்ப எங்கட அமுதாக்காவத்தான் கேக்கிறிங்க போல. உயரம், வெள்ளை, இதில ரெண்டு தெத்திப் பல். வடிவாய் சிரிப்பா. அவவையா கேக்கிறிங்க?' என்று அந்த போராளிப்பையன் நடித்துக்காட்டிக்கொண்டு கேட்டவிதம் அத்தனை துயரத்துக்குள்ளும் அவளுக்கு சிரிப்பை ஏற்படுத்தியது.

'அவளேதான்.' என்று புன்னகையோடு சொன்னாள். அவள் அப்படிச்சொன்னது அந்தப்பையனுக்கு கொஞ்சம் முகம்கோண வைத்தது. தங்கள் அமுதாக்காவை இவ என்ன அவள் இவள் என்கிறாள் என்ற கேள்விப்பார்வையுடன் கேட்டான்.

'அமுதாக்கா உங்களுக்குச் சொந்தமா?'

'ஜஸ்ற் ்.ப்ரண்ட். ஜ.்.வ்னால ஒண்டாத்தான் வேலை செய்தம். அமுதா எங்க இருக்கிறாள்? என்னைய அவளிட்ட கொண்டேய் விட்டாலே போதும்.' என்று படபடத்தாள் சுமதி.

தண்ணீருக்குள் மூச்சுத்திணறியபடி அமிழ்ந்துகொண்டிருந்தவளின் கையில் இரும்புத்தூணொன்றே அகப்பட்டுவிட்ட தைரியம் வந்தது அவளுக்கு.

'அமுதா எங்க இருக்கிறா எண்டு சொல்லுங்க ப்ளீஸ். நான் இப்பவே அவளிட்ட போறன்' என்றபடி எழுந்து பையைத்தூக்கி தோளில் மாட்டிக்கொண்டாள்.

'எங்கட அமுதாக்கான்ர வீடு ஒண்டும் ராசண்ணை வீட்டுக்கு பக்கத்துவீடில்லை. அவ புதுக்குடியிருப்பில நிக்கிறா? நீங்க கிளிநொச்சியில நிக்கிறிங்க. இனி நாளைக்குத்தான் நீங்க பஸ்ல ஏறணும். ப்ரண்ட் என்றிங்க. அவட சொந்த இடமே சரியா சொல்ல தெரியேல்ல.' என்று குசுகுசுத்தபடி நிறுத்தினான் அந்த போராளிப்பையன்.

'அண்ண பனர் காய்ஞ்சிட்டுதா? நான் போகணும்' என்றான் தன் குறும்புச்சிரிப்பை அதக்கிக்கொண்டு. ஓவியர் அதை மடிக்கமுன் சுமதி படித்தாள். 'நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்' என்று கொட்டை எழுத்தில் வாசகம். அந்தப்பையன் மடிக்கப்பட்ட அதை வாங்கி தன் நெஞ்சுக்கோல்சருக்குள் திணித்துக்கொண்டு தன் துப்பாக்கியை தூக்கி தோளில் மாட்டினான்.

'போட்டு வாறனண்ண' என்றுவிட்டு அவளைப்பார்த்து புன்னகைத்தான். சுமதிக்கு ஏனோ எரிச்சல் வந்தது. அவள் தவிக்கின்ற தவிப்பை கொஞ்சம்கூடப் புரிந்துகொள்ளாமல் எவ்வளவு ஏகத்தாளமாய் பேசுகிறான், நாளைக்கு பஸ்லதான் நீங்க ஏறணும் எண்டு. இந்த இரவை அவள் என்னவென்று கழிப்பாள்?

'உடன போகணுமா அக்கா?' என்று கேட்டான். அட இன்னமும் அவன் சென்றுவிடவில்லையா என்று நிமிர்ந்தாள்.

'அவவுக்கு இங்கால தெரிஞ்சாக்கள் வேற ஒருதரும் இல்லப்போலடா. பெரியம்மாவீட்ட அனுப்பிவிடுரன். நீ எதுக்கும் அறிவிச்சு விடுறியா?' என்றார் ஓவியர். சற்று யோசித்துவிட்டுச் சொன்னான்,

'ம் மருத்துவப்பிரிவுக் காரரிட்டச் சொல்லிவிடட்டோ?'

'என்னெண்டு சொல்லுவாய்?'

'இப்பிடி இன்னுமொரு நேஸ் இயக்கத்துக்கு வந்திருக்கிறா. இன்ன இடத்தில நிக்கிறா. வந்து கூட்டிக்கொண்டு போங்கோ எண்டுதான்.'

சுமதி பல்லைக் கடித்துக்கொண்டு அவனை முழுசிப்பார்த்தாள். பின்பு எதற்கு வீண் வம்பு என்று தலையைக் குனிந்துகொண்டாள். அவன் ஒன்றும் சொல்லாமல் சென்றுவிட்டான்.

'அதுவரை குசினிக்குள் அலுவல் பார்த்துக்கொண்டு நின்ற பெரியம்மா வந்தார்.

'வாம்மா போவம்.' என்ற அம்மாவை பின்தொடர்ந்தாள் சுமதி. அந்த ஓவியரிடம்கூட போய்வாறன் என்று சொல்லமறந்தவளாய் நடந்தாள். அவளது மனமோ பலவாறான சிந்தனைகளில் சுழன்றது. தனக்கு போராட்டம் என்றாலேபிடிக்காது என்பதை தெரிந்திருந்தும் அவன் தன்னை மறைத்து என்னை ஏமாற்றிவிட்டான்

என்று குமுறினாள். அழுகையும் ஆத்திரமும் கண்களில் வழிய அந்த அம்மாவுக்குத் தெரியாதவாறு கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

அந்தப் பெரியம்மாவின் வீடு அருகில்தான் இருந்தது.

'சீலன் கட்டாயம் அறிவிப்பான். யாராவது பிள்ளைகள் உன்னய கூட்டிக்கொண்டுபோக வருவாங்க.' என்று ஆறுதல் வார்த்தைசொன்ன அந்தத் தாயாரின் வீட்டை கண்களால் அளந்தாள் சுமதி.

சுவர் முழுவதிலும் சட்டமிடப்பட்ட படங்கள்தான் தொங்கின. எல்லாவற்றிலும் யாரோ ஒரு அழகான பையன் துப்பாக்கியோடு சிரித்துக்கொண்டிருந்தான். அவனில் பெரியம்மாவின் சாயலடித்தது. படங்களைப் பார்த்துவிட்டு பெரியம்மாவைப் பார்த்தாள் சுமதி.

'என்ர பெடியள்தான். மூத்தவனும் கடைசியும்.'

அதன்பின்புதான் உற்றுப்பார்த்தாள். இருவரும் ஒரே சாயலில் இருந்தாலும் பெயர்கள் வெவ்வேறே.

'எத்தின பிள்ளைகளம்மா உங்களுக்கு?'

'இவைய ரெண்டுபேருந்தான். அப்பாவை இந்தியன் ஆமி சுட்டாங்கள். இவையளயும் விலை குடுத்திட்டன்.' என்றுவிட்டு பெருமூச்சு விட்டார் அந்தத்தாயார். சுமதி அருண்டு போனாள். இரண்டே இரண்டு குழந்தைகளைப்பெற்று, அவர்களை ஆண்சிங்கங்களாய் ஆளாக்கி, தாரை வார்த்துவிட்டுத் தனிமரமாய் நிக்கிறாரே. அவளுக்கு நம்பவும் முடியவில்லை நம்பாமல் இருக்கவும் முடியவில்லை.

'என்னம்மா செய்யிறது? அவங்கள் நாட்டை நேசிச்சாங்கள். சனத்துக்காக எண்டு போனவங்கள். போயிட்டாங்கள்.'

'பெரியம்மா' என்றழைக்கும் குரல் வீதியில் கேட்டதும் அந்தப் பெரியம்மாவின் வதனத்தில் புன்னகை

'பாத்தியாம்மா நான் சொன்னன். உன்னை கூட்டிக்கொண்டு போக ஆள் வந்திட்டுது.' என்றபடி வாசலுக்கு விரைந்தார் பெரியம்மா.

இரவு எட்டு ஒன்பது மணிக்குப்பிறகு ஒற்றைப்பெண்ணாய் உள்ளே வந்தவள் சிரித்துக்கொண்டு கேட்டாள்,

'அமுதாக்காட்ட கூட்டிக்கொண்டு போகணுமா?'

சுமதிக்கு எல்லாம் அதிர்ச்சியாகவும் விசித்திரமாகவும்தான் இருந்தது. வன்னி புலிகளின் குகை என்று முன்பே அறிந்திருந்தாலும் அதைப்பற்றி பெரிதாக ஒன்றும் அலட்டிக்கொண்டதில்லை. ஆனால் இந்த நேரத்தில் தன்னந்தனியே பெண்ணொருத்தி வந்து நிற்கிறாளே. ஆறுமணிக்குள் அடங்கிவிடும் யாழ்ப்பாண வாழ்க்கைக்கும் இந்தப்பெண்ணுக்கும் ஏணி வைத்தாலும் எட்டாதுதான் என்றது சுமதியின் உள்மனது.

பெரியம்மா அவித்த இடியப்பமும் பொரித்த முட்டையும் சொதியுமாக தட்டுக்களை நீட்டினார்.

'ரெண்டுபேரும் சாப்பிட்டுட்டு வெளிக்கிடுங்க.'

வந்த பெண் எந்த மறுப்பும் இல்லாமல் தண்ணீர்ச் செம்புடன் வாசலுக்குப்போய் கைகழுவிவிட்டு வந்தாள். சுமதிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. மறுக்கவும் தயக்கமாக இருந்தது. மெதுவாக எழுந்துசென்று தானும் கையலம்பிவிட்டு வந்தமர்ந்தாள்.

'உங்களுக்கு என்ன பேரக்கா?' என்று இயல்பாகக்கேட்ட அந்தப் போராளிப்பெண் உண்ணத்தொடங்கினாள்.

'சுமதி' என்றுவிட்டு தானும் உணவுத்தட்டை எடுத்துக்கொண்டாள். பசித்த பிள்ளை பால் குடிக்கும் என்பதைப்போல அவளும் மளமளவென உண்டுமுடித்தாள்.

'இன்னும் ரெண்டு வைக்கிறன்' என்று பெரியம்மா கொண்டு வர,

'இல்லையம்மா உங்களுக்கு….?' என்று இழுத்தாள் சுமதி.

'பெரியம்மா வீட்டில எப்பவும் அஞ்சாறு பேருக்கான சாப்பாடு இருக்குமக்கா. நீங்க தாராளமாச் சாப்பிடுங்க' என்று அந்தப்போராளி சொன்னாள். தயக்கத்தோடு அதையும் உண்டுமுடித்து கைகழுவியபோது சுமதிக்கு ஏனோ பெரியம்மாவை பிடித்திருந்தது. தன் பிள்ளைகளை ஊருக்காகக் கொடுத்துவிட்டு தன் பிள்ளைகளைப்போல் ஊர்ப்பிள்ளைகளை உபசரிக்கிறாரே. என்றாலும் இந்த அம்மா ஒரு மக்கு. கொடுப்பதுதான். அதற்காக இப்படியா? அநியாயத்திற்குத் தன் பிள்ளைகளை இழந்துவிட்டாரே.

'போவமாக்கா?' என்ற போராளியின் அழைப்புக்கு கட்டுண்டவளைப்போல தலையை ஆட்டிக்கொண்டு பையையும் தூக்கிக்கொண்டு புறப்பட்டாள்.

'அம்மா போட்டு வாறன்' என்று சொன்ன சுமதியை அந்தத்தாய் கன்னத்தில் தடவி 'நல்லா இரம்மா' என்று விடை பகர்ந்தார். சுமதிக்கு இதுகூட அதிர்ச்சிதான். முன்பின் அறியாத ஒரு பெண்பிள்ளை தட்டத்தனியே, ஊரைவிட்டு, ஒருவனைத்தேடி வந்திருக்கிறாள் என்றால் அவளை எப்படியெல்லாமோ

அசிங்கமாய் பேசுவார்களே என்று உள்ளுக்குள் அஞ்சிக்கொண்டிருக்க, உபசரித்து உணவளித்து அனுப்புகிறாளே இந்தத் தாய். இவர்களுக்குக் கெட்ட எண்ணங்களே வராதுபோலும். தன் ஊரிலென்றால் எப்படியெல்லாம் அசிங்கமாய் பேசிவிடுவார்கள்? பெற்றதாயே பேசவில்லையா?

அந்தப்போராளி வேகமாய் ஏறிக்குந்தி தன் கொண்டா மோட்டார் சைக்கிளை உயிரூட்டினாள்.

'ஏறுங்கோ அக்கா.' என்றுவிட்டு 'பெரியம்மா நான் பிறகு வாறன்' என்றாள்.

சொன்னால் வெட்கம்தான். சுமதி அன்றுதான் இந்தப்பெரிய மோட்டார் சைக்கிளில் முதன்முறையாக ஏறப்போகிறாள். பெரிய அந்தரப்பட்டு ஏறப்போன சுமதியின் கையிலிருந்த பையை பெரியம்மாதான் வாங்கிக்கொண்டு அவளை இருக்கைக்கு ஏறச்செய்து மடியில் வைத்து உதவினார். அவர்கள் புறப்பட்டபோது சுமதியின் கண்கள் கலங்கியிருந்தன.

ஒரு பெண், தன்னைவிட இளையவள், எவ்வளவு சுறுசுறுப்பாகவும் இயல்பாகவும் இருக்கிறாள்? முன்பின் அறியாத எனக்கு இவ்வளவுதூரம் முன்வந்து உதவுகிறாளே. முன்பின்னறியாத இவளுடன் தான்கூட எப்படி துணிந்து வருகிறாள்? ஐயையோ இவள் இயக்கம் ஆயிற்றே. இப்படியே நேரே கூட்டிச்சென்று தன்னை கட்டாயப்படுத்தி பயிற்சி….தலைமுடி வெட்டி….. கடவுளே என்று வாய்விட்டு பதறிவிட்டாள் சுமதி.

'என்னக்கா?' என்றாள் அந்தப்போராளி மோட்டார் சைக்கிளின் வேகத்தை சற்று தளர்த்தியபடி.

'ஒ.. ஒண்டுமில்ல… நாங்க… நாங்க இப்ப எங்க போறம்?' என்று தடுமாறினாள்.

'புதுக்குடியிருப்புக்குத்தான்' என்று பதிலளித்தாள் கவிமதி.

'எதுக்காக?' என்று பிதற்றினாள் சுமதி.

'என்னக்கா நடந்தது? அமுதாக்காவச் சந்திக்கத்தானே வந்தநீங்கள்?'

'ம்.. ஓ… அமுதாட்டத்தானே போறம் அக்…கா… தங்கச்சி….' என்று தடுமாறினாள் சுமதி. அந்தப்போராளி சிரித்தாள்.

'அவாட்டக் கூட்டிக்கொண்டுபோய் விட்டிட்டு வரச்சொல்லித்தான் பொறுப்பாளர் அனுப்பிவிட்டா. ஏன் நீங்க அங்க போகேல்லையா?'

'இல்ல இல்… ஓ… நான் அங்க அமுதாட்டத்தான் போகனும்.'

'எனக்குப்பேர் கவிமதி. கவி எண்டே நீங்களும் கூப்பிடலாம். நீங்கள் நிறைய குளம்பிப்போய் இருக்கிறிங்கள் எண்டு நினைக்கிறன். அமுதாக்காட்டப் போனப்பிறகு நீங்க கவலையே படத்தேவையில்ல. அதுவரைக்கும் யோசிக்காமல் வாங்க அக்கா' என்றவள் வீதியில் கவனமெடுத்து வேகமெடுத்தாள். சுமதி தன்னை அறியாமல் கவிமதியின் தோளை பற்றிக்கொண்டாள்.

## 05 தாயின் பரிவு

கவிமதி என்ற அந்தப்பெண் மோட்டார் சைக்கிளை என்னமாய் ஓட்டுகிறாள்? இருட்டு நேரம் என்பதுகூட அவளது நினைவில் இல்லையா? இந்த வேகத்தில்போய் ஏதாவது நடந்துவிட்டால்? தன்னுடைய சைக்கிளின் வெளிச்சத்தில் மட்டுமே பாதையைப்பார்த்து இந்தவேகத்தில் பறக்கிறாள் என்றால் பகலில் எப்படி ஓட்டுவாள்? இவளுக்கொன்றும் அதிக வயதிருக்காது. எப்படியும் ஒரு இருபதுதான். துணிச்சல்காரப்பெண்ணாக இருப்பாள்போலும். இல்லாவிட்டால் இந்த இரவில் புறப்பட்டிருப்பாளா என்றெல்லாம் சுமதியின் எண்ணம் கவிமதியைச் சுற்றியே வட்டமடித்துக்கொண்டிருந்தது.

இந்த அக்கா என்னவென்று இப்படி தனியேவந்து இங்கே குதித்தார்? அமுதாக்காவிடம் செல்லவேண்டுமென்றால் நேற்றைய பேருந்திலேயே புதுக்குடியிருப்புக்கு போயிருக்கலாமே. பெரியம்மா வீட்டுக்குத்தான் வரச்சொல்லி இருப்பார்களாக்கும். பெரியவர்கள் நடத்துகிறார்கள். நமக்கேனப்பா வீண் கவலை? ஆளைக்கொண்டுபோய் இறக்கிவிட்டால் சரி. அமுதாக்காவை மாதிரி இன்னொருத்தியின் சேவையும் நாட்டுக்கு கிடைக்கப்போகிறதாக்கும். அமுதாக்கா எவ்வளவு நல்ல மனுசி. தன்னைப்பற்றியே யோசிக்காமல் பிறருக்காவே வாழ்கிறாள். இன்னமும் திருமணம்கூட செய்துகொள்ளவில்லை. அதில் அக்காவுக்கு விருப்பமில்லை என்றில்லை. ஏதோ காதல் சமாச்சாரம்தான். அது என்னவென்று சரியாக தெரியவில்லை. அமுதாக்காவின் பண்புக்கும் அன்புக்கும் ஈர்க்கப்படாத மனிதர் இருக்க முடியாது. எப்படியும் ஒரு போராளியோ பொறுப்பாளரோ அவளது மனதைக் கொத்திக்கொண்டு போயிருப்பார்கள்தான். அவர்களுக்காகத்தான் அக்கா காத்திருக்கிறா போலும். அல்லது தாலிகட்டியதும் வேலைக்கெல்லாம்

போகவேண்டாம் என்று காதலித்தவர்தான் சொல்லித்தொலைத்தாரோ தெரியவில்லை. அப்படியெல்லாம் வேலையை விட்டுவிடக்கூடியவர் அமுதாக்காஇல்லை. எத்தனையோ திறமைமிக்க பெண்கள் போராளியாக இருந்தாலும்சரி திருமணத்துக்குப் பஜின் வேலையில் இருந்து கபெண்களுக்கு துணிச்சலும் கடமையுணர்வும் இருந்தாலும் கணவர் சொற்கேட்டு நடக்கவேண்டிய துர்ப்பாக்கியம் பலருக்கு வந்துவிடுகிறது என்று கவிமதியின் எண்ணங்களோ அமுதாவைச் சுற்றித்தான் வட்டமடித்தன. எப்படியோ இருள்சூழ்ந்த அந்தப் பயணத்திற்கும் முடிவு வந்துவிட்டது.

‘அக்கா இறங்குங்கோ’ என்று கவிமதி சொன்னபிறகுதான் எப்படி தான் ஒரு கோழிக்குஞ்சாக அவளின் முதுகோடு ஒண்டிக்கிடக்கிறேன் என்ற தன்னுணர்வு வந்தது சுமதிக்கு. அவசரமாக கீழே பையைப்போட்டுவிட்டு பாய்ந்து இறங்கிக்கொண்டாள். இதற்குள் மோட்டார் சைக்கிள் வந்துநின்ற சத்தம்கேட்டு யாரோ கையில் டோர்ச் வெளிச்சத்துடன் வீட்டுக்குள் இருந்து வந்தார்கள்.

‘அம்மா அமுதாக்கா நிக்கிறாவா?’ என்றாள் கவிமதி.

‘அவ இன்னும் வேலையால வரேலயே குஞ்சு. நீங்க உள்ள வாங்க’ என்றபடி வந்தபெண் உள்ளே சென்றாள். கவிமதி கீழேகிடந்த சுமதியின் பையை தூக்கிக்கொண்டுபோக சுமதியும் பின் தொடர்ந்தாள்.

‘இரவுக்கே வருவாவா? அல்லது காலையிலதானா?’ என்று சிரித்த முகத்துடன் விசாரிக்கும் போராளிக்கு,

‘என்னெண்டு தெரியேல்லையே. பெரும்பாலும் வந்திருவா எண்டுதானடா நினைக்கிறன்.’ என்று யோசனையோடு பதில் சொன்னாள் வீட்டுப் பெண்.

‘சரியம்மா. இந்த அக்கா அமுதாக்காட்டத்தான் வந்தவ. கொண்டுவந்து விட்டுட்டன். நான் அப்ப வெளிக்கிடுறன்.’ என்று தன் பொறுப்பு முடிந்துவிட்டதைப்போலச் சொன்னாள் போராளி.

‘என்ன! இந்த இரவில தனியவோ?’ என்று புரியாமல் விழித்த சுமதி தன்னை மறந்து எழுந்தே நின்றுவிட்டாள்.

‘நீங்க இருங்கோ அக்கா. நான் போட்டுவாறனம்மா. அமுதாக்காவை நானும் சுகம் கேட்டன் எண்டு சொல்லுங்கோ. கண்டு கனநாள் ஆகிட்டுது.’ என்றபடி கவிமதி வெளியேறினாள். பின்னோடேசென்ற வீட்டுப்பெண் அவளை வழியனுப்பிவிட்டு உள்ளே வந்தார்.

‘இரனம்மா நான் அமுதான்ர அம்மாதான்.’ என்றுபின்தான் சுமதி சுயநினைவுக்கு வந்தவளாய் அட இப்பவும் நின்றுகொண்டுதான் நிற்கிறேனா? என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டு கதிரையில் அமர்ந்தாள்.

‘அமுதாவுக்கு நைற் டியூட்ரியா?’ என்று சுமதி கேட்டபோது, சுமதிக்கே தன் குரல் கேட்கவில்லை. அவ்வளவு மெதுவாகத்தான் அவளது குரல் வெளிப்பட்டது. கேள்வியோடு பார்த்த அம்மா,

‘தூரத்தில இருந்து வந்திருக்கிறிங்கபோல’ என்றார்.

‘ம். ஜ.ஃவ்னா’ என்று தோளைக் குழுக்கினாள்.

‘அமுதாவோட பழக்கமோ?’

‘ஜ.ஃவ்னா கொஸ்பிர்ரல்ல ஒண்டாய் வேலை செய்திருக்கிறம்.’

‘சரியம்மா. சாப்பிடுங்களன்’ என்று கேட்டவரை மறுத்து,

‘இப்பதான் கிளிநொச்சியில சாப்பிட்டிட்டு வந்தனான்’ என்றாள்.

‘அப்ப தேத்தண்ணியாவது குடியுங்க’ என்ற அம்மா உள்ளே சென்றார்.

சுமதிக்கு எல்லாமே ஒரு கனவுபோலத்தான் புதினமாக இருந்தது. தன் வாழ்நாளில் இப்படியெல்லாம் அவள் பிறரால் உபசரிக்கப்பட்டதில்லை. அவளும் பிறரை உபசரித்ததில்லை. இங்கானால் யாரென்றே அறியாதவர்களைக்கூட எப்படி அனுசரிக்கிறார்கள் என்று வியந்தாள். வீடு அமைதியாக இருந்தது. அமுதாவுக்கு சகோதரிகள் இருக்கவேண்டுமே? இங்கே அம்மா தன்னந்தனியே இருக்கிறார்? இவளேன் இன்னும் வரவில்லை என்று யோசித்துக் கொண்டிருந்தவளின்முன் அம்மா தேநீரையும் பிஸ்கற்களையும் வைத்தார்.

‘அமுதாவுக்கு இண்டைக்கு நைற் டியூற்றியா?’ என்று இப்போது கொஞ்சம் சத்தமாகக் கேட்டாள் சுமதி.

‘அப்படியெல்லாம் இல்லையம்மா. வேலை கூடவெண்டா இப்பிடித்தான் பிந்தி வருவா. இல்லாட்டில் பின்னேரமே வந்திருவா. சிலவேள சாமம் ஆகும்.’ என்று சாதாரணமாகச்சொன்ன தாயாரை சுமதி பார்த்த பார்வை அவளுக்கே ஒரு மாதிரி ஆகிவிட்டது.

‘சாப்பிடம்மா’ என்ற தாயாரை மேலும் நோக்காமல் தேநீரை மட்டும் எடுத்துக்கொண்டாள் சுமதி. வாசலில் மோட்டார்சைக்கிள் ஒன்றின் ஒளி வந்து நின்றது. அம்மா டோர்ச் லைட்டுடன் வெளியே எட்டிப்பார்த்தார்.

சுமதி தேநீரைக் குடித்துவிட்டு குவளையை வைக்கும்போது அம்மா உள்ளே வந்தார்.

‘அமுதா காலமைதான் வருவாவாம். இப்பதான் சிவா வந்து சொல்லிட்டுப் போறான். நீங்க காலமைதான் அவவ சந்திக்கலாம். அப்ப படுப்பம் என்னடா’ என்றவாறு தாயார் படுக்கையை தயார் படுத்தினார்.

என்னதான் நடக்கிறது இங்கே? பட்டிக்காட்டுக் கூட்டம். சாமத்தில் வந்து ஒருவன் உன் மகள் இராத்திரி வரமாட்டாள் என்று சொல்லிவிட்டுப்போகிறான். டியூட்டி டைம் என்று இல்லாமல் அவள் வேலை பார்க்கிறாள். அவளை அக்கா அக்கா என்றுவேறு பெடியள் வழிகிறார்கள். அதான் அந்த ஓவியர் வீட்டுக்கு வந்த பையன் சொன்னானே, எங்கட அமுதாக்காவையா சொல்றிங்க. உயரம், வெள்ளை, இதில ரெண்டு தெத்திப்பல். சிரிக்கும்போது வடிவாய் இருப்பா என்று எவளவு பரவசத்துடன் குதித்தான்? சாமப்பேய்கள் மாதிரித் திரிகிறார்கள் இங்கே, என்று உள்ளுக்குள் புறுபுறுத்துக் கொண்டிருந்தளை அம்மாவின் குரல் திசைமாற்றியது.

‘வாம்மா படுத்துக்கொள். முகம் கழுவப்போறிங்களா? உடுப்பேதும் மாத்திக்கொள்ளணுமா? பேக்கை அமுதான்ர அறையிலயே வைச்சிக்கொள்ளலாம். ம் இதுக்க வையுங்கடா.’ என்று பணிவிடை செய்தாள் தாய்.

உறங்கப்படுத்தபின் வாமன் கண்ணுக்குள் வந்து எரிச்சலையூட்டினான். வாமன் பொல்லாத கயவன். அவனை நம்பி நான் நல்லாய் ஏமாந்துபோனன். இப்படி முன்பின் அறியாத இடத்தில்வந்து எவருமற்ற அநாதையைப்போல கிடக்கிறேனே. அவனை நம்பி நான் வீட்டைவிட்டுப் புறப்பட்டிருக்கக் கூடாது. இனி எந்த முகத்தோடு வீட்டுக்குப்போவது? வீட்டாரை மறந்துவிட்டு நான் வேறு வழியை பார்க்க வேண்டியதுதான். வேறுவழி என்றால் என்னவழி? மனம் பலவாறு குழம்பத்தொடங்கியது. என்றாலும் உடலும் மனமும் களைத்துச்சோர்ந்த அவளை நித்திரை போர்த்த உறங்கிப்போனாள்.

காதுக்குள்கூவிய சேவலலின் ஒலிகேட்டு கண்விழித்தபோது, பொழுது நன்றாக விடிந்திருந்தது. எழுந்து வெளியே வந்தாள். முற்றம் அழகாகப் பெருக்கப்பட்டு பூக்கன்றுகளுக்கு நீரூற்றியும் இருந்தது. காலைச்சூரியனின் இதமான கதிர்கள் அழகிய ஒளியால் ஓவியம் தீட்டியது மனதுக்கு மேலும் இதமாக இருந்தது.

‘முகம் கழுவிட்டோ குளிச்சிட்டோ வாம்மா. தேத்தண்ணி குடிப்பம்.’ என்ற அம்மாவின் குரல்கூட அவளுக்கு ஆறுதலாகத்தான் இருந்தது. குளித்தால் நன்றாக இருக்குமே. தன்னிடமிருந்த உடை, சவர்க்காரங்களோடு கிணற்றடிக்குச்சென்றவள் நன்றாக அள்ளி முழுகினாள்.

சுருள் சுருளான நீண்ட தன் கூந்தலை துடைத்தபடி வாசலுக்கு வரும்போதே அம்மா ஆவிபறக்கும் தேநீரை நீட்டினார். அவளது வீட்டில் இப்படியொரு அம்மாவை அவள் கண்டதில்லை. விரும்பியவர்கள் விரும்பியபோது தேநீர் ஆற்றி குடித்துக்கொள்ள வேண்டியதுதான். அக்கா தேநீர் தயாரிக்கும்போது தேவையானால் எனக்கும் சேத்து ஆத்துங்கோ என்றால் மட்டும் கிடைக்கும். ஒருவர் தேவையை இன்னொருவர் உணர்ந்து உபசரித்ததே இல்லை எனலாம். ஆனால் இந்த உபசரிப்பு எவ்வளவு இதமாக இருக்கிறது. என்றாலும் இவர்களின் பழக்கவழக்கங்கள் சில உதைக்கத்தான் செய்கின்றன. ஆண்பெண்கள் கட்டுப்பாடுகளற்று இருக்கிறார்கள் போலத்தெரிகிறதே. தன் வீட்டிலானால் இன்று மகள் வீட்டுக்கு வரமாட்டாள் என்று யாரோ ஒருவன் வந்து சொன்னால் ஏற்றிருப்பார்களா? வீடே துள்ளி எழுந்து அவளை வேலையில் இருந்து நிற்பாட்டி இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்தத் தாயாரானால் ஒன்றுமேயில்லை என்பதைப்போல சாதாரணமாக விட்டுவிட்டாரே.

அதுசரி இரவு வந்துசொன்னவன் எவனாகவோவாகத்தான் இருக்கவேண்டும் என்று ஒன்றும் கட்டாயமில்லையே. அவளது அண்ணனோ தம்பியாகவோகூட இருக்கலாம் இல்லையா என்று அவளதுஉள்மனம் அவளையே கேட்டது. உண்மைதான் அவள் இல்லாத ஒன்றைத்தான் கற்பனை செய்கிறாளோ? பெண்கள் தான்தோன்றித்தனமாக நடக்கக்கூடாதென்று தான் நினைப்பது சரியென்றால் நான் வீட்டைவிட்டுப் புறப்பட்டதும் தவறுதானே. கவிமதி என்ற அந்தப்பிள்ளைமட்டும் இரவில் தனக்காக வராமல் விட்டிருந்தால் இரவு அவள் என்னபாடு பட்டிருப்பாள்? இந்த அம்மாவுடன் தங்கியதற்கு பதிலாக அந்தப்பெரியம்மாவுடன் தங்கியிருப்பாள் அவ்வளவுதானே என்றெல்லாம் எதையும் ஏற்கவும் முடியாமல் மறுதலிக்கவும் முடியாமல் மனம் பலவிதமாக குழம்பிக்கொண்டே இருந்தது சுமதிக்கு. எல்லாம் இந்த வாமனால் வந்த வினை. என்னபேர் சொன்னார்கள்? வானவர்மனா? லூசன். என்னை ஏமாற்றிய துரோகி. எனக்குப் பிடிக்காது என்று தெரிந்திருந்தும் என்னை எப்படி மடக்கிவிட்டான். அவனைக்கண்டால் நன்றாக

ஏசவேண்டும். என் வாழ்க்கையைப் பாழாக்கிய முட்டாள் என்று வாமனை மனதுக்குள் ஏசிக்கொண்டிருந்தவளின் முன்னே அமுதா வந்துநின்றாள்.

‘ஏய் நீ… நீ….’ என்று மகிழ்ச்சியில் தடுமாறிய அமுதாவை சுமதி பாய்ந்துசென்று அணைத்துக்கொண்டாள். மனதின் இறுக்கம் உடைந்துசிதற ஓவென்று அழத்தொடங்கிய சுமதியை சமாதானப் படுத்துவதற்குள் அமுதாவுக்குப் போதும்போதும் என்றாகிவிட்டது. அவளைச்சமாளித்து இருத்திவிட்டு, ஒருசில வார்த்தைகளில் நலம் விசாரித்துவிட்டு, குளிப்பதற்கு ஓடினாள்.

‘என்ன அமுது திரும்பவும் போகப்போறியா?’ என்று ஏக்கத்துடன் கேட்ட சுமதியின் பார்வை அவளது உடையைப்பார்த்தது. ஏனெனில் அமுதா மருத்துவமனைக்கான சீருடையை அணிந்திருந்தாள்.

‘ம். போகத்தான் வேணும். ஆனாலும் உன்னோட கதைக்க எனக்கு நேரமிருக்கு. சரி இப்ப சொல்லு’ என்று சுமதியின் எதிரே அமர்ந்தாள் அமுதா. சுமதிக்குத்தான் என்ன சொல்வது எப்படிச் சொல்வது எங்கே தொடங்குவது எதைச்சொல்லி முடிப்பது என்று ஒன்றுமே புரியவில்லை.

## 06 தோழி அமுதா

மீண்டும் சுமதியின் கண்கள் கலங்கின. உதட்டை பற்களால் கடித்து தன்னை சமாளித்துக்கொண்டிருந்தாள்.

‘வாமனத்தேடி வந்தியா?’ என்று மெதுவாகக் கேட்டாள் அமுதா. தலையை மட்டும் ஆட்டிய சுமதியைப்பார்க்க பாவமாய் இருந்தது அமுதாவுக்கு.

‘அமுதாம்மா சாப்பிட்டுக்கொண்டே கதையுங்களன். பிறகு கூட்டிக்கொண்டுபோக வந்திருவாங்க.’ என்ற தாயாரின் ஆலோசனையை ஏற்று அமுதா எழுந்து சென்றாள். இரண்டு தட்டுகளில் உப்புமா கொண்டு வந்தாள். பின்னோடு தேநீரும் வந்தது.

‘இப்ப வாமன் எங்கை எண்டு உனக்காவது தெரியுமா?’ நம்பிக்கையீனமாய் வெளிவந்தன சுமதியின் வார்த்தைகள்.

‘ஆள் ஆரெண்டு தெரியுமா?’ என்று ஏதோ இரகசியம் தெரிந்துவிட்டதைப்போலக்கேட்ட அமுதாமீதும் இப்போது கோபம் வந்தது சுமதிக்கு.

‘நீயாவது சொல்லியிருக்கலாம்தானே? நீயும் சேந்து எனக்கு துரோகம் செய்திட்டாய்.’ என்று குற்றம் சுமத்தினாள் சுமதி.

‘அடக்கடவுளே. எனக்கென்னப்பா தெரியும்? ஏன் என்னைக்கேட்டா வாமனுக்கு ஓமெண்டு சொன்ன நீ? அப்ப எனக்கும் வாமனப்பற்றி தெரியாது.’

‘பொய் சொல்லாத அமுது. உனக்கு எப்பவோ தெரியும்.’

‘இல்லப்பா. உண்மையாவே தெரியாது. இங்கவந்தும் கனநாளைக்குப் பிறகுதான் தெரிஞ்சது. ஆனால் முதலிலயே சந்தேகப்பட்டன்.’

‘எத வைச்சு?’

‘ஆளின்ர நடையுடை பாவனைகள் அப்பிடி இருந்திச்சிது.’

‘அதென்னப்பா நடையுடை பாவனை? எல்லாரையும் போலத்தானே இருந்தார்?’

‘இல்ல. எல்லாரை விடவும் வித்தியாசமாய் இருந்தார். அந்த வித்தியாசம்தான் உன்னையும் கவர்ந்திருக்கு.’

சுமதி எதிர்ப்பேச்சுப் பேசாமல் உப்புமாவை உண்ணத்தொடங்கினாள்.

‘எப்பிடியும் ஆளைச்சந்திக்கலாம். நீ கவலைப்படாத.’

‘…..’

‘அதுசரி இங்க எத்தின நாளைக்கு நிப்பாய்?’

அமுதாவின் அந்தக்கேள்வி அவளை அடித்து வீழ்த்தியதுபோல் தாக்கியது. மனசு வலித்தது. விம்மத்தொடங்கிய சுமதியை மீண்டும் ஆற்றுப்படுத்தினாள் அமுதா.

‘எங்கபோறது, எப்பிடி வாழ்றது? எதுவுமே தெரியேல்ல அமுது. நான் வீட்டைவிட்டே வந்திட்டன். வாமனை நம்பித்தான் வந்தனான். வாமன் இப்பிடி எண்டு தெரிஞ்சிருந்தா நான் கடைசிவரைக்கும் வந்திருக்கமாட்டன். இனிமேல் என்னால வீட்டுக்கும் போகமுடியாது. என்ன செய்யிறதென்டே தெரியேல்ல.’

என்று விம்மலும் விசும்பலுமாக சொல்லிமுடித்தபோது சுமதி மிகவும் சோர்ந்துபோயிருப்பதை அமுதா நன்றாகப்புரிந்துகொண்டாள். அவளது வீட்டார் இவளை எப்படி தலைமுழுகியிருப்பார்கள் என்பது அமுதாவுக்குப்புரிந்தது.

'வீட்டை வெறுத்து வெளிக்கிடுற அளவுக்கு அப்பிடி என்ன பிரச்சினை உனக்கு?' என்று உரிமையோடு கேட்டாள் அமுதா. தனக்கு திருமணம் பேசிவந்த கதையைச்சொன்னபோதும் வாமன் தன்னை ஏமாற்றிவிட்டதாகப் புலம்பினாள். தன் வாழ்க்கையையே கெடுத்துவிட்டான் என்று பல்லைக்கடித்துக்கொண்டு ஆத்திரத்தோடு சொன்னாள் சுமதி.

கவிமதியைப்போன்ற ஒரு பிள்ளை வாசலில் வந்துநின்றாள்.

'போவமா அக்கா?' என்று புன்னகைத்தாள்.

'ஓம் நான் தயார். கொஞ்சநேரம் இருங்க. அம்மா தமிழரசி வந்திருக்கிறா.' என்று குரலுயர்த்திவிட்டு அறைக்குள்போன அமுதா கைப்பையுடன் வெளியே வந்தாள். தாயார் அந்தப் போராளிக்கு தேநீர் கொடுத்தார்.

'இவ என்ர சினேகிதி. யாழ்ப்பாணத்தில வேலை

செய்யும்போது ரெண்டுபேரும் ஒண்டாத்தான் வேலை செய்தம். பெயர் சுமதி.' என்று அவளை வந்திருப்பவளுக்கு அறிமுகப்படுத்தினாள் அமுதா.

'வணக்கமக்கா' என்று அறிமுகச்சிரிப்பை உதிர்த்தாள் தமிழரசி.

'வ…வணக்கம்' என்றுவிட்டு சுமதி வேகமாக எழுந்து அறைக்குள் சென்றுவிட்டாள். அது அமுதாவுக்கு வேதனையாக இருந்தது. பின்னாலேயேசென்ற அமுதா அவளுக்கு மட்டும் கேட்கும்படி சொன்னாள்,

'சுமதி நீ இனியும் இப்பிடி நடந்துகொள்ளக்கூடாது. வாமன்ல உள்ள கோவத்தை வாமனில மட்டும் காட்டு. மற்ற மனுசர அவமானப்படுத்தாத.'

'உனக்கு என்னப்பற்றித் தெரியும்'

'தெரியும் நல்லாவே தெரியும். உன்ர மோட்டுப்பிடிவாதம்பற்றி நிறையவே தெரியும்.' என்று எரிச்சலோடு சொன்ன அமுதாவை மீறி சுமதி குரலை உயர்த்தினாள்,

'இயக்கம் இயக்கம் இயக்கம்தானா? இங்க தடக்கி விழுந்தாலும் இயக்கத்தின்ர காலிலதான் விழணும்போல? எங்க பாத்தாலும் அவங்கதானா?' என்று சுமதி பொரிய, அமுதா சிரித்தே விட்டாள். பின்பு நிதானமாகச் சொன்னாள்,

'நானும் போராளிதான். கழுத்தில குப்பிகட்டாத போராளி.'

'ஏன் அமுது,' என்று ஏதோ சொல்லத்தொடக்கியவள் அதைச்சொல்ல தனக்கு உரிமையில்லை என்பதை உணர்ந்து நிறுத்திவிட்டாள்.

'சுமதி நீ என்னோட நிக்கறதால எனக்கொரு சிக்கலுமில்ல. ஆனாலொண்டு எங்கடவீட்ட போராளிகள்தான் அடிக்கடி வருவாங்க. என்ர சிநேகிதியாய் உன்னை நடத்தினால்தான் எனக்கும் அழகு. போராளிகள நீ அவமதிக்கிறதை அம்மாவால எல்லாம் ஏற்றுக்கொள்ள முடியாது. அது எனக்கும் பிடிக்காது. அதுக்காக உன்னை மாறச்சொல்லி நான் கட்டாயப்படுத்தமாட்டன். இப்ப நான் போகணும் சுமதி. பின்னேரம் உனக்காக நான் நேரத்துக்கே வரப்பாக்கிறன்.'என்றுவிட்டு அமுதா வெளியேறிவிட்டாள்.

சுமதிக்கு எரிச்சலும் சினமும் பொங்கிக்கொண்டு வந்தது. முன்பென்றால் எவ்வளவு பதுமையாக இருந்தாள். இப்போது வெட்டொன்று துண்டிரண்டாக எப்படிச்சொல்லிவிட்டாள், முகத்தில் அடித்தமாதிரி. ஏன் எனக்கு வேறு போக்கிடம் இல்லை என்ற நினைப்பா? அவள்தான் இயக்கம் இயக்கம் என்று சாகிறாள் என்றால் நானும் அப்படித்தான் இருக்க வேண்டுமா? என்னால் முடியாது என்று தன்னளவில் நினைக்கும்போதே இவளையும் விட்டுவிட்டால் தான் எங்கேபோவது என்று பலமாக யோசிக்கத்தொடங்கினாள். எந்தவழியுமே புலப்படவில்லை அவளுக்கு. ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இதுவே தன்னுடைய அறையாக இருந்திருந்தால் இந்நேரம் தலைகீழாக்கியிருப்பாள். எல்லாவற்றையும் தூக்கியெறிந்து தன் கோபத்தை தீர்க்கவேண்டும்போல இருந்தது. பற்களை கடித்துக்கொண்டு நின்ற அவளது இயலாமை கண்ணீராய் வழிந்தது. அப்படியே கட்டிலில் விழுந்து அழத்தொடங்கினாள்.

எல்லாம் எல்லாமே இந்த வாமனால் வந்ததுதான். அவன்மட்டும் என்னை ஏமாற்றியிராவிட்டால் இப்படிவந்து அவமானப்பட நேர்ந்திருக்காது. நானும் என்பாடும் என்று இருந்த என்னை மாற்றித்தொலைத்து என் வாழ்க்கையையே கேள்விக்குறி ஆக்கிவிட்டானே. அந்த மக்குமடையனால்தான் இந்தவேதனை அவளுக்கு. அவனை காணும்போது நாக்கைப்பிடுங்க நாலுகேள்வி கேட்கவேண்டும். அவனை வலிக்கும்படி

ஏசவேண்டும். உனக்காக என் குடும்பத்தையே இழந்து தெருவில் நிற்கிறேன் பார். இப்போது உனக்கு சந்தோசம்தானே என்று கத்தவேண்டும் என்றெல்லாம் நினைத்தபோது தலையை குனிந்துகொண்டு பதில்பேச முடியாமல் அவன் நிற்கும் தோற்றத்தை எண்ணி தனக்குள் கொஞ்சம் ஆறுதலடைந்தாள். அப்படியே உறங்கியும் போனாள்.

மதிய உணவுக்காக அம்மாவந்து அழைத்தபோது காலையில் நடந்ததெல்லாம் வெறும் கனவுபோல இருந்தது உண்மையாகவே பசித்தது. கிணற்றடிக்குச்சென்று முகம் கழுவிவிட்டு வந்து சாப்பிட்டாள். அம்மா அன்பாக உணவு பரிமாறினார். அவரது முகத்தில் அத்தனை அன்பும் தெரிந்தது.

'உன்ர வீடுமாதிரி நினைச்சு தாராளமாய் சாப்பிடம்மா. நிறையத்தான் சமைச்சிருக்கிறன்.' என்றார் புன்னகையுடன். இயக்கத்தைப்பற்றி தான் கதைத்தால் அம்மாவுக்குப் பிடிக்காதாமே. அப்படி இந்த இயக்கம் என்னதான் இவர்களுக்குக் கொட்டிக்கொடுக்கிறதாம் என்று சுமதி நினைத்துக்கொண்டே சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது வாசலில் வாகனச்சத்தம் கேட்டது. அம்மா வெளியே சென்றார்.

'அம்மா எப்பிடி இருக்கிறிங்கள்?' என்ற அட்டகாசமான குரல் அவளுக்கும் கேட்டது.

'நல்லாய் இருக்கிறனப்பு. வா. உள்ள வா. சுடச்சுடச் சாப்பாடிருக்கு. நல்ல நேரத்திலதான் வந்திருக்கிறாய்.' என்றவாறு உள்ளேவந்த அம்மாவின்பின்னே அந்தக் குரவுலுக்குரியவனும் வந்தான்.

யாரிவன்? அம்மா அம்மா என்று இவ்வளவு அன்புரிமையோடு அழைக்கிறான்? அம்மாவும் அவ்வளவு அக்கறையாக உருகுகிறார். அவருடைய மகனாக இருக்குமோ? என்று எண்ணிக்கொண்டே கடைக்கண்ணால் நோட்டம்விட்டாள். அவன் போராளிதான் என்பதுமட்டும் அப்பட்டமாய் தெரிந்தது. வரியுடை தரித்திருந்தான். உள்ளே வந்தபோதிருந்த களகளப்பு இவளொருத்தி இருப்பதைக் கண்டபின்பும் குறையவில்லை. அவள் தன்னை பார்க்கிறாள் என்பதை தெரிந்துகொண்டபோது அவளைப்பார்த்தும் புன்னகைத்தான். சுமதிக்கு என்னசெய்வதென்றே புரியவில்லை. ஏனோ தடுமாற்றமாய் இருந்தது. பதிலுக்குச் சிரிப்பதா வேண்டாமா என்று சிந்தித்துக்கொண்டே மெதுவாக புன்னகைத்தாள்.

'அம்மா நீங்கள் சிரிக்கிறத்துக்குக்கூட காசு கேப்பிங்கள்போல இருக்கு' என்று அவன் சொல்வது உண்மையிலேயே அம்மாவுக்கல்ல தனக்குத்தான் என்பதை புரிந்துகொண்டபோது தலையை குனிந்துகொண்டு அமைதியாக இருந்துவிட்டாள். அவன் அம்மாவின் பின்னாலேயேபோய் குசினிக்குள் நுழைந்துவிட்டான்.

சுமதி தான் உணவுண்ட தட்டைக்கழுவி வெளியிலே ஊற்றிவிட்டு குசினிக்குள் போக தயங்கியவளாய் விறாந்தை மேசையிலேயே வைத்துவிட்டு அறைக்குள்போய் இருந்துவிட்டாள்.

தனக்கு ஒரு தம்பி இருப்பதாக அமுதா சொன்னதே இல்லையே. என் குடும்பத்தைப்பற்றி நான் ஏற்கெனவே அவளிடம் சொல்லியிருக்கிறேன். அவளது குடும்பம்பற்றி....? அண்ணா தம்பி இருப்பதாக அவள் சொன்ன ஞாபகமே இல்லை. தன் தம்பி போராளி என்பதால்தான் சொல்லாமல் விட்டிருப்பாளாக்கும் என்று நினைத்துக்கொண்டாள்.

'அம்மா நான் போட்டுவாறன். அந்தக் கஞ்சப்பிசினாரி அக்காவுக்கும் போட்டுவாறனெண்டு சொல்லி விடுங்கோ' என்று விறாந்தையில் நின்று சத்தமாய் சொல்லிவிட்டுப்போனான் வந்தவன். யாரந்த அக்கா? யாருக்குச்சொல்லச் சொல்கிறான்? என்று யோசித்தவளுக்கு அப்போதுதான் புரிந்தது அந்தக் கஞ்சப்பிசினாரி அக்காள் தானேதான் என்பது. எதற்காக அப்படிச்சொன்னான்? தான் அவனைப்பார்த்து இளிக்கவில்லை என்றா? நானும் ஈ.... என்று பல்லைக் காட்டியிருந்தால் நல்லவள் என்று சொல்லியிருப்பானோ? கொள்ளைக்காரக் கூட்டம். வரி வட்டி என்று சனங்களிடம் பறிக்கும் இவன் யார் தன்னை பிசினாரி என்று சொல்ல? என்று ஆத்திரத்தோடு நினைத்துக்கொண்டாள். அடுத்த கணமே அவளது உள்மனம் சொன்னது, இந்தவீடு சரிவராது என்று.

அமுதாவை மலைபோல நம்பித்தான் வந்தாள். ஆனால் இது மடுவாக இருக்கிறது. எப்படியும் வேறுவழி தேடத்தான் வேண்டும் என்று சிந்திக்கத்தொடங்கினாள்.

## 07 காதலன் வந்தான்

என்னதான் மண்டையைப்போட்டு உடைத்தாலும் சுமதிக்கு அமுதாவைத்தவிர வேறுவழி எதுவுமே தெரியவில்லை. அவள் என்னை சகித்துக்கொள்வதைப்போல நானும் அவளை சகித்துக்கொள்ள வேண்டியதுதான். அமுதா இயல்பாகவே பொறுமைசாலி என்பதால் பொறுத்துப்போவாள். முன்பெல்லாம்

அவள் என்னுடைய வேலைகளையும்கூட பங்குபோட்டுக்கொண்டு செய்தவள் ஆயிற்றே. இப்போதுகூட அன்பாகத்தானே என்னை வரவேற்கிறாள். அந்தப் போராளிப்பிள்ளையுடன் தான் இருந்து கதைக்காததுதானே அவளுக்கு கோபம். பின்னே என்னவாம், என் சிநேகிதி என்று என்னை அவள் அறிமுகப்படுத்த தான் முகத்தில் அறைந்தமாதிரி எழுந்து வந்ததும் தவறுதானே. பிடிக்காவிட்டாலும் சும்மா கொஞ்சநேரம் இருந்திருக்கலாம்தானே. இது அவள்வீடு. அவளுக்குப் பிடித்தவர்கள், அவளுடைய அம்மாவுக்குப் பிடித்தவர்கள் இந்தவீட்டுக்கு வருவதில் நான் தலையிட முடியாதுதான் என்றெல்லாம் எண்ணி தன் மனதை சமாதானப் படுத்திக்கொண்டாள்.

ஏனோ அவளது வீட்டு நினைவுகள் பாலடைந்ததுபோல மங்கலாகி விட்டதாய்த் தோன்றும். அந்த வீட்டையும் வீட்டு மனிதர்களையும் மறந்துவிடவே விரும்பினாள். இதோ இப்படி இவள் துன்பப்படுகிறாளே இதற்கு வீட்டு வளர்ப்பும் காரணமல்லவா? பிறரை அண்டாமல் வளர்த்துவிட்டது பெற்றோரின் குற்றம்தானே. அமுதா எவ்வளவு கலகலப்பாகப் பேசுகிறாள். நோயாளிகளுடன்கூட நின்று நிதானமாக பேசிக்கொண்டிருப்பாள். அவர்கள் சொல்வதை அவ்வளவு பொறுமையாகக் கேட்பாள். எல்லோரையும் சமாளிப்பாள். ஆனால் நான்?

'மிஸ் மிஸ் அந்த மிஸ் வேண்டாம் மிஸ். நீங்களே ஊசியையும் போட்டுவிட்டிட்டுப் போங்க மிஸ்' என்று நோயாளிகள் தன்னை மறுத்து அமுதாவிடம் கெஞ்சியதெல்லாம் நினைவு வந்தது. நான் எதற்காக அப்படி இருந்தேன் என்று நினைத்தபோதுஅது தவறு என்றும் புரிந்தது. தான் அந்த வேலையை தெரிவுசெய்ததே மகா தவறு. நானாக விரும்பியா அந்த வேலையை ஏற்றுக்கொண்டேன்? இல்லவே இல்லை. வேலை வேண்டும் என்ற சமயத்தில் அந்தவேலைதான் கிடைத்தது. வேறுவேலை கிடைத்திருந்தால் நேஸ் வேலையிலெல்லாம் இணைந்திருக்கவே மாட்டேன் என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டாள் சுமதி.

மாலை அமுதா வந்தபோதும் சுமதி அறைக்குள்ளேயேதான் அடைந்து கிடந்தாள்.

'ஏன் சுமதி மூலைக்கயே கிடக்கிறாய்? வெளிய வாவன். முற்றத்தில நிண்டு பூக்கண்டுகளப்பாரன். நல்ல காற்றையும் உணரமுடியும்' என்று அவளின் கையைப்பிடித்து இழுத்துச்சென்றாள் அமுதா. நாற்காலிகளை முற்றத்தில் போட்டுக்கொண்டு அமர்ந்திருப்பதும் நன்றாகத்தான் இருந்தது. மனப்பாரம் குறைந்ததுபோன்ற உணர்வு எழத்தான் செய்தது.

'வாமனைப்பற்றி விசாரிச்சன் சுமதி. எப்பிடியும் ஆளுக்கு தகவல் கிடைக்கும் எண்டுதான் நம்புறன். ரெண்டு மூண்டு பேரிட்ட சொல்லி விட்டனான்.'

'என்னவெண்டு?'

'உங்களத்தேடி சுமதி வந்திருக்கிறாள். உடனே அமுதா வீட்டுக்கு வரவும் என்றுதான்.'

'கடவுளே' என்று ஏங்கினாள் சுமதி.

'அப்ப நீ அவரைத்தேடி வரேல்லயா?' என்று கண்சிமிட்டினாள் தோழி.

'இல்ல….. நான்… வந்து…'

'என்னப்பா இல்லை என்கிறாய்? காலமதானே வாமனத்தேடி வந்தன் இனி நான் என்ர வீட்டுக்கே போகமாட்டன் எண்டுசொன்னாய்?'

'ஓ சொன்னனான்தான்.'

'அதாலதான் வாமனுக்கு நானும் தகவல் சொல்லிவிட்டன்.'

'எங்க இருக்கிறாராம்?'

'தெரியாது' என்று தோளை குலுக்கினாள் அமுதா.

அன்றிரவு தோழியர் இருவரும் பழைய கதைகளையும் புதுக்கதைகளையும் பகிர்ந்து கொண்டார்கள். அம்மாவும்கூட அவர்களது கதையுடன் சேர்ந்து தனது கருத்துக்களையும் சொன்னாள்.

'அதுசரி அம்மா, மத்தியானம் வந்தது உங்கன்ர மகனா?'

'ம்'

'யாரம்மா வந்தது?' என்று ஆவலோடு கேட்டாள் அமுதா.

'கீர்த்திகன்'

'ஆ. கீர்த்தி வந்தானா? அவனின்ர சின்னக்கா இண்டைக்கும் வந்து கேட்டிட்டுத்தான் போறா. இன்னொருக்கா வந்தானெண்டா அவனையொருக்கா வீட்ட போகச்சொல்லுங்கம்மா. அம்மா கொஞ்சம் ஏலாம இருக்கிறாபோல. இவனக்கண்டால் மனுசிக்கு மருந்தும் தேவையில்லை.'

சுமதிக்கு ஒன்றும் புரியவில்லை. அவனுக்கென்ன ரெண்டு அம்மாவா? அவனுடைய அம்மா நான் என்கிறார் இந்த அம்மா. அவனைப்போய் அம்மாவை பார்க்கச்சொல்லு என்று இந்த அம்மாவிடமே சொல்கிறாள் அமுதா. இதென்ன புதிர்?

'ஏனமுதா அவனுக்கு எத்தனை அம்மாக்கள் இருக்கினம்?' என்று கேட்டேவிட்டாள் சுமதி.

அமுதாவும் அம்மாவும் சத்தமாகச் சிரித்தார்கள்.

'அவனுக்கா? எனக்குத்தெரிய அஞ்சாறு. தெரியாமல் பத்துப் பதினைஞ்சோ அம்பதோ நூறோ இருக்கலாம்' என்றாள் அமுதா.

'என்னெண்டடி?' என்று வாயைப்பிளந்த அவளை குறும்போடு பார்த்தபடி தன் தாயாருக்கு பதில் சொன்னாள் அமுதா,

'இது ஒரு யாழ்ப்பாணத்துப் பட்டிக்காடு அம்மா. ஊருலகம் தெரியாத பாப்பா. போராளிகளின் கடமை, நேர்மை, விடுதலைக்காக அவர்கள் பட்டபாடும் படும்பாடுகளும் இவளுக்குத் தெரியாது அம்மா.' என்றாள் அமுதா சோகமாக.

கீர்த்திகன் வந்தபோது சுமதி ஏன் அறிமுகத்துக்குக்கூடச் சிரிக்கமாட்டாமல் இருந்தாள் என்பதை அம்மா இப்போது புரிந்துகொண்டாள்.

'ஏன் சுமதி சும்மா இருந்து என்ன செய்யப்போறாய்? ஆஸ்பத்திரியில வேலை செய்வியா? வேணுமெண்டா ஒழுங்கு படுத்தித்தாறன்.' என்று கேட்ட அமுதாவை நன்றியோடு பார்த்து ஓம் ஓம் ஓம் என்று தலையாட்டினாள் சுமதி.

'இதப்பத்தி டொக்டரோட கதைக்கிறன். ஆனால் சுமதி இது யாழ்ப்பாணம் மாதிரி இருக்காது' என்றாள் நகைப்புடன் அமுதா.

'சும்மா இருக்கேலாது அமுது' என்று சுமதி அலுப்புக்காட்டி உடல்வளைத்து நிமிர்ந்தாள்.

'அதான் வேலை செய்யப்போறியே சுமதி. இனித்தான் நீ வேலையே செய்யப்போறாய் பார்' என்ற அமுதாவின் நையாண்டிகூட சுமதிக்கு இப்போது ஆறுதலாகத்தான் இருந்தது.

எண்ணி நான்கே நாட்களில் சுமதிக்கான வேலைக்கு அமுதாவே அழைத்துச்சென்றாள். அமுதாவின் மருத்துவமனையிலேயே தானும் வேலை செய்யலாம் என்பது அவளுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாக இருந்தது. நேரடியாக வைத்திய அதிகாரியிடமே அழைத்துச்சென்று அறிமுகப்படுத்தினாள்.

'நல்லது சுமதி. உங்கட வேலை அநுபம்பற்றி அமுதா தேவையானளவு சொல்லியிருக்கிறா. கொஞ்சநாளைக்கு வோட் பாருங்கோ. என்ன சிக்கல் எண்டாலும் என்னோடவந்து நீங்களே கதைக்கலாம். அல்லது அமுதாட்டயும் சொல்லலாம். அமுதா நேஸாக இருந்தாலும்கூட இங்க அவ ஒரு டொக்டருக்கு நிகரான ஆள்தான். அந்தளவுக்கு அவவுக்கு அநுபவமிருக்குது' என்றுவிட்டு இருவரையும் பார்த்துப் புன்னகைத்தார் வைத்திய அதிகாரி. அமுதா லேசாகப்புன்னகைத்து அவரது பாராட்டை ஏற்றுக்கொண்டதை சுமதியும் அவதாணித்தாள்.

யாழ்ப்பாணத்துக்கும் வன்னிக்குமான மருத்துவமனையில்கூட மாற்றங்கள் தெரிந்தன. பார்க்குமிடமெல்லாம் விடுதலைப்போராளிகள் தெரிந்தார்கள், யாழ்ப்பாணத்தில் படையினர் திரிவதைப்போலத்தான். அதுமட்டுமல்ல மருத்துவமனை நிர்வாகம் கொண்டுவரும் சட்டதிட்டங்களுக்கு போராளிகள் மதிப்பளிக்கிறார்கள். இராணுவஉபகரணங்களுடனோ சீருடைகளுடனோ உள்ளே வரக்கூடாது என்றால் வரமாட்டார்கள். பொது நிர்வாகங்களை போராளிகள் மதித்து நடக்கிறார்கள் என்ற முதல் அபிப்பிராயம் சுமதிக்கு அங்குதான் மனதில் விழுந்தது. சாதாரண பணியாளர்களைப்போல கடமைசெய்பவர்களில் பலரும் போராளிகள்தான் என்று அறிந்தபோது ஆச்சரியப்பட்டாள் சுமதி. இப்படித்தானே வாமனும் இருந்திருக்கிறான். இந்த மருத்துவமனையிலும்கூட எவரையும் போராளியா பொதுமகனா என்று தெரிவதில்லைத்தான். ஆனாலும் அவர்கள் போராளிகள் என்று அறிந்தபின் புரிகிறது, அவர்களுக்கென்று ஒரு நடையுடை பாவனை இருக்கிறதுதான் என்று.

அந்த மருத்துவமனையில் பல்வைத்தியர் இல்லை என்பதற்காக மருத்துவ நிர்வாகம் நோயாளிகளின் நலன்கருதி போராளி மருத்துவர் ஒருவரை அழைத்தபோது பல்மருத்துவராக ஒரு பெண்போராளிதான் வந்திருந்தார். பார்த்தால் அவரை போராளி என்று எவரும் சொல்லிவிட முடியாது. சேலைகட்டிக்கொண்டு மோட்டார் சைக்கிளில் கடமைக்கு வந்துசெல்லும் அவர் ஏனைய மருத்துவர்களைப்போலவே இருந்தார். பார்த்தால் சாதுவாகவும் மெலிந்த உடல்வாகும்கொண்ட அவரால் எப்படி பற்களை இழுத்துப் பிடுங்கமுடிகிறதோ என்றுகூட ஆச்சரியப்பட்டிருக்கிறாள் சுமதி.

அவளை முன்பின் அறிந்திராதவர்கள் என்றாலும்கூட அக்கா அக்கா என்று வார்த்தைக்கு வார்த்தை அன்பாக அவளை அழைக்கும் பாங்கு, வணக்கமக்கா என்று அன்பொழுகக் கைகூப்பும் முறை, சின்னச்சிக்கல் என்றாலும்கூட ஏதாவது உதவி தேவையா அக்கா என்று அருகில்வந்து உதவுகின்ற அக்கறை என்று எல்லாமே அவர்களை இன்னார் என்று இனங்காட்டிவிடும். போராளி என்பவனுக்குள்ளும் ஏதோவொன்று வித்தியாசமாக இருக்கிறது.

அவள் மேற்பார்வை செய்யும் விடுதியில்கூட சில போராளிகள் வந்து சிகிச்சைக்காக தங்கிப்போகிறார்கள். இயக்கம்பற்றிய ஏராளமான விடயங்களை அவள் கொஞ்சம் கொஞ்சமாக அறியத்தொடங்கியது அந்த மருத்துவமனையில்தான்.

திடீரென்று ஒருநாள் வாமன் தன்முன்னால் வந்து நிற்பான் என்று சுமதி கனவிலும் நினைக்கவில்லை. ஏன் வாமனும்கூடத்தான் நினைக்கவில்லை அமுதாவீட்டில் சுமதி நிற்பாள் என்று. இரவு ஏழு மணியிருக்கும். மருத்துவமனையால் வந்து குளித்துவிட்டு உணவுண்பதற்காக அமுதாவுடன் அமர்ந்தாள். வெளியேகேட்ட மோட்டார் சைக்கிளின் ஒலி இங்குதான் யாரோ வருகிறார்கள் என்று அறிவித்தது. வீட்டுக்குள்ளிருந்து அம்மாவோ அமுதாவோ வெளியே போகமுன் அவன் உள்ளே வந்துவிட்டிருந்தான். வாசலின் நிலை தலையில் முட்டுமளவுக்குநின்ற வாமன்தான் ‘அம்மா’ என்று கூவிவிட்டு ‘ஹாய் அமுதா’ என்றபின் அருகில் இருந்தவளை பார்த்தான். அந்தக்கணமே அருண்டுவிட்டான். கையும் களவுமாகப்பிடிபட்டுவிட்ட கள்வனைப்போல செய்வதறியாது திகைத்தான். அவன் அணிந்திருந்த வரிச்சீருடையைப்பார்த்து அவனே ஒருகணம் திண்டாடினான். அவனை எரித்துவிடுவதைப்போல பார்த்த சுமதியைப்பிடித்து உலுக்கிய அமுதா,

‘இருங்க வாமன். என்ன அப்பிடி அதிர்ச்சி ஆகிட்டிங்க? சுமதி இங்கவந்ததப்பற்றி உங்களிட்ட ஒருதருமே சொல்லயில்லையா?’

‘இல்லையே’ எனும் பாவனையில் உதட்டைப்பிதுக்கி தலையை ஆட்டினான். அவனுடைய திண்டாட்டத்தைப் புரிந்துகொண்டு அமுதாதான் சமாளிக்கவேண்டி இருந்தது.

‘சரி சரி நீங்க யார் என்றதெல்லாம் சுமதிக்குத்தெரியும். அதால சரியான பாசமாத்தான் இருக்கிறா. முதல்ல இருங்கோ. ஆள் வந்து ஒருமாதம் ஆகிட்டுது. இப்ப என்னோடதான் கொஸ்பிட்ரல்ல வேலைசெய்யிறா. நீங்க இருங்கோ.’ என்று கதிரையைக்காட்டினாள் அமுதா. வாமனும் அமர்ந்துவிட்டான்.

## 08 காணாமல்போனது காதல்

வாமனும் சுமதியும் எதிரெதிர் கதிரைகளில்தான் அமர்ந்திருந்தாலும் எதுவுமேகதைக்கவில்லை.

‘அம்மா முட்டைபொரிக்கிறா. எல்லாருக்கும் சேத்து சாப்பாட்டை எடுத்துக்கொண்டு வாறன்.’ என்றபடி அமுதா குசினிக்குள் நுழைந்தாள். வாமனுக்கோ சுமதியை நிமிர்ந்து பார்க்கவே அச்சமாக இருந்தது. தலையைக் குனிந்தபடியே இருந்தான்.

‘இன்னும் எவளகாலத்துக்கு என்னை ஏமாத்தலாம் எண்டு நினைச்சுக்கொண்டு இருந்தியள்?’ சுட்டுவிடும் தொனியில் கேட்டாள் சுமதி. அவன் தொண்டையை கனைத்துவிட்டு மெதுவாகச் சொன்னான்,

‘நானேன் ஏமாத்தனும்?’

‘ஓ இவளநாளும் எனக்கு கடும் நேர்மையாய்தானே நடந்தியள்?’ என்று பல்லைக்கடித்தபடி உறுமினாள் அவள்.

‘நேர்மையாத்தான் இருந்தன், இப்பவும் இருக்கிறன்’ என்றான் அவனும் அமைதியாக.

‘ஓ அப்பிடித்தான் தெரியிது’ என்றாள் அவளும் அவனை ஏற இறங்கப் பார்த்தபடி.

‘ஓ இதச்சொல்றிங்களா?’ என்று சிரித்தபடி அவன் தன் சீருடையைத் தடவினான். சுமதிக்கோ அதைப்பாய்ந்து கிழித்துவிடவேண்டும்போல ஆத்திரம் வந்தது. பற்களைக்கடித்து கோபத்தை கட்டுப்படுத்திக்கொண்டிருக்கும் அவளை இலகுபடுத்த விரும்பினான்.

‘மன்னிச்சுக்கொள்ளுங்க சுமதி. நான் உங்கள ஏமாத்த நினைக்கேல்ல. அதுக்காக பொய் சொல்லவும் இல்ல. நான் போராளிதான் என்ற உண்மையை சொல்லாமல்விட்டது பிழைதான். அப்பிடி நான் சொல்லியிருந்தால் இண்டைக்கு நீங்கள் எனக்காக வந்திருக்க மாட்டிங்க.’

‘நானா? உங்களுக்காகவா? ஏமாத்துக்காரர்களுக்காக ஒண்டும் நான் இங்க வரேல்ல’ என்று நெருப்பாய் எரிந்தாள் அவள்.

‘அப்பிடியெண்டா யாருக்காக வந்திங்கள்?’

‘உங்களத்தான் தேடிக்கொண்டு இங்க நிக்கிறன் எண்டு கனவொண்டும் காணாதிங்கோ. நான் அமுதாட்டத்தான் வந்தனான்’

‘அப்பச்சரி. அதுவும் நல்லதுதான். நான் இண்டைக்கு இருக்கிறன். நாளைக்கு எதுவும் நடக்கலாம். இப்பவெல்லாம் மரணமும் நானும் அருகருகாக ஒரே பாதையிலதான் நடந்துகொண்டிருக்கிறம்.’ என்றவன் சட்டென எழுந்து வெளியே சென்றுவிட்டான். அமுதாவிடம்கூட சொல்லிக்கொள்ளாமலா? என்று சுமதி நினைத்தபோதும் கையாளாகாதவளாய் இருந்த இடத்திலேயே சிலையென இருந்தாள். எவ்வளவு நேரமாக அப்படியே இருந்தாளோ தெரியாது. நிலையாக இறுகிப்போயிருந்த அவளது மனமோ கொதித்துக் கொந்தழித்துக் கொண்டிருந்தது.

ஏமாற்றுக்காரன் ஏமாற்றுக்காரன் என்று அவனை குத்திக்குத்திப் பேசியது மனது. நன்றாக அடிகொடுத்துவிட்டாள். அவன் அதை தாங்கமுடியாமல் எழுந்துசெல்லும் அளவுக்கு அடித்துவிட்டாள். வலிக்கட்டும். நன்றாக வலிக்கட்டும். அவளை எவ்வளவு வேதனைப்படுத்திவிட்டான். அவளுடைய வேதனை அவனுக்குப்புரியுமா? அதற்கீடான வேதனையை அவனும் அநுபவிக்கவேண்டும் என்று கருவிக்கொண்டாள். அவளுக்குள்ளிருந்து சூடான பெருமூச்சொன்று வெளியேறியது.

அப்போதுதான் திடீரென அவளுக்குள் புதுவித அதிர்வொன்று கிளம்பியது. ஏன் இவ்வளவு குரூரமாய் இருக்கிறேன் என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள். தான்பெற்ற இன்பங்களைத்தான் பிறரும் பெறவேண்டும் என்று நினைப்பதுதான் நல்ல பண்பு. இவளானால் துன்பம் பெறவேண்டும் என்று நினைக்கிறாளே. அவனுக்கு நன்றாக வலிக்கட்டும் என்பதை விரும்புகிறாளே.

முன்பொருநாள் யாழ்ப்பாணத்தில் இருவரும் கதைத்துக்கொண்டே வேலை செய்தபோது அவனது கையிலிருந்த ஊசிகுற்றி குருதி வரவே என்னபாடு பட்டாள். அவனில் அப்போதிருந்த காதலும் கருணையும் இப்போது எங்கே போய்விட்டன. மனசு நிறைய இருந்த காதல் சில காரணங்களுக்காக ஒன்றுமே இல்லாமல்கூட காணாமல் போய்விடுமா என்ன? அவனது கையில் ஊசி குற்றியதற்கே தாங்க முடியாமல் தவித்தாளே, இப்போது அவனது இதயத்தில் அல்லவா ஓங்கி ஓங்கிக் குத்துகிறாள்.

உணவுத்தட்டுகளோடு வந்துநின்ற அமுதாவையும் கவனிக்காமல் மீண்டும் மீண்டும் பெருமூச்சை விட்டுக்கொண்டிருந்தாள் சுமதி. அவளது மனமே அவளுடன் நியாயம் பேசிக்கொண்டிருப்பதை அறியாத அமுதா,

என்ன சுமதி? வாமன் எங்க?’ என்றாள்.

‘போட்டார்’

‘என்னட்டக்கூட ஒரு வார்த்தை சொல்லாமலா? சமைக்கிறம் எண்டு உனக்குத் தெரியும்தானே.’ என்று கேட்கும் அமுதாவை ஏறெடுத்தும் பார்க்காமல் குந்திக் கொண்டிருந்தாள் சுமதி.

‘சரி நீ வா சாப்பிடுவம்’

‘எனக்கு வேண்டாம்.’

‘பிடிவாதம் பிடிக்காத சுமதி. நாளைக்கு வேலைக்குப்போகணும்.’

‘வேண்டாம் எண்டால் விடனப்பா’ என்று சினந்த சுமதியின் கண்கள் கலங்கிவிட்டன.

அன்றிரவு வீட்டில் எவருமே சாப்பிடவில்லை. நண்பிக்காக நண்பியும் பிள்ளைக்காக அம்மாவும் சாப்பிடாமல் கிடந்தார்கள். அதைப்பற்றி சுமதி எள்ளளவும் சிந்திக்கவில்லை. அவள் கவலை அவளுக்கு. அழுதுகொண்டும் குமுறிக்கொண்டும் உறங்கிப்போனாள்.

அடுத்தநாள் மாலையில் வாமன் வருவான் என்று சுமதியும் எதிர்பார்க்கவில்லைத்தான். என்றாலும் வரமாட்டானா வரமாட்டானா என்று மனசென்னவோ அடித்துக்கொண்டுதான் கிடந்தது. வந்துவிட்டபின் உணர்வு முறுக்கிக்கொண்டு அவனை முறைக்கிறது. அமுதாதான் புன்னகையோடு வரவேற்றாள்.

‘உங்கட ஆளோட கோவிச்சுக்கொண்டு எங்களோடையும் கதைக்காமல் போறதா? இண்டைக்கு சாப்பிட்டப்பிறகு இருந்து சண்டைபிடியுங்க’ என்ற அமுதாவிடமும் சுமதிக்கு கோபம்தான் வந்தது. அவளைப்பார்த்தும் முறைத்துக்கொண்டு நின்ற சுமதியை ஓரக்கண்ணால் பார்த்து புன்னகைத்துக்கொண்டு போனாள் அமுதா.

வாமன் இன்று சாதாரண உடையில் வந்திருந்தான். யாழ்ப்பாணத்தில் சுமதி சந்தித்த தோற்றத்திலேயே தெரிந்தான். அதே உடையில் அவள் அவனைக்கண்ட நினைவுகள் அவளுக்குள் ஓடிவந்தன. அழுகை முட்டிக்கொண்டு வந்துவிட்டது அவளுக்கு. முகத்தைத் தூக்கிப்பிடித்துக்கொண்டு நின்றாள். வாமனோ முதல்நாள் நடந்தவற்றை எல்லாம் மறந்துவிட்டவன்போல அவளின்முன்னால்

அமர்ந்துகொண்டான். வதனம் எந்தக் கள்ளங்கபடமும் அற்று மிகத்தெளிவாக இருந்தது. அடிக்கடி சுமதியின் முகத்தை பார்த்துக்கொண்டான். தேநீரோடுவந்த அமுதாவிடம் அதைவாங்கிக்கொண்டே சொன்னான்,

‘இந்த மெடமும் இங்க நிக்கறது தெரிஞ்சிருந்தால் நான் அந்தக்கோலத்தில வந்திருக்க மாட்டன்’

‘உடுப்பிலமட்டும் மாறினால் அவளுக்கு ஒன்றுமே தெரியாது என்ற நினைப்பாக்கும். நீங்கள் கொடுத்திருந்த முகவரியிலயே உங்களப்பற்றி அக்குவேறு ஆணிவேறாய் விளக்கம் சொல்லித்தான் அனுப்பியிருக்கிறாங்கள்.’ என்றுவிட்டு அமுதா விலகிக்கொண்டாள்.

தொண்டையை எத்தனை தடவைகள்தான் செருமிக்கொண்டாலும் வார்த்தைகள் ஏனோ வெளிவரத் தயங்குகின்றன. சுமதி எதைச்சொன்னாலும் சண்டைக்குத்தான் நிற்பாள் என்பது புரிந்தது.

‘அதான் சொன்னனே சுமி, என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ. இப்ப கதையுங்கோ…. வீட்ட என்ன நடந்தது….? என்னால ஏதும் பிரச்சினையா?

‘நேரத்தை வீணாக்காத சுமதி’ என்றபடிவந்த அமுதா இரண்டு தட்டுகளில் மாம்பழத் துண்டுகளை நீட்டினாள்.

‘எனக்கு வேண்டாம் அமுது’

‘இல்ல நீயும் சாப்பிடத்தான்வேணும். இந்தா பிடியப்பா. கதைச்சுக்கொண்டிருங்க. அம்மாவும் நானும் சமைக்கிறம்’ நேற்றுமாதிரி உங்கடபாட்டுக்கு எழும்பிப்போயிராமல் சாப்பிட்டிட்டுத்தான் போகணும் சரியா?’ என்றாள் அமுதா.

வாமன் தேநீரையும் குடித்து மாம்பழத்தையும் சாப்பிட்டுவிட்டான். ஆனால் சுமதி ஒன்றைக்கூட தொடவில்லை.

‘சாப்பிடாம இருந்தால் என்ன நினைப்பாங்க? டீயாவது குடிங்க சுமி. வேணுமெண்டால் பழத்தை நானே சாப்பிட்டு முடிச்சிடுரன்’ என்றபடி தேநீரை அவளருகே தள்ளி வைத்தான். அது ஆறியிருந்தது.

‘சுடுதா? ஆத்தித் தரவா?’என்று அக்கறைபோல கேட்டான். அவன் கேட்டவிதம் அவளுக்கு சிரிப்பு வந்தது. அதை கொடுப்புக்குள் அடக்கிக்கொண்டாள்.

‘கொஞ்சம் சிரியுங்களன். முத்தா கொட்டிடும் எண்டு பயப்படுறிங்க? பரவாயில்ல கொட்டினால் நான் உடன பொறுக்கித்தாறன். ப்ளீஸ் சிரிங்க.’ என்று கெஞ்சினான். எதிரே இருந்த புத்தகம் ஒன்றை எடுத்து அவன்மீது விட்டெறிந்தாள் சுமதி.

‘ஏய், புத்தகத்தை எறியலாமா?’ என்று அதைப்பிடித்து தன் மடியில் பத்திரமாக வைத்துக்கொண்டான் வாமன்.

‘சரி சரி டீயைக்குடியுங்க. சூடேறப்போகுது’ என்றவன்மீது அடுத்த புத்தகத்தையும் தூக்கி எறிந்தாள்.

‘ச்சே. புத்தகத்தை எல்லாம் எறியலாமா?’ என்றபடி அதையும் பிடித்து பக்குவமாக வைத்துக்கொண்டான். அவன் புத்தகங்களில் காட்டிய அக்கறை அவனது நட்பண்பைத்தான் பறைசாற்றியது அவளுக்கு. அவளது கண்கள் அவனை நோக்க இதழ்களில் புன்னகை பரவியது.

‘நன்றி நன்றி. இப்பதான் வடிவாய் இருக்கிறிங்க’ என்றான். எதற்காக? என்று விழித்த சுமதியை புன்னகையோடு பார்த்துக்கொண்டு சொன்னான்,

‘நீங்க சிரிச்சால்தான் வடிவு சுமதி.’ அந்த வார்த்தை அவளுக்குள் மேலும் சிரிப்பையே விளைவித்தது.

‘வடிவு எண்டு சொன்னால் காணுமே. உடனே சிரிப்பு’ என்று ஏதோ சொல்லப்போனவனை தொடர விடாமல் அவள் முறைத்தாள்.

‘ஓ கடவுளே. சும்மா சும்மா முறைக்காதிங்க. அதான் சொன்னனே சிரிச்சால் மட்டும்தான் என்ர சுமி வடிவெண்டு.’

‘யார் சொன்னது உங்கட சுமி எண்டு?’

‘ஏன்? நான்தான் சொல்ரன்.’

‘அத நான் சொல்லல்லையே’

‘அதத்தான் எப்பவோ சொல்லிட்டிங்களே.’

‘அது அப்ப அறியாமல் சொன்னது. இப்பத்தானே உங்கட வண்டவாளமெல்லாம் எனக்குத்தெரியிது.’

‘என்ன தெரியிது?’ என்று சுரத்தின்றி வெளிவந்தன அவனது வார்த்தைகள். அவனது முகத்திலிருந்த புன்னகை சடுதியில் காணாமல்போய் விட்டிருந்தது.

'எல்லாமே தெரியிது. பழைய நினைப்புகள விட்டிட்டு விலகிட்டிங்க எண்டால் நான் நல்லாவே இருப்பன்.'

'என்ன கதைக்கிறிங்க எண்டு யோசிச்சுத்தான் கதைக்கிறிங்களா?'

'நல்லாய் யோசிச்சுத்தான் கதைக்கிறன். உண்மையத்தான் சொல்றன்'

'என்ன பெரிய உண்மை?' என்று கேட்ட வாமன் அவள் சொன்ன விளக்கத்தைகேட்டு மனசுக்குள் நொந்துபோனான்.

## 09 குளம்பினாள் சுமதி

'எனக்கு பெரிய உண்மைதான். வாமன், நான் உங்கள நேசிச்சன்தான். கைநிறைய சலரி வாங்கிற, கவர்ன்மென்ற் ஜொப்ல இருக்கிற, இயக்கத்தின்ர தொடுசல் ஒண்டுமே இல்லாத, என்னை பெரிசாய் மதிக்கிற….' என்றெல்லாம் ஏதேதோ சொல்லிக்கொண்டு போனவளில் அவனுக்கு எரிச்சல் வந்தது.

'நீங்க சொல்றது, எதிர்பார்க்கிறது எல்லாம் உங்களப் பொறுத்தவரைக்கும் சரிதான் சுமதி. எனக்கும் விருப்பு வெறுப்புகள் இருக்கும் என்றதை ஏன் புரிய மறுக்கிறிங்க?'

'நீங்கள் மட்டுமென்ன என்னை புரிஞ்சுகொண்டா இருக்கிறிங்க? இல்லைத்தானே?'

'என்ன வேணுமெண்டாலும் செல்லுங்க சுமி. இயக்கத்தை மட்டும் என்னால கைவிட முடியாது'

'அப்பிடியெண்டால்?' வெருட்டுவதுபோல கேட்டாள்.

'எனக்கு இயக்கம்தான் பெருசு.'

'அப்ப நான் பெரிசில்ல?'

'நீயும் பெருசுதான். ஆனால் உன்னைவிட இயக்கம்தான் பெருசு.' என்று படபடத்துவிட்டான்.

'ஆ. நீ என்றுவேறு சொல்லிவிட்டானே என்று அவளுக்குக்கோபம் வந்தது. ஆத்திரத்தில் பதற்றமாகவும் இருந்தது.

'என்னைவிட இயக்கம்தானா பெரிசு?' என்று சத்தமிட்டாள்.

'ஓம். அப்பிடித்தான்.' என்று அவளைவிடவும் சத்தமாகச்சொன்னான் வாமன். அவளுக்கு சட்டென்று வெடித்தது அழுகை. எழுந்து ஓட்டமாய் ஓடிச்சென்றுவிட்டாள் அறைக்குள்.

சற்றுநேரம் அமைதியாக இருந்துவிட்டு அவனும் எழுந்து அடுக்களைக்குள் நுழைந்தான்.

தட்டுகளில் உணவை பரிமாறிக்கொண்டிருந்த அமுதா தாயாரிடம் ஏதோ சொல்லிக்கொண்டு இருந்திருப்பாள்போலும்.

'லேசில யாருக்கும் விட்டுக்குடுக்க மாட்டாள். சரியான பிடிவாதமம்மா.' என்ற அமுதாவின் குரலை திசைதிருப்பும் விதமாக வாமன் செருமிவிட்டு வாசலில் நின்றான்.

'யாரை சுமதியைத்தானே சொல்றிங்க?' என்றவாறு உள்ளேவந்து அம்மாவுக்கு அருகில் கிடந்த பலகைக்கட்டையில் அமர்ந்துகொண்டான். அம்மா அன்போடு தலைதடவிவிட்டு செம்புத்தண்ணீரையும் கோப்பையையும் எடுத்து நீட்டினார். அவன் கை கழுவிக்கொண்டான்.

'சாப்பிடப்பா'' என்று உணவுத்தட்டை கையில் கொடுத்தார் அம்மா.

வாமனுக்கும் சுமதியில் கோபம்தான். புறப்படும்போது அவளிடம் சொல்லிக்கொள்ளாமலேயே போய்விட்டான். வீடு அமைதியாகவே இருந்தது. அம்மாதான் உணவு பரிமாறினார். அதனால் சுமதியால் மறுக்க முடியவில்லை. கொஞ்சமாய் சாப்பிட்டாள்.

அன்றிரவும் தோழிகள் இருவரும் அருகருகேதான் படுக்கையில் கிடந்தார்கள் என்றாலும் எதுவுமே பேசிக்கொள்ளவில்லை. உறங்கவுமில்லை. ஒரு போராளியை அவமதிக்கிறாளே என்ற கோபம் அமுதாவுக்கு. என்னைவிட தனக்கு இயக்கம்தான் பெரிது என்கிறானே என்ற ஆத்திரம் சுமதிக்கு. எதுவோ நினைத்துக்கொண்டு அமுதாவை உசுப்பினாள் சுமதி,

'அமுதா'

'ம்'

'நீ ஏன் ஒருமாதிரியாய் இருக்கிறாய்?'

'…………..'

'என்னில கோபமா?'

‘……….’

‘வாமன் இயக்கத்தில இருக்கிறவரைக்கும் நான் அவர செய்யமாட்டன்’ என்ற சுமதியின் வார்த்தைகேட்டு அமுதா தன் உதடுகளை பற்களால் கடித்துக்கொண்டாள்.

‘யோசிச்சுப்பார் அமுது. நீ என்ர இடத்தில இருந்தாலும் இப்பிடித்தான் சொல்லுவாய்’ என்றாள் சுமதி நிதானமாக.

‘எப்பிடி இடத்தில இருந்தாலும் நான் அப்பிடிச்செய்யமாட்டன்’ என்றாள் அமுதா உறுதியாக.

‘நான் இப்பிடித்தான்’

‘நான் உன்னைமாதிரி இல்ல சுமதி. தயவுசெய்து வேற ஏதாவது கதை’

‘நீயுமா என்னைய விளங்கிக்கொள்றாய் இல்ல?’ என்று ஆதங்கத்தோடு கேட்டாள் சுமதி.

‘நீதான் சுமதி எங்களை விளங்கிக்கொள்ள வேனும்’ மாறவேண்டியது நீதான்.’

‘………..’

‘முதல்ல மற்றவைன்ர மனச புரிஞ்சுகொள். இன்னும்தான் உனக்கு வாமனத்தெரியேல்ல. உண்மையான விடுதலைப்போராளி காதலுக்காக எதையும் இழப்பான். நாட்டுக்காக அந்தக் காதலையும் இழப்பான். நீ அதை விளங்கிக்கொள். போராளியின்ர காதல் புனிதமானது சுமி. அந்த புனிதத்தைவிட மேலான புனிதமா அவன் தன்ர கொள்கையை நினைக்கிறான். மதிக்கிறான். வாழ்றதுக்காகத்தான் காதலிக்கிறான். ஆனா கொள்கைக்காக அவன் சாகவும் தயங்கமாட்டான். காதலுக்காக கடமையை மறக்கிறவன் போராளி இல்லையே.’

‘………..’

‘அவங்கள் மக்களுக்காக வாழப்பிறந்தவங்கள் சுமதி. போராளிகளுக்கு நாங்கள் ஆறுதலாய், சுமைதாங்கியாய் இருக்கணுமே தவிர, அவங்கன்ர கொள்கைக்கு எதிராய் நிற்கக்கூடாது.’

‘………………’

‘காதலுக்காக கொள்கையை விடுறவன் எல்லாம் மனுசனே இல்ல. அப்பிடிப்பட்டவனுக்கு காதலை விடுறதும் பெரிசில்ல. ஆனா இலட்சியத்துக்காக காதலை விட்டவன் எப்பவுமே உயர்ந்தவன்தான்.’ என்ற அமுதாவின் நிதானமான, தெளிவான வார்த்தைகள் சுமதிக்கு ஒரே குழப்பமாக இருந்தது. சற்று தெளிவு பெறுவதைப்போலவும் உணர்ந்தாள் சுமதி. அவள் யோசித்து தெளியட்டும் என்று அமுதா தன் விளக்கத்தை அத்தோடு நிறுத்திக்கொண்டாள்.

கடந்த நாட்களில் சுமதியும் பல போராளிகளோடு பழகியிருக்கிறாள்தான். இயல்பாக சிரித்துப்பேசும் அவர்களுக்குள் கடமையுணர்வும் கொள்கைப்பிடிப்பும் ஆழப்பதிந்திருக்கின்றன. பெற்றதாயை விடவும் பிறந்த பொன்நாடே பெரிதென்று பலபேரும் சொல்ல கேட்டிருக்கிறாள்தான். எனினும் அதெல்லாம் வெற்று வாசகங்கள் என்றல்லவா நினைத்தாள். அந்த வாசகத்தின் உண்மைத்தன்மையை இந்தப்போராளிகளிடம் அல்லவா காண்கிறாள். ஒருமுறை அவளது பகுதியில் தங்கியிருந்த போராளி ஒருவன் தான் எழுதியதாக கவிதையொன்றைக் காட்டினான்.

‘மிஸ் இது எப்பிடி இருக்கெண்டு படிச்சுப் பாருங்களன்’ என்று காகிதமொன்றை நீட்டினான். சுமதியும் வாங்கிப்படித்தாள்.

அம்மா அழாதே
உன் கண்ணீர் ஆறு
என் மலையை கரைத்து
மடுவாக்கிவிடும்.
உன் கண்ணீரின் சக்தி
என் தாங்குதிறனைத் தகர்த்துவிடும் அம்மா.
அதனால்தான் கேட்கிறேன்
அழாதே அம்மா.
உன் கண்ணீரைக் காணாத இடத்திற்கு
என்னை விலகிப்போகும்படிக்கு
விரட்டிவிடாதே, என்ற அந்த வரிகளை வாசித்துவிட்டு நிமிரமுன் அவன் கேட்டான்,

‘எப்பிடி இருக்கு மிஸ்? என்ர அம்மாவுக்குத்தான் எழுதினன்’ என்று சோகமாகச் சிரித்தான்.

‘அம்மா பாவம்தானே?’ என்றாள் சுமதி.

‘அதான் மிஸ் என்ர கவலையும்’ என்றவனுக்கு என்ன சொல்வதென்றே புரியாமல் நின்றாள்.

‘எனக்கு அம்மா எண்டால் உயிர்தான். அம்மாவுக்கும் நானெண்டால் உயிர். அவ அழுதால் என்னால தாங்கமுடியாது மிஸ். துப்பாக்கிச் சன்னத்தைவிட பயங்கரமாய் தாக்கக்கூடியது அம்மாவின்ர கண்ணீர். என்னை காணும்போதெல்லாம் அழுவா மிஸ். அதாலதான். அவவ காணாமலயே நான் தூரத்திலஇருந்திட்டா…..’ என்ற அவன் நடுங்கிய உதடுகளை இறுகக் கடித்துக்கொண்டான். அவனது கண்களில் இலேசான கலக்கம்.

தன் அம்மாவில் இத்தனை அன்பை வைத்திருப்பவன் எதற்காக அவரைவிட்டு பிரிந்தான்? இனியாவது அம்மாவிடம் சென்றுவிடலாம்தானே? எதற்காக இவன் இயக்கத்தில் இருக்கவேண்டும்? அப்படி இவனுக்கென்ன கட்டாயம் இருக்கப்போகிறது? இப்படியெல்லாம் அவனிடமே கேட்கத் தோன்றியதுதான். ஆனால் கேட்டுவிட முடியவில்லை. தாயின் அன்பைவிட மேலாக எது இருந்து அவனை இழுக்கிறது? எதற்காக இப்படி தங்களைத்தாங்களே வருத்திக்கொள்கிறார்கள்? அம்மாவைவிட மேலான எதையோ இயக்கம் இவனுக்கு கொடுக்கிறதா என்ன? எதற்காக இந்த இளந்தலைமுறை போராட்டம் போராட்டம் என்று சாகிறது? சுமதிக்கு அந்தக்கேள்விக்கான பதில் புரியவே இல்லை. அன்று புரியாததெல்லாம் இப்போது அமுதாவின் விளக்கத்திற்குப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாய் புரியத்தொடங்கிவிட்டது.

அதுமட்டுமல்ல அவன் சுமதி மேற்பார்வைசெய்த விடுதியில் மாதக்கணக்காய் தங்கியிருந்து சிகிச்சை பெற்றதால் அவர்களுக்குள் நல்ல உறவும் இருந்தது. அவன் நிதிப்பிரிவைச் சேர்ந்தவன் என்று தெரிந்தபின் சுமதி அவனிடமும் தன் வரி வட்டி பற்றிய விசனத்தை தெரிவிக்கத்தான் செய்தாள். கடுகு சின்னதென்றாலும் காரம் பெரிதென்பதை அவனும் நிருபித்தான். வரி நடைமுறைகள் பற்றி சுமதிக்கு புரியும்படி விளக்கிச் சொன்னான். தங்களது நடைமுறை அரசுபற்றிய விளக்கங்களை தெள்ளத் தெளிவாக விளக்கினான். அரசு அறவிடும் சோளவரி, சந்தை வரி போன்ற இன்னோரன்ன வரிகளைப்பற்றி தெளிவாகச் சொன்னதோடு தங்களின் வரி விதிகளையும் சொன்னான். சுமதியால் மறுப்புச்சொல்ல முடியாதபடியும் அவனது விளக்கம் அமைந்திருந்தது.

சுமதி வன்னிக்குவந்த புதிதில் ஓவியர்வீட்டில் சந்தித்த அந்த குறும்புக்காரப்பையன் அமுதாவீட்டுக்கு வந்திருந்தான். சுமதியாக அவனிடம் கதைக்கவில்லை என்றாலும் அவனோடு கதைக்கத்தான் வேண்டியிருந்தது.

நீங்கள் எந்த இடம்? எங்கட அமுதாக்கா உங்களுக்கு கனநாளையப் பழக்கமா? நீங்கள் தேடிவந்த அண்ணனை சந்திச்சிட்டிங்களா? அவரார் உங்களுக்கு? இப்ப உங்கட வீட்டாக்கள் எங்க இருக்கிறாங்க? என்றெல்லாம் அவன் தொனதொனத்துக் கொண்டிருந்தது அதிகப்பிரசங்கித் தனமாக தெரிந்தாலும் சுமதி பொறுமையாக பதில் சொல்லிக்கொண்டிருந்தாள்.

‘உனக்கு வாய் கூடீற்றிது. கொஞ்சம் குறைச்சுக்கொள்’ என்று தன் அபிப்பிராயத்தையும் சொன்னாள் சுமதி.

‘அமுதாக்கா அமுதாக்கா அந்தக்கண்ணாடிய ஒருக்கா கொண்டுவந்து தாங்க’ என்றபடி துள்ளியெழுந்துசென்று கண்ணாடியில் பார்த்தான்.

‘என்னடா?’ என்ற அமுதாவுக்கு,

‘என்னக்கா? அப்பிடியெல்லாமில்லையே. அமுதாக்கா என்னை வடிவாய்ப் பாருங்க. எனக்கு எத்தின வாய்கள் தெரியிது?’ என்றான். பிறகு சுமதியைப்பார்த்து அப்பாவியாய் சொன்னான்,

‘என்னக்கா நீங்கள்? எனக்கும் உங்களுக்குப்போல ஒரேயொரு வாய்தானே அக்கா இருக்கிது.’ என்று. எல்லோரும் சிரித்துவிட்டார்கள்.

‘நல்லாய் ட்ராமா போடுவாய்.’ என்றாள் சுமதி.

‘உண்மையா நீ எப்பதான் உன்ர வாய குறைக்கப்போறியோந் தெரியேல்ல.’ என்ற அமுதாவிற்கு அவன் சொன்ன பதில் சுமதியை பேசா மடந்தையாக்கிவிட்டது. அமைதியிலும் அமைதியாகிவிட்ட சுமதியின் உள் மனமோ போராளிகளின் இயல்புகளைப் பற்றி பெரிதாகச் சிந்திக்கத் தொடங்கிவிட்டது.

## 10 யார் போராளிகள்

'நான் செத்தபிறகுதானக்கா குறையும். ஆனாலொண்டு என்ர வாய் மூடினாப்பிறகு நிறைய வாய்கள் திறக்கும். ஏன் சொல்லுங்க பாப்பம். இந்த அக்காகூட என்னைப்பத்தித்தான் கதைச்சிக்கொண்டே இருப்பா. அடடா அவன் உயிரோட இருக்கேக்க எப்பிடியெல்லாம் பேசிப்போட்டன் எண்டு கவலைப்படுவா. என்ர வித்துடலுக்கு முன்னால நிண்டு தம்பி ஒருக்கால் வாயத்திறந்து கதையனடா தம்பி எண்டு அமுதாக்காவோட சேந்து இவவும் புலம்பாட்டிப் பாருங்களன்.' என்று அவன் கெக்கட்டமிட்டு சிரித்தான்.

'தம்பி கதையவிட்டிட்டு எழும்பிப்போய் சாப்பிடு.' என்றாள் அமுதா அந்தக்கதையை திசைதிருப்பும் நோக்குடன்.

'என்னக்கா நீங்க? நெருப்பெண்டால் நாக்கு வெந்திடாது அக்கா. எண்டைக்கோ ஒருநாள் சாகத்தானே போறம். ஆனாலொண்டக்கா நீங்கள் என்ர வித்துடலுக்கு துயிலுமில்லம் வரேக்க, இந்த அக்காவையும் மறக்காமல் கூட்டிக்கொண்டு வாங்க என்ன.'

'வாய கொஞ்சநேரம் பொத்திக்கொண்டு இரடா.' என்று அவனின் தலையில் குட்டப்போனாள் அமுதா.

'ஐயோ தலையில எல்லாம் குட்டாதீங்க. எனக்கு அம்மாக்கள் இருக்கிறாங்க.' என்றபடி எழுந்துகொண்டு அவன் குசினிக்குள் ஓடினான்.

'அ அ எனக்கும் பிடிச்ச ஐற்றங்கள்தான் சமைச்சிருக்கிறிங்கள் அம்மா' என்று அவன் அடுக்களைக்குள் நின்று சொல்வது இவர்களுக்கும் கேட்டது.

'பொல்லாத வால்' என்று அமுதாவும் சிரித்தாள். ஆனால் அந்தச்சிரிப்பில் சோகம் வழிந்தது.

'எதுக்காக அமுது இவங்கள் ஒரே சாவப்பற்றி சாதாரணமாய் கதைக்கிறாங்கள்? அண்டைக்கு வாமனும்கூடசொன்னார், மரணமும் தானும் பக்கத்த பக்கத்ததான் நடந்துகொண்டிருக்கிறாங்களாம் எண்டு. நானும் இவங்களின்ர கதைகளக்கேட்டு யோசிச்சுப்பாக்கிறன், எதுக்காக இப்பிடி சாவோட போட்டி போட்டுக்கொண்டு நிக்கினமெண்டுதான் தெரியேல்ல.'

'அவங்கள் இப்பிடித்தான் சுமதி. இலட்சியக்கிறுக்குகள். தங்கன்ர உழைப்புக்குப்பின்னால சனத்தின்ர வாழ்விருக்கு என்கிற கற்பனைகளும் விருப்பங்களும்தான் இவங்கள இயக்கிது. தங்கன்ர உயிர்போனாலும் பறவாயில்ல மக்களுக்கு கௌரவமான வாழ்வு கிடைக்கணும் என்றதுதான் இவங்கட ஆசை. கொள்கைக்காக உன்னையும் என்னையும் ஏன் பெற்ற அம்மாவையும்கூட தூக்கி எறிஞ்சிட்டும் போவாங்கள். அப்பிடி நடந்துமிருக்குத் தெரியுமா?'

'உண்மையாவா?'

'ம். எனக்குத்தெரிஞ்ச பையன் ஒராள் தன்ர காதலியோட சண்டை பிடிச்சுக்கொண்டு பிரிஞ்சிட்டான். காரணம் அவளுக்கு போராட்டத்தில பற்றில்லையாம். தனக்கு வாறவள் தன்னைவிட போராட்டத்தை நேசிக்கிறவளாய் இருக்கணுமாம்.'

'ஏய் அமுது, நீ எனக்காகச்சொல்றாய் என்ன? என்னைய வெருட்டிப்பாக்கிறியா?' என்று அப்பாவியாகக்கேட்டாள் சுமதி.

'ஐயோப்பா அப்பிடியெல்லாம் இல்ல. நான் வெருட்டி நீ வெருண்ருவியா என்ன? நான் சொல்றகதை உண்மையாவே நடந்ததப்பா. அந்தப்பிள்ளைக்கும் அவனுக்கும் கனநாளைய காதல். அதுக்குப் பிறகுதானாம் அவன் இயக்கத்துக்கே போனவன். பிறகு போராளியாய் பெட்டையச் சந்திக்கப் போயிருக்கிறான். அப்ப அவள் சொன்னாளாம் எண்டைக்கு நீ விலத்திவாறியோ அதுக்குப்பிறகுதான் நமக்கு கல்யாணம் எண்டு. அதுக்கு அவன் என்ன சொன்னான் தெரியுமா?'

'என்ன சொன்னான்? நீயும் இயக்கத்துக்கு வந்தால்தான் கட்டுவனெண்டா?'

அவன் என்ன சொன்னானாமெண்டா என்னோடசேத்து இயக்கத்தையும் காதலிக்கிற ஒருத்தியத்தான் நான் கட்டுவன். அப்பிடி உன்னால ஏலாட்டி உனக்கேற்ற சுயநலவாதி யாரையும் நீ கட்டிக்கொள். நான் சரிவர மாட்டான். இதுதான் இப்பவும் எப்பவுமான என்ர முடிவு எண்டு.' என்று அமுதா கதையளந்து கொண்டிருந்தாள். ஆனால் சுமதிக்கோ அந்தக்கதையில் எந்தச் சுவாரஸ்யமும் இருப்பதாக தெரியவில்லை. காதலித்தவர்கள் பிரிந்து வேறுவேறு கல்யாணம் கட்டிக்கொள்வதென்றால் அதென்ன காதல் அது? உண்மையான அன்பில்லாமல்தான் காதலித்தார்களா?

'அதுசரி பிறகு யார் யாரை கல்யாணம் செய்தாங்க?'

'தங்கட தங்கட கொள்கைக்கேத்தவங்களத்தேடி திருமணங்களையும் செய்துகொண்டார்கள். இப்ப குடும்பமும் குடித்தனமுமாய் அவை அவைன்ர வாழ்க்கைய வாழுறாங்க.' என்று கதைக்கு முற்றுப்புள்ளி வைத்தாள் அமுதா.

இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்கள்தான். அதுசரி இதையேன் அமுதா எனக்குச்சொன்னாள்? வாமன் ஒருக்காலும் மனம்மாற மாட்டான் உன்னாலயும் மாறேலாது எண்டால் நீ உனக்கேற்ற வேற யாரையாவது பார் என்று அறிவுரை சொல்கிறாளா? சேச்சே. அமுதா அப்படி நினைத்துச் சொல்லக்கூடியவள் அல்ல. என்னைத்தான் மாறச்சொல்லுவாள். வாமனை சொல்லவே மாட்டாள். ஏனென்றால் இவளுக்கும் அந்த இயக்கவிசர் இருக்கிறதே. நாடு நாடு என்று எதற்காகத்தான் இப்படிக்கிடந்து மாய்கிறார்களோ தெரியவில்லை? அதற்காக உயிரையும் கொடுப்பேன் என்று மாய்கிறார்களே என்றெல்லாம் பலவாறும் யோசித்துக்கொண்டிருந்தாள் சுமதி.

'ப்பே' என்ற சத்தம் காதோரம் வந்து மிரட்ட, திடுக்கிட்டுப்போனவளைப் பார்த்து சிரித்துக்கொண்டு நின்றான் அந்த வால் சீலன்.

'என்னக்கா பயந்திட்டிங்களா? இதுக்கே இவ்வளவு பயம் எண்டால் நான் நினைக்கேல்ல.' என்றான் பெரிய தோரணையில். அவனுடைய காதைப்பிடித்து இழுத்து கதிரையில் இருத்தினாள் சுமதி. ஏனெனில் அவனிடம் கேட்பதற்காய் அவளிடம் சில கேள்விகள் இருந்தன.

'இப்ப உனக்கு எத்தின வயது?' என்றாள் சுமதி சீலனிடம். அவனுக்கு சிரிப்பு பொத்துக்கொண்டு வந்தது.

'எதுக்கு இந்த ஆராய்ச்சி?'

'சொல்லன்'

'பதினாறு'

'இந்த வயசில இது உனக்குத் தேவைதானா?' என்ற சுமதியைப்பார்த்து அவன் முகம் இறுகினான்.

'எது தேவைதானா?' என்று பதில்கேள்வி கேட்டான்.

'இந்த உடுப்பு, ரைபிள், இயக்கம்...' என்று அடுக்கிக்கொண்டு போனவளை ஆழமாக பார்த்தான்.

'தேவைதான். அதாலதான் இதுகள எடுத்திருக்கிறன். இயக்கம் இப்பவும் சொல்லுதுதான் உனக்கு ரைபிள் வேணாம் புத்தகம்தாறம் படி எண்டு. ஆனா எனக்கு ரைபிள்தான் வேணும். ஏனெண்டால் அதாலதான் என்ர கண்ணுக்கு முன்னால அவங்கள் சனங்களச் சுட்டுக்கொண்டாங்கள்.' என்று பற்களை நெருமினான். சுமதிக்கு ஏனடா அவனை கேள்விகேட்டேன் என்று அச்சமாகக்கூட ஆகிவிட்டது.

'சொரி, சொரி' என்றாள் மெதுவாக.

அவனும் மெல்லச்சிரித்தான். அந்தச்சிரிப்பில் நெருப்புத்தெரிந்தது. அறியாப்பெண்ணை பார்ப்பதுபோல பார்த்தான். அந்தப்பார்வையில் பெரிய மனிதன் தெரிந்தான்.

அமுதாவும் வந்துசேர்ந்துவிட அவளை அக்கா அக்கா என்றழைத்து ஏதேதோ பகிடிகள்சொல்லி சிரிக்க வைத்துக்கொண்டிருந்தான்.

'சரி ஐயா கிளம்பப்போறார். அமுதாக்கா கொஞ்ச நாளைக்கு இங்கால தொடர்பிருக்காது. சும்மா சும்மா எல்லாரிட்டயும் என்னப்பற்றி விசாரிச்சுக்கொண்டு இருக்காதிங்க என்னக்கா. ஃவ்ப்ரியா நிண்டால் நானே வருவன் சரியா?' என்றுவிட்டு அம்மா கொடுத்த அன்பு முத்தத்தையும் வாங்கிக்கொண்டு போய்விட்டான்.

அவன்சென்று நீண்டநேரமாகியும் அவனது கலகப்பும் சிரிப்பும் அந்த வீட்டைவிட்டு போகவில்லை. ஏனோ அவனது குறும்புகளை நினைத்து இரசிக்கத்தோன்றியது சுமதிக்கு.

அந்த வாண்டுப்பையன் வீட்டுக்கு வந்துபோன நான்காவது நாளே அமுதா அழுதுகொண்டு வீட்டுக்கு வந்தாள்.

'அம்மா நம்மட சீலன்குட்டி நம்மள விட்டிட்டு போட்டானம்மா' என்று அழுதாள். அம்மாவும் சற்றுநேரம் சிலையென நின்றுவிட்டு கண்களை துடைத்துக்கொண்டு சாமியறைக்குள் சென்றுவிட்டார். அமுதா அழுதழுதே பூக்களைக்கொய்தெடுத்து மாலை கட்டினாள். அமுதா அழைக்காமலேயே சுமதியும் புறப்பட்டு அமுதாவுடன் சென்றாள். அன்றுதான் சுமதி தன் வாழ்க்கையிலேயே முதன்முறையாக ஒரு வீரச்சாவு வீட்டிற்குச்செல்கிறாள்.

சீலன் மாறாத குறும்புப் புன்னகையுடன் பேழைக்குள் கிடந்தான். அவனைச்சுற்றி குழுமி நின்றவர்கள் ஏதேதோவெல்லாம் சொல்லி புலம்பினார்கள். கதறினார்கள். தம்பி தம்பி என்றும், என்ர குஞ்சு என்ர ராசா எங்கள விட்டுட்டுப் போயிட்டியே மகனே என்றும் குமுறிக்குமுறி விம்மினார்கள்.

அமுதாவையே ஒட்டிக்கொண்டுபோன சுமதியின் விழிகள் அவனது வித்துடலில் பதிந்தன. கால்மாட்டிலேயே நின்றுகொண்டாள். அவனது மார்பில் போர்த்தப்பட்டிருந்த புலிக்கொடி அவனது அழகை மேலும் எடுப்பாகக்காட்டியது. மாலை அணிகையில் அமுதா விம்மிக்கொண்டிருந்தாள். வெளியேவந்து கதிரையில் இருந்தபோது அவளது விழிகள் நீரைக்கொட்டின. சுமதியின் கண்களிலும் கண்ணீர். சுமதி தன்

வாழ்க்கையில் முதன்முதலாக ஒரு போராளின் மரணத்துக்காக அழுகிறாள். அவனை இவ்வுலகில் இனிமேல் காணமுடியாது. அந்தக் குறும்பழகன், குட்டிப்புலி தன் வாழ்க்கையை முடித்துக்கொண்டான். இனி அவனைப்போல இன்னொரு பிள்ளை கிடைக்கப்போவதில்லை என்றெல்லாம் நினைத்து நினைத்து பெருமூச்சுகளை வெளித்தள்ளிக்கொண்டிருந்தாள் சுமதியும். அமுதா இன்னமும் அழுது தீரவில்லை.

அந்த வீரச்சாவு நிகழ்விற்கு ஏராளமானவர்கள் வந்துபோய்க்கொண்டிருந்தார்கள். எங்கெங்கோ தூர இடங்களில் இருந்தெல்லாம் வந்துகொண்டிருந்தார்கள். முக்கியமான பிரமுகர் ஒருவரின் மரண நிகழ்வில் கலந்துகொள்ள வந்திருப்பதைப்போல சமுகத்தின் பெரிய மனிதர்கள்கூட வந்திருந்தார்கள். வந்தவர்களெல்லாம் போட்டுவிட்ட பூமாலைகள் சீலனின் உடலைமுழுமையாக மறைத்து பெட்டியையும் நிறைத்துக்கொண்டு வெளியே தொங்கின. இந்தச் சின்னப்பையனுக்கு இத்தனை உறவுகளா என்று வியப்பாக இருந்தது சுமதிக்கு.

பென்னம்பெரிய மூக்குத்தியும் காதுக்கம்மலும் அதிர ஓடோடிவந்த ஆச்சி ஒருவர் பெட்டிக்குள்கிடந்த சீலனின் முகத்தை தடவித்தடவி அழுதாள். பின்னர் தன் மார்பில் அடித்துக்கொண்டு ஒப்புச்சொல்லி அழத்தொடங்கினாள்.

‘என்னப்பெத்த ராசா நீ என்னவிட்டுப் போனதெங்கே? சண்டைக்கெல்லோ போறனெண்டு, என்னட்ட நீ ஓடிவந்து, சொல்லிப்போட்டுப் போனபின்ன சாமியெல்லாம் கும்பிட்டனே. என்ர குஞ்சக் காப்பாத்தெண்டு, ஏத்திவைச்சன் நெய்விளக்க. விளக்கும் அணையல்லயே உனக்குச் சா வந்ததென்ன? பொன்னு பொரசுகள, திண்ணுருசி கண்ட பேய, கொல்லணுண்ணு சொல்லிக்கிட்டே, இருப்பியேடா என்ரகுஞ்சு. கொன்னுட்டியா ஆசதீர? உன்ர குலக் கொடியறுத்த பாவிகளத் தீத்திட்டியா? தனிமரமா நிண்ணியேன்னு தலதடவி வளத்தோமே. எந்திரிச்சுப் பாரு கண்ணா, எம்புட்டுச் சனங்கவுன்ன, கதைகேக்க வந்திருக்கு’ என்றெல்லாம் அந்தத்தாய் ஒப்புச்சொல்லி அழுதபோது பலரது விழிகளிலும் கண்ணீர் வழிந்தது.

சுமதி சிலையென அமர்ந்திருந்தாள். சுற்றியிருந்த அம்மாக்களில் எந்த அம்மா சீலனைப்பெற்றவள் என்று அவளுக்கு தெரியவேயில்லை. அவனது சாயலில் யாராவது இருக்கிறார்களா என்று முகங்களை ஆராய்ந்தாள். எந்தத்தாயும் அவனைப்போலவே இருக்கவில்லை. ஆனால் எல்லாத் தாய்மாரிலும் அவன் வாழ்கிறான் என்பது மட்டும் தெள்ளெனத் தெரிந்தது. அந்தளவுக்கு அவர்கள் அவனின் பிரிவை தாங்கமாட்டாது புலம்பினார்கள்.

## 11 மாறியது மனது

எந்தத்தாய் பெற்ற பிள்ளையோ என்று சுமதியின் மனம் வேதனைப்பட்டபோதே ஒப்புச்சொன்னபோது அந்த ஆச்சி சொன்னாரே அநாதை என்று என நினைத்துக்கொண்டாள். எதையும் கேட்டறியும் நிலையில் அவளுக்கு வார்த்தைகள் வரவில்லை. அவன் இறுதியாக வீட்டுக்கு வந்தபோது அமுதா தலையில் குட்டப்போக எனக்கு அம்மாக்கள் இருக்கினம் என்றானே இவர்களைத்தானா?

அப்போது அவளருகே அமுதாவுக்கு பழக்கமான ஒரு போராளிவந்தான். அமுதா கண்களை துடைத்துக்கொண்டு அருகே இருந்த நாற்காலியை காட்டினாள். அதில் அமர்ந்துகொண்டவன் சற்றுநேரம் அமைதியாக எதையோ யோசித்தான்.

‘எவ்வளவு துடியாட்டமான பெடியன். அநியாயமாய் போயிட்டான். சண்டைக்குப்போகனும் என்றது அவனுக்குள்ள இருந்த பிடிவாதமான கொள்கை. ஒருதருக்கும் தெரியாமல்தான் லைனுக்குப் போனவன். அங்கநிண்ட பப்பா சேராதான் ஆள் இங்க வந்திட்டான் உடனவந்து கூட்டிக்கொண்டு போங்க எண்டு அறிவிச்சவா். இவனை கூட்டிக்கொண்டுவரப்போன தூயவனும் அந்த இடத்திலயே சரி.’

‘என்ன நடந்தது கனி?’

‘ஆமி அம்புஸ் குடுத்திட்டான். தூயவன் மோட்ட சைக்கிளில போய் ஏத்திக்கொண்டு வந்தான். பின்னேரப் பொழுதாகிட்டுது. வழமையா போய்வாற பாதைதானே எண்டு ஆக்கள் சாதாரணமாத்தான் வந்திருக்கிறாங்க. அம்புஸ்ல மாட்டிட்டாங்க.’

‘நீங்கள் அவனுக்கு சண்டைக்கு வயசு காணாது எண்டு வைச்சிருக்கப் பாத்திங்கள். ஆமி அவனுக்கு சாகுறதுக்கு வயசு காணுமெண்டு முடிவெடுத்திட்டான். ம்.’

‘………………..’

‘அம்மாக்கள் என்னவாம்?’

‘அம்மாவுக்கு அறிவிச்சிருக்கு. ஆனால் அவையால வரமுடியாதுபோல தெரியிது.’ என்றான்.

‘அப்ப என்ன செய்யப்போறிங்க?’

‘இன்னும் ஒருமணித்தியாலத்தில எடுப்பம் எண்டுதான் பாக்கிறம்.’

‘ஓம். அதுதான் நல்லது. அவையள் வராட்டில் அவனையேன் சும்மா வைச்சிருப்பான். அவனை இப்பிடி பாத்துக்கொண்டிருக்க ஏலாது.’ என்று மீண்டும் அழுதாள் அமுதா.

‘சீலன்ர அக்காமார் அவனில சரியான பாசம். இண்டைக்கு அவனுக்கு பக்கத்தில ஒருதர்கூட இல்ல’ என்றான் அந்தப்போராளி.

‘கூடப்பிறந்தாக்கள் இல்லாட்டியும் கூடி வளந்தாக்கள் நிறையப்பேர் இருக்கிறாங்க கனி. அவன்ர உறவுகள பாக்கிறிங்கள்தானே.’ என்று திருப்தியோடு சொன்னாள் அமுதா.

‘அப்படியானால் அவனது வீடே இது இல்லையா? சுற்றிநின்று கதறியழும் எவரும் அவனது அம்மாவோ சகோதரர்களோ இல்லையா? இப்படித் துடிதுடிக்கிறார்களே? இவர்களெல்லாம் யார் அவனுக்கு? எப்படி இது சாத்தியம்? இவ்வாறான பலகேள்விகள் சுமதியை குடைந்தன.

சீலனின் வித்துடல்பேழை ஊர்வலமாக எடுத்துச்சென்று மண்டபமொன்றில் அஞ்சலி நிகழ்வு நடத்தப்பட்டது. உரையாற்றிய எல்லோருமே சீலனின் கெட்டித்தனத்தையும் வீரத்தையும் துணிச்சலையும் பாராட்டிப்பேசி அவனது வாழ்க்கை வரலாற்றையே சொல்லி முடித்தார்கள். துயிலுமில்லம்வரை சென்று இறுதி நிகழ்விலும் கலந்துகொண்டு, அவனது விதைகுழியில் மூன்றுபிடி மண்போட்டுவிட்டுத்தான் வீட்டுக்கு வந்தார்கள் அமுதாவும் சுமதியும்.

குளித்துவிட்டுவந்து, நடந்தவற்றையெல்லாம் அம்மாவுக்குச்சொல்லி, சாப்பிட்டுவிட்டு படுக்கையில் விழுந்தபின்புதான் சுமதி மெல்ல கதையை தொடங்கினாள்.

‘சீலனின்ர அப்பா அம்மா எங்க இருக்கினம்?’

கொழும்பில’

‘ஏன் வரேல்லயாம்?’

‘திடீரெண்டு வெளிக்கிட்டு வன்னிக்கு வாறது அங்க பயம்தானே. இப்பிடி ஒரு நிகழ்வுக்குத்தான் வன்னிக்கு வந்தவை எண்டு தெரிஞ்சால் அது குடும்பத்துக்கே பிரச்சினைதானே. அதோட சீலன்ர அப்பா மற்றாக்களோடதான் ஒட்டு. இவன்ர உணர்வுகள் அப்பருக்கு நேர்மாறு. அப்பரை அவனுக்கு பிடிக்காது. அவர் இயக்கத்துக்கு எதிராய் செயற்படுறார் எண்டு முதல்ல தாயோட ஒரே சண்டை பிடிப்பானாம். இயக்கத்துக்குப்போய் இவரை நான்தான் சுடுவன் எண்டு சொல்லுவானாம். அம்மா அழுதுகொண்டிருப்பாவாம். அப்பற்ர அதிகாரம்தானாம் வீட்டுல.’

‘அதுக்காக அப்பாவையே சுடுவன் எண்டானாமா?’

‘ம். அவன் சொல்லியிருக்கக்கூடிய ஆள்தான். வெளியால பாத்தா குறும்பும் குழப்படியுமாத்தான் தெரிவான். ஆழமாய் கதைக்கும்போதுதான் அவனுக்குள்ள இருக்கிற பெரியமனுசனத் தெரியும். அப்பரைப்பற்றி கதைச்சாலே நெருப்புமாதிரி நிப்பான். சீலனின்ர பேரே அவன்ர சித்தப்பாட பேர்தானாம். அவர் பழையபோராளி. இந்திய இராணுவத்தோட நடந்த கடைசிச்சண்டையில அவர் வீரச்சாவடைஞ்சிட்டாராம். அவர்லதான் இவனுக்கு சரியான பாசம். அதோட அவன்ர சினேகிதப்பெடியனையும் ஆமிசுட்டவனாம். அவன் செத்தத இவன் நேர கண்டவனாம். ஆனால் தாங்க சுடேல எண்டு ஆமி சொல்லிப்போட்டாங்களாம். குறிப்பிட்ட நேரத்துக்குள பொடிய அடக்கம் செய்யச்சொல்லி கட்டாயப்படுத்தினவங்களாம். அதெல்லாம் இவனுக்கு ஆமியில ஆத்திரமாய் வளந்திட்டுது. அதாலதான் படிக்கக்கொண்டுபோய் விட்டாலும் சண்டைக்களத்துக்கு ஓடிருவான். இவனக் கூட்டிக்கொண்டுவரப்போன பெடியனும் அநியாயமாய் செத்திட்டான். சீலன்ர ஆத்துமா அடங்காது சுமதி. சண்டையிலயே அவன விட்டிருக்கலாம். ஒரு ஆமியக்கூட சுடாமல் செத்திட்டான் எண்றத நினைக்க எனக்கே கவலையாய் இருக்கு. சண்டைக்கு சீலனைப்பற்றியே கதைத்துக்கொண்டிருந்ததில் நேரம்போனதே தெரியவில்லை. போறதுக்காகத்தானே இயக்கத்துக்கே வந்தவன்.’ என்று அமுதா சீலன்கதை சொல்லியபடியே உறங்கிப்போக சுமதி சாமக்கோழி கூவியபின்புதான் நித்திரையானாள்.

திடீரென்று ஒருநாள் அமுதா சொன்னாள்,

‘சுமதி நான் ஒரு கிழமைக்கு வீட்டுப்பக்கம் வரமாட்டன். நீ எப்பவும்போல வீட்ட வந்துபோகலாம்.’

‘என்னப்பா அப்பிடி எங்க போகப்போறாய்?’

‘ஒரு இடத்துக்குத்தான். வந்தபிறகு சொல்றனே’ என்று உடைகளில் சிலவற்றை எடுத்து பையில் அடுக்கினாள் அமுதா.

‘என்னப்பா என்னட்டக்கூடச் சொல்லக்கூடாதா?’

‘ம்’

சுமதிக்கு அந்த ம் முகத்திலடித்த மாதிரி போய்விட்டது. அத்தோடு கதையை நிறுத்திக்கொண்டாள். ஏனோ மனசுக்குள் சங்கடமாய் இருந்தது. அமுதா தன் பயணத்துக்கான ஏற்பாடுகளிலேயே கவனமாக இருந்தாள். இரவு பத்துமணியானபின்பு வீட்டுக்குவந்த வாகனத்திலேயே புறப்பட்டு சென்றுவிட்டாள் அமுதா. சுமதியின் குளப்பமான மனநிலையை புரிந்துகொண்ட அம்மாதான் அவளுக்கு ஆறுதல் சொன்னார்.

‘இப்பிடித்தான் சுமதி. அமுதாவ திடீர் திடீரெண்டு வந்து கூட்டிக்கொண்டு போவாங்க. காயப்பட்ட போராளிகள் யாரையாவது தனியவைச்சு பராமரிக்க வேண்டியிருக்கும். அமுதாவில அவைக்கு சரியான நம்பிக்கை. கடமையில நேர்மையாயும் போராளிகள்ல அன்பாயும் இருக்கிறதால அவைக்கும் இவவ நல்லாய் பிடிக்கும். போராளிப் பிள்ளைகளுக்கெண்டால் இவவும் உயிரையும் குடுக்கிறன் எண்டுதானே நிப்பா’ என்றெல்லாம் அந்தத்தாய் தன் மகளைப்பற்றி பெருமையுடன் சொல்லிக்கொண்டிருந்தாள்.

இப்போது சுமதிக்குக்கூட மனசுக்குள் குறுகுறுத்தது. ஒரு போராளியைப்போல இரகசியம் காப்பவளாகவும் தேசப்பற்றுடனும் அமுதா கடமையாற்றுகிறாளே. முக்கியமான தங்களின் இடங்களுக்குக் கூட்டிச்செல்லும் அளவுக்கு இவளை அவர்கள் நம்புகிறார்கள். அந்தளவுக்கு அமுதா அவர்களுக்காக சேவை செய்கிறாள். அமுதாவுக்கு நல்ல மனம்தான். சாதாரண நோயாளிகளிடமே அவ்வளவு அக்கறை காட்டுகிறவள் சொந்த பந்தங்களையே விட்டுவிட்டு தேசத்துக்காக உழைப்பவர்களுக்காக உருகுவதிலொன்றும் அதிசயமில்லையே.

ஒரு வாரமாக அமுதா வீட்டில் இல்லாதது வீடே வெறிச்சோடித்தெரிந்தது. அவள் வந்தபின்பும் எந்தக் கலகலப்புமில்லாமல் இருந்தது மனசுக்கு சங்கடமாகவும் இருந்தது. போன இடத்தில் நடந்தவைபற்றி வெளியில் சொல்லாமல் மனசுக்குள் மருகிக்கொண்டு தவிக்கிறாள் என்பது புரிந்தும் சுமதியால் எதையும் கேட்கமுடியவில்லை. தன்னிடம் அதுபற்றி அமுதா எதுவும் சொல்லப்போவதில்லை என்பதுதான் சுமதிக்குத்தெரியுமே. அதனால் சுமதியும் அதிகம்பேசாமல் அமுதாவை புரிந்துகொண்டு நடந்துகொண்டாள்.

அமுதா தன் தாயாரிடம் தன் பயணம்பற்றி சாடைமாடையாக கதைக்கிறாள் என்பதை சுமதியால் புரிந்துகொள்ள முடிந்தபோது மனசு வலித்தது. அப்போதுதான் சுமதி அந்தவீட்டில் தான் விலக்கிவைக்கப்பட்டிருப்பதைப்போன்ற உணர்வை பெற்றாள். மனம் ஒன்றுமேயில்லாமல் வெறுமையில் கிடப்பது போலவும் தானொரு அநாதை போலவும் உணர்ந்தாள். அழுகை வந்தது. அவளுக்கு உடனே வாமனை பார்க்கவேண்டும்போல இருந்தது. அவனிடம் கதைக்கவேண்டும் போன்ற தவிப்பு வேகமாய் வளர்ந்தது. அதைப்பற்றி அமுதாவிடம் கதைக்கவும்கூட தயக்கமாகத்தான் இருந்தது.

அமுதா சிலநாட்களிலேயே பழைய கலகலப்பை பெற்றுவிட்டபோதும் சுமதி தனக்குள்ளேயே முடங்கித்தான் கிடந்தாள். அதையுணர்ந்து அமுதாதான் வலியக்கேட்டாள்,

‘என்னப்பா ஒரு மாதிரி இருக்கிறாய்?’ கொஞ்ச நாளாய் முகம் சரியில்லாமல் கிடக்கு? ஆ?’

‘அது ரகசியம்’ என்று சுமதி பகிடிக்குத்தான் சொன்னாலும் அவளது முகம் இறுகித்தான் கிடந்தது.

‘எனக்கே தெரியாத ரகசியமோ?’ என்று துருவினாள் அமுதா.

‘ம். எனக்குத் தெரியக்கூடாத ரகசியம் உனக்கு இருக்கலாம் எண்டால் உனக்குத் தெரியக்கூடாதது எனக்கு இருக்கக்கூடாதா?’ என்று நியாயம்கேட்ட சுமதியைப்பார்த்து என்ன சொல்வதென்று தெரியாமல் நின்றாள் அமுதா.

‘நான் சும்மா பகிடிக்குத்தானப்பா சொன்னனான். சீரியஸாய் எடுத்துப்போடாத. ஆனாலொண்டு, நான் முந்திமாதிரியான ஆளில்ல. நிறையவே மாறிப்போயிட்டன் எண்றது எனக்கே தெரியிது.’

‘……’

‘அமுது உனக்கு என்னை விளங்கிக்கொள்ள முடியேல்லையா?’ என்று சுமதி தயக்கத்தோடு சொன்னபோது அமுதாவுக்கு அவள்மீது இரக்கமாய் இருந்தது. உடனே சுமதியின் கையைப்பிடித்து தன் கைக்குள் வைத்துக்கொண்டாள்.

‘எனக்குத்தெரியும் சுமதி. இப்ப நீ யாழ்ப்பாணத்தில இருந்த சுமதியில்லை. நீ மாறுவாய் என்ற நம்பிக்கை ஆரம்பத்தில எனக்கு இருக்கேல்லத்தான். ஆனால் போராளிகளின்ர வரவு, அறிமுகம் உன்னை மாத்தும் என்றது எனக்குத்தெரியும். இப்பச்சொல்லு உனக்கு இயக்கத்தை பிடிக்கேல்லையா? ம்?’

‘சொல்லத்தெரியேல்ல அமுது.’

‘ஆனா பிடிச்சுமிருக்கு. அப்பிடித்தானே.’

‘ரெண்டும் சொல்லலாம். பிடிக்கிது சிலநேரங்களில. பிடிக்கேல்ல எப்பவுமே.’

‘போராட்டத்தின்ர நோக்கத்தையும் வரலாறையும் புரிஞ்சுகொண்டால், தெரிஞ்சுகொண்டால் உன்ர மயக்கமும் தெளிஞ்சிரும்’

‘நான் ஒண்டும் மயக்கத்தில இல்ல அமுது. என்னை ஒண்டுமே தெரியாதவள் எண்டு நினைக்காதை.’

‘அடியோட பிடிக்காமலிருந்த இயக்கத்தை இப்ப கொஞ்சமெண்டாலும் பிடிச்சிருக்கே. எப்பிடி? சிலத புரிஞ்சுகொண்டாய். அதாலதான் சுமதி அப்பிடிச்சொன்னன். மத்தப்படி எப்பவும் நீ விழிப்பாய்த்தான் இருக்கிறாய், இயக்கத்தை பிடிச்சிருக்கு எண்டுமட்டும் சொல்லிரக்கூடாது எண்டு.’ என்ற அமுதா மெதுவாக சிரித்தாள்.

## 12 அமுதாவின் தியாகம்

உண்மையில் போராட்டத்தை பிடித்திருக்கிறதா இல்லையா என்று தெரியாத மயக்கம் இப்போது சுமதிக்கு. பிடிப்புக்கும் பிடிப்பின்மைக்கும் இடையில் தான் நிற்பதை முதன்முதலாக உணர்ந்தாள் சுமதி. அப்போது அவளுக்குள் பலத்த கேள்வி ஒன்று எழுந்தது, தான் தோற்றுவிட்டேனோ என்று. எனினும் மெல்ல மெல்ல அந்த உணர்வுகளும் மறையத்தொடங்கின.

எப்போதாவது வாமனின் கடிதங்கள் வந்தன, வாமன்தான் வரவேயில்லை. அவனை பார்க்கவேண்டும் என்ற உணர்வு தவிப்பாய் மாறி சுமதியைப்போட்டு அலைக்கழித்தது. பொறுமையிழந்து அமுதாவிடம் வாய்திறந்தாள்.

‘ஏனமுது வாமன் வாறதில்ல? வேலை கூடவோ?’

‘அடடே, எங்கட சுமதி இப்பவும் வாமனுக்காகத்தான் காத்துக்கொண்டு இருக்கிறா என்ன?’ என்று அமுதா கிண்டலில் இறங்க சுமதிக்கும் சிரிப்பு வந்தது. இருவரும் வாமனைப்பற்றி நீண்டநேரம் மனம்விட்டு கதைத்ததும் அறுவை கதைகளால் காலைவாரிச் சிரித்ததும் மனதை கொஞ்சம் இலேசாக்கிவிட்டதுதான்.

‘தவிர்க்கேலாது சுமதி. நீ வாமனோட சேத்து இயக்கத்தையும் கட்டிக்கொள்ளத்தான் வேணும்.’ என்று கண்சிமிட்டிய அமுதாவை முறைத்துக்கொண்டு கிள்ளினாள் சுமதி.

‘அது கஸ்ரம் அமுது. ஏன் விலத்தவே மாட்டாரா? நான் இப்பவும் சொல்ரன், ஆள் விலத்தி வந்தப்பிறகுதான் கல்யாணம். அதுவரைக்கும் இப்பிடியேதான் இருப்பன்.’

‘ஏய், என்னப்பா நீ?’ என்று அதிர்ந்தாள் அமுதா.

‘ஏன் அப்பிடிப்பாக்கிறாய் அமுது? நானிப்ப தட்டத்தனி மனுசியாகிட்டன். நீ இங்க இருக்கிறபடியால உன்னோட இருக்கிறன். வாழ்நாள் முழுக்க உன்னோடையே இருக்கமுடியுமா? எனக்கு இனி எல்லாமே வாமன்தானே. வாமன் போராளி எண்டால் சண்டைக்கெல்லாம் போகவேணும். போராளி இல்லாட்டில் போகத்தேவையில்ல.’

‘போராளியாய் இருந்தால் செத்திருவார். இல்லாட்டில் சாகமாட்டார். அதத்தானே சொல்ல வாறாய்?’

‘ம்’

‘சண்டைக்குப்போற எல்லாருமே சாகிறதில்லச் சுமதி. பத்து இருபது ஆண்டுகளாய் சண்டைக்களத்தில தொடர்ந்து நிக்கிறவங்களும்கூட திருமணம் செய்துதான் இருக்கிறாங்க. போராளியே இல்லாத சாதாரண சனங்கள்கூட அநியாயமாய் செத்திருக்கிறாங்க. என்னால இதுக்கு ஆயிரக்கணக்கான உதாரணங்கள சொல்ல முடியும்’ என்று படபடத்தாள் அமுதா.

‘என்னமோ அமுது. எனக்கொண்டும் நம்பிக்கையில்ல. என்னில அக்கறை காட்ரதே ரெண்டாம் பட்சம்தான் என்றவரை நம்பி நான் என்னெண்டு கழுத்தை நீட்டுறது சொல்லு? நாளைக்கு பிள்ளை குட்டியோட என்னை தத்தளிக்க விட்டிட்டு போயிட்டாரெண்டால் எனக்கு யார் இருக்கினம் சொல்லு?’

சுமதி சொல்வதிலும் நியாயம் இல்லாமல் இல்லை. ஆனால் வாமன் இதற்கு ஒருநாளும் சம்மதிக்க மாட்டான் என்பது அமுதாவுக்கு மிகநன்றாகதே தெரியும்.

'அப்பிடியெண்டால் நீங்க ரெண்டுபேரும் இப்பிடியே இருக்கவேண்டியதுதான்.' என்றாள் அமுதா யோசனையோடு.

'முயற்சி திருவினையாக்கும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கு அமுது.'

'யாற்ர முயற்சி சுமதி? உன்ரயா வாமன்ரயா?' என்று அமுதா கேட்டதும் சுமதி மௌனியானாள்.

'என்னவோப்பா உன்னைய நினைச்சால் எனக்கு கவலையாத்தான் இருக்கு. உன்ர இடத்தில நானிருந்தால் இந்நேரம் கல்யாணம் கட்டியிருப்பன் சுமதி. அவனுக்கு ஆறுதலாயும் இருந்திருப்பன்.'

சட்டென்று கேள்விகளை தொடுக்கத்தொடங்கினாள் சுமதி.

'அதுசரி அமுது நீயேன் இன்னும் கல்யாணமே செய்யேல்லை?'

'…….'

'இதுகும் ரகசியமா?' என்று சிரித்தபடி அமுதாவை நோக்கிய சுமதி நிலைதளம்பிப் போனாள். ஏனென்றால் அமுதாவின் கண்கள் குளமாகிவிட்டிருந்தன.

'ஏய் உன்னை வேதனைப்படுத்த நினைச்சு நான் இதக்கேக்கேல்லையப்பா.' என்றபடி அவள் அமுதாவின் தலையைத் தடவினாள். அமுதாவோ விம்மியழத் தொடங்கிவிட்டாள்.

அமுதாவுக்கும் ஒரு காதல்வாழ்வு இருந்ததுதான். நான்காண்டுகாலக் காதல், கல்யாணநாள் குறிக்கும்வரை கனிந்ததுதான். ஆனால் அவனது வரவு சாத்தியமற்றுப்போனது. கடல்கடந்து வரும் வழியில் அவன் காற்றோடு கரைந்த செய்தி மீண்டும் மீண்டும் எழுந்துவந்து அவளில் பேரலையாய் மோதியது. இதயமே வெடித்துவிடக்கூடாதா என்றளவு வேதனை அவளை ஆட்கொண்டு விம்மித்துடிக்கச் செய்தது.

வெளிநாடொன்றுக்கு வேலையாகச்சென்று வெற்றிகரமாக வேலையையும் முடித்துக்கொண்டு திரும்பிவரும்பொழுதுதான் சிறிலங்காவின் கடற்படையினரால் வழிமறிக்கப்பட்டான். தன்னையும் தன் கடமையின் இரகசியத்தையும் சேர்த்து கப்பலோடு அழித்துக்கொண்டான்.

அவனுக்காக எத்தனையோபேர் காத்திருந்தார்கள். அவனுடைய தியாகத்தின்செய்தி மட்டுமே வந்து அவர்களுடைய எதிர்பார்ப்புகளையும் ஏமாற்றிவிட்டது. அவர்களைப்போலவேதான் இவளும் பொய்யாகக்கூடாதா அந்தச்செய்தி என்று ஏங்கித்தவித்தாள். தனக்காக இல்லாவிட்டாலும் நாட்டுக்காக அவன் வந்திருக்க வேண்டுமே. வரவில்லையே. எந்த ஊடகங்களுமே அவனைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லவில்லை. எந்தத் துயிலறையுமே அவனுக்கான பெயரை தாங்கவில்லை. அலையெறியும் ஓசையே அவனது பேச்சு. அமுதாவுக்குள்ளும் அலையெறியும் ஓசை அவனது பாசையாகி திடமூட்டியது.

'உனக்கு நான் சொல்லத்தான் வேணும் சுமதி. ஆனால் இப்ப இல்ல.' என்று பெருமூச்சொன்றுடன் அமைதியாகிவிட்டாள் அமுதா.

அதிக நாட்களுக்கு சுமதியை யோசித்தபடி காத்திருக்க வைக்காமல் அடுத்தநாள் இரவே படுக்கையில் விழுந்தபோது மெல்ல சொல்லத்தொடங்கினாள் அமுதா. அழாமல் அமுதாவால் பேசவே முடியவில்லை. விம்மலும் வேதனையுமாக அமுதா சொன்ன கதையைக்கேட்க சுமதிக்கு ஓவென்று கதறவேண்டும்போல இருந்தது.

'நீ இவ்வளவு ஆழமான காயத்தோட இருக்கிறாய் எண்டு நான் நினைக்கவேயில்ல அமுது. உன்னை அழவைச்சிப்போட்டன். என்னை மன்னிச்சுக்கொள் அமுது' என்றாள் சுமதியும் விம்மலுடன்.

'உள்ளுக்குள்ளயே அழுறதை நேற்றும் இண்டைக்கும் வெளிய அழுதிருக்கிறன். அவ்வளவுதான் சுமதி. நீ வேதனைப்படாத.' என்று அவளை தட்டிக்கொடுத்தாள் அமுதா.

'நானொண்டு சொன்னால் குறை நினைக்க மாட்டியே?'

'ம்'

'இப்பிடியொரு நிலைமை எனக்கும் வரக்கூடாது என்றதுக்காகத்தான் அமுது நான் வாமனை விலத்தி வரச்சொல்லிக் கேக்கிறன்.'

'ஏய் மடத்தனமாப் பேசாதையப்பா. நீ இன்னுமே போராளிகளை புரிஞ்சு கொள்ளேல்ல.'

'ஏனமுது போராளிகளாய் இருந்தாக்கள் விலத்தவே இல்லையா? விலத்திப்போய் கலியாணம் செய்யவே இல்லையா? வெளிநாடுகளுக்குந்தான் போகவே இல்லையா?' என்று விளக்கம் கேட்டாள் சுமதி.

'அப்பிடியெல்லாம் நடந்துதானப்பா இருக்கிது. இப்பவும் நடக்கிதுதான். நான் இல்லையெண்டு சொல்லேல்ல. ஆனா மற்றவைக்காகவே தங்கள வருத்தி எல்லாச் சனத்துக்காகவும் விடுதலையப் பெற்றுத்தர தங்களை அர்ப்பணிக்கிற போராளிகளும் இருக்கிறாங்க. தங்கன்ர அப்பா, அம்மா, உறவுகள், வசதி, வாய்ப்பு,

கல்வி, அந்தஸ்து எண்டு அத்தனையையும் தூக்கி எறிஞ்சுபோட்டு அல்லது ஒதுக்கி வைச்சுப்போட்டு தங்களையே விலையாய் குடுக்கிற உன்னதமான போராளிகள் இருக்கிறாங்க. இடையில விலகிப்போறாக்களையும் அந்தஉன்னதமானவங்களையும் ஒப்பிட்டுப்பாக்க ஏலுமா சுமதி? உனக்கு வாமன்ர பெறுமதி புரியேல்ல. அவன்ர வீரத்தை மதிக்கத் தெரியேல்ல. அந்த உயர்ந்த உள்ளத்தை நீ சரியாய் புரிஞ்சுகொள்ள முயற்சிக்கவே இல்ல'

'வாமனை புரிஞ்சு கொள்ளேல்லை எண்டில்லை அமுது. நான் என்னசொல்ல வாறனெண்டால்,' என்று தொடரப்போனவளை நிறுத்திய அமுதா தானே பேசினாள்.

'நீ என்ன நினைக்கிறாய் எண்டு எனக்கு நல்லாய் விளங்கிது சுமதி. நான் என்னதெரியுமா நினைக்கிறன்? என்னை நேசிச்சவரோட, அந்த இலட்சியப் போராளியோட, ஒரு நாள், ஒரேயொரு நாளாவது வாழ்க்கையைப் பகிரயில்லையே எண்டுதான் ஏங்கிறன். ஒரே ஒருநாள் வாழ்ந்திருந்தாலும் அவருக்கு நான் நிறைவாய் இருந்தநான் என்ற நிம்மதியாவது எனக்குக் கிடைச்சிருக்கும். அவர்ர மனைவி என்ற பெயரோட, சாகும்வரைக்கும் அவரையே நினைச்சுக்கொண்டு வாழ்ந்திருப்பன்.'

அமுதாவின் வார்த்தைகள் சுமதிக்கு அதிர்ச்சிக்குமேல் அதிர்ச்சியை ஏற்படுத்தின. ஒரே ஒருநாள் வாழ்ந்த நிறைவோடு வாழ்நாளெல்லாம் விதவையாக இருக்கப்போகிறேன் என்கிறாளா? அதிலென்ன இன்பம் கிடைக்கப்போகிறதாம் இவளுக்கு என்று சுமதி தனக்குள்தான் நினைத்துக் கொண்டிருந்தாள்.

'அதிலயும் ஒரு சுகம் இருக்கிது சுமதி. பெண்ணொருத்தியை நேசிக்கிறவன், அவவோட தான் வாழ்ந்தநான் என்ற திருப்தியோட சாகனும். காதலிக்கிற எல்லாருமே சேந்து வாழனும். அப்பிடி வாழாமல் செத்தாங்கள் என்றதை என்னால ஏனோ ஏற்றுக்கொள்ளவே முடியிறதில்ல. அதை தாங்கிக்கொள்ளமாட்டன். நான் என்ர மனநிலையத்தான் சொல்ரன் சுமதி. போராளிகள் தங்கன்ர வாழ்க்கைய முற்றுமுழுதா மற்றாக்களுக்காக தியாகம் செய்யேக்க, அவைக்காக மற்றாக்கள் மட்டுமேன் சின்னத்தியாகத்தக்கூடச் செய்யக்கூடாது? ஒரு போராளிய அவனுக்குரிய இயல்புகளோட ஏற்று அவனுக்கு உந்து சக்தியாய் காதலியொருத்தி கிடைப்பாள் எண்டால் அது பெரிய விசயம் சுமதி. அவையள் செய்யிற பெரிய ஈகங்களுக்காக நாங்கள் செய்யிற சின்னச்சின்ன விட்டுக்குடுப்புகள்தான் இதுகள். ப்ளீஸ் சுமதி. நீ வாமனை புரிஞ்சுகொள். அவர்ர சாவைப்பற்றி நீ யோசிக்காத. வாழ்வைப்பற்றி யோசி. போராளிகள் எல்லாருமே செத்துப்போயிடறதில்லப்பா.' என்றபடி சுமதியின் கைகளை பிடித்துக்கொண்டாள் அமுதா. சுமதியும் தன் தோழியின் கையை இறுக்கிக்கொண்டாள்.

ஏனோ சுமதிக்கு வாமன்மீது பேரன்பைப் பொழியவேண்டும் போன்றிருந்தது. அவனை உடனே பார்க்கவேண்டும் என்று தவிப்பாக எழுந்த உணர்வை சொல்லத்தெரியாமல் கண்களை மூடிக்கொண்டாள். மூடிய இமைகளிடையே கண்ணீர் கசிந்தோடியது.

யுத்தத்தை ஓய்வுநிலையில் வைத்திருந்த சமாதானப் பூட்டுக்கள் தெறித்துவிழுந்தபோது அமுதாவுக்கும் சுமதிக்கும்கூட ஓய்வே இருக்கவில்லை. அப்போதுதான் சுமதி ஒரு பேருண்மையை புரிந்துகொண்டாள், வன்னி முழுவதுமே போராளிகளின் கட்டுப்பாட்டுக்குள்தான் இயங்குகிறது என்று. வன்னியில் இயங்கிய அரசின் சகல நிர்வாக அலகுகளையும் அங்கே மிகநேர்த்தியாக இயக்கிக்கொண்டிருந்தது இயக்கமே என்பதை அறிந்தபோது அவளுக்கு பெருமையாகக்கூட இருந்தது.

மருத்துவமனையை காயப்பட்ட போராளிகள் நிறைத்தபோது போராளி மருத்துவர்களும் அதிகம் வந்துபோனார்கள். பொது மருத்துவமனைகளைவிடவும் பாரிய மருத்துவமனைக்குரிய செயற்பாடுகளை இயக்கத்தின் மருத்துவப்பிரிவே செய்துவருவதுபற்றி அப்போது அறிந்தாள். படையினருக்கும் விடுதலைப் போராளிகளுக்குமான யுத்தம் கண்மண் தெரியாத கடும் போர்ச்சூழலை உருவாக்கிவிட்டது. விளைவு அளவுகணக்கற்று மக்களும் வகைதொகையாக பாதிக்கப்பட்டனர். திடுதிப்பென போர்விமானங்கள் வீசும் குண்டுகளில் உடல்கள் கிழிந்தபடி வந்துகுவிந்த மக்களைக்கண்டு அருண்டுவிட்டாள் சுமதி. அதிர்ச்சியில் மூர்ச்சையுற்று வீழ்ந்த அவளையும் தூக்கி இன்னொரு கட்டிலில்போட்டு அவளுக்கும் சிகிச்சையளிக்க வேண்டியதாய் ஆயிற்று.

## 13 மயங்கி விழுந்தாள் சுமதி

மயங்கிவிழுந்த சுமதி தெளிவுற்று எழுந்தபோது, மருத்துவமனையே கதறலாலும் கண்ணீராலும் குருதியாலும் நெரிசலாயுமிருந்தது. நடைபாதையெங்கும் ரத்தம் சிதறிக்கொட்டிக்கிடந்தது. குஞ்சுகளும்

குழந்தைகளும் சிறுவர்களுமடங்கிய, உடல்கள் கிழிந்த மனிதர்கள் கதறித்துடித்தார்கள். வழமையாக மருத்துவமனையில் நிற்கும் பணியாளர்களைவிட பலபேர் கழுத்துகளில் பரிசோதனை கருவிகளை மாட்டிக்கொண்டு சிகிச்சையளிப்பதில் மும்மரமாய் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். காயமடைந்தவர்களைத்தவிர அவர்களை தூக்கிக்கொண்டு வந்தவர்களும் பார்க்க வந்தவர்களுமாய் நிறையும் சனங்களை தமிழீழ காவல்துறையினரே வந்துநின்று வெளியேற்றிக் கொண்டிருந்தார்கள்.

சுமதி கட்டிலில் இருந்து மெதுவாக கீழே இறங்கி நின்றாள். தான் என்னசெய்யவேண்டும் என்பதே அவளுக்கு புரியவில்லை. அடுத்த கட்டிலோரத்தில் தாதியொருத்தி நின்றாள். அவள் காயமடைந்து முகமே அடையாளம் தெரியாமல்கிடந்த சிறுமியொருத்திக்கு நாளத்தில் ஊசியேற்றுவதற்கு முயன்றுகொண்டிருந்தாள். அந்தத் தாதியினுடைய உடைகளெல்லாம் ரத்தத்துளிகள் ஊறியிருந்தன. சுமதி அவளருகே சென்றாள். தாதியின் கைகளோ தடுமாறிக்கொண்டிருந்தன. அவளால் ஊசியை சரியாக நாளத்திற்குள் செலுத்த முடியவில்லை. அதை தன்னால் செய்யமுடியும் என்று சுமதியும் நம்பவில்லை. இவளின் கைகளிலும் மெல்லிய நடுக்கத்தை உணர்ந்தாள். வெளியே இன்னும் அம்புலன்ஸ்கள் அலறிக்கொண்டிருந்தன. அவ்வளவு மோசமானளவு காயப்பட்டவர்களை சுமதி அதற்குமுன்பு பார்த்ததேயில்லை.

‘இங்க விடுங்கோ மிஸ்’ என்று அந்தத்தாதியின் கையிலிருந்த ஊசியை வாங்கிய அடுத்தகணமே பட்டென நாளத்தில் இறக்கினாள் ஒரு போராளிப்பிள்ளை.

‘சரி மிஸ். பிளட் பேக்கை கொழுவுங்கோ. ஆ இதை இப்பிடி செய்யணும்’ என்று வேகமாகவும் நிதானமாகவும் செயற்பட்ட போராளியை ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டுநின்ற சுமதியை அமுதா வந்து இழுத்துச்சென்றாள்.

‘நீ தியேட்டர்ல நில்லு சுமதி. டொக்டர்ஸ் கேக்கிற இன்ஸ்ருமன்கள கடகடண்டு எடுத்துக்குடு.’ என்று சத்திரசிகிச்சைக் கூடத்துக்குள் தள்ளினாள். செய்வதறியாது விழித்துக்கொண்டுநின்ற அவளை மருத்துவர்களே இயக்கத்தொடங்கினார்கள். சத்திரசிகிச்சை கூடத்துக்குள் செயற்பட்ட அநேக இளையவர்களும் போராளிகளே. வைத்திய அதிகாரியிடமும் கதைத்துக்கதைத்து அவரிடமும் ஆலோசனைகளை கேட்டும் சொல்லியும் கடும் வேகத்தில் செயற்பட்டார்கள். அவர்களுக்கு உதவியாக சுமதியும் தன்னால் முடிந்தவற்றை எல்லாம் செய்யத்தொடங்கினாள். தம் கைகால்களில் சக்கரங்களைப் பூட்டிக்கொண்டவர்களைப்போல அவர்கள் இயக்கிய வேகத்திற்கு ஈடுகொடுத்து அவளும் பம்பரமாய் சுழன்றாள். எனினும் அவள் நிதானமிழந்திருந்தாள். கத்தரிக்கோல், கோஸ், பண்டேஜ், பஞ்சு, காயந்தைக்கும் நூல் கோர்த்த ஊசி, பொசெப்ஸ், பிளேற் என்று அவர்கள் பெயர்சொல்லும் பொருட்களை எடுத்துக்கொடுப்பதைக்கூட நிதானமாக செய்யமுடியவில்லை.

‘மிஸ் சிசரத் தாங்க’ என்றபடி நீண்ட கைக்கு அவள் ஊசியை கொடுத்தாள்.

‘ஊசியத் தாங்க’ என்றால் அவள் பஞ்சை நீட்டினாள். அதற்காக வைத்தியர்களிடம் ஏச்சும் வாங்கினாள். ஆனாலும் அவர்களின் சீற்றமெதுவும் அவளை நோகடிக்கவில்லை. சிதறிக்கிடக்கும் காயங்களை பார்க்காமல், வாய்மூக்கை மறைத்துக்கட்டிய துணிக்குமேலாய் கேட்கும் குரல்களை கிரகித்தும் அவர்களின் கண்களைப்பார்த்துமே உதவினாள். காயங்களையும் கவணித்திருந்தால் அடுத்ததாக வைத்தியர் எதைக்கேட்பார் என்பதை புரிந்துகொண்டே அவர் கேட்பதற்கு முன்பே எடுத்துக்கொடுக்கலாம். அப்படிச்செய்ய சுமதியால் முடியவில்லை. கசாப்புக் கடையாகக் காட்சிதந்த அந்த சத்திரசிகிச்சைக்கூடத்தை தான் முழுதுமாக பார்க்கக்கூடாது என்று நினைத்தபடியே தன்னை திடப்படுத்திக்கொண்டு நின்றாள்.

‘டஸ்பின் நிறைஞ்சிட்டு உடன மாத்துங்க’ என்ற குரல்வந்த திசையை நோக்கின சுமதியின் கண்கள். சொன்னவர் தன் கையிலிருந்ததை கூடையில் எறிந்துவிட்டு திரும்பினார். ஆ அது கட்டிலில் கிடக்கும் குழந்தையின் அறுந்த கை. குழந்தையொன்றின் கையை அகற்றி குழந்தையை காப்பாற்றிவிட்டார்கள்தான். ஆனால் பிஞ்சுக் கையொன்று தனியே குப்பைக்கூடையில் கிடந்தது அவளை என்னவோ செய்தது. சிகிச்சை செய்துகொண்டிருந்த பெண்போராளி ஒருவரின் தோளில் மயங்கிச் சரிந்தாள் சுமதி.

‘ஓ இந்த நேஸையும் கவனியுங்கப்பா. ஆள் மயங்கிட்டா.’ என்று யாரோ சொல்வது சுமதிக்கும் கேட்டது. அவள் வெளியே தூக்கிச்செல்லப்பட்டாள்.

அடுத்த ஒரு வாரத்திற்கும் சுமதியால் அமைதியாக இருக்க முடியவில்லை. அமுதாவோ மருத்துவ மனையிலேயே நின்றுவிட்டாள். அவள் எப்போதுமே இப்படித்தானாம். காயமடைந்தவர்கள் அதிகமாய் மருத்துவமனையில் பராமரிக்கப்படும்போது வேலையும் அதிகம்தான். சத்திரசிகிச்சைக்கூட உதவியாளுக்கு பெயர்பெற்ற தாதி அமுதாதான். அவள் அருகில் நின்றால் எந்தச் சவாலான காயத்தையும் பொறுப்பெடுத்து செய்யமுடியும் என்றும் சமயத்தில் அவளே தைரியமூட்டுவாள் என்றும் வைத்திய அதிகாரியே சொல்லியிருக்கிறார்.

அமுதா ஒரு தாதியாக இருந்தாலும் வைத்தியருக்குரிய பல விடயங்களில் தேர்ச்சி பெற்றிருந்தாள். அவ்வளவு அநுபவங்களை பெற்றிருந்தாள். அவசரத்திற்கு தனியே நின்றுகூட அவளால் பலரை சமாளித்துக்கொள்ள முடியும்.

அடிக்கடி வீட்டுக்கு வந்துபோகும் சுமதியால் சரியாக சாப்பிடக்கூட முடியவில்லை. உணவை கண்டாலே பிடிக்குதில்லை. இரத்த வெடிலடிக்கிறது. மாமிசத்தைக்கண்டால் எழுந்து வெளியே ஓடுகிறாள். பெரும்பாலும் தேநீரை மட்டுமே பருகினாள். பயங்கர தலைவலியால் அவதிப்பட்டுக்கொண்டிருந்தாள். அமுதாவின் அம்மாதான் அவளை அன்போடு உபசரித்து தேற்றினார்.

ஆறுதலாக இருந்து கதைத்த சந்தர்ப்பத்தில் சுமதி மயங்கிவிழுந்த கதையைச்சொல்லி அமுதா சிரித்தாள். அதன்பிறகு அம்மா இருவருக்குமாக காலையில் முட்டைக்கோப்பி ஆற்றிக்கொடுத்து வேலைக்கனுப்பினார்.

வாமன் வடபோர் முனையில் களமுனை பொறுப்பாளர்களில் ஒருவனாக நிற்கிறானாம் என்ற தகவலை அறிந்தபோது சுமதி துடிதுடித்துப்போனாள். சந்தித்து எத்தனையோ மாதங்களாகிவிட்டன. அவன் இவளைப்பற்றிய எண்ணமேயின்றி களமுனையில் நிற்கிறானாமா? அமுதாவிடம் கேட்டு எப்படியாவது அவனை, ஒரேயொரு முறையாவது சந்திக்க வேண்டும். சந்தித்து அவனிடம், நான் பழைய சுமதியில்லை வாமன் என்று சொல்ல வேண்டும். நீங்கள் இயக்கத்தைவிட்டு விலகிவரத் தேவையில்லை. இனிமேல் எப்போதுமே அப்படிநான் கேட்கமாட்டேன். ஆனால் எனக்காக உங்கள் உயிரில் அக்கறையாக இருங்கள் என்று அவனிடம் சொல்லவேண்டும் என்றெல்லாம் நினைத்துக் கொண்டிருந்தாள். அமுதாவுக்குத்தான் எத்தனையோ பேரை தெரியுமே. பெரியவர்களும் சிறியவர்களுமாய் எத்தனையோபேர் அவளிடம் வந்துபோகிறார்கள். நல்ல நண்பர்களும் அவளுக்கிருக்கிறார்கள். ஆனால் எவர் சொல்லியும் அமுதா தன் திருமணக்கதையை மட்டும் ஏற்பதாய் இல்லை.

'எப்போது என்னவன் எனக்கில்லை என்றானதோ அப்போதிருந்து அவன் நேசித்த கடமையை கல்யாணம் செய்துகொண்டுவிட்டேன். நான் சாகும்வரை என் கடமையை தொடருவேன். இதுவே நான் அவனில் செய்திருக்கும் சத்தியம். அதை ஒருபோதும் மீறமாட்டேன்.' என்று உறுதியாகச் சொல்லிவிட்டாள். யார் கேட்டாலும் எவர் எப்படிக்கேட்டாலும் எத்தனைதடவைதான் கேட்டாலும் அவளது பதில் அதுவாகத்தான் இருந்தது. அதனால் அவளுடைய திருமணம்பற்றி எவருமேவாய்திறப்பதில்லை. இப்போது சுமதியும் அமுதாவைப்பற்றி நன்கு புரிந்துகொண்டதால் அந்தக் கதையையே கதைப்பதில்லை.

அமுதா எப்போதாவது இருந்துவிட்டு தன்னவனைப்பற்றி கதைப்பாள். இது என் பிறந்தநாளுக்கு அவர் தந்தது. இதுதான் அவர் முதல் முதலாய் எனக்குத்தந்த மணிக்கூடு. இதுதான் அவர் முதலும் கடைசியுமா எனக்குத்தந்த புத்தகம் என்று சில நினைவுப்பொருட்களை காட்டியிருக்கிறாள். சுமதியிடம் அப்படிச் சொல்லிக்கொள்ளத்தக்க பொருட்கள் எதுவுமே இருக்கவில்லை. வாமனிடமிருந்து பறித்தாவது ஒரு நினைவுப்பொருளை வைத்துக்கொள்ளவேண்டும் என்றது சுமதியின் உள்மனது. நீண்ட நாட்களின்பின் வாமனிடமிருந்து சுமதிக்கு கடிதமொன்று வந்தது.

சுமி, இப்போதும் என்னிடம் கோபம்தானா? ஏனோசுமி, உன்னை நினைக்கும்போது கவலைதான் வருகிறது. உன் மீதான காதல்மட்டுமே பெருகவேண்டிய இதயத்தில் கவலைகளை நிரப்பிக்கொள்ள விருப்பமே இல்லை. சுமதி உன்னிடம் நேரில் வந்துதான் நிறைய கதைக்கவேண்டும். எப்படியாவது நேரம் ஒதுக்கிக்கொண்டு வருவேன். வரும்போது என்னுடன் ஏட்டிக்குப் போட்டியாக கதைக்காமல் இருப்பாயென்றால் கொஞ்சமேனும் மனம்விட்டு கதைக்கலாம். எத்தனை தடவைகள் சொல்ல நினைத்தும் நான் சொல்ல வந்ததை சொல்லாமலேயே வந்திருக்கிறேன் தெரியுமா?

சுமிக்குட்டி, நான் போராளி என்று உனக்கு சொல்லாமல் விடவோ, வேண்டுமென்று உன்னை ஏமாற்றவோ இல்லையம்மா. என் கடமை அப்போது என்னை இனங்காட்டிக்கொள்ள விடாமல் தடுத்துவிட்டது. பழகிய பின்புதான் உன்னுடைய விருப்பு வெறுப்புகள், போராட்டம் மீதான உனது தப்பபிப்பிராயம் எல்லாம் புரிந்தது. எனக்குள்ளும்கூட அப்போது குழப்பமாகத்தான் இருந்தது சுமி. எத்தனையோ பெண்கள் இருக்கையில் என் இலட்சியத்தையே வெறுக்கின்ற பெண்ணிடமா இதயத்தை இழந்தேன் என்று என்னையே நான் நொந்துகொண்டதுண்டு. ஆனாலும் உன்னை நான் ஏமாற்றிவிடக்கூடாது என்று நினைக்கிறேன்.

சுமியம்மா, என்னை நீ உண்மையாக நேசிக்கிறாய் என்பதை உணர்ந்ததால்தான் உன்னை என்னால் தட்டிக்கழிக்க முடியாமல்போனது. நான் யார் என்பதை அறிந்தபின் நீ என்னை ஒதுக்கியவிதம் என்னை மிகவும் அவமானப்படுத்தியது சுமி. நீ என்னை நம்பியே வீட்டைவிட்டு புறப்பட்டு வந்தவள். அதனால் நான் உனக்கு ஒருபோதுமே துரோகம்செய்ய முடியாது. அதற்காக இயக்கத்தை விட்டுவிடவும் என்னால் முடியாது சுமி. தயவுசெய்து என்னை புரிந்துகொள் சுமி. சகித்துக்கொள். நீ மாறவேண்டும் என்று உன்னை நான்

கட்டாயப்படுத்த மாட்டேன். என்னையும் மாறச்சொல்லி நீ வற்புறுத்தாதே. என்மீதான உனது அன்பு பெறுமதியானது. அதை நான் மதிக்கிறேன் சுமி என்றெல்லாம் மனம்விட்டு எழுதியிருந்தான்.

சுமதிக்கு கடிதத்தை படிக்கப்படிக்க கவலையாக இருந்தது. அந்தக்கணமே அவனுடன் கதைக்கவேண்டும் போன்றிருந்தது. நாட்குறிப்பேட்டில் தன் உணர்வுகளை கொட்டினாள்.

காதலுடன் என்னுயிர் வாமனுக்கு, நான் உனக்காகவே வந்தேன். இப்போதும் உனக்காகவேதான் வாழ்கிறேன். நான் சின்னப்பிள்ளைபோல உன்னுடன் முரண்பட்டதையெல்லாம் மறந்துவிடு. இப்போது நான் புதிதாக பிறந்திருக்கிறேன். என் உயிரே உன்னை நான் சகித்துப்போவதா? இனிமேல் அப்படிச்சொல்லாதீர்கள் வாம். என் சூழலும் நான் வளர்ந்த முறையும் அப்படி என்னை ஆக்கியிருந்தன. வாம், இப்போது இந்தச்சூழல் என்னை தலைகீழாய் மாற்றிவிட்டது. எப்போது நேரில்கண்டு எல்லாவற்றையும் சொல்வேன் என்று தவித்துக்கொண்டிருக்கிறேன் வாம். ஒருமுறையேனும் வாருங்கள். வாம், நானும் உங்களுடன் நிறையக் கதைக்கணும். இப்போது என் பிடிவாதங்களெல்லாம் போன இடம் தெரியவில்லை. நான் போராளிகளை மதிக்கிறேன் வாம். நான் உண்மையாக, ஆழமாக, உங்களை உங்கள் கடமைகளோடு நேசிக்கிறேன். எப்போது வருவீர்கள் எப்போது வருவீர்கள் என்று வழிமேல் விழிவைத்து காத்துக்கொண்டிருக்கிறேன் வாம்.

## 14 பணி மாற்றம்

கடிதம் கடிதமாய் எழுதிய சுமதி யாரிடமும் சொல்லக்கூட இல்லாமல் குறிப்பேட்டை தன் அடிப்பையில் போட்டுவைத்தாள். விரும்பியபோதெல்லாம் அதை எடுத்து வாமன் மீதான தன் உண்மைக்காதலை எண்ணியபடி வாசித்து மகிழ்ந்தாள். வாமன் வருவான் என்ற எதிர்பார்ப்புமட்டும் ஏமாற்றமாகவே இருந்தது.

களமுனை வேலைகளில் ஈடுபட்டிருப்பதால் வாமனால் நினைத்தவுடன் வரமுடியாது என்று அமுதா விளக்கம் சொன்னாள். ஆனாலும் நேரம் கிடைத்தால் நிச்சயம் வருவான் என்றும் சொல்லிக்கொண்டிருந்தாள். அந்த ஆறுதல் வார்த்தைகளால் சுமதியை ஆற்றுப்படுத்த முடியவில்லை. காரணம் வடபோர்முனையான கிளாலி, முகமாலை, நாகர்கோவில் பகுதிகளில் அடிக்கடி சண்டை நடந்துகொண்டிருந்தது. நடந்த சண்டைகள் எதுவும் சாதாரண சண்டைகளல்ல. நூறுக்கு நூறு, இருநூறுக்கு இறுநூறு என்று உயிர்களை காவுகொள்ளும் சண்டைகள்தான் நடந்தன.

நடக்கும் சண்டைகள் ஒவ்வொன்றும் சுமதியின் இதயத்தில் சுடச்சுட நெருப்பைத்தான் அள்ளிக்கொட்டும். தடதடக்கும் வெடியோசைகளில் அவளது இதயம் அதிரும். ஒவ்வொரு சண்டையும் நடந்து முடிந்தபின் ஊருக்குள் வீரச்சாவு நிகழ்வுகள் நடக்கும். கிளிநொச்சி விளையாட்டு மைதானம் எதிரிப்படையினரின் உடலங்களாலும் கைப்பற்றப்பட்ட ஆயுத தளபாடங்களாலும் அவற்றை பார்வையிடவரும் மக்களாலும் நிரம்பி வழியும். புலிகளின்குரல் வானொலியும் தமிழீழ வானொலியும் தமிழீழ தேசியத் தொலைக்காட்சியும் மட்டுமல்ல ஐ.பி.சி, பி.பி.சி போன்ற ஊடகங்களும் அந்தச் சண்டைகள் பற்றியே பேசும். அப்போதெல்லாம் சுமதியை அச்சம் ஆக்கிரமிக்கும். களமுனையின் போர்ச்சத்தங்கள் கேட்கத்தொடங்கவே கடவுளே கடவுளே கடவுளே என்ற அவள் உருப்போடத் தொடங்கி விடுவாள். வெடிச்சத்தங்கள் அவளை உறைய வைத்துவிடும். இத்தனைக்குள்ளும் நின்று வாமன் உயிர்தப்ப வேண்டுமே என்று உள்ளம் பதறும். அவளது மனம் எப்போதும் வாமனுக்காகவே மன்றாடிக்கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்தபோது அவளுக்கே ஆச்சரியமாகத்தான் இருந்தது.

சண்டைக்களம் ஓய்வுக்குவந்த சில மணித்தியாலங்களில் காயப்பட்ட தன் போராளிகளை பார்ப்பதற்காக கிளிநொச்சிக்கு வருவானாம் வாமன். அவனுக்கு நேரம் கிடைக்கும்போதெல்லாம் மருத்துவமனைக்குச்சென்று காயமடைந்த போராளிகளுடன் பேசுவானாம். அந்த தகவலை அறிந்தபின் சுமதிக்கு இருப்புக்கொள்ளவில்லை. அவன் புலனாய்வுத்துறை படையணியில் ஒரு பொறுப்பதிகாரி என்பதையெல்லாம் அன்றைய நாட்களில்தான் சுமதி அறிந்துகொண்டாள். அதனால் அவனுக்கெல்லாம் களமுனையைவிட்டு வெளியேவர பொழுதே கிடைப்பதில்லை. தன்னுடன் நின்ற போராளிகள் காயமடைந்து கிடக்கும்போது, அவர்களுக்கு மனத்தெம்பை ஊட்டுவதற்காக அவன் செல்வான்தானே. அதற்காக வாமன்

அடிக்கடி கிளிநொச்சிக்கு வருவான். தானோ அவன் வரவேண்டிய தேவையே இல்லாத புதுக்குடியிருப்பு மூலைக்குள் முடங்கிப்போய் கிடக்கிறாள்.

கண்டவாறு யோசித்து மண்டையை குழப்பியடித்து ஒருவாறு வழியொன்றையும் கண்டுபிடித்துவிட்டாள் சுமதி. அதை அமுதாவிடம் சென்று எடுத்துரைத்தாள்.

'அமுது, நான் கிளிநொச்சிக்கு வேலைய மாத்திக்கொண்டு போகட்டுமா அமுது?'

'என்னப்பா திடீரெண்டு? என்ன நடந்தது உனக்கு? இங்க ஏதும் பிரச்சினையா? சொல்லுப்பா' என்று புரியாமல் புலம்பினாள் அமுதா.

'ஒரு சிக்கலும் இல்ல அமுது. நான்தான் அங்க போனா என்ன எண்டு….'

'ஏனப்பா ஓவியர் வீட்டுக்கு போகப்போறியா?'

'ஏய் பகிடி விடாதையப்பா. நான் சீரியஸாய்தான் கேக்கிறன்.'

'அதான் என்ன காரணம்? எங்கட வீட்டில இருக்க பிடிக்கேல்லையா?'

'ஐயையோ அப்பிடியெல்லாம் ஒண்டுமில்ல அமுது. இந்த வீட்டவிட்டா எனக்குத்தான் வேற எந்த வீடுமே இல்லையே.'

'அப்ப?'

'அது….' என்று தொடங்கியவள் மெதுவாய் நானினாள்.

'என்னப்பா வெக்கமெல்லாம் வருது? வாமன்தான் அழைப்பு அனுப்பியிருக்கிறாரோ?'

'சே சே. அப்படியெல்லாம் ஒண்டுமில்ல.' என்றாள். அவளது அவசர மறுப்பை ரசித்தவளாய் சீண்டினாள் அமுதா.

'கிளிநொச்சியில வாமன்தான் ஏதும் வீடுகீடு கட்றாரோ?'

'இல்ல…. நான் கிளிநொச்சியில நிண்டால் வாமனை அடிக்கடி காணலாம். கதைக்காட்டிலும் காணலாமே எண்டுதான்….'

'கடுமையா யோசிச்சுத்தான் முடிவெடுத்திருக்கிறாய்போல. அதுசரி வாமன கேக்காமலயே போகப்போறியா?'

'கண்டால்தானே அமுது கேக்கலாம்?'

'அ அ அப்ப காதல்தான்.'

'ஏன் உனக்கு இன்னும் சந்தேகமா?'

'ம் ம். அதுசரி. கிளிநொச்சியில எங்க தங்கப்போறாய்?'

'கொஸ்பிட்ரல் கொஸ்ரல்லயே தங்கேலாதா? நீ என்ன சொல்றாய் அமுது? நீதான் எனக்கிந்த உதவியை செய்யணும்.'

'என்ன சுமதி, என்னையும் அம்மாவையும் விட்டிட்டு போகப்போறியா?' என்று அப்பாவியாய் அமுதா கேட்க அது சுமதிக்கும் சங்கடமாய்த்தான் இருந்தது.

'உன்னையும் அம்மாவையும் மறக்கேலுமா அமுது, கிளிநொச்சிக்குத்தானே போகப்போறன். லீவு கிடைக்கிற நேரம் உங்களிட்ட வந்துபோவன் சரியா?'

'உன்ர விருப்பத்துக்கு நான் கட்டாயம் உதவுறன். காதலச் சேத்துவைக்க உதவுறதுக்கு நான்தான் குடுத்துவைச்சிருக்க வேணும். எங்கள மறக்காமல் இருந்தியெண்டால் காணும்.' என்று குறும்பாகச்சிரித்த அமுதாதானே இடமாற்ற ஒழுங்குகளை செய்து தருவதாகவும் சொன்னாள்.

எண்ணி ஏழே நாட்களில் சுமதி கிளிநொச்சி வைத்தியசாலையில் நின்றாள். அத்தகவல் அவள் வரமுன்னரேயே வடபோர்முனையில்நின்ற வாமனுக்கு போய்விட்டது. அமுதாதான் சொல்லி விட்டிருந்தாள். வாமனுக்கும் அது மகிழ்ச்சியளித்தது. சுமதி அங்கே சத்திரசிகிச்சை கூடத்துக்குரிய தாதியாக பணிக்கமர்த்தப்பட்டாள்.

கிளிநொச்சியின் பிரமாண்டமே அறியாத சுமதி மருத்துவமனையே தன் உலகமென்றெண்ணி உழைக்கத்தொடங்கினாள். அவளுக்குள்ளும் அன்பும் காருண்யமும் சுரந்தன. தன் சத்திரசிகிச்சைக்கூட கடமைகள் முடிந்தபின்னும் காயப்பட்டவர்களின் விடுதிகளுக்குச்சென்று பார்வையிடுவாள். குறிப்பாக குழந்தைகளிடமும் போராளிகளிடமும் நலம் விசாரிப்பாள். அக்கறையாக ஆலோசனை சொல்வாள். அவளுடைய நல விசாரிப்புகளால் நோயாளிகளுக்கும் அவளை பிடித்துப்போனது. அக்கா அக்கா என்று அவளை உரிமையுடன் அழைத்து தங்கள் காயங்களின் வலிகளை சொன்னார்கள். கடமையில் தன்னை மறந்தவளாய் ஆகிப்போனாள் சுமதி.

திடீரென்று ஒருநாள் இரவு பத்துமணிக்குப்பின் அவளை யாரோ அழைக்கிறார்கள் என்ற தகவல் வந்தது. வாமனாக இருக்குமோ என்று உள்ளம்துள்ள ஓடிப்போனவளுக்கு வாமனே வந்துநின்றது ஆனந்தமாக இருந்தது.

‘வணக்கம் மெடம். கதைக்கலாமோ?’ என்றான்.

‘வாங்கோ’ என்று அழைத்துச்சென்று தன் விடுதியின் முன் விறாந்தையில் இருத்தினாள்.

‘‘என்ன திடீரெண்டு மாற்றம்? புதுக்குடியிருப்பு வெறுத்துப்போட்டுதோ?’

‘இல்ல. கிளிநொச்சி இழுத்திட்டுது.’ என்றாள் அவள். இருவரும் சேர்ந்து சிரித்தார்கள். அந்தச்சிரிப்பே அத்தனைநாள் மனப்பாரத்தையும் வெளியே எறிந்துவிட்ட உணர்வை ஏற்படுத்தியது.

‘டீ குடிக்கிறிங்களா?’ என்றாள் அக்கறையோடு.

‘பசிக்கிதே’ என்று வாமன் வயிற்றை தடவினான்.

‘கொஞ்சம் பொறுங்கோ’ என்று ஓடோடிச்சென்றவள் மகி நூடில்ஸ் தயாரித்து தட்டில்வைத்து எடுத்துவந்தாள்.

‘அட என்ர ஆள் கடும் வேகந்தான்’ என்று அவன் கண்ணடித்தான். அவள் உதடுகளை நெழித்துக்கொண்டு அவனிடம் கொடுத்தாள். குளிரக்குளிர கொதித்தாறிய தண்ணீரையும் கொண்டுவந்து வைத்தாள். பின்பு அவன் உண்பதையே பார்த்துக்கொண்டு நின்றாள். அவளுக்கு திருப்தியாக இருந்தது. கைகழுவிய கையோடு அவசரமா போகணும் என்று வாமன் புறப்பட்டுவிட்டான். அவளும் புன்னகையோடு விடை கொடுத்தாள்.

மருத்துவமனைக்கு வந்துசெல்லும் நேரங்களில் அதிகம் கதைக்க முடியாவிட்டாலும் தன்னை ஒருதடவை எட்டிப்பார்க்காமல் போகமாட்டான் என்பது சுமதிக்கு சந்தோசத்தையும் ஆறுதலையும் கொடுத்தது. ஆனால் அவனே காயத்தோடு வந்து விழுவான் என்று அவள் கனவிலும் நினைக்கவில்லை. அடிக்கடி காயங்களோடு வரும் மக்களுக்கும் போராளிகளுக்கும் நேரகாலமின்றி சிகிச்சையளிப்பது அவளுக்கும் பழகிப்போயிருந்தது. சாம ஏமத்திலும் எழுந்தோடுவதும் விடிய விடிய பணிசெய்வதும்கூட சாதாரண நிகழ்வாகிப்போனது. அன்றும் அப்படித்தான். நித்திரையில் கிடந்தவளை திடீரென்று அழைத்தார்கள்.

‘சுமதி மிஸ் உடன வாங்க’ என்ற குரல் அவளை வாசலுக்கு இழுத்தது. எழுந்தோடிச்சென்று விபரம் கேட்டாள்.

‘டொக்டர்தானக்கா வரச்சொல்றார்’ என்றுவிட்டு போனான் ஒரு தம்பி. உடனேயே உடை மாற்றிக்கொண்டு ஓட்டமாய் ஓடி சத்திரசிகிச்சைக்கூடத்தை அடைந்தாள். ஸ்ரெச்சரில் கிடந்த வாமனைக்கண்டதும் விதிர்விதித்துப் போனாள்.

‘மிஸ் லப் கேஸ். உடன ஒழுங்கு படுத்துங்க’ என்ற மருத்துவரின் வார்த்தைதான் அவளை உசுப்பியது. கடகடவென சிகிச்சையளிப்பதற்கான ஏற்பாடுகளை செய்துகொடுத்தாள். அருகில் நின்று, சிகிச்சைக்குத் தேவையான சகல உதவிகளையும் செய்தாள். முட்டிக்கொண்டு நிற்கும் கண்ணீரைமட்டும் மருத்துவருக்குத்தெரியாமல் துடைத்துக்கொண்டாள். அவசர சிகிச்சையை முடித்துக்கொண்ட மருத்துவர் அவனை அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கச் சொல்லிவிட்டு சென்றுவிட்டார். அவசர அவசரமாய் சிகிச்சை இடத்தை துப்பரவு செய்துவிட்டு வாமனிடம் ஓடினாள். சுமதியில் இன்னும் பதற்றம் தெரிந்தது.

அவசர சிகிச்சைப்பிரிவுக்குள் சுமதி சென்றபோது வாமனுக்கு மயக்கம் தெளியத்தொடங்கி இருந்தது.

‘அடி. அடி. பாத்துப்பாத்து சுடு மச்சான். இறங்கு இறங்கு, விடாதை மச்சான் குடு குடு. குடுடா தம்பி’ என்று சத்தமிடத்தொடங்கிவிட்டான். போராளிகள் பொதுவாக இப்படித்தான். மயக்கம் தெளியும்போது பெரும்பாலும் போர்க்கள நினைவுகளையே பிதற்றுகிறார்கள். எதிரியுடன் சண்டையிட்டுக்கொண்டே அரைமயக்கத்தில் கிடக்கும் அவர்களைப்பார்த்து முன்பு அழுதுமிருக்கிறாள் சுமதி. பிறகு பிறகு அது பழகிப்போன ஒன்றானது. இப்போது வாமனும் அப்படிக்குழற அவள் விம்மினாள். அவன் கத்திக்கத்தி களைத்துப்போகிறான் என்பதை உணர்ந்து நித்திரைக்கான ஊசிமருந்தை ஏற்றிவிட்டாள். தான் விடுதிக்குச்செல்வதா அவனருகிலேயே நிற்பதா என்று முடிவெடுக்க முடியாமல் திண்டாடினாள். அவனுடைய தலைக்கேசத்தை கோதிவிட்டாள். கண்ணிமைகளை நீவிவிட்டாள். குழந்தையைப்போல உறங்கும் அவனை பார்த்துக்கொண்டிருக்க அவளால் தாங்கவே முடியவில்லை. தனது விடுதிக்குச்சென்று கட்டிலில் விழுந்துகிடந்து அழுதாள். மனப்பாரம் சற்றுக்குறையும்வரை அழுதுவிட்டு, எழுந்து முகம் கழுவிக்கொண்டு மீண்டும் வாமனிடம் சென்றாள். அவனது உதடுகள் மெல்ல அசைந்தன. சுமி…. சுமி… சுமி…. என்று அவன் அனுங்கிக் கொண்டிருந்தான். அவனுடைய கன்னத்தில் தட்டினாள்.

‘வாமன்… வாம்… கண்ணத்திறந்து பாருங்க. கண்ணத்திறந்து பாருங்க வாம். சுமிதான் நான். இந்தா பாருங்க உங்களுக்கு பக்கத்திலதான் நிக்கிறன். உங்களுக்கு ஒரு சிக்கலுமில்ல வாம்’ என்று சுமதி அவனின் காதோடு சொன்னாள்.

## 15 நடந்தது திருமணம்

வாமன் மெதுவாய் கண்களைத்திறந்து பார்த்தபோது சுமதி அவனெதிரே நின்றாள். அவனது கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. எதை நினைத்து வேதனைப்படுகிறானோ என்று அவள் தவித்தாள். காயத்தின் வேதனையால் அழுகிறானாக இருக்கலாம்.

‘சே சே. அழக்கூடாது. உங்களுக்கு இனி பிரச்சினையில்ல வாமன். கொஞ்ச நாளைக்க சுகம் வந்திடும். பயப்பிடவேண்டாம்.’ என்று அவனது கன்னங்களின் ஓரங்களில் வழிந்த கண்ணீரை துடைத்துவிட்டாள். கடும் பிரயத்தனப்பட்டு கேட்டான்,

‘தண்ணி’

‘தண்ணி குடிக்கக்கூடாது செல்லம்’ என்றவள் அடுத்த கணமே தண்ணீரில் பஞ்சை நனைத்து அவனது உதடுகளை துடைத்துவிட்டாள். அந்த ஈரப்படுத்தல் அவனுக்கு தாகத்தை தீர்க்காது என்றாலும் அதிகரிக்கும் தாகத்தை குறைக்கும் அல்லவா? பின்பு ஈரத்துணியால் முகத்தையும் கழுத்தையும் துடைத்தாள். வாமன் அவளது கைகளை பிடித்துக்கொண்டான். மீண்டும் அவனது கண்களில் கண்ணீர்.

‘நீங்க அழக்கூடாது வாமன். அழுதால் காயத்துக்குக் கூடாது. வயிறு நோகும். ம். நான் இருக்கிறன். அழாதிங்க’ என்ற சுமதியின் கண்களும் கலங்கிவிட்டன. சற்றுநேரம் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டே இருந்தனர்.

‘சரி. நான் வேலைக்குப்போகணும். இடைக்கிட வருவன். ஆகலும் ஏலாமல் இருந்தால் சொல்லிவிடுங்கோ’ என்றாள். அவனும் சரி என கண்ணசைத்தான். நேர்த்தியாக போர்வையை இழுத்துவிட்டு தலையை தடவினாள்.

‘யோசிக்காதிங்க வாம். நான் இருக்கிறன் என்ன.’ என்றுவிட்டுச்சென்றாள்.

குளித்துப் புறப்பட்டு சத்திர சிகிச்சைக்கூடத்திற்குள் நுழைந்தவள் கூடத்தை சுத்தப்படுத்தினாள். சிகிச்சைக்குரிய கருவிகளை நேர்த்தி பார்த்து அடுக்கிவைத்தாள்.

‘மிஸ் உங்கள ஐ சி யு வோட்ல கூப்பிடுயினம்’ என்ற குரல் காதில் விழுந்ததுதான் தாமதம். அடுத்த நிமிடமே அவள் வாமனருகில் நின்றாள். அவன் கடுமையாக ஓங்காலித்துக் கொண்டிருந்தான். முகமெல்லாம் வியர்த்துக் களைத்துப்போய்க்கிடந்த அவனுக்கு உடனடியாக ஊசியேற்றினாள். பின்பு ஈரத்துணிகொண்டு உடலைத் துடைத்துவிட்டாள். சற்று நேரத்திலேயே அவன் உறங்கிப்போனான்.

அந்த ஒரு வாரமும் சுமதிக்கு நித்திரையே இல்லை. தன் கடமையிலும் குறையின்றி வாமனையும் கவனித்ததில் மிகவும் சோர்ந்துபோயிருந்தாள். மூன்றாம்நாள் வாமனுக்கு குடிக்க பானங்களை கொடுத்தாள். ஐந்தாம் நாள் கஞ்சி காய்ச்சிக்கொடுத்தாள். வாமனை பராமரிக்க என்றே நின்ற போராளிகள்கூட அவளைத்தான் எதிர்பார்த்தார்கள். மிஸ் தண்ணி கேக்கிறார் குடுக்கலாமா? மிஸ் இப்ப யூஸ் குடுக்கட்டுமா? டீ குடுக்கலாமா? டீதான் கேக்கிறார். மிஸ் கொஞ்சநேரம் நிமித்தி வைச்சிருக்கச் சொல்றார். எவளநேரம் மிஸ் நிமித்தி வைச்சிருக்கலாம்? என்றெல்லாம் அவளை தேடிவந்து கேட்டுக்கேட்டுத்தான் செய்தார்கள். அந்த போராளிப்பையன்களது பண்பும் பணிவும் அக்கறையும் சுமதிக்கு மிகவும் பிடித்துப்போனது.

ஏழாம்நாள் வாமன் போராளிகளுக்குரிய அவர்களது மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். சுமதிக்கு மனம் அலைபாயத்தொடங்கிவிட்டது. என்ன செய்வதென்றே புரியவில்லை. அந்தநேரம்தான் வடிவு சுமதியிடம் பேசினாள். அவளும்கூட சுமதியோடு நேரத்தை பகிர்ந்துகொண்டு கடமையாற்றும் சிறந்த தாதிதான். அவளுடைய புரிந்துணர்வான பேச்சு சுமதிக்கு தெம்பூட்டியது.

வடிவை சுமதிக்கு நீண்டநாட்களாக தெரியும்தான். சக பணியாளர் என்ற அறிமுகம் மட்டுமே. சத்திரசிகிச்சைக்கூட வைத்தியருக்கு நம்பிக்கையான தாதிகளில் வடிவும் ஒருவர். மருத்துவ அதிகாரியுடன் கதைத்து சுமதி வெளியே சென்று வாமனை பார்த்துவர அனுமதியும் வாங்கிக்கொடுத்தாள் வடிவு. கிளிநொச்சியின் இடவலம் புரியாத சுமதியை தானே அழைத்துச்சென்று போராளிகளின் மருத்துவமனையில் விட்டார். வடிவின் உதவியால்தான் சுமதிக்கு வாமனை பார்த்துவர முடிந்தது. எல்லோருக்குமே

அப்படிச்சென்று பார்வையிட அனுமதியில்லை. இவளொரு மருத்துவத்தாதி என்பதாலும் வாமனை விரைவில் மணம் செய்துகொள்ளப் போகிறவள் என்பதாலும் அவள் எப்போது சென்றாலும் வாமனைச்சந்திக்க அனுமதிக்கப்பட்டாள்.

அதுவும் உண்மைதான். குணப்பட்டதும் அவன் களமுனையில் நிற்கவேண்டியவன். ஆகவே அவனது ஓய்வு காலத்திற்குள்ளேயே திருமணம் நடப்பதுதான் நல்லது. அவனுக்கான ஓய்வு நாட்களே அவனுக்கான குடும்ப வாழ்க்கையை ஆரம்பிக்க தோதாக இருந்தது. யாராவது கரும்புதின்ன கூலி கேட்பார்களா? இருவரும் பச்சைக்கொடிகாட்டிவிட போராளி நண்பர்கள் திருமண ஏற்பாடுகளை தொடங்கிவிட்டார்கள்.

அழைத்தாலும் வரமுடியாத சுமதியின் பெற்றோர் தமக்கொரு பிள்ளை சுமதியென்ற பெயரில் இருப்பதையே மறந்துவிட்டிருப்பார்கள். ஆனால் திருகோணமலையிலிருந்து வாமனின் தாயாரும் தங்கையின் குடும்பத்தினரும் வந்துசேர்ந்தார்கள். சுமதிக்குத்தான் அமுதாவும் அம்மாவும் இருக்கிறார்களே. அமுதா என்றுமில்லாதவாறு ஒருவாரத்துக்கு விடுமுறை எடுத்திருந்தாள். மணமகள் வீட்டாருக்குரிய அனைத்து வேலைகளையும் அமுதாவே பொறுப்பெடுத்து செய்தாள். விடுதலைப்புலிகள் அமைப்பின் திருமண ஏற்பாட்டுக்குழுவே கட்டிக்கொடுத்த சிறியவீட்டில் வாமனும் சுமதியும் தம் குடும்ப வாழ்க்கைக்கான காலடியை எடுத்துவைத்தனர்.

சரியாக ஒருமாதம் வீட்டிலேயே நின்ற வாமன் சுமதியின் அக்கறையான பராமரிப்பால் நன்றாக தேறியிருந்தான். அவனது உடலும் மனமும் ஆரோக்கியமாக இருந்தது. உற்சாகத்தோடு பணிக்குப் புறப்பட்டான். சுமதிகூட நம்பிக்கையோடுவிடைகொடுத்தாள். வாமனுடன்நின்ற போராளிகளுக்கும் சுமதிக்குமிடையில்கூட ஆரோக்கியமான புதிய உறவுப்பிணைப்புகள் ஏற்படத்தொடங்கின. அக்கா அக்கா என்று அன்பைப்பொழிந்தார்கள். வீட்டுக்கு வந்தால் அவளுடன் சமையலிலும் உதவிசெய்து, குசினிக்குள் இருந்து சாப்பிட்டுவிட்டுப் போனார்கள். தான் போராளிகள்மீது எப்படிப்பட்ட தப்பபிப்பிராயத்தை முதலில் கொண்டிருந்தாள் என்பதை நினைத்து இப்போது தன்னைத்தானே மக்குச்சுமதி என்று மனதுக்குள்சொல்லி நையாண்டி பண்ணிக்கொண்டாள். தான்கூட இப்போது குப்பிகட்டிக்கொள்ளாத போராளி ஆகிவிட்டதைப்போல உணர்ந்தபோது பெருமையாகத்தான் இருந்தது. மற்றவர்களுக்காக தம்மை அர்ப்பணிப்பதிலும் தம்மை ஒறுத்துக்கொள்வதிலும் ஒரு இன்பம் இருக்கத்தான் செய்கிறது என்பதை அவள் புரிந்துகொண்டு பெருமைப்பட்டாள்.

வடிவுகூட அப்படித்தானாம். தானும் தன்பாடும் என்றுதானாம் திருகோணமலையில் வாழ்ந்தாளாம். தன் வாழ்க்கைத்துணையாக வரவேண்டியவர் தன் மாமன் மகன்தான் என்பதில்மட்டும் உறுதியாக இருந்தாளாம். அது இருவீட்டாருக்குமிடையில் சிறியவயதிலேயே தீர்மாணிக்கப்பட்ட விடயமாக இருந்ததாம். என்றாலும் அவளது மச்சான் பெடியனும், வயதும் வளர்ந்துவர வாலிபத்தின் முறுக்கும்வர வன்னிக்கு வேலைக்குப்போகிறேன் என்று சொல்லிக்கொண்டு புறப்பட்டுவிட்டானாம். அவனது வேலைக்கானகூலி வீடுவந்து சேர்வதில்லை என்பதை அறிந்திருந்தபோதிலும் அவன் மோசமான பேர்வழியில்லை என்பதை நன்றாக அறிந்திருந்தாளாம். அடுத்த மாதம் இங்கயே வருகிறாயா? வீடுவளவெல்லாம் உண்டு. இங்கேயே திருமணம்செய்துகொண்டு வாழலாமே என்று கடிதம் எழுதியதோடு தொலைபேசியிலும் அழைத்தானாம். வடிவும் தன் வீட்டாரிடம் அனுமதி பெற்றுக்கொண்டுதான் புறப்பட்டு வந்தாளாம். வன்னிக்குவந்த பிறகுதான் தன் ஆசைமச்சான் போராளி என்பதையே அறிந்தாளாம். அவளுக்கும் அவன்மீது சொல்லவொண்ணாக் கோபம் வந்ததுதானாம். எனக்குத் திருமணமே வேண்டாம் என்று முகத்தில் அறைந்ததுபோலசொல்லிவிட்டாள்தானாம். ஆனால் அவனை அவ்வளவு இலகுவாக வெறுத்தொதுக்கிவிட முடியவில்லையாம். அவளாகத்தான் தன் மச்சானுக்காக மாறினாளாம். வடிவின் கதையையும் அறிந்தபின் போராளித்தம்பிமார் வடிவையும் சுமதியையும் பெரியக்கா சின்னக்கா என்றழைத்து நையாண்டி பண்ணினார்கள். அப்போதும்கூட அவர்கள் சிரித்து மகிழட்டுமே என்று கதையளப்பார்கள் இந்த அருமை அக்காக்கள்.

போர்முனைகள் யுத்தச்சன்னதமாடும் போதெல்லாம் சுமதியும் வடிவும்கூட ஓய்வுறக்கமின்றி கடமைசெய்யத் தொடங்கினார்கள். சாதாரண காயங்களையெல்லாம் அவர்கள் காண்பதேயில்லை. வயிறு கிழிந்து, தலை பிளந்து, கால்கை உடைந்து, உறுப்பிழந்து, முள்ளந்தண்டு நைந்ததால் உணர்வுமிழந்து வந்துகொண்டிருப்பவர்களின் உயிர்களை பாதுகாப்பதற்காக இவர்களும் யமனுடன் போராடுவார்கள். சண்டைகளெல்லாம் சொல்லிக்கொண்டு நடப்பதில்லை. ஆனால் திடீர் திடீரென்று வந்துகுவியும் தொகையான காயக்காரர்களை சமாளிக்கும் திறமை பொதுவாக வன்னி மருத்துவர்களுக்கும் தாதிகளுக்கும் அநுபவத்தால் வந்துவிட்டது. காலநேரம் பாராமல் இக்கடமையை செய்யவேண்டி இருந்ததால் அது அவர்களையும்

வாட்டத்தொடங்கியது. அவ்வேளைகளிலெல்லாம் சுறுசுறுப்பும் ஆற்றலும்மிக்க மருத்துவ போராளிகள்வந்து கைகொடுப்பார்கள். அவர்களுக்கும் இவர்களுக்குமான உறவு தோழமையாகி தோள்கொடுத்தது.

சில சமயங்களில் வாமன் சுமதியை சந்திக்க வருவான். எப்போதாவது இருந்துவிட்டுவந்து வீட்டுக்கும் அழைத்துச்செல்வான். அப்போதெல்லாம் சுமதிக்கு தேவையான அனைத்துவேலைகளையும் செய்துகொடுப்பான். இரண்டு மூன்று வாரங்களுக்குத் தேவையான விறகுகளை கொத்தி மழை நனைக்காத இடத்தில் அடுக்கிவைப்பான். கிணற்றடியிலும் முற்றத்திலும் முளைத்திருக்கும் புற்களைச் செதுக்கி நேர்த்தியாக்குவான். பூக்கன்றுகளை நாட்டுவான். தென்னம்பிள்ளைகளுடன் பலவிதமான பழமரக் கன்றுகளையும் நட்டு அவற்றுக்கெல்லாம் பாத்திகட்டி நீரிறைப்பான். தங்கள் வீடு அழகிய வீடாக, அமைதியான வீடாக இருக்கவேண்டும் என்பான். ஜாம் மரக்கன்று ஒன்றை முற்றத்தில் நட்டுவிட்டு அவன் சுமதியிடம் சொன்னான்,

'இந்த மரம் வளந்து காய்த்துப் பழுத்துக் குலுங்கும்போது என் குழந்தைகள் குருவிகளோடு விளையாடுவார்கள் பார்'

'ஐயே நினைப்பு' என்று அவள் அவனை இடுப்பில் கிள்ளினாள்.

'எங்கட பிள்ளைகள் விளையாடத் தேவையான எல்லாமே எங்கட வளவில இருக்கணும். குருவிகள கூட்டுல அடைச்சுவைச்சுப் பாக்கிறது எனக்குப்பிடிக்காது. குருவிகளே சுதந்திரமா எங்கடவீட்ட வந்துபோகணும். அதுகள்ர சுதந்திரத்தையும் சுதந்திரமான மொழியையும் என்ர பிள்ளைகளும் உணரணும். பாத்துக்கொண்டிருக்க இந்த ஜாம்மரம் முற்றத்தில வளரும். நிறைய்ய்யப்பூக்கும். தேன்குடிக்க தேன்சிட்டும் பழம்தின்ன மற்றக்குருவிகளும் வரும்.' என்றெல்லாம் அவன் கற்பனைவானில் மிதந்தபடி சொல்லிக்கொண்டிருக்க சுமதி புன்முறுவலோடு அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

'எல்லாம் சரி சுமி. அதை ரசிக்க, அந்தக் குருவிகளோட கதைச்சு விளையாட எப்பசுமி எனக்கு பிள்ளைகள பெத்துத்தரப்போறாய்?' என்று ஏக்கத்தோடு கேட்டவனை கன்னங்களில் செல்லமாய்பிடித்து கிள்ளிவிட்டு துள்ளிக்குதித்துக்கொண்டு ஓடிவிட்டாள் சுமதி.

காலம் துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட சன்னம்போல கடுகதியாய் விரைந்தது. சுமதி ஏனோ தாயாகவில்லை. அதைப்பற்றியெல்லாம் ஆர அமர இருந்து பேசிக்கொள்ள நேரமும் இருக்கவில்லை. என்றாலும் கவலை இருக்கத்தான் செய்தது. அப்படி பிள்ளைபூச்சியென்று எதுவுமில்லாததும் கடமைக்கு வசதியாகத்தான் இருந்தது என்ற உண்மையை இருவரும் புரிந்துகொண்டார்கள். அதனால்தான் கிளிநொச்சி மாநகரமே இடம்பெயர்ந்தபோது இவர்களும் கிளிநொச்சிக் களமுனையிலேயே கடமையாற்ற தீர்மாணித்தார்கள்.

## 16 எதிரிக்கும் சிகிச்சை

வாமன் இப்போதும் வடபோர்முனையில்தான் நின்றான். எப்போதாவது இருந்துவிட்டு சில மணித்தியாலங்கள் மட்டுமே நடக்கும் சண்டைகளில் தமிழ் சிங்கள இளையவர்களின் பலநூறு உயிர்கள் பலியாகும். அக்களமுனை கிழித்துப்போட்ட வீரர்களின், உயிர்கள் ரத்தத்தினூடாக வழிந்துகொண்டிருக்கும், உடல்கள் வரும்போதெல்லாம் சுமதி பம்பரமாய் சுழன்றாள். அப்போதெல்லாம் அவளது இதயம் உயிர்களைக் காப்பாற்றவே துடிக்கும். அது போராளிகளது உயிராக இருந்தாலும்சரி சிறிலங்காப்படையினரது உயிராக இருந்தாலும்சரி. உயிர்களை காப்பாற்றவே அவள் அர்ப்பணிப்புடன் சேவை செய்தாள். அன்றைய நாட்களில் கிளிநொச்சி மருத்துவமனையில் கடமையாற்றிய அனைத்து மருத்துவர்களும் மருத்துவத்தாதிகளும் போராளிகளாகவே இருந்தார்கள். மற்றெல்லோரும் வெளியேறிவிட்டார்கள். காயமடைந்துவருகின்ற மக்களையும் அவர்களே பொறுப்பெடுத்து அவசர சிகிச்சைகளையளித்து அம்புலன்ஸ்களில் ஏற்றி ஏனைய பொது மருத்துவமனைகளுக்கு அனுப்பிவைத்தார்கள். எனினும் ஆயிரக்கணக்கானவர்களை வைத்துப் பராமரித்தார்கள். ஆகவே வடிவு புதிய இடமாற்றப்பட்ட மருத்துவமனையிலும் சுமதி பழைய மருத்துவமனையிலுமாக சத்திரசிகிச்சைக் கூடங்களில் கடமையாற்றினார்கள்.

ஒருநாளின் இருபத்துநான்கு மணிநேரமும் சத்திரசிகிச்சைக்கூடம் இயங்கிக்கொண்டேதான் இருக்கும். பாரிய காயங்களையும் சிக்கல் மிகுந்த காயங்களையும் பிரதான மருத்துவர்கள் செய்தார்கள். சாதாரண காயங்களையெல்லாம் விடுதிகளை பராமரித்துவந்த மருத்துவ போராளிகளே பார்த்துக்கொண்டார்கள். இடைப்பட்ட காயங்களை சுமதியே சரிக்கட்டி அனுப்பிவைத்தாள்.

சில நேரங்களில் தனக்கு நேரம் கிடைத்ததென்று அவளைச்சந்திக்க வாமன் வந்துநிற்பான். சுமதியோ உயிருக்காகபோராடிக்கொண்டிருக்கும் யாருடையதோ உயிரை இழுத்துப்பிடித்துக்கொண்டு நிற்பாள். வாமனுடன் கதைக்கவேண்டும் என்று நினைத்தாலும் அவள் இடையில்விட்டுவிட்டு வரவே மாட்டாள். அவன் நீண்டநேரம் காத்திருந்துவிட்டு அவளை சந்திக்காமலேயே திரும்பிச்சென்றுவிட்டதும் உண்டு. சுமதிக்கு ஏனைய எல்லாவற்றையும்விட கடமையே கண்ணாகிப்போனது. அவள் மட்டுமா? அங்கிருந்த ஒவ்வொருவருமே கடமைகளில் ஒருவரை ஒருவர் விஞ்சித்தான் நின்றனர்.

ஆறுதலாக ஒருநாள் சுமதியுடன் கதைக்கக்கிடைத்த சந்தர்ப்பத்தில் வாமன் கேட்டான்,

‘என்னைவிட உனக்கு இப்ப வேலதான் முக்கியமாப் போச்சுதென்ன?’

‘என்னைவிட உங்களுக்கு உங்கட வேலைமட்டும் முக்கியமாப் படலாம். என்ர வேலை எனக்கு முக்கியமாப் படக்கூடாதோ?’ என்று நியாயம் கேட்டாள் அவள்.

‘அப்ப நீ எனக்கு போட்டியாத்தான் வேலை செய்யிறாய் என்ன? நானும் நினைச்சிட்டன் என்ர மனுசி என்னைவிடச் சிறந்த போராளிபோல வேலை செய்யிறா எண்டு’

‘ஐயெ காணும் உங்கட கதை. நிப்பாட்டுங்கோ’

‘சே சே சேசே இப்பிடிப் பகிடியெல்லாம் விடுறநேரம் விட்ரணுமடியப்பா. அடுத்த நிமிசம் நான் உயிரோட இருக்கிறனோ நீ உயிரோட இருக்கிறியோ யாருக்குத் தெரியும்?’ என்றான். சுமதி பாய்ந்து விழுந்து அவனது வாயைப்பொத்தினாள்.

‘இப்பிடிமட்டும் சொல்லாதிங்க. நாங்க ரெண்டுபேருமே இருக்கணும். ஏனெண்டால் ரெண்டுபேருமே இப்ப நாட்டுக்குத்தேவை.’ என்றவளின் கண்கள் கலங்கிவிட்டன. வாமன் பெருமையோடு அவளை அணைத்துக்கொண்டான்.

பியதாஸ என்ற இராணுவவீரன் ஒருவன் சுமதியால் பராமரிக்கப்பட்டான். அவசர சிகிச்சைப்பிரிவிலிருந்த ஐந்தாறு போராளிகளும் இரண்டு படையினரும் சுமதிக்கு பிள்ளைகளை போன்றவர்கள். அதில் ஒருவருக்கு ஒன்றென்றாலும் அவள் துடித்துக்கொண்டு நிற்பாள். பியதாஸவிற்கு சுத்தமாய் தமிழ் தெரியாது. மிக மோசமான காயங்களைக் கொண்டிருந்த கப்டன் பியதாஸ உணவுக்கும் ஊசிக்கும் மட்டும் ஒத்துழைக்கவே மாட்டான். அங்கு பராமரிப்பவர்களாக நின்ற போராளிகள் அவர்களையும் நோயாளிகள் என்ற ரீதியில் பராமரித்தாலும் மதிவாணனைப் போன்றவர்கள் சிலவேளைகளில் முறைக்கத்தான் செய்கிறார்கள். பியதாஸவிற்கு சுமதி மட்டும்தான் ஊசிபோடலாம். வேறு எவரையும் ஊசிகுத்த விடமாட்டான். சுமதிமட்டும் என்ன சொன்னாலும் தலையசைத்துக்கொண்டு சம்மதிப்பான்.

‘எங்களக் கொல்ரவரைக்கும் கொண்டுபோட்டு உனக்கு ஊசிபோட அக்காமார் கேக்கிது என்னடா?’ என்று மதிவாணன் தமிழில் ஏசுவான். அவன் இலகுவில் படையினருக்கு உதவப்போகவும் மாட்டான். பராமரிப்பாளர்கள் வேறு வேலையாக நின்றால் மட்டுமே இவன் உதவ நேரிடும். அப்போதும் அவன் எதையாவது புறுபுறுத்துக்கொண்டுதான் செய்வான். அது பார்த்துக்கொண்டிருக்கும் ஏனைய போராளிகளுக்கே எரிச்சலூட்டும். அதுபற்றி ஒருநாள் சுமதி அவனை இருத்திவைத்துக் கதைகேட்டாள்.

‘நீங்களேன் தம்பி இப்பிடி அவங்களோடை குரோதமாய் நடந்துகொள்றிங்க? மனுசனுக்கு மனிதாபிமானம் இருக்கணும். அதுவும் வைத்தியத்தொழில் செய்யிறவனுக்கு அவசியமாய் இருக்கணும்.’ என்று எடுத்துரைத்தாள்.

‘அக்கா, இங்க வாங்க அக்கா. மனிதாபிமானத்தைபத்தி நீங்க சொல்லியாக்கா எனக்கு தெரியணும். அந்தச் சிங்களவனுக்குத்தான் விளங்கப்படுத்துங்கோ. இஞ்ச பாருங்க. இந்தக் கால் எனக்கு எப்பிடி இல்லாமப் போனதெண்டு உங்களுக்குத் தெரியுமா? இந்தக் கிளிநொச்சியை மீட்ட சண்டையிலதான் காலை இழந்தன். எப்பிடியெண்டு கேக்கயில்ல? சண்டையெல்லாம் வெற்றிகரமாய் முடிஞ்சிட்டுது. நான் கிளியரிங் செய்துகொண்டு போறன். எங்கடையாக்கள் ஏதும் காயக்கீயப் பட்டுக்கிடந்தாலும் தூக்கிக்கொண்டுவரலாம். ஆமியேதும் சாகாமக்கிடந்து இழுபட்டால் பாவம்தானேயெண்டு சுட்டும்போடுவன். உண்மையா சொல்றனக்கா. எனக்கு உயிர்களவதைக்கிறது பிடிக்காது. கொல்ல வேண்டியதுகள கொல்லத்தான் வேணும். ஆனால் உயிரை வதைக்கக்கூடாதுதானே. அப்ப நான் போய்க்கொண்டிருக்க பள்ளமொண்டுக்க ஆமியொருதன் கிடந்தான். என்னயக் கண்ட உடன அவன் சரியாய் பயந்துபோயிட்டான். எனக்கு பாக்கவே பாவமாய்

இருந்திது. சுடுவமெண்டு தூக்கின துவக்கை கீழவிட்டிட்டன். அவன் டப்பெண்டு என்னயச் சுட்டான். நானும் அவனச்சுட்டன். அவன் சுட்டதில எனக்கு கால் சரி. நான் சுட்டதில அவன் ஆளே சரி. யுத்தத்தில தோத்துப்போய் கீழ கிடக்கிறவன ஏறிமிதிக்கக்கூடாது எண்டு நான் மனிதாபிமானமாய் யோசிச்சன். இந்தா அதுக்கான பரிசப் பாத்திங்களா? டம்மிக்கால்.'

'அது போர்க்களம் தம்பி. நீ துப்பாக்கியோட நிண்டதால அவன் உன்னை நம்பியிருக்கமாட்டான். இங்க அப்பிடியில்ல.'

'எப்பிடியில்ல? உங்கட பியதாஸ எதுக்காக எங்கட்ட வாங்கித்தின்னப் பயப்பிடுறான் தெரியுமா? நாங்களேதும் நஞ்சைக்கிஞ்சை போட்டுத்தந்திருவம் எண்டுதான். அவனக் கொல்றதெண்டால் இங்க எதுக்காக வைச்சு எங்கட மருந்தையும் நேரத்தையும் செலவழிக்கிறம்? இந்த முட்டாளுக்கு இதுகூட விளங்கேல்லையே.' என்று பொரிந்து தள்ளினான் மதிவாணன்.

'அட, இவனும் உன்னய நம்பாமல் இருக்கிறானே என்றதுதான் இப்ப உன்ர பிரச்சினையா?' என்று சிரித்தாள் சுமதி.

'மல்லி' என்று முனகினான் பியதாஸ. அவனை பார்த்துவிட்டு எழுந்துசென்றான் மதிவாணன். பியதாஸவின் உடல்மொழியை புரிந்துகொண்டு அவனது அத்தியாவசியப் பிரச்சினையாக அப்போதிருந்த இயற்கைக் கடன் கழிப்பிற்கு உதவினான் மதிவாணன். சுமதி புன்முறுவலுடன் வெளியேறினாள்.

கட்டக்கடைசியாக கிளிநொச்சியில் இயங்கிக்கொண்டிருந்தவை போர்க்களமும் இரண்டு மருத்துவமனைகளும் மட்டுமே. ஆனால் அவை எந்நேரமும் எறிகணைகளால் அதிர்ந்துகொண்டிருந்தன. மருத்துமனைகளின் பல பகுதிகள் உடையத்தொடங்கின. அதனால் நகர்த்தக்கூடிய போராளிகளை வேறு மருத்துவமனைகளுக்கோ பராமரிப்புமுகாம்களுக்கோ மாற்றிவிட்டார்கள். பயணம் செய்யத்தகாத உடல்நிலையில் இருந்தவர்களையும் உடன் காயக்காரரையும் மட்டுமே மருத்துவமனையில் வைத்திருந்தார்கள். படையினரான நோயாளிகளும்கூட மொழியை ஒருவாறு புரிந்துகொண்டு போராளிகளுக்கு ஒத்துழைத்தார்கள்.

சிறிலங்கா படையினரின் போர்விமானங்கள் அடிக்கடி தாக்குதல் நடத்துவது வழமையே. அன்றும் திடீரென்று தகவல் வந்தது கிளிநொச்சியைநோக்கி கிபிர்கள் வருவதாக. புயலின் வேகத்தில் செயற்பட்ட போராளிகள் காயக்காரர்களை பதுங்கு அகழிகளுக்குள் நகர்த்தினார்கள். மதிவாணனும் இயலாத காலுடன் ஸ்ரெச்சர்களை தள்ளிக்கொண்டுவந்தான். வான்பரப்பில் கிபிர் விமானங்களின் பேரிரைச்சல் கேட்கத்தொடங்கியதன் பின்புதான் படையினரான காயக்காரரை நகர்த்தினான்.

'தம்பி வேகமாய் ஓடுங்கோ' என்றபடி மருத்துவரும் காயப்பட்ட போராளி ஒருவரை சக்கர நாற்காலியோடு தள்ளிக்கொண்டு ஓடிவந்தார். அனைவரும் காப்பகழிக்குள் வந்துவிட்டபிறகு மருத்துவர் சொன்னார்,

'தம்பி, பேசன்ட் எண்டு வந்திட்டால் நமக்கு எல்லாருமே பேசன்ட்தான்.

'ஓம் டொக்டர். ஆனால் இந்தப் பேசன்ட்டுக்கு கிபிரடி எண்டால் எப்பிடி இருக்கும் எண்டு தெரியாதுதானே. அதை விளங்கிக்கொள்ளனும் எண்ட நல்ல எண்ணத்திலதான். இவையள் வீட்ட போனப்பிறகு இதையெல்லாம் அனுபவிக்க முடியாமல் போயிரும்.' என்று முறுவலித்தான்.

'அவையள வீட்ட விடுறதெண்டு யார் சொன்னது?'

'வேணுமெண்டால் இருந்து பாருங்களன் டொக்டர். இவன்ர மனுசி அழுதா, பிள்ளை கடிதம் போட்டாவெண்டு உங்கட தலைவர் இவையள விடாட்டில்.' என்றான். உள்ளே இருந்தவர்களெல்லாம் சிரித்தார்கள். மருத்துவரும் புன்னகைத்துக்கொண்டு நின்றார். அவரே உயிர் காப்பாற்றிவிட்ட இராணுவத்தினர் பலர் விடுதலையாகி வீட்டுக்குப்போனது அவரின் நினைவில் வந்தது. அக்கணத்தில் கிளிநொச்சியும் அதிர்ந்தது. வந்த சில போர் விமானங்கள் பல குண்டுகளை வீசியெறிந்தன. ஒவ்வொரு குண்டும் வெடித்தபோது காப்பகழியே ஒரு குலுங்கு குலுங்கியது. மக்கள் கிளிநொச்சியில் இல்லாதபடியால் குற்றுயிரும் குலையுயிருமாக அவர்கள் இங்கே அள்ளிவரப்பட மாட்டார்கள் என்று காப்பகழிக்குள் நின்றவர்கள் நிம்மதிப்பட்டுக் கொண்டார்கள்.

சுமதியின் மேற்பார்வையில் இருந்த அந்த அவசரசிகிச்சைப் பகுதியில் ஆதி என்கின்ற இளம்போராளி ஒருவனும் இருந்தான். அவன் அவனது இல்லாமைகளைப் பொறுத்தவரையில் அவனே இல்லாமல்போயிருக்க வேண்டியவன்தான். ஆனால் அவனிடம் அசாத்தியமான தாங்குதிறன் இருந்தது. அதனால் அவன் வைத்தியர்களின் பலவிதமான முயற்சிகளுக்கும் ஒத்துழைத்தான். ஆனாலும் மரணம் விரைவில் அவனை தன்னிடம் எடுத்துச்சென்றுவிடும் என்பது மருத்துவர்களுக்குத் தெரியும்.

வயிற்றில் பாரிய காயமேற்பட்டு சிலநாட்களின் பின்புதான் மருத்துவமனைக்கே கொண்டுவரப்பட்டிருந்தான். அவனது சிறுநீரகமொன்று முற்றாகச் சேதமாகியிருந்தது. மற்றையதும் தேவைக்கேற்றளவு செயற்படவில்லை. சமிபாட்டுக்குரிய மிகமுக்கியமான உறுப்பான சதையி முற்றாகச்சிதைந்து தாறுமாறான விளைவுகளை ஏற்படுத்தியது. இப்படியான பாரிய பிரச்சினைகளோடு வயிற்றுக்குள்ளான உறுப்புகளில் இன்னோரன்ன சேதங்கள். ஆனாலும் அவன் உயிரோடுதான் இருந்தான்.

இப்படி எத்தனையோ காயக்காரரைப் பார்த்திருக்கிறார்கள். வாழ்வதற்கான எந்த ஆதாரமுமின்றி வெளியேதெரியும் இதயத்தின் சீரற்ற துடிப்பையும் பார்த்துவிட்டு, சிகிச்சையளிக்கவே முடியாத உடலை கட்டிலில் வைத்துக்கொண்டு ‘ஐயோ கடவுளே! இவனை விரைவில் கொன்றுவிடு’ என்று மன்றாடியபொழுதுகளும் இந்த மருத்துவர்களுக்கு நிகழ்ந்ததுண்டுதான். சத்தமிட்டுத் துடிக்கும் அவனின் கடைசிச்சொட்டு உயிர்மட்டும் வழியாமல் கிடக்கையில், தங்கள் கையைமீறிவிட்ட யமனின் விளையாட்டில் தோல்வியை ஒப்புக்கொண்டு கதறியும் விட்டிருக்கிறார்கள்.

## 17 மரணத்தின் பிடியில் ஆதித்தன்

எல்லா வசதிகளும் இருந்தும் உயிரை காப்பாற்றமுடியாத நிலைமைதான் மருத்துவர்களுக்கு கொடுமையான கணங்களாக இருக்கும். சாகப்போகிறான் என்று தெரிந்தும் இறுதிவரை வைத்தியம் செய்த எத்தனையோ அநுபவங்களும் அவர்களுக்கு உண்டு. அப்படிப்பட்ட ஒரு சம்பவமாகவே இதுவும் அமையப்போகிறது என்றகணிப்பில்தான் ஆதியையும் பார்த்தார்கள் அவர்கள்.

யமனோடும் போராடும் உள்ளம் ஆதியிடம் இருந்ததால் அவனுடன் சேர்ந்து வைத்தியர்களும் போரிட்டனர். யமனுடைய பாசக்கயிறுகள் மாறிமாறி ஆதியின்மீது வீசப்பட்டபோதும் மருத்துவர்கள் அவற்றை அறுத்தெறிந்தனர். ஒவ்வொரு தடவை வயிற்றை கீறிப்பிளந்து உள்ளுறுப்புகளை நேர்த்திப்படுத்தியபோதும் ஏராளமாக குருதியிழப்பு ஏற்பட்டது. ஆதிக்காக பைந் பைந்தாக குருதியை சேமித்துக்கொண்டுதான் சிகிச்சையை தொடங்குவார்கள். அவனுடைய சதையியால் சீரான செயற்பாட்டை இனி எப்போதுமே செய்யமுடியாது. அவனுடைய மனதைப்போலவே உடற்கூறுகளும் போராடி வென்றால்தான் அவன் பிழைத்திருப்பதும் சாத்தியம்.

‘சுமதி ஆதிக்கு எல்லாவிதமான சப்பாடுகளையும் குடுக்கச்சொல்லுங்க. உணவுக்கு அவர் பழக்கப்படணும். இப்பிடியே வைச்சிருக்க ஏலாதுதானே?’ என்று மருத்துவர் சொல்லிவிட்டார். அதன் தாக்கம் தாக்கமின்மை பற்றிய அனைத்தையும் சுமதி அறிவாள். உண்மையில் அவன் உண்ணவேகூடாது. ஆனால் உண்ணாமல் எப்படி உயிர்வாழமுடியும்? ஆதியின் மனம் முன்னரைவிட சோர்வடைந்துவிட்டதை சுமதியும் அறிவாள். அவன் வெளியே ஒருவனும் உள்ளே இன்னொருவனுமாகக்கிடந்து உழல்வதை புரிந்து, அவனோடு அதிகநேரத்தை செலவழித்தாள். விரைவில் மரணதேவன் அழைக்கப்போகிறவனை கருணையோடுஉபசரித்தாள். ஆதியின் பெற்றோர் அவனை பார்வையிட வரும்போதெல்லாம் பெற்றவர்களுக்காக அவன் நம்பிக்கையோடு கதைப்பான். ஆனால் சுமதியிடம்,

‘எனக்கும் விளங்கும் டொக்டர் நான் தப்பினால் அது அதிசயம்தான். ஆனால் எனக்கு நம்பிக்கை இருக்கு. நீங்களெல்லாரும் என்னை கைவிடமாட்டிங்கள். ஏன் எனக்கு இவளநாளாகியும் சாப்பிடத்தரயில்ல. சாப்பிடக்கூடாத அளவுக்கு எனக்கென்ன பிரச்சினை?’ என்று அவன் நிதானமாகக் கேட்டான்.

‘வயித்துக் காயமெண்டால் சாப்பிடக்கூடாது எண்டது தெரியுந்தானே ஆதி.’

‘என்ர டிக்கற்ர எனக்கொருக்கா காட்றிங்களா?’

‘அதுக்கென்ன காட்டலாம. ஆனால் உங்களுக்கொண்டு தெரியுமா? டொக்டர் உங்கள என்னவேணுமெண்டாலும் சாப்பிடலாம் எண்டு சொல்லிட்டார்.’

‘உண்மையாவா சொல்றிங்கள்?’

‘ம். நீங்க விருப்பமானதெல்லாமே சாப்பிடலாம். அதுக்காக கணவாய் முதலை எல்லாம் சாப்பிடப்போறன் எண்டு நிக்கக்கூடாது.’ என்று சுமதி சிரிக்க ஆதியும் சேர்ந்து சிரித்தான்.

‘கஞ்சி, குளிர்பானங்கள் மட்டும்’ என்றாள் மீண்டும்.

‘எதச்சாப்பிட்டாலும் நாக்குக்கு ஒண்டுமே தெரியாது டொக்டர்.’

‘நான் நேஸ்தான். டொக்டரில்ல.’

‘யார் சென்னது? காய்ச்சலுக்கு பனடோல்தாற எங்கட மெடிசின் பொடியனையே டொக்டர் எண்டுதான் கூப்பிடுறநாங்க. அதால நீங்கள் எங்களுக்கு டபிள் டொக்டர்.’ என்று அவன் சொல்லும்போது அவனிதழ்களில் அழகிய புன்னகை விரிந்தது. சுமதி வலிக்கும் இதயத்தோடு அப்பால் நகர்ந்தாள். இன்னும் ஓரிருநாட்களில் சாகப்போகிறவனாகவும் இருக்கலாம். இவ்வளவு அழகாகச் சிரிக்கிறானே என்று வேதனைப்பட்டாள்.

ஆதி அவசர சிகிச்சைப்பகுதியில் இருந்து சாதாரண பகுதிக்கு மாற்றப்பட்டான். ஆதியினுடைய பெற்றோர் நாளாந்தம் வந்தார்கள். கஞ்சியும் நெல்லுப்பொரித் தண்ணீரும் கொண்டுவந்து கொடுப்பார்கள். அவன் இனிமேல் பிழைத்துவிடுவான் என்றுதான் பெற்றோரும் நம்பினார்கள். ஆனால் அவன் இரண்டொருநாட்களில் திடீரென்று நோய்வாய்ப்பட்டான். சமிபாட்டுத்தொகுதி தன் செயற்பாட்டைச்செய்ய மறுத்தது. எலும்பும் தோலுமாக காட்சிதரும் அவன் கோலத்தைப் பார்க்கும்போதெல்லாம் சுமதிக்கு மனசுக்குள் வேதனையாக இருக்கும். அதைக் காட்டிக்கொள்ளாமல் அவனுடன் சிரித்துப்பேசவே முயற்சிப்பாள். அடிக்கடி ஆதிக்குச் சிகிச்சைசெய்ய குருதி அதிகம் தேவைப்பட்டுக்கொண்டிருந்தது. அவனுடைய உடம்பில் இப்போது இருப்பது அவனது சொந்தக்குருதியில் ஒருதுளியும் இல்லை. யார் யாருடைய குருதியினால் அவன் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்பது அவனுக்கே தெரியாது. இம்முறை அவனை சத்திரசிகிச்சைக்கு உட்படுத்த குருதியெதுவும் இருப்பில் இல்லை. என்னசெய்வதென்ற யோசனையோடு இருக்கையில்தான் ஆதியின் பெற்றோர் மருத்துவரை தேடிக்கொண்டு வந்தனர்.

‘நாங்கள் என்ன செய்யவேணுமெண்டாலும் சொல்லுங்க டொக்டர் செய்யிறம். எவள செலவானாலும் பறவாயில்ல டொக்டர். எங்கட பிள்ளையமட்டும் காப்பாத்தித் தந்திருங்கோ.’

‘ஆளை தியேட்டருக்கு எடுக்கணும். குருதியில்லாமல்தான் என்னசெய்யிறதெண்டு யோசிச்சுக் கொண்டிருக்கிறம்.’ என்றார் மருத்துவர். ஆதியின் அன்புத் தமையன் தன் குருதியை எடுத்துக்கொள்ளுமாறு முன்வந்தான். உடனேயே அடுத்தகட்டிலில் தமையனைக்கிடத்தி குருதியை எடுத்து ஆதிக்கான அன்றைய சிகிச்சையை செய்தார்கள். ஆதி தொடர்ந்தும் அவசர சிகிச்சைப்பிரிவிலேயே பராமரிக்கப்பட்டான். தொடர்ந்த நாட்கள் அவனை கொஞ்சம் கொஞ்சமாய் கொன்றுகொண்டு வந்தன. இன்றோ நாளையோ உன்னுயிரைப்பறிப்பேன் என்று மல்லுக்குநின்ற யமகாதகனை ஆதி, தான் பிழைக்கவேண்டும் என்ற தன்னம்பிக்கையால் விரட்டிக்கொண்டே படுக்கையில் கிடந்தான். உடல் மெலிந்து, கண்கள் குழியாகி, ஈரலிப்பெல்லாம் வற்றி, உருக்குலைந்துதான் கிடந்தான். ஆயினும் மனத்திடத்தை அவன் விட்டுவிடவே இல்லை. மருத்துவ ஆலோசனைகள் அனைத்தையும் கேட்டான். சொன்னதெல்லாவற்றையும் பின்பற்றினான். மெதுமெதுவாக அவன் உயிர்மீண்டான். சுமதிக்கு தாங்கள்செய்த பெரும் சாதனையாகவே பட்டது ஆதியின் மீட்சி.

ஆதியின் மீட்சி சாத்தியமானதில் மருத்துவர்கள் உட்பட பக்கத்து கட்டிலில்கிடந்த நோயாளிக்குக்கூட மகிழ்ச்சிதான். இன்னும் பலமாதங்களுக்கு ஆதியை உடல்நோகாமல் பூரண ஓய்வில் வைத்திருக்கவேண்டும். ஆள் நடமாடவோ உடலை வருத்தவோ கூடாது. என்றெல்லாம் மருத்துவர் சொல்லிக்கொண்டிருக்கையிலேயே மருத்துவமனையின் வளாகத்துக்குள் எறிகணைகள் விழுந்து வெடிக்கத்தொடங்கின.

கிளிநொச்சி பழைய மருத்துவமனைதான் கடைசிவரையும் இயங்கிய ஒரேயொரு உயிர்நாடி. அங்கிருந்தும் அகன்றுவிடவேண்டிய நெருக்குதல் ஏற்பட்டபோது ஆதியைப் போன்றவர்களை நகர்த்துவது பெரும் கேள்வியானது. அதற்காக நகர்த்தாமலேயே வைத்திருக்கவும் முடியாதே.

ஓயாமல் வெடித்துக்கொண்டிருந்த எறிகணைகளையும் வீதிகளை மேவிப்பாய்ந்த வெள்ளத்தையும் கடந்து மெதுவாக ஆதியும் நகர்த்தப்பட்டான். காயக்காரர் அனைவருமே பிற இடங்களுக்கு நகர்த்தப்பட்டார்கள். சுமதிக்கோ கிளிநொச்சியை விட்டுச்செல்ல கால்கள் மறுத்தன. மருத்துவமனை கிளிநொச்சியில் இல்லை என்றசெய்தி களமுனைக்கு எட்டினால் அங்குநிற்பவர்களின் மனநிலையும் தளர்வுறும். எனினும் அவள்நினைத்து ஏதும் ஆகப்போகிறதா என்ன? வாமன் இறுதியாக வந்து மருத்துவமனையில் சந்தித்தபோது சொன்னான் மருத்துவமனை நகர்த்தப்படப்போகிறது என்றும் மருத்துவர்களுடனேயே செல்லும்படியும்.

‘உன்னை அச்சப்படுத்தேல்ல சுமி. சிலவேளை அடிக்கடிவந்து என்னால சந்திக்கமுடியாது. அதால குளம்பாதை. சிலநேரம் இதுவே கடைசிச் சந்திப்பாயும் இருக்கலாம். நீங்கள் டொக்டரோடையே நில்லுங்கம்மா. நான் எங்கநிண்டாலும் அவர்ர தொடர்போட நிப்பன் என்ன.’ என்று வாமன் சொல்லிமுடித்தபோது சுமதியின் கண்களில் கண்ணீர் வழிந்தோடிக்கொண்டிருந்தது.

அவனுக்கு தன் மனைவியை நினைக்க வேதனையாகவும் அதேநேரம் பெருமையாகவும் இருந்தது. அவள் இவ்வளவுதூரம் போராளிகளோடு ஐக்கியமாகிப்போவாள் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லை.

சுமதியோ அழுதுகொண்டே சென்றாள். அவன் பார்த்துப்பார்த்து நட்ட பூமரங்கள், மரக்கன்றுகள், தென்னம்பிள்ளைகள், வளவின் சுத்தம், அழகுபடுத்திய வீடு என்று எல்லாமே அவள் நினைவுகளை நிறைத்தன. அந்த நினைவுகள் அவளை துன்பப்படுத்தின. தமக்கென குழந்தைகள் பிறக்கவில்லை என்ற குறையைத்தவிர நிறைவாகத்தான் வாழ்ந்தார்கள். குழந்தை இல்லாததே தம் கடமைக்கு தற்போது பேருதவியாய் உள்ளதென்பதை புரிவதால் அதுகூட பெரியதொரு கவலையாய் அவர்களை ஆக்கிரமிக்கவில்லை. முன்னர் இருந்த குழந்தைபற்றிய சின்னச்சின்ன ஏக்கங்கள்கூட போரின் இறுக்கத்தில் காணாமல்போய்விட்டிருந்தன.

சுமதிக்கு ஏனோ தான் தனிமரமாய் நிற்பதைப்போன்ற உணர்வு, வாமனைவிட்டே பிரிந்து செல்வதைப்போன்ற தவிப்பு. அவளுடைய மனநிலையை புரிந்துகொண்ட மருத்துவர் ஆறுதல் சொன்னார். வடிவு வேலைசெய்த இடத்திலேயே தங்கிக்கொள்ள ஏற்பாடு இருந்ததால் சுமதியையும் வடிவுடனேயே தங்க ஏற்பாடு செய்தார். வடிவும் சுமதியையொத்த உணர்வுகளால் ஆக்கிரமிக்கப்பட்டு தன் கணவனின் வருகைக்காகவே காத்திருந்தாள். எனினும் இருவருடைய காத்திருப்புகளுக்கும் இடையே வித்தியாசமிருந்தது. காரணம் வடிவு தாய்மையடைந்திருந்தாள். வடிவின் வயிற்றில் ஐந்துமாத கரு பூரண வளர்ச்சியடைந்திருந்தது. சுமதி வடிவை பக்குவமாக பார்த்துக்கொண்டாள்.

அவர்களின் சேவைக்கும் அளவென்று ஒன்று உண்டல்லவா? வகைதொகையாக வந்துகுவிந்த காயக்காரர் மருத்துவமனை வளாகத்தையே நிறைத்தார்கள். ஆனால் அரச மருத்துவமனைக்குரிய பணியாளர்களோ கடமையில் குறையத்தொடங்கினார்கள். எல்லா பணியாளர்களாலும் தம் பணியை விட்டுவிட்டுச்சென்றுவிட முடியவில்லை. சில மருத்துவர்களும் தாதிகளும் மனிதாபிமானத்துடன் தம் சேவையை தொடர்ந்தார்கள். குறைந்தளவு பணியாளர்களுடன் அதிகளவில் நிறையும் காயக்காரரை வைத்தியசாலைகளால் சமாளிக்க முடியவில்லை. அதன் காரணமாக வைத்தியசாலைகளில் போராளி மருத்துவர்களும் போராளிப் பராமரிப்பாளர்களும் போராளித் தாதியர்களின் கடமைக்குரியவர்களும் தாராளமாக அனுமதிக்கப்பட்டார்கள்.

சாதாரண மருத்துவப் போராளிகளே பாரிய காயங்களுக்கும் சிகிச்சையளிக்கக்கூடிய வல்லமையை பெற்றிருந்தார்கள் என்பதை அரச வைத்தியர்களும் அறிவார்கள். அன்றைய நாட்களில் எதையும் அனுசரித்துப் போனால்தான் ஓரளவுக்காவது உயிர்களை காப்பாற்ற முடியும் என்ற பேருண்மையை அனைவரும் அறிந்திருந்தார்கள். மருத்துவர்களுக்கும் தாதியர்களுக்கும் போராளிகளுக்கும் காயக்காரர்களுக்குமிடையே ஒற்றுமையுணர்வு மேலோங்கியிருந்தது. காயப்பட்டுக்கிடப்பது சனமா போராளியா என்றெல்லாம் எவரும் பார்ப்பதில்லை. எல்லாக் காயமடைந்தோரும் சமமாகவே பார்க்கப்பட்டார்கள். வைத்தியசாலைகளில் கடமையாற்றிய எவருக்கும் ஓய்வுறக்கம் போதவில்லை.

சுமதியும் வடிவும் உடையார்கட்டு மருத்துவமனையில் வேலைசெய்துகொண்டிருந்தபோது வடிவின் துணைவர் வந்திருந்தார். அவரிடம் வாமனும் தன் சுகம்பற்றி சொல்லித்தான் விட்டிருந்தான். அவனும்கூட ஒருமுறை வந்து போயிருக்கலாமே என்று சுமதி யோசித்துக்கொண்டிருக்கும்போது வடிவின் கணவன் சென்னான்,

'நான் போய் வாமனை எப்பிடியும் அனுப்பிவிடுறன் தங்கச்சி. யோசிக்காதைங்க.' அவனது ஆறுதல் வார்த்தைகள் சுமதிக்கு ஒரு அந்தரங்க சங்கடத்தை ஏற்படுத்தியது.

'இல்ல இல்லண்ணா. ஆள் சுகமாய் நிண்டால் சரிதான்.' என்று தடுமாறிவிட்டு தன் கடமையைப் பார்க்கச் சென்றுவிட்டாள்.

## 18 தொடர்ந்தன பிரிவுகள்

மனசுக்குள் ஒரு எதிர்பார்ப்பு இருந்துகொண்டேதான் இருக்கிறது வாமன் வரக்கூடும் என்று. வரமாட்டானா வரமாட்டானா என்றும் ஏங்கியது மனது. இனி வரவே மாட்டானோ என்றும் அஞ்சினாள். கடமையில் தன்னை மறக்க முயன்றாள். ஏனோ அடிக்கடி தடங்கல்கள் ஏற்பட்டன. அந்தத் தடுமாற்றங்களின் காரணமாக பயந்துகொண்டிருந்தாள் சுமதி. கைதவறிய பொருள் நிலத்தில் விழுந்து உடைந்ததைப்போலவே சுமதியின் இதயமும் பல சிதிலங்களாய் உடையும். அப்போதெல்லாம்

தடுமாறிக்கொண்டுசென்று சத்திரசிகிச்சைக் கூடத்தின் ஒரு மூலையில் அமர்ந்து விடுவாள். இரு கைகளாலும் தலையை பிடித்துக்கொண்டு அமர்ந்திருந்தவளை வடிவு தேடிக்கொண்டு வந்துநின்றாள்

வாமன் என்று பெயரை உச்சரித்து முடிக்கமுன்,

'என்ன? வாமனுக்கென்ன?' என்று படபடத்துக்கொண்டு எழுந்துநின்றாள் சுமதி. அவளுடைய முகம் வெளிறிவிட்டிருந்தது.

'ஏய் சுமதி, ஒண்டுமில்லப்பா. என்ன நடந்தது உனக்கு?' என்று நெருங்கிவந்த வடிவு சுமதியின் கையை பற்றிக்கொண்டாள். முதுகில் லேசாக தட்டிக்கொடுத்து,

'வாமன் வந்துநிக்கிறார் வா' என்று பற்றியகையை விடாமலேயே அழைத்துச்சென்றாள். வாமனுக்கு ஏதும் நடந்துவிடுமோ என்ற அச்சம் சுமதியை பாடாய் படுத்துவதை வடிவு நன்கறிவாள். அதனால்தான் அவள் தன் துணைவரிடம் ஒருமுறையாவது வாமனை வந்து பார்த்துவிட்டுப் போகச்சொல்லுங்கள் என்று சொல்லிவிட்டிருந்தாள். அவனும் சென்றவுடன் வாமனை அனுப்பிவிட்டிருந்தான். சுமதி வந்தபோது அங்கே வாமனேதான் நின்றான். மெலிந்து, கறுத்து, முகத்தில் சோகச்சுமையோ வேலைப்பளுவோ படர்ந்து ஆளே மாறியிருந்தான். எத்தனைதான் கட்டுப்படுத்த முயன்றும் சுமதியால் தாங்கமுடியவில்லை. அழத்தொடங்கிவிட்டாள். அவளைஆறுதல்படுத்துவதற்குள் கிட்டத்தட்ட அவனும் அழுதுவிடுவான் போலவே இருந்தது. கண்களில் சிவப்போடிக் கலங்கிவிட்டன.

அவர்கள் கதைக்கட்டும் என்று, வயிற்றுச் சுமையோடும் வடிவு தன் கடமைகளை செய்யத்தொடங்கினாள். சுமதி அவசர அவசரமாக சமைத்து வாமனுக்கு உணவளித்தே அனுப்பிவைத்தாள். அவன் புறப்பட்டுப் போய்விட்டபின் மனது முன்னரைவிட வலித்தது. பாதுகாப்பாக சென்று சேர்ந்துவிட்டானா இல்லையா என்றறியாமல் அவளால் நிதானமாக இருக்கமுடியவில்லை.

வடிவு கட்டாயமாக ஓய்விலிருக்க வேண்டியவள். அவளுக்கு பெற்றோரோ உறவினரோ அருகில் இல்லையே. அவளை ஆரஅமர இருத்திவைத்து ஓய்வெடுக்கச்செய்யவோ நல்ல உணவளிக்கவோ முடியாத சூழல். ஆகவே மருத்துவர் தீர்மானமாக சொல்லிவிட்டார்.

'வடிவு, உங்கட வயதும் காலம்பிந்திய கருத்தரிப்பும் கட்டாயம் ஓய்வுதேவை எண்டு சொல்லுது. தாயும் பிள்ளையும் உயிரோட இருக்கோணுமெண்டா நீங்க இஞ்ச இருந்து சரிவராது. நீங்கள் தாராளமாய் கடமை செய்திருக்கிறிங்கள். எங்களுக்கு நிறையவே உதவியாய் இருந்திருக்கிறிங்களம்மா. நீங்கள் எங்க இருந்தாலும் சனத்துக்கு சேவை செய்யலாம். நீங்கள் இருக்கிற நிலைமையில தொடந்து உங்களால இஞ்சநிண்டு வேலை செய்யமுடியாது. உங்கட கணவரிட்ட நான் எல்லாம் கதைச்சிட்டனம்மா. உங்கள அனுப்பினால் அது தனக்கும் நிம்மதி எண்டுதான் சொல்றார். உங்கள வவுனியாவுக்கு அனுப்பிறன் வடிவு. நீங்கள் அங்கபோய் திருகோணமலைக்கு உங்கட வீட்டாக்களிட்டயே போங்க. உங்கட ஆள் பிறகு தொடர்புகொள்ளுவார். சரிதானே.' என்ற மருத்துவரின் வார்த்தைகளை நாசூக்காக மறுத்துவிட்டாள் வடிவு.

ஆனால் அடுத்த மாதமே அவள் கட்டாயம் புறப்படவேண்டிய தேவை எழுந்தது, போதியளவு ஓய்வும் உணவுமற்றதால் அவளது உடல்நிலை கணிசமான பாதிப்பை காட்டியது. வடிவின் கணவரும் போவது நல்லது என்பதை வலியுறுத்துவதாலும் தலைப்பிரசவம் பற்றிய அச்சம் காரணமாகவும் செல்வதற்கு சம்மதித்தாள். தன்னையும் களத்தையும் மாறிமாறிச்சிந்திக்கும் கணவரால் கடமையில் ஒன்றித்திருக்க முடியாது என்பதை வடிவு விளங்கிக்கொண்டாள். அவளது பாதுகாப்பு பற்றியும் பராமரிப்பு பற்றியும் அவனே கவனமெடுக்கவேண்டியதால் அவனது கடமை நேரங்கள் குறைந்தன. போதாக்குறைக்கு அவளால் அவனது பாதுகாப்பும் கேள்விக்குறியானது. களமுனையில் நிற்பதொன்றும் அடிக்கடி பின்னே வந்துபோவதைப்போல ஆபத்தான விடயமில்லை. ஆகவே அவனுடைய பாதுகாப்பையும் கருதித்தான் அவள் புறப்பட்டாள். எப்போதாவது உள்ளேசெல்ல அனுமதிக்கப்படும் அம்புலன்ஸ்களில் வடிவும் செல்வதற்கான அனுமதி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மனைவியை சிக்கலான சூழலில் இருந்து அகற்றிவிட்ட திருப்தியோடு அவளின் துணைவன் களமுனைக்குச்சென்றான். அவனைப்பற்றிய கவலைகளையே சுமந்தவண்ணம் வடிவு வவுனியாவிற்கு சென்றாள்.

இப்போதெல்லாம் அந்த மருத்துவமனையில் சுமதிதான் அதிகமாக மாய்ந்து கொண்டிருந்தாள். தொடர்ச்சியான இடப்பெயர்வும் வசதிகளற்ற சத்திரசிகிச்சைக்கூடமும் அவளுக்கும் சிரமத்தைக் கொடுத்தன. மனிதாபிமானம் அவளை எப்போதுமே சும்மா இருக்கவிடாமல் துரத்தித்துரத்தி வேலை வாங்கியது. நாளுக்குநாள் பிரச்சினையின் வீரியம் அதிகரித்துக்கொண்டே போனது. எறிகணைகளே பலரது உயிர்களைக் காவுகொண்டன. கிபிர், மிக் போன்ற யுத்த விமானங்களும் சரமாரியாக குண்டுகளை வீசித்தள்ளின. குறுகிய

இடமும் நெருசலான மக்கள்தொகையும் பாதிப்பு விகிதத்தை அதிகரித்தன. விளைவு மருத்துவமனைகள் அனைத்துமே காயப்பட்ட மனிதர்களால் நிரம்பி வழியத்தொடங்கின.

இப்போது அமுதாவுடன் நின்றால் நன்றாக இருக்குமே என்றிருந்தது சுமதிக்கு. ஆனால் அவள் வேலைசெய்யும் மருத்துவமனையும் ஓய்வொழிச்சலின்றி இயங்கிக்கொண்டிருக்கிறது. இவளின் கடமையையும் விட்டுவிட்டு அவளிடம் செல்லமுடியாதே. ‘ரிலேரேஸ்’ மாதிரிமருத்துவமனையின் செயற்பாடுகள் மாறி மாறி இடம்மாறிக் கொண்டிருக்கையில், தலைக்குமேலே வேலைகள் குவிந்து கொண்டிருக்கையில் சும்மா மன ஆறுதலுக்குக்கூட அமுதாவிடம் போய்வர முடியாது. அதற்கு அவகாசமே இல்லை.

உடல்கள் கந்தலாகிய மனிதர்களைப் பார்த்துப்பார்த்து மருத்துவத்தொழிலே வெறுத்துப்போன பலர் வேலையை விட்டுவிட்டு விலகி சென்றுவிட்டார்கள். இதிலும் பொதுமக்கள் போராளிகள் என்ற வேறுபாடே இருக்கவில்லை. மனிதாபிமானம் இருந்தாலும்கூட பலரால் அந்த காயங்களின் கடுமையை சகித்துக்கொண்டு வேலைசெய்ய முடியவில்லை. எனினும் பலர் கடமை என்றுணர்ந்து கருத்தூன்றிச் செய்யத்தான் செய்தார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக தம்மைப்பற்றிமட்டுமே சிந்தித்த பலர் எல்லாவற்றிலிருந்தும் விலகியோடத்தொடங்கினார்கள். மருத்துவமே தெரியாத பல நல்ல உள்ளங்கள் தேடிவந்து உதவ நின்றார்கள். அதனால் யார் யார் வேலை செய்கிறார்கள் என்பதல்ல பிரச்சினை. யார் யார் கடமையிடத்தில் நின்று உழைக்கிறார்களோ அவர்களையெல்லாம் மருத்துவ நிர்வாகம் சலுகையுடன் ஏற்றுக்கொண்டது.

எறிகணைகள் துரத்தத்துரத்த மக்களோடு இடம்பெயர்ந்து இடம்பெயர்ந்து வந்த மருத்துவமனைகள் வரலாறு காணாத சாவுகளைக்கண்டன. தொடர்ந்து அழைப்பு விடுத்ததன் பயனாய் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் கப்பலில்வந்து காயப்பட்டவர்களை ஏற்றிச்செல்கிறோம் என்றார்கள். மாத்தளன் பாடசாலையில் இயங்கிய மருத்துவமனையில் காயமடைந்தவர்கள் நிரம்பிவழியத்தொடங்கிய பிறகுதான் முதாவது கப்பல் மாத்தளனுக்கு வந்தது. உடனடி சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட முடியாமல்போன காரணத்தாலேயே பலர் உயிரிழந்தார்கள். சில மருத்துவர்கள் மட்டும் நின்று உயிருக்காகப்போராடும் ஆயிரக்கணக்கான மனிதர்களை எப்படி காப்பாற்றுவது? அதற்கேற்றவாறான இடமுமின்றி மருந்துமின்றி மருத்துவர்கள்பட்ட சிரமம் அவர்களுக்கே பாரிய மனத்தாக்கங்களை ஏற்படுத்தின. கண்ணுக்கு முன்னாலேயேதுடிதுடித்துச்சாகும் மனிதர்களை கையைக் கட்டிக்கொண்டு பார்த்துக்கொண்டு நிற்க எந்த மருத்துவரால்தான் முடியும்?

மருத்துவர்கள் தம்முடன் கடமையாற்றிய போராளிகளுக்கு பெரிய பெரிய வேலைகளைக் கொடுத்தார்கள். உடலகளுக்குள் இறங்கிய சிதறுதுண்டுகளையும் சன்னங்களையும், ஆளையே மயக்கநிலையில்வைத்து மணித்தியாலக்கணக்கில் மினக்கெட்டு வெளியே எடுக்கும் பக்குவத்திலும் பக்குவமான வேலைகள்கூட தாராளமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன. முக்கால்வாசி வேலைகளையும் போராளிகளே இழுத்துப்போட்டுக்கொண்டு செய்தார்கள். சத்திரசிகிச்சைகளின்போது காயந்தைக்க நூல்கோர்த்த ஊசியை எடுத்துக்கொடுக்க உதவிக்கு நின்றவர்களே காயங்களுக்கு தையல்போட தொடங்கிவிட்டார்கள். அத்தொழிலில் கைதேர்ந்த சுமதியோ ஒரு சத்திரசிகிச்சை நிபுநருக்கீடாக வேலை செய்தாள். வைத்திய அதிகாரி ஓய்வெடுக்கும் நேரங்களில் சுமதியே தனித்துநின்று சில சிகிச்சைகளை செய்துவிடுவாள். சிக்கலான காயங்களை மட்டுமே மருத்துவரிடம் அனுப்பிவைத்தார்கள். சுமதிக்கு இப்போதெல்லாம் உயிர்களை காப்பாற்றவேண்டும் என்ற உந்துதலைத்தவிர மற்றெதைப்பற்றிய நினைவோ கவலையோ இருக்கவில்லை. எனினும் காயப்பட்டு வருபவர்களின் கதைகள் அவளை வருத்தின.

காயத்தோடு வந்துவிழும் ஒவ்வொரு மனிதருக்கும் ஒவ்வொரு துயர வரலாறு இருந்தது. அவர்களின் கதைகள் அவளை சிந்திக்க வைக்கும். கவலை தரும், கண்ணீரையும் வரவழைக்கும். சுமதி மனிதர்களை நேசித்தாள். அவர்களின் சுகதுக்கங்களை பகிர்ந்து கொண்டாள். இப்போதெல்லாம் அவளுக்கு நிறையப்போரை தெரியும். அக்கா அக்கா என்று போராளிகள் அவளுடன் உரிமையாக பழகினார்கள். எப்போதும் மாறாத அன்புடன் அவளுக்கு உதவிகளையும் செய்தார்கள்.

எப்போதாவது அவளை பார்க்கவருகின்ற வாமன் அவளது கடமையை புரிந்துகொண்டு காத்திருப்பான். சத்திரசிகிச்சை அறையில் வேலையாக நிற்கும் சுமதிக்கு தகவல் கிடைத்தாலும்கூட அவளால் ஓடோடி வந்துவிட முடியாது. அப்போதுதான் காயத்தை சீர்படுத்தத் தொடங்கியிருப்பாள். இடையில் விட்டுவிட்டு வரமுடியுமா? அவளுக்காக வாமன் மணித்தியாலக் கணக்கில் காத்துக்கொண்டும் நின்றிருக்கிறான். பல மணிநேரம் காத்திருந்து சிலநிமிடங்களே கதைத்துவிட்டுச் சென்றதும் உண்டு. சில சமயங்களில் ஒருமுறை பார்த்துவிட்டு வந்தாலே போதும் என்றிருக்கும். அதற்காக இருவருமே முயற்சிக்க விரும்புவார்கள்தான். ஆனால் வாமன் மட்டுமே முயற்சிப்பான். சுமதியும் பார்க்கவேண்டும் கதைக்கவேண்டும் என்ற தவிப்புடன்தான் இருந்தாலும் தலையை நிமிர்த்தக்கூட முடியாத கடமைகளில் நிற்கும்போது என்னசெய்ய முடியும்?

மாத்தளன் மருத்துவமனையில் ஒருமுறை வாமன் வந்துநின்றான். களமுனையும் கூப்பிடு தொலைவில்தான் இருந்தபடியால் அவனால் தாராளமாக நிற்கமுடிந்தது. எனினும் காத்திருந்து காத்திருந்து களைத்துப்போனான். இப்போது வருவாள் பிறகு வருவாள் என்று வாசலையே பார்த்துப்பார்த்து இருந்தபோது சுமதி வேகமாய் வெளியே வருவதை கண்டான். அவள் தன்டனிடம்தான் வருகிறாள் என்று அவன் இருந்த இடத்தில்நின்று எழுந்துநிற்க அவளோ அவனையும் விலத்திக்கொண்டு ஓடினாள். அவனுடைய புன்முறுவலுக்கு யாரோ ஒருத்தியைப்போல தலையாட்டிவிட்டு செயற்கை சுவாசமளிக்கும் சாதணமொன்றோடு மீண்டும் சத்திரசிகிச்சை கூடத்துக்குள் நுழைந்துவிட்டாள். அதற்கும்பின் அவள் வெளியேவர நீண்டநேரமாகும் என்பது வாமனுக்கும் புரிந்தது. சாவின் விழிம்பில் நின்றுகொண்டிருக்கும் யாரையோ காப்பாற்றிய பின்புதானே வெளியே வருவாள். அவ்வளவு நேரத்திற்கும் அவனால் காத்திருக்க முடியாது. சென்றுவிட்டான். சுமதி வேலை முடிந்து வாமனைப்பார்க்கும் ஆவலில் வெளியே வரும்போது இருட்டி நீண்டநேரம் ஆகிவிட்டிருந்தது. வாமனையும் அங்கே காணவில்லை.

## 19 உடைந்தது வாமனின் இதயம்

இன்னுமொருநாள் வந்த வாமன், பிடித்த பிடியாய் நின்று சுமதியை தன்னுடன் அழைத்துச்சென்றான். தனக்கு தெரிந்தவர்களின் வீடொன்றில் அவளை நிற்குமாறு சொல்லி விட்டுவிட்டு உடனே வருவதாக சென்றான். சற்றுநேரத்தில் கையில் கோழியொன்றுடன் வந்துநின்றான். வாமனின் மேற்பார்வையில் சமையல் தொடங்கியது. அப்போது சுமதி உறங்க தொடங்கியிருந்தாள். உறக்கமென்றால் அப்படியொரு உறக்கம். மாதக்கணக்காய் சீரற்று இருந்த உறக்கத்தை ஒரு பகலிலேயே உறங்கித் தீர்த்துவிடுவதைப்போல உறங்கினாள். பகல் மணி ஒன்றை தாண்டியபின்னும் அவளாகவே விழிக்கட்டும் என்று வாமன் காத்திருந்தான்.

மாலை மூன்றுமணிக்கு சுமதி விழித்தபோது சோப்பும் டவலுமாக நின்றான். அவள் முகம் கழுவிக்கொண்டு வந்தபோது தண்ணீரும் உணவுமாக நின்றான். ‘ஆறுதலாகச் சாப்பிடு’ என்று அவனே பரிமாறிவிட்டு தானும் சாப்பட்டான். சுமதிக்கு அன்றைய பகல், நிறையவே ஆறுதலாக இருந்தது. மிகநீண்ட நாட்களுக்குப்பிறகு சுமதி திருப்தியாகச் சாப்பிட்டாள். அவனுடைய அன்பின் பெறுமதியை எண்ணியபோது வாமன் மனதுக்குள் உயரமான இடத்தில் இருந்தான். வாம் நீங்கள் மிகமிக நல்ல மனிதா் என்று உள்ளம் சொல்ல அவனை கனிவோடு பார்த்தாள். அவன் அமைதியாக சாப்பிட்டுக்கொண்டிருந்தான்.

அந்த வீட்டில் வாழ்ந்தவர்கள் எல்லோருமே சாப்பிட்டுவிட்டபின் கொஞ்சநேரம் இருந்து கதைத்தார்கள். அந்தச் சிறிய குடும்பத்தைப்பற்றி வாமன் ஏற்கனவே சுமதிக்கு சொல்லியிருக்கிறான். அன்பான உள்ளங்களின் அனுசரிப்பு எத்தனை மன அமைதியை தருகிறது என்பதை அவள் மீண்டும் மீண்டும் உணர்ந்தாள். வாமனே அவளை அழைத்துச்சென்றுமருத்துவமனையில் விட்டுவிட்டுச் சென்றான். நல்லதொரு ஓய்வை எடுத்துவிட்ட புத்துணர்வுடன் சுமதி தன் பணியை தொடர்ந்தாள்.

எறிகணைகள் குதறிப்போட்ட, கிபிர்க்குண்டுகள் கிழித்தெறிந்த மனிதா்களின் கோரமான காட்சிகளை பார்த்துப்பார்த்து மனம் களைத்துப் போனதென்னவோ உண்மைதான். ஆனால் பத்து நூறாகக் கொண்டுவரும் காயக்காரரை பார்க்கையில் இப்போது எந்த உணர்வும் அவளை அயர விடுவதில்லை. ஐயோ பாவம் என்று மனம் கதறுவதில்லை. ஐயையோ ரத்தம் என்று வெறுப்பதுமில்லை. குருதியை கண்டாலே மயங்கிவிழுந்த சுமதிதான் இப்போது குருதிச்சேற்றில் நின்று வேலை செய்தாள். அவளின் மனமும் ஒருவிதத்தில் மரத்துத்தான் போனது. மருத்துவர்களும் தாதியர்களும் பணியாளர்களும்கூட பாவபுண்ணிய உணர்வுகளையெல்லாம் களைந்து போட்டுவிட்டார்கள். தம்கடன் பணிசெய்து கிடப்பதே என்பதைப்போல தம்மால் எவ்வளவுக்கு பணிசெய்ய முடியுமோ அவ்வளவுக்கு பணிசெய்தார்கள். எந்த விருப்பு வெறுப்புமற்ற இயந்திரத்தைப்போல சுமதியும் இயங்கினாள். தன்னைப்பற்றி, தன் குடும்பத்தைப்பற்றி, அடுத்த நாளைப்பற்றி ஏன் அடுத்த மணித்தியாலத்தைப்பற்றிக்கூட எவரும் சிந்தித்ததாகத் தெரியவில்லை. இப்போதெல்லாம் சுமதி, வாமனைக்கூட எப்போதாவதுதான் நினைத்தாள்.

திடீரென ஒருநாள் அதிகாலை நான்கு மணிக்கு வாமன் வந்து நின்றான்.

‘சுமதி, இவடம் திடீரெண்டு விடுபடலாம். எந்தநேரமும் போறதுக்கு தயாராய் இருங்க. இப்பிடியே கடக்கரையப்பிடிச்சு போனீங்கள் எண்டால் அந்த அரிசிக்கப்பல் நிக்கிற இடம் வரும். கப்பலடிவரைக்கும் போயிருங்க. அந்தக் கப்பலடில ஒரு கொஸ்பிட்ரல் இயங்கிது. அங்கபோயிட்டிங்கள் எண்டால் சரி. அங்க எங்கடயாக்கள்தான் நிக்கிறாங்க. பயப்பிடாமல் போங்க என்னம்மா.’

‘நீங்கள்?’ என்றாள் தயக்கத்துடன்.

‘சாகாமல் இருந்தனெண்டால் வருவன்’ விரக்தியாய் வந்தது அவனது பதில்.

‘நான் மற்றாக்களுக்காக செய்யிற புண்ணியம் எனக்காக உங்களை கூட்டிக்கொண்டு வரும். களத்தை விட்டிட்டு எனக்காக என்னோட வாங்க எண்டு நான் உங்கள கேக்கமாட்டன். இப்பவும் சொல்றன் வாம், எனக்காக உங்களில கொஞ்சம் கவனம் எடுங்க. அதுகாணும்.’

‘நாளாந்தம் சாகிற நூற்றுக்கணக்கான சனமும் கவனமே இல்லாமலா சாகிதுகள் சுமி? அது விதி.’

‘ம். உண்மைதான்.’

‘வெறுப்பா இருக்கிதம்மா. பங்கர் பங்கராய் சனம் செத்துக்கிடக்கிதுகள். எடுக்கவோ புதைக்கவோ ஆக்களில்லை. பிணங்களையே பாத்துப்பாத்து பிணங்களோடையே வாழுறமாதிரி இருக்கிது.’

‘................’

‘ஏன் எனக்கின்னும் சாவு வரயில்ல?’ என்றவனின் முகம் இறுகிக்கிடந்தது. அதில் எந்த உணர்ச்சிகளையுமே காணவில்லை.

‘நீங்கள் உயிரோடை இருக்கணும் என்றதுதான் உங்கட விதிபோல. ப்ளீஸ் வாமன் இப்பிடி மனதை உடைய விடாதிங்க.’

‘சரி சுமி. நீங்க கவலைப் படாதிங்க. எனக்காக இல்லாட்டியும் உங்களுக்காக நான் கவனமா இருக்கிறன். எனக்கேதும் நடந்திட்டால் அதுக்காக நீங்க அழாதிங்க. ஏனெண்டால் சாகாமல் இருக்கிறது எனக்கு அவமானமா இருக்கிது.’ என்ற வாமனின் கண்களில் சிவப்பு.

‘.............’

‘இதவிடவும் என்னை வேற எப்பிடி அர்ப்பணிச்சு உழைக்கிறதெண்டு எனக்கு தெரியேல்லச் சுமி. இவள காலத்துக்கும் நான் சாகப்பயந்து சண்டையில நிக்கேல்ல. சாக்களத்துக்குள்ளதான் வாழ்ந்தன். வாழுறன். பயப்பிடுறவனை எல்லாம் சாவு திண்ணிது. என்னப்போல ஆக்களையெல்லாம் திரும்பிக்கூடப் பாக்காமல் போகுது. உண்மையா சொல்றன் சுமி, சாகாமல் இருக்கிறதே எனக்கு அவமானமாத் தெரியிது. எனக்கேன் சுமி சாவு வரேல்ல?’ என்று வாமன் சின்னப்பிள்ளைபோல கேட்டான். சுமதிக்கு அவனது வேதனையின் ஆழம் புரிந்தது.

‘கவலப் படாதிங்கப்பா. வாழுறதும் சாகிறதும் நம்மட கையில இல்ல. நீங்கள் மனப்பூர்வமாத்தான் உங்கட கடமைகள செய்திங்கள். அதை நினைச்சு திருப்திப்படுங்க. முடிந்தவரைக்கும் முயற்சிசெய்திங்கள். இந்த தாக்கங்களுக்கு காரணம் நானோ நீங்களோ இல்லையே.’

‘தோத்துக்கொண்டு போறம். இன்னும் கொஞ்ச நாட்களில எதுவும் நடக்கலாம் சுமி.’

‘விளங்கிது வாம். அதுக்கு நீங்களேன் கவலப்படுறிங்க? லட்சக்கணக்கான சனங்களுக்கும் கிடைக்கப்போறது ஒரே முடிவுதான். வெற்றியோ தோல்வியோ அதை வீரானாகவே ஏற்றுக்கொள்ளணும் வாமன்.’

‘என்னெண்டம்மா? எத்தின தியாகம், எத்தின ஈகம், எவ்வளவு அர்ப்பணிப்பு. ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான உயிர்கள கொட்டி வார்த்திருக்கிறம் சுமி. கொட்ட்ட்ட்டி வார்த்திருக்கிறம். எல்லாமே, எல்லாமே வீண்தானா? அந்த உயிர்களுக்கெல்லாம் எந்தப் பெறுமதியுமே இல்லையா? நம்பவே முடியுதில்ல சுமியம்மா.’

‘இல்ல வாமன். எப்பவுமே வெற்றி, வரலாறு. தோல்வி பாடம்.’

‘என்ர ஐயோ. உயிர்களிலயா பாடம் படிக்கோணும்?’

‘அதுக்கு நீங்கள் மட்டும் பொறுப்பில்லையேப்பா.’

‘நானும்தான் பொறுப்பு. நானும்தான். இந்த மண்ணுக்குரிய ஒவ்வொரு தமிழனும் பதில் சொல்லணும்.’

‘அதப்பற்றி இப்ப ஒருதருக்குமே கவலையில்ல தெரியுமா?’

‘விளங்கிது சுமி.’

பெரும்பாலும் எல்லாருமே படையினரிட்ட போகத்தான் விரும்புயினம்’

'சனங்களும் என்னதான் செய்யிறது? அதுகளுக்கு யார் சாப்பாடு போடுறது? நடக்கிற சாவுகள் காணாதெண்டு பட்டினி கிடந்தும் சாகணுமா?'

'அப்ப ஏனப்பா போறதுகள சுடுறிங்கள்?'

'நான் சுடயில்ல'

'நீங்கள் சுட்டா என்ன, வேற பெடியள் சுட்டால் என்ன? யார் சுட்டாலும் இயக்கம் சுட்டதுதான்.' என்ற சுமதியின் வார்த்தைகள் வாமனை காயப்படுத்தின.

வாமன் நீண்ட நாட்களின்பின் சுமதிஸோடு மனம்விட்டுக் கதைத்தான்.

'இல்லச் சுமி நீங்கள் பிழையாய் விளங்கிக்கொள்றிங்க. நிறையப்பேர் சேந்ததுதான் இயக்கம். எல்லாருமே இப்ப ஒரே கொள்கையோட கொள்கை பிடிப்போட இல்ல. இப்ப ஒவ்வொருதனும் ஒவ்வொருமாதிரி இருக்கிறான். சில போராளிகள் தாங்களே பாதையக்காட்டி இதால போங்க எண்டு அனுப்புறாங்க. சிலபேர் சுடுறாங்க. இதில எதுசரி எது பிழை எண்டு என்னாலையே இப்ப விளங்கிக்கொள்ள முடியேல்ல சுமதி. மண்டை விறைக்கிது. யார் உண்மையான போராளி யார் ஆமிக்கு வேலை செய்யிறான் எண்டு ஒண்டுமே விளங்கேல்ல. ஆனா இப்பவும் உடம்பில குண்டை கட்டிக்கொண்டு விடுதலைக்காக வெடிக்க போராளிகள் நிக்கிறாங்க.'

'கவலப்படாதிங்க வாமன். இத மட்டும்தான் இப்ப உங்களுக்குச் சொல்லமுடியும். நீங்கள் மனசை வீணாய் அலட்டிக்கொள்ளாதிங்க. நடக்கிறதுதான் நடக்கும். கொஞ்சம் பொறுங்கோ டீ போட்டுக்கொண்டு வாறன்.' என்று சமையலறைப் பகுதிக்குச்சென்றாள் சுமதி. அவளது மனம் வாமனுக்காக கவலைப்பட்டுக் கொண்டிருந்தது.

தன் தலையை கைகளில் தாங்கிக்கொண்டிருந்த வாமனின் கண்கள் வெற்றுத்தரையை வெறித்துக்கொண்டிருந்தன. போகத்துடிக்கும் மக்களை சுடுவதில் உண்மையில் அவனுக்கு உடன்பாடில்லை. இத்தனைகாலமும் தம்மை நம்பியிருந்த மக்களுக்கு, இந்த இறுக்கத்தில் இருந்து உங்களை மீட்போம் என்று உத்தரவாதம் கொடுக்க யாராலுமே முடியாதே. அவர்களை வாழவைப்போம் என்று இனி எந்த முகத்தோடு சொல்ல முடியும்? வீட்டுக்கொருவர் நாட்டைக்காக்க வாருங்கள் என்றபோது பத்துப்பேர் வராவிட்டாலும் நூறுபேர் வந்தார்களே. உண்ணஉணவும் உடுக்க உடையும் உறங்க இடமும் இல்லாதபோது சனங்கள் போவார்கள்தான். அவர்களைச் சுட்டுக்கொள்வதா? ஓரிருவர்தான் இப்படிச் சுடுகிறார்கள். அறியாமல் செய்கிறார்கள். இந்தக் கட்டத்தில் தோற்றுவிட்டோம். நினைத்தும் பார்க்க முடியாத பின்னடைவு இது. விடுதலை போராட்டம் இந்தக் கட்டத்தை வெல்லுமா? வெல்லும் என்பதற்கான எந்தச் சாத்தியக்கூறும் இருப்பதாய் தெரியவில்லை. அழிவைத்தவிர வேறொன்றுமே நடக்கவில்லையே. எதிரி நம் இனத்தை அழிக்கிறான் என்பது போதாமல் நாமே நம்மினத்தை அழிப்பதா? சிலர் நினைப்பதைப்போல ஐ.நாவும் வராது அமெரிக்காவும் கேட்காது. கேட்கும் என்றால் இந்நேரம் கேட்டிருக்கவேண்டும் என்றெல்லாம் மனதால் பேசிக்கொண்டிருந்த வாமனின் கண்கள் பஞ்சடைந்து போவதை உணர்ந்தவனாய் கையால் கசக்கிக்கொண்டான்.

சுமதி தனக்காக நிர்வாகத்தினர் கொடுத்த பிஸ்கற்களையும் சுடச்சுட பால் தேநீரையும் கொண்டுவந்து வாமனுக்குக் கொடுத்தாள். வாமன் எதுவுமே பேசாமல் அதை பருகினான். போகும்போது மீண்டும் கப்பலடியை நினைவுபடுத்தினான்.

'இனிமேல் என்னை எதிர்பார்க்கக்கூடாது சுமி' என்றவன் கைகாட்டிவிட்டு போய்க்கொண்டிருந்தான். சுமதி அவனையே கொஞ்சநேரம் பார்த்துக்கொண்டு நின்றாள். பின்பு அவன்பற்றிய நினைவுகளை கட்டுப்படுத்திக்கொண்டு கடமைகளை நினைத்தாள்.

கிணற்றடிக்குச்சென்று வாளிகளில் தண்ணீரை நிறைத்தாள். திடீரென எறிகணைமழை பொழியத்தொடங்கியது. பலபத்து எறிகணைகள் தொகை தொகையாக வீசப்பட்டன. சுமதியோ குளிப்பதற்கு தயாராகிக் கொண்டிருந்தாள். அவளுடன் சத்திரசிகிச்சைக்கூடத்தில் வேலைசெய்யும் போராளியொருவன் ஓட்டமாய் ஓடிவந்து அவளை பளாரென்று அறைந்தான். அதே வேகத்தில் அவளை இழுத்துச்சென்று பாதுகாப்பு அகழிக்குள் தள்ளினான். அதன்பின்புதான் அவளுக்கு நிலைமையின் விபரீதம் புரிந்தது.

## 20 மாத்தளன் கடற்கரை

மருத்துவமனை முழுவதும் அதிர்வாலும் புகையாலும் சிதறுதுண்டுகளாலும் நிறைந்தன. எறிகணைவீச்சு ஓய்ந்தபின் சுமதி கிணற்றடிக்கு ஓடினாள். அங்கே வாளிகளில் நிறைத்த தண்ணீரை காணவில்லை. பல சிதறுதுண்டுகள் வாளிகளைத் துளையிட்டுவிட்டிருந்தன. கிணற்றுக்கட்டில் வைத்திருந்த அவளது உடைகள் கிணற்றுக்குள் விழுந்துகிடந்தன. அவற்றை வாளியால் எடுக்க முயற்சித்தபோது அவை நீரில் அமிழ்ந்துவிட்டன. சுமதி வேறு உடைகளை எடுத்துக்கொண்டோடிவந்து அவசர அவசரமாகக் குளித்தாள். அவசர அவசரமாக இயங்கி இயங்கி சுமதி இப்போதெல்லாம் அவசரத்திற்கே பழக்கப்பட்டுப் போயிருந்தாள். தேநீரை சுடுநீர்ப் போத்தலில் ஊற்றுவதைப்போலவே வாயில் ஊற்றிக்கொண்டு சத்திரசிகிச்சை கூடத்துக்குள் ஓடினாள். அவளுக்கு வேலைகள் வந்து குவிந்தன. சற்றுமுன் நடந்த கண்மண் தெரியாத எறிகணை வீச்சில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் உடல்கிழிந்தவர்களாய் கொண்டுவரப்பட்டார்கள். அவளும் புயல்வேகத்தில் கடமையாற்ற வேண்டியிருந்தது. காயங்களை துடைத்தும் தைத்தும் நோண்டிக்குடைந்து சிதறுதுண்டுகளை எடுத்தெறிந்தும் அவர்களது கதறல்களைக்கேட்டும் சுமதியும் களைத்துப்போய்விட்டாள்.

பகல், நேரம் பன்னிரண்டு மணியை தாண்டிய பிறகுதான் தான் இன்னமும் ஒன்றுமே சாப்பிடவில்லை என்பது நினைவு வந்தது. களைப்பு மிகுதியால் கதிரையில் அமர்ந்துவிட்ட அவள்முன் சுடச்சுட தேநீரை நீட்டினான், காலையில் அவளை கன்னத்தில் அறைந்தவன். அவன் அவளுடன் மிகச்சொற்பமான நாட்கள்தான் அறிமுகமானவன். ஆனால் நீண்டநாட்கள் நெருங்கிப்பழகிய நல்ல நண்பனைப்போல நடந்துகொள்வான். அவனுக்கு வாமனை நன்றாகத் தெரியுமாம். வாமனில் மிகுந்தஅன்பும் மரியாதையும் வைத்திருந்த அந்தப்போராளி சுமதிமீது எப்போதும் ஒரு கண் வைத்திருந்தான். அவள் வேலைசெய்யும்போது தனக்கான வேலைகள் குறைவாக இருந்தால் அவளுக்குவந்து உதவுவான். அவன்மட்டும் காலையில் சுமதியை காப்பகழிக்குள் தள்ளிவிழுத்தாமல் விட்டிருந்தால் அவள் காயப்பட்டிருப்பாள்.

'அறிவு' என்று அழைக்குமுன்பே 'சொல்லக்கா' என்று வந்துநிற்பான். சுமதிக்கும் அவனில் அன்பும் அக்கறையும் இருந்தன. சுமதி எதுவுமே பேசாமல் மெலிதாய் சிரித்துவிட்டு தேநீரை வாங்கிப் பருகினாள். சற்றுநேரம் அமைதியாக நின்றுவிட்டுச் சொன்னான்,

'சாகிறதெண்டால் முன்னுக்குப்போய் அஞ்சாறு ஆமியையாவது சுட்டுப்போட்டுச் சாகலாமே. அநியாயமாய் செல்லடியில சாகப்போறன் எண்டு நிக்காதிங்க' என்றுவிட்டு போய்விட்டான்.

தொடர்ச்சியாகக் கேட்டுக்கொண்டிருந்த சண்டைச் சத்தங்களும் எறிகணைவீச்சுகளும் களம் கொதிநிலையிலேயே இருப்பதை உணர்த்தியது. வாமன் என்ன செய்கிறானோ என நினைத்து பெருமூச்சு விடுகையில் அடுத்த தொகை காயப்பட்டவர்கள் வந்துசேர்ந்தார்கள்.

நான்கைந்து பேராக காயங்களுக்கு கட்டுப்போட, சுமதி பெரிய காயங்களை மருத்துவருடன் சேர்ந்து கவனித்தாள். மாத்தளன் வீதியை அண்டி பலநூறு எறிகணைகள் வெடித்தன. வீதிக்கு அருகாய் இப்புறமிருந்த மருத்துவமனை ஓயாமல் அதிர்ந்துகொண்டே இருந்தது. களத்தின் முன்னரங்க வரிசைக்கும் மாத்தளன் மருத்துவமனைக்கும் இடையே இருநூறு மீற்றர் இடைவெளிதான் இருந்தது. அதனால் துப்பாக்கிச் சன்னங்கள் மருத்துவமனைக்குள்ளும் சீறிப்பாய்ந்தன. பலர் மருத்துவமனைக்குள்ளேயே காயமடைந்தனர். காயப்பட்டவர்கள் மருத்துவமனையில் மீண்டும் காயப்பட்டனர். எறிகணைகள் நிமிடத்துக்கு நிமிடம் அவர்களின் தலைகளுக்கு மேலாகக் கூவிச்சென்று தூரத்தே வெடித்தன. மரணத்தின் கிடுக்குப்பிடிக்குள் நின்றுகொண்டு சுமதியும் உயிர்களை காப்பாற்ற தன்னாலானவேலைகளை செய்தாள். அன்றைய பகல் முடிந்து இருள்கவ்வி இரவும் கழிந்துகொண்டுதான் இருக்கிறது. சண்டையும் ஓய்ந்த பாடில்லை, சத்திரசிகிச்சைக் கூடமும் ஓய்ந்தபாடில்லை.

சுமதி அல்லும் பகலுமாய் சத்திரசிகிச்சைக் கூடத்துக்குள்ளேயே நின்றாள். கட்டிலில்கிடந்த குழந்தையொன்றுக்கு வயிற்றுக்காயத்தை துப்பரவாக்கிக் கொண்டிருக்கையில் சீறிவந்த சன்னங்களில் ஒன்று குழந்தையின் விலாவில் தைத்து உள்ளிறங்கியது. அந்தக்குழந்தை சிகிச்சையிடத்திலேயே அவளின் கண்முன்னால் உயிரிழந்தது. அந்தக் குழந்தையின் சடலத்தை அப்புறப்படுத்தச் சொல்லிவிட்டு அடுத்த காயக்காரரை கட்டிலுக்கு ஏற்றச்சென்னாள். அதே நிதானத்தோடும் அவசரத்தோடும் காயங்களை சுத்தப்படுத்தத் தொடங்கினாள்.

அந்த இரவு விடிந்ததே தெரியவில்லை அவளுக்கு. கிணற்றடிக்கு முகம் கழுவச்சென்றவள் அப்போதுதான் அதிர்ந்தாள். தொடர்ச்சியாக சண்டை நடந்துகொண்டிருந்ததால் சத்தத்தை வைத்தெல்லாம் நிலைமையை கிரகிக்க அவளால் முடிந்திருக்கவில்லை. வெளியே வந்தபின்தான் நிலைமையின் விபரீதம் புரிந்தது. வெளிச்சூழலே கலகலத்துக் கொண்டிருந்தது. அந்தா வந்திட்டான், இந்தா வந்திட்டான் என்று சொல்லிக்கொண்டு சுவர்களோடு ஒட்டிக்கொண்டு நின்றவர்கள் பார்த்த திக்கை சுமதியும் பார்த்தாள்.

'ஐயோ ஆமிக்காரர்' என்று அவளது இதயம் அலறியது. சுமதி என்ன வேகமாய் அறைக்குள் ஓடிவந்தாள் என்பது அவளுக்கே தெரியாது. தனது பை ஒன்றைமட்டும் தூக்கிக்கொண்டு வெளியே ஓடினாள். அவளது கால்கள் கடற்கரையை நோக்கி ஓடின. மனமோ வாமன் வாமன் என்று அவனை நோக்கியே ஓடியது. எதிரியை கண்டால் நிற்காதே, என்னையும் எதிர்பார்க்காதே கடற்கரையை பிடித்துக்கொண்டு போ, கப்பலடிக்குப் போ. இவைகள்தானே வாமனின் கட்டளைகள். இதயத்துடிப்பின் வேகம் பன்மடங்காகி அவளை படபடக்கச்செய்தது. சரக் புரக்கென சீறிவந்த சன்னங்கள் அவளையும் விழுந்தெழும்பச் செய்தன. என்ன நடக்கிறதென்பதே புரியாத நிலையில் அவள் நகர்ந்துகொண்டிருந்தாள்.

தொகையான மக்கள்கூட்டம் கடற்கரை முழுவதையும் நிறைத்திருந்தது. பல்லாயிரக்கணக்கான மக்கள் மருத்துவமனையை அண்டியேதான் இருந்தார்கள். மருத்துவமனைக்கு படையினர் எறிகணைகளை வீசமாட்டார்கள் என்ற நம்பிக்கையினாலல்ல. படையினர் முன்னேறும் பட்சத்தில் போராளிகள் அந்த இடத்தையும் விட்டுவிடுவார்கள். மடிந்தவர்கள்போக எஞ்சியவர்களாவது மருத்துவமனையை பிடிக்கப்போகும் படையினரிடம் சரணடைந்துவிடலாம் அல்லவா? அதனால் மருத்துவமனைகளை அண்டியே தறப்பாள் கொட்டில்களை போட்டுக்கொண்டு இருந்தார்கள். அவைகளிலும் பெரும்பாலானவை வெள்ளத்தில் கிடந்தன. வெள்ளத்திற்குத் தப்ப பிட்டியான இடங்களில் கொட்டில்போட்டவர்கள் பலர் துப்பாக்கி ரவைபாய்ந்ததால் உயிரிழக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. படையினரின் கட்டுப்பாட்டுக்குள் போக விரும்பாத மக்கள் அவ்விடத்தைவிட்டு நகரத்தொடங்கிவிட்டார்கள். படையினரிடம் சரணடையத் தீர்மானித்தவர்கள் தூர இடங்களில் இருந்தும் மருத்துவமனையைநோக்கி வரத்தொடங்கிவிட்டிருந்தார்கள்.

கண்மண் தெரியாமல் இரண்டு நாட்களாக நடக்கும் சண்டையில் போராளிகளால் நின்றுபிடிக்க முடியாது என்பது மக்களுக்குத் தெரியும். இலட்சக்கணக்கில் போராளிகளாலும் எறிகணைகளை ஏவமுடியாதே. படையினரோ எண்ணுக்கணக்கின்றி எறிந்துதள்ள, போராளிகளோ விரல்விட்டு எண்ணித்தான் எறிகணைகளை ஏவுகிறார்கள். போராளிகளால் தொடர்ந்து களவரிசைகளை தக்கவைத்திருக்க முடியாது. ஆகவே படையினர் வரப்போகும் பகுதியில் சனத்தோடு சனமாக கூடியிருந்தால் தனிப்பட்ட விசாரணைகளிலிருந்தும் தப்பலாம் என்று எண்ணியே மக்கள் மருத்துவமனைக்குள் குவிந்தார்கள். இதற்குள் காயப்பட்டு வார்ட்டுகளில் அனுமதிக்கப்பட்டிருந்த பலர் தத்தம்பாட்டில் புறப்பட்டு போயும் விட்டிருந்தார்கள். படையினரிடம் சரணடைய முடிவெடுத்தவர்கள் நூற்றுக்கணக்கான பிணங்களின் மத்தியில் அந்தப் பிணவாடையையும் சகித்துக்கொண்டு நிலத்தோடு கிடந்தார்கள்.

மாத்தளன் மருத்துவமனையில் கடமையாற்றிய பலபத்துப் பணியாளர்களும் ஏன் போராளிகளும்கூட அங்கேயே நின்றுவிட்டார்கள். அவர்களெல்லாம் படையினரிடம் சரணடையப்போகிறார்கள். சுமதியோ ஆயிரக்கணக்கான மக்களோடு நகர்ந்தாலும் மனதளவில் தனித்தவளாய் கடற்கரையில் நகர்ந்துகொண்டிருந்தாள். அவளையொத்த மனதுடைய எத்தனையோபேரின் கால்கள் கப்பலடியைநோக்கி நகர்ந்துகொண்டிருந்தன.

கடற்கரையோ மனிதக் கழிவுகளால் அசிங்கப்பட்டுக்கிடந்தது. எனினும் சனத்தோடு சனமாய் தன்னால் இயன்றவரை வேகமாய் நடந்தாள் சுமதியும். அவளை எதிர்ப்பட்டுவந்த மக்களில் பலர் அவளை மறித்துநின்று கேட்டார்கள்,

'பிள்ள, ஏனம்மா இனியும் இங்கால போறாய்? திரும்பி ஆஸ்பத்திரிக்கே வா.'

'இல்ல. வரேல்ல' என்று தனக்குள்மட்டும் சொல்லிக்கொண்டு அகன்றாள். தன்பிள்ளைகளோடுவந்த இன்னொரு தாயார் சுமதியின் கையைப்பிடித்து இழுத்து நிறுத்தினார்.

'இனியும் ஏன்பிள்ள இங்கால போறாய்? அநியாயமாய் சாகப்போறியே? எங்களோட வா'

'இல்லம்மா நான் என்ர பிள்ளைகளத் தேடிப்போறன்' என்றாள். அதற்குமேல் அந்தத்தாய் எதுவும் கேளாமல் நகர்ந்தாள். கடற்கரையிலும் எறிகணைகள் விழுந்துகொண்டுதான் இருந்தன. எறிகணைகளால் ஏற்பட்ட கரும்புகையும் சத்தங்களும் சன்னங்களும் அச்சமும் சனங்களை விரட்டிக்கொண்டே இருந்தன. சுமதி உடலாலும் மனதாலும் மிகவும் களைத்துப்போய் இருந்தாள். போவோர் வருவோரது முகங்களை எல்லாம் பார்த்துக்கொண்டே சென்றாள். தெரிந்தவர்களை கண்டால் உடனே நின்றுவிடுவாள். அதிலும் குறிப்பாக போராளிகளிடம் சொன்னாள்,

'வாமனக்கண்டால் மறக்காமல் சொல்லுங்க நான் கப்பலடிக்கு போறனாம் எண்டு' அந்த ஒற்றை வசனத்தையே ஐம்பதுக்கு மேற்பட்டவர்களிடம் செல்லியிருப்பாள். அவள் பற்றியசெய்தியை ஒருவராவது வாமனிடம் சொல்லமாட்டார்களா என்ற நம்பிக்கைதான். அத்தனைபேரும் சொல்லுவார்கள் என்று அவள் நம்பவேயில்லை. காரணம் எல்லோருமே காணமாட்டார்கள். அல்லது அதில் பாதிப்போர் இடையில் படையினரிடம் சரணடைந்துவிடலாம். அல்லது படையினரின் எறிகணைத் தாக்குதலிலோ துப்பாக்கிச்சூட்டிலோ

செத்தும்விடலாம். உயிரோடு இருக்கின்ற அந்தக்கணம் மட்டுமே உண்மையானது. அடுத்தகணத்தில் எவருடைய உயிர் பறிக்கப்படுமோ யாரறிவார்? நாளுக்கு நூறு பிணங்களாவது விழுகின்ற சூழலில் இப்படித்தான் தகவல் பரிமாற்றங்கள் நடந்தன.

திடீரென்று அவளது காலின் செருப்பொன்று அறுந்து தொலைத்தது. என்னசெய்வது? மற்றையதையும் அப்படியே கழற்றிவிட்டுவிட்டு நடையைத்தொடர்ந்தாள். கடற்கரை மணல் அத்தனை சனக்கூட்டத்திலும் அப்படிச்சுடும் என்று அவள் நினைக்கவேயில்லை. அலையடித்து கரைநனைக்கும் ஓரமாக நடந்தாள். சூரியன் உச்சிக்கேறிக்கொண்டிருந்தான். வெய்யில் அகோரமாய் எரித்தது.

வாமன் என்னைப்போலவே வந்துகொண்டிருப்பானா? எனக்குப் பின்னால்தான் நிற்பான். அவனை விட்டுவிட்டு நான் போகிறேன். அவன் எரியும் நெருப்பில் நிற்கிறான் என்று அவளது மனது வாமனுக்காக வருத்தப்பட்டுக் கொண்டிருந்தது. சுட்டெரிக்கும் வெய்யிலோ ஒரேநாளில் எல்லோரையும் கருக்கித்தள்ளுகிறேன் பார் என்று கொளுத்தித் தள்ளியது. சுமதி அந்த அரிசிக்கப்பலடிக்கு வரும்வரையில் ஒரு இயந்திரம் போலத்தான் வந்தாள். கப்பலடியில் நின்று பார்த்தபோது மலைப்பாய் இருந்தது, இவ்வளவு குவியலான தறப்பாள் காடுகளுக்கிடையே மருத்துவமனை இயங்கும் வீட்டை எப்படிக் கண்டுபிடிப்பது? கேள்வியோடு நின்ற அவளுக்குக் கால்கள் தொய்ந்தன. தலையை வலித்தது. அருகில் நின்றவர்களிடம் விசாரித்தாள். அவர்கள் கைகாட்டிய இடம் பக்கத்தில்தான் இருந்தது.  கணமும் தாமதிக்காமல் விரைந்தாள்.

## 21 மீண்டும் சந்தித்த தோழிகள்

‘சுமதியக்கா வாங்க’ என்று யாரோ அழைப்பது அவளது காதில் விழுந்தது. அக்கணமே அவள் கண்களை இருட்டு அப்பியது. உலகம் வேகமாய் சுழல்வதாய் தலைக்குள் கிறுகிறுப்பு. மயக்கம் அவளை முழுதுமாய் ஆட்கொள்ள சரியத்தொடங்கினாள்.

‘சுமதி கண்விழித்தபோது அமுதா அருகில் இருந்தாள். அமுதாவை கண்டவுடன் பொலபொலவென சுமதியின் கண்கள் கண்ணீரைக்கொட்டின. அமுதா அவளின் தலைதடவி ஆறுதல் படுத்தினாள். தேநீரை கொடுத்து வற்புறுத்தி குடிக்கச்செய்தாள்.

‘அம்மா எங்க அமுது?’

‘அம்மாவுக்கு காயம் சுமதி. ரெண்டுநாளைக்கு முதல்லதான் கப்பலில அனுப்பிவிட்டன்.’

‘அம்மாவுக்கு காயமா?’

‘ம். சமாளிச்சுக்கொள்ளுவா. எண்டாலும் தனிய போறாவே எண்டு மனசுக்கு கஸ்ரமாத்தான் இருந்திது. என்னசெய்யிறது?’

‘நீயும் அம்மாவோட போயிருக்கலாமே அமுது?’

‘எனக்கு போகணும்போல இருக்கேல்ல சுமதி. அம்மா ஒரே அழுகைதான் என்னையும் தன்னோட வரச்சொல்லி. என்னெண்டு சுமதி இதவிட்டிட்டுப் போறது? யோயிருக்கலாம்தான். நான்தான் நிண்டிட்டன்.’

‘……..’

‘வாமன் என்னவாம்? எப்ப கண்டநீ?’

‘நேற்று கொஸ்பிட்ரலுக்கு வந்தவர். அவர் சொன்ன குறிப்பிலதான் இங்க வந்தனான்.’

‘நீ இங்க வந்ததும் நல்லதாய் போச்சுது சுமதி. எனக்கும் மனசுக்கு சரியான கஸ்ரமாய் கிடந்திது. உன்னய கண்ட உடன அது பாதியாய் குறைஞ்சமாதிரி இருக்கிது.’ என்று சிரித்தாள் அமுதா.

‘எனக்குந்தான். உன்னக்கண்டது எவள ஆறுதலாய் இருக்குத்தெரியுமா? உன்னய இங்க சந்திப்பனெண்டு நான் நினைக்கவேயில்ல அமுது’

‘வா. முகம் கழுவிட்டு வந்திரு’ என்று அழைத்த அமுதாவை இதமாகப்பார்த்த சுமதி,

‘எனக்கு குளிக்கணும்போல இருகப்பா. தண்ணி இருக்குமா?’ என்றாள்.

‘தட்டுப்பாடுதான். ரெண்டு வாளியெண்டாலும் தரலாம் வா.’ என்று சுமதியை பிடித்தெழுப்பி அழைத்துச்சென்றாள்.

‘அண்ண உங்கடயாள் முள்ளிவாய்க்கால் பக்கம் போய்க்கொண்டிருக்கிறா. கப்பலடிக்கு போறனெண்டு சொல்லிவிடச் சொன்னவ’ என்ற அந்த ஒற்றை தகவலையே குறைந்தது இருபது பேராவது அவனிடம் சொல்லிவிட்டிருந்தார்கள். உண்மையில் அத்தகவல் வாமனுக்கு ஆறுதலாகத்தான் இருந்தது. தகவல் சொல்லப்பட்ட நேரங்களையும் இடங்களையும் வைத்தே அவள் நிச்சயம் அந்த மருத்துவமனையை அடைந்திருப்பாள் என்று தீர்மாணிக்கக்கூடியதாக இருந்தது,

போராளிகள் பின்வாங்கி பின்வாங்கி வந்தாலும் களமுனைக்கான வரிசையொன்றை போட்டுக்கொண்டேதான் வந்தார்கள். தொடர்ச்சியான தாக்குதல்கள் பலநூறு போராளிகளின் உயிர்களை குடித்துவிட ‘அநியாயமாக சாகும் மக்களே களத்துக்கு வாருங்கள்’ என்று போராளிகள் அழைத்தார்கள். என்னதான் பிணங்களின் மத்தியில் வாழ்ந்தாலும் போராட வேண்டிய கடமைப்பாடு உடையவர்களாய் இருந்தாலும் எவரும் களமுனைக்குவரும் துணிச்சலில் இருக்கவில்லை. அவர்கள் எதிரியின் எறிகணைமழைக்குள் இருந்து தப்புவதற்காக மட்டுமல்ல போராளிகளின் ஆட்சேர்ப்பு அணியினரிடம் இருந்தும் தப்புவதற்காக ஓடி ஒளித்தனர். எதிரியை ஓரளவுக்காவது தடுத்துவரும் போராளிகள் கட்டாய ஆட்சேர்ப்பிற்காகவும் உழைக்கவேண்டியிருந்தது. மயிலே மயிலே இறகுபோடு என்றால் போடுமா? போடாது. பிடுங்கித்தான் எடுக்கவேண்டும். பிடுங்கத் தயங்காதீர்கள் என்ற கட்டளைகள் ஆட்சேர்ப்புப் போராளிகளை வேகப்படுத்தின. போராடக்கூடிய வயதெல்லையில் இருந்த எந்தஇளையோரும் பிடித்து இழுக்காதபட்சத்தில் வரமாட்டார்கள். சிலர் பலதடவை அழைத்தால் வருவார்கள். சிலர் அகப்பட்டுவிட்டால் மட்டும் வருவார்கள். பலரை இழுத்துச்சென்றால்தான் வருவார்கள். என்றாலும் சென்ற ஓரிரு நாட்களில் அவர்கள் இன்னொரு வழியால் ஓடி வீட்டாரிடமோ உறவினர்களிடமோ படையினரிடமோ ஓடிவிடுவார்கள். தமிழினத்தில் இப்படியும் கோழைகள் இருக்கிறார்களா? என்று வேதனையாக இருக்கும். அதேவேளை அப்படி ஒளிந்திருந்தால்தான் உயிர்வாழமுடியும் என்ற உண்மையும் இருந்தது. எதிரிப்படையினரின் அகோரமான எறிகணைத் தாக்குதலால் குடும்பம் குடும்பமாக செத்தாலும் பறவாயில்லை நாங்கள் குடும்பத்தைவிட்டுப் பிரியமாட்டோம் என்ற உச்சகட்டப் பாசத்தில் இருப்பதாய் அந்தச்சனங்கள் நம்பினார்கள்.

போராளிகளுக்கும் தெரியும். ஒவ்வொரு வீட்டிலும் தீபமேற்றத்துடித்த தாங்கள் இப்போது தீயை வீசிக்கொண்டிருக்கிறோம் என்பது. போரில் இதுவெல்லாம் அநியாயம் இல்லை. நான் எனக்காகவா ஒருவனை பலவந்தப்படுத்தி களத்துக்கு இழுக்கிறேன். அவனுக்காகவும்தானே, அவனது குடும்பத்துக்காகவும் தானே என்று தம்மை ஆறுதல்படுத்திக்கொண்டார்கள். நியாயம் என்றவகையில்தான் அப்பணியைச் செய்தார்கள். தாக்குதல் நடவடிக்கைகளைப் போலவே ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளும் திட்டமிட்டு நடந்தன. நாளுக்கு ஆயிரம்பேரையாவது அள்ளிக்கொண்டு வாருங்கள். ஐந்நூறு பேர் ஓடினாலும் மிகுதி ஐந்நூறு பேரைவைத்து மறிப்புச்சண்டையாவது செய்யலாம் என்பது கட்டளையாய் இருந்தது.

அநியாயமாய் சாகிறவர்கள்தானே நாங்கள். அந்தச்சாவை களத்திலேயே சந்திப்போம் வாருங்கள் என்றார்கள் ஆட்சேர்ப்பாளர்கள். நீங்கதான் சாகிறிங்களெண்டு எங்களையும் சாக்கொல்றிங்களேடா நாசமாய்போக நீங்க என்று ஏராளமான சனங்கள் தாராளமாய் மண்ணள்ளிக் கொட்டினார்கள். உணவுகொடுத்து போராட்டத்தை ஊட்டிவளர்த்தவர்களே அவர்களின் பிள்ளையை கேட்டபோது துள்ளியெழுந்தார்கள். உணவை கொடுத்தோம் உயிரைப்பறிக்க நிற்கிறீர்களே நன்றிகெட்டவர்களே என்று நியாயம் கேட்டார்கள். மனச்சாட்சி அவரவர் நிலைமைக்கேற்ப வித்தியாசப்பட்டது.

தன் பிள்ளையை ஒளித்து வைத்திருந்து வைத்திருந்து ஒருநாளில் பிள்ளையை போராளிகள் பிடுங்கிக்கொண்டு போய்விட்டால் போதும், அதே குடும்பத்தின் உறுப்பினர்கள் ஆள்மாறி ஆள்வந்து தங்கள் தறப்பாள் கொட்டிலுக்கருகில் ஒளித்துவைக்கப்பட்டிருக்கும் ஐந்தாறு இளைவர்களின் பதுங்கிடங்களை காட்டிக் கொடுத்தார்கள். காட்டிக்கொடுப்பவர்களை முன்னே பாராட்டிவிட்டு பின்னே போராளிகளே சொல்லிக்கொள்வார்கள், ‘இந்தத் தமிழினத்துக்கு சுதந்திரம் கிடைக்கிறது சந்தேகம்தான். சனத்தின்ர சுயநலத்தை பாக்க இப்பிடியொரு போராட்டம் தேவைதானா எண்டிருக்கு? நாங்கள் யாருக்காக வாழுறம் யாருக்காகச் சாகிறம் என்றதே விளங்கேல்லடா சாமி’ என்று தலையில் கைவைத்தார்கள். அவர்களை ஆள்சேர் ஆள்சேர் என்ற குரல்கள் முடுக்கின. களத்தின் தேவையும் அப்படித்தான் இருந்தது. இவர்களோ சமையல் பிரிவினர் அனுப்பும் நாலுபேருக்கு ஒரு சொப்பிங்பை கஞ்சியைக் குடித்தார்கள். போராட்டமோ நாளுக்கு நூறு இருநூறு உயிர்களைக் குடித்தும் பசியாறாமல் வயிறெரிந்தது.

பலர் ஒளித்திருந்த இடத்திலேயே உயிர் மாண்டார்கள். பலர் போராளிகள் பிடித்துக்கொண்டு சென்றதால் உயிர் தப்பினார்கள். களத்தில் நின்றவர்கள் எல்லோரும் சாகவுமில்லை. வெளியிலிருந்த எல்லோரும் தப்பவுமில்லை. அந்தக் குறுகிய தரைத்துண்டில் எங்கு நின்றாலும் அது நெருப்பில் நிற்பதற்கு

ஒப்பானதே. படையினர் முன்னரைவிடவும் வேகமாக முன்னேறத் தொடங்கினர். விளைவு ஆயிரக்கணக்கான பிணங்கள் தரையில் விழுந்தன.

சுமதியால் மட்டும் சும்மாவா இருக்க முடியும்? நூற்றுக்கணக்கில் வரும் காயம்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்கும் பணியில் அவளும் தொடர்ந்து ஈடுபட்டாள். சுமதி, அமுதா போன்ற பலரும் மருத்துவர்களுக்கீடாக வேலை செய்தார்கள். அந்தளவுக்கு அவர்கள் அனுபவத்தேர்ச்சி பெற்றிருந்ததுமட்டுமல்ல தேவையும் அவ்வளவுக்கிருந்தது. அங்கும்கூட சுமதிக்கு புதிய அறிமுகங்கள் கிடைத்தன. ஒத்த இயல்புடையவர்களைச் சந்திக்கும்போது மனசுக்குக் கொஞ்சம் மகிழ்ச்சியும் கிடைக்கத்தான் செய்கிறது. அப்படியொருத்தியாகத்தான் மாலாவும் அவளுக்கு அறிமுகமானாள்.

மாலா என்ன பெரிய அனுபவசாலியா? இல்லவே இல்லை. திடீர் தாதி. ஆனால் நாளுக்குப் பத்துப் பிரசவம் பார்க்கிறாள். மாலா தன் வாழ்நாளில் நினைத்துக்கூடப் பார்த்தவளில்லை, தானொரு தாதியாக கடமையாற்றுவேன் என்று. தொட்டதற்கெல்லாம் நூதனம் பார்க்கும் அவள் ஒரு பிரசவ விடுதியில் கடமைசெய்கிறாள் என்றால் அது அவளுக்கே அதிசயம்தான். முள்ளியவளை அ.த.க. பாடசாலையில் இயங்கிய மருத்துவமனையில்தான் திடுதிப்பென வந்துசேர்ந்தாள். அவளின் கதையே ஒரு தனிக்கதைதான்.

‘இனியும் பொறுக்கேலாது மாலா. வா மாலா ஆமிக்காரரிட்ட போயிருவம்’ என்று மாலாவின் தாயார்தான் நச்சரிக்கத் தொடங்கினார்.

‘என்னால தங்கத்த விட்டிட்டு வர ஏலாதம்மா’ என்று உறுதியாகச் சொல்லிவிட்டாள் மாலா.

‘என்னடி நீ? அவன் எங்க நிக்கிறானோ எப்பிடி நிக்கிறானோ யாருக்குத் தெரியும்? சண்டையில நிக்கிறவங்கள் சிலநேரம் காட்டுக்காலயும் தப்பிருவாங்கள். நீ இங்க அவனப்பாத்துக்கொண்டு கிட’ என்றுபொரிந்து தள்ளினார் தாயார்.

‘அம்மா நான் தெளிவாய்த்தான் சொல்றனம்மா. தங்கம் வராமல் நான் எந்த முடிவும் எடுக்கமாட்டன்’

‘என்னடி நீ. சாகிற கட்டத்தில நிண்டுகொண்டிருக்கிறம். இப்பபோய் தங்கமும் பவுனும் எண்டுகொண்டு நிக்கிறாய்? உனக்கு அறிவிருக்கா?’ என்று இருபது தறப்பாள் கொட்டில்களுக்குக் கேட்டச் சத்தமிட்டாள் தாய்.

‘இல்லம்மா. எனக்கு அறிவே இல்ல. நான் போறன். தங்கம் வரும்போது நானும் வாறன். நான் எப்பிடியும் போறனம்மா. நீங்கள் இனி என்னப்பற்றிக் கவலப்படாமல் தம்பியோட போங்க.’ அப்படிச் சொல்லும்போது அவளுக்கே தெரியாது தான் எங்கே போகப்போகிறாள் என்று. உடைகளைத் தூக்கி பையொன்றினுள் திணித்துக்கொண்டு புறப்பட்டுவிட்டாள். ஓவென்று அழுத அம்மாவை அணைத்துக்கொண்டு தானும் அழுதாள். பின்பு தன் துவிச்சக்கர வண்டியையும் எடுத்துக்கொண்டு போய்விட்டாள்.

புதிய போராளிகள் இணையும் செயலகத்திற்குச் சென்றாள் மாலா. அங்கிருந்த செல்வி என்ற போராளி அவளை அழைத்து இருத்தி கதைகேட்டாள்.

‘அக்கா என்னை இயக்கத்துக்கு சேருங்கோ. எனக்கு பயிற்சியெல்லாம் தேவையே இல்லையக்கா. கிராமப் பயிற்சியில சூட்டுப்பயிற்சியெல்லாம் செய்திருக்கிறன்.’ என்றாள் தெளிவாக. அந்தப் போராளியே மாலாவை அதிசயமாகப் பார்த்தாள்.

‘என்ன வேலை தந்தாலும் செய்விங்களா தங்கச்சி’ என்றாள் போராளி.

‘ஓம்’ என்று திடமாக வந்தது மாலாவின் பதில்.

‘அப்ப என்னோட ஒருக்கால் வாங்க’ என்ற செல்வி மாலாவுடன் அதே துவிச்சக்கர வண்டியில் முள்ளியவளை மருத்துவமனைக்குச் சென்றாள். அப்போது அங்கு இடம்பெயர்ந்துவந்து இயங்கிக்கொண்டிருந்த மருத்துவமனையை மாஞ்சோலை மருத்துவமனை என்பார்கள். அது முன்னர் முல்லைத்தீவில் மாஞ்சோலைக்கு மத்தியில் இயங்கியதால் வந்த காரணப் பெயர்போலும். அதற்கு முதல்நாள் செல்வியில் பட்டு உள்நுழைந்த சிதறுதுண்டை எடுக்கப்போனபோதான மருத்துவர்களின் சம்பாசனைதான் செல்வியை இப்போது மாலாவுடன் அங்கே அழைத்துச்செல்கிறது.

சத்திரசிகிச்சைக் கூடத்தில் ஒரே நேரத்தில் எட்டுப்பத்துப் பேரைக்கிடத்தி வெட்டிக்கொத்தி சிகிச்சை செய்துகொண்டிருந்தார்கள் பலர். மயக்க மருந்தோ விறைப்பூசியோ ஏற்றப்படாமல் காயக்காரர்கள் குளறக் குளற கத்தரிக்கோல்களும் கத்திகளும் காயங்களில் இறங்கின. கவ்விகளை பழுத்துக்கிடக்கும் காயங்களில் 'சொதக்'கெனக்குற்றிச் சுழற்றி உள்ளிருந்த சன்னங்களையோ சிதறுதுண்டுகளையோ கவ்விப்பிடித்து இழுத்து வெளியில் போட்டார்கள். அந்தக் காயம்பட்ட மனிதர்களின் அலறல் ஒலிகளோ காதுச்சவ்வுகளை அதிரச்செய்து அச்சத்தை ஏற்படுத்தின. கசாப்புக் கடையொன்றைப்போல காட்சிதந்த அந்தச் சிகிச்சை அறையில் செல்வியும் நின்றபோதுதான் வைத்திய அதிகாரி வாசலுக்கு வந்தார்.

'மற்றநற்றி வோர்ட்டையும் நானேதான் கவனிக்க வேணுமெண்டால் மற்ற வேலைகள எல்லாம் யார் பாக்கிறது? பெறுப்பாத்த ரெண்டு நேஸ்மாரும் இரவு நந்திக் கடலால உள்ள போட்டுதுகளாம். இப்பவே நாலைஞ்சு டெலிவரிகேஸ்கள் இருக்கு.' என்றுவிட்டு சிகிச்சைக் கூடத்தில்நின்ற ஏனைய மருத்துவர்களைப் பார்த்தார். அனைவரும் தத்தம் முன்னால் கிடந்த காயக்காரர்களுக்குச் சிகிச்சையளிப்பதிலேயே குறியாய் இருந்தார்கள். மருத்துவருக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் சிலர் விரக்கிதியாகப் புன்னகைத்துவிட்டு தம் கடமைகளிலேயே இறங்கிவிட வைத்திய அதிகாரி அங்குமிங்கும் நடைபழகினார்.

'சே. இப்பிடி இக்கட்டான நேரத்தில கையவிட்டிட்டுப் போகுதுகளே. முனிதாபிமானம் இல்லாததுகள். ரெண்டுபேரும் ஒண்டாப் போட்டுதுகளே. அதுகளப் போராளிகள் சுட்டுக்கொண்டாலும் தப்பில்லை. அதுகள நம்பி இங்க எத்தினசனம் கிடக்கு. தங்கட உயிர்தான் பெரிசெண்டு ஓடுதுகள்.'

'சிலநேரம் போராளிகள் போராக்கள மறிச்சிருந்தாலும் கடலோரந்தான் எங்கயும் நிக்கிங்கள் டொக்டர். ஒருக்கால் வோக்கியில நான் கேட்டுப் பாக்கட்டோ?' என்றான் ஒரு போராளி மருத்துவன்.

'சே அந்த நாய்கள இனி கொஸ்பிட்ரலுக்க எடுக்க மாட்டன். இண்டைக்கு வந்தாலும் நாளைக்கு ஓடிருங்கள். எப்பிடியும் போய் துலையட்டும்.' என்று சொன்ன வைத்திய அதிகாரியில் நிதானமின்மையும் சினமும் அப்பட்டமாய்த் தெரிந்தது. பின்பு வெளியே சென்று நடைபாதையில் உலாத்தினார்.

'அவசரத்தில வார டெலிவரக் கேஸ இப்ப என்ன செய்யிறது?' என்ற மருத்துவர் மீண்டும் சிகிச்சைக்கூட வாசலில் நின்றார். அவசியப்பட்ட நேரத்தில் இல்லாமல்போகும் சேவைகள் உயிர்களை அல்லவா குடித்துவிடும். அந்த வைத்திய அதிகாரி செய்வதறியாது நின்ற கோலம் செல்விக்கு வேதனையாய் இருந்தது. அப்படி எத்தனை பணியாளர்கள் இடைநடுவில் விட்டுவிட்டு தம்முயிரை பாதுகாக்கிறேன் பேர்வழி என்று ஓடிப்போய்விட்டார்களோ? மருத்துவமனைக்குள் முக்கால்வாசிக் கடமைகளையும் செய்தவர்கள் போராளிகள்தான். மருத்துவச் செயற்பாட்டின் சகல இடங்களிலும் உயிர்காக்கும் போராளிகள் ஊணுறக்கமின்றிச் செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

இந்தப் போராளிகள் எல்லாம் ஏன் இவ்வளவுபேர் இங்கு நிற்கிறார்கள்? இவர்கள் களத்திற்குப் போகலாம்தானே என்று யாரும் சொல்ல மாட்டார்கள். அந்தளவுக்கு சனங்களின் உயிர்கள் மருத்துவப் போராளிகளின் கைளிலும் இருந்தன. அந்தக் கவலைதான் செல்வியை மருத்துவமனைக்கு மாலாவை அழைத்துச்செல்ல வைத்தது. போகும்போதே மாலாவிற்கு செல்வி விளக்கம் சொன்னாள்.

'மாலா நீங்கள் போராளியாகி செய்யிறதைவிடவும் மேலான பணியொண்டு செய்யவேண்டியதாய் இருக்கிது. ஆஸ்பத்திரிலதான் இப்ப அதிகமாய் வேலை இருக்கு. டொக்டரோட கதைச்சி விடுறனம்மா. அவர் என்ன வேலை சொன்னாலும் செய்விங்கள்தானே? என்ன?'

'எனக்கு ஒண்டுமே தெரியாதக்கா. எதை எப்பிடிச் செய்யணும் எண்டு சொல்லித்தந்தால் நான் செய்யிறனக்கா.'

'அது காணுமம்மா. அந்த மனசு காணும். ம். இதால திரும்புங்க. அ அ இதில சைக்கிள விடுங்கம்மா.' என்ற செல்வி சைக்கிளை விட்டுவிட்டு வந்த மாலாவை மத்துவமனைக்குள் அழைத்துச்சென்றாள்.

'டொக்டரை சந்திக்கவேணும். வேலை விடயமாய்' என்ற செல்வியின் குரலைக்கேட்டு வைத்திய அதிகாரியே எட்டிப்பார்த்து உள்ளே அழைத்தார். போனவர்களை கதிரையைக் காட்டி இருக்கச்செல்லிவிட்டு,

'சொல்லுங்கம்மா. என்ன விடயம்?' என்றார்.

'இவட பேர் மாலா. போராளியாய் இணையப்போறன் எண்டு என்னட்ட வந்தா. உங்கட இடத்தில இப்ப போராளின்ர மனநிலைக்கொத்த பணியாளர்கள் தேவைப்படும் எண்டு நினைக்கிறன். அதாலதான் உங்களிட்டக் கூட்டிக்கொண்டு வந்தன். தானாய் வந்து போராளியாய் இணையப்போறன் எண்டு கேட்டவ. ஆனால் இவட குடும்பத்தில ஏற்கெனவே ரெண்டு மாவீரர் இருக்கிறாங்க. தாக்குப்பிடிக்கிற உள்ளம் இவட்ட இருக்கு.'

‘ஓ நன்றியம்மா. நன்றி நன்றி. தங்கச்சி என்ன வேலையம்மா செய்விங்கள்?’ என்ற மருத்துவரின் கேள்விக்கு பதில்சொல்லத் தெரியாமல் மாலா முழுசியடித்தாள். பின்பு மெதுவாய்’ சொன்னாள்.

டொக்டர் எனக்கு கொஸ்பிட்ரல் வேலை எண்டு எதுவுமே தெரியாது டொக்டர். ஆனால் சொல்லித் தாறதை சரியாய் செய்வன்.’

‘குட். அது காணும். டெலிவரி கேஸஸ்தான் பாக்கிறதுக்கு அள் வேணும். சொல்லித்தாறன் செய்றிங்களா?’ என்ற மருத்துவரின் கேள்வி மாலாவுக்கு முழுமையாகப் புரியவில்லை. அவள் தன்னை அழைத்துவந்திருந்த சொல்வியைப் பார்த்தாள்.

‘அப்பிடியெண்டால் என்னக்கா?’ என்று கிசுகிசுத்தாள்.

‘அதெல்லாம் செய்யலாம். நீ செய்வாய். ஓமெண்டு சொல்லம்மா’ என்றாள் போராளி. அவர்களை மருத்துவர் புரிந்துகொண்டு புன்னகைத்தார். அவரே தெளிவாகச் சொன்னார்.

‘குழந்தை பெற்றுக்கொள்ள வார தாய்மாரை பராமரிக்கவேணும். அதெல்லாம் இப்ப சிம்பிள் வேலைதான். எல்லாம் நான் சொல்லித்தாறன். துணிச்சலாய் நிண்டு செய்தால் சரி.’ என்ற மருத்துவரிடம் மாலா உடனே ஓம் என்று தலையாட்டினாள்.

‘மற்றநற்றிவோட் பாத்த ரெண்டு நேஸ்மாரும் விட்டிட்டுப் பொட்டுதுகளம்மா. இப்ப எனக்கு குழந்தைப்பேற்றுப் பகுதியிலதான் பொறுப்பான ஆக்கள் தேவைப்படுது. நீங்கள்போய் உங்களுக்குத் தேவையான உடுப்புகள எடுத்துக்கொண்டு உடனயே வேலைக்கு வாறிங்களா?’

‘சரி டொக்டர். இன்னும் ஒரு மணித்தியாலத்தில வேலைக்கு வந்து சேர்ரன்.’

‘நான் உங்களுக்குச் சம்பளமும் போட்டுத் தரலாமம்மா. உடனவந்து சேருங்க’

‘சரி டொக்டர்’ என்றுவிட்டு வெளியேவந்த மாலா போராளி செல்வியின் கையைப் பற்றிக்கொண்டாள்.

‘நன்றியக்கா. நீங்கள் இங்கால வந்தால் என்னையும் சந்திச்சிட்டுப் போங்க’

செல்வி புன்னகையுடன் அவளது நன்றியை ஏற்றுக்கொண்டு,

‘நல்லாய் வேலை செய்து டொக்டரிட்ட நல்லபேர் எடுக்கணும். என்ன’ என்று விடைகொடுத்தாள்.

அந்தமாலாதான், டெலிவரி என்ற சொல்லுக்கே அர்த்தம் தெரியாமல் வேலையைப் பொறுப்பெடுத்த மாலாதான் முப்பதே நாட்களுக்குள் ஐம்பதுக்கு மேற்பட்ட பிரசவங்களைப் பார்த்தாள். ஆரம்பத்தில் அச்சமும் அருவருப்பும் அவளை வதைத்தாலும் இப்போது பிரசவம் பார்ப்பது அவளுக்கு கைவந்த கலைமாதிரி ஆகிப்போனது. இரவுபகல் என்றில்லாமல் கர்ப்பிணிகளோடு மினக்கெட்டாள். நேரம் கிடைத்த போதெல்லாம் சத்திரசிகிச்சைக் கூடத்தில் மருத்துவர்கள் அணிவதற்கான மேலாடைகளையும் தொப்பிகளையும் வாய்மூக்கிற்கான துணியினாலான கவசங்களையும் தைத்துக்கொடுத்தாள். காலநேரம் பாராமல் அவளும் கடமை செய்தாள். அன்றைய நாட்களில்தான் அவளுடைய தங்கம் வீரச்சாவு என்ற செய்தி வந்தது. துடித்துப்போனாள் மாலா. அழுகையும் கண்ணீரோடும் நின்ற அவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. வைத்திய அதிகாரியே வந்து அவளுக்கு ஆறுதல் சொன்னார்.

‘வீட்ட போயிட்டு வரப்போறிங்களாம்மா? வேணுமெண்டால் போயிட்டு வாங்களன். நாளைக்கு காலமை இங்க நிண்டால் காணும்’ என்றவர் அவளின் கையில் பணமும் கொடுத்து அனுப்பிவைத்தார்.

மாலா வீட்டுக்குப் போனபோது வீட்டில் எந்தப் பரபரப்புமில்லை. தாயாரோ தம்பியோ எதையும் புலம்பவில்லை. அவளை நலம் விசாரித்தார்கள். சாப்பிடச் சொன்னார்கள். ஆகவே அறிவித்தல்தர இன்னும் எவரும் வீட்டுக்கு வரவில்லை. அவன் இவளின் முகவரியைத்தான் கொடுத்திருக்கிறான். அவனுக்கு ஏதுமென்றால் இந்த முகவரிக்குத்தான் அறிவிப்பார்கள். அவனது சாவு உண்மையென்றால் இந்நேரம் தேடிவந்து சொல்லியிருப்பார்களே. தங்களுடைய காதலைத்தெரிந்த அவனுடைய நண்பர்கள் இந்நேரம் துக்கத்தைப் பகிர்ந்துகொள்ள வந்திருப்பார்களே. ஒருவரும் வராத காரணத்தால் தங்கம் சாகவில்லை. அல்லது அந்தச்செய்தி இன்னும் அவன்சார்ந்த எவருக்கும் உறுதியாகத் தெரியவரவில்லை. அன்றிரவு முழுவதும் மாலா ஒருவருக்கும் தெரியாமல் அழுதுகொண்டே கிடந்தாள். மருத்துவமனையிலேயே நின்றிருக்கலாம்போல இருந்தது. விடிந்தவுடன் போய்விடவே விரும்பினாள். அம்மா ஆற்றிக்கொடுத்த கோப்பியை மட்டுமே குடித்தாள். அம்மாவுக்குப் பணம் கொடுத்தாள்.

‘கொஸ்பிட்ரல்ல தானம்மா நிப்பன். போட்டு வாரன்’ என்றவள் மருத்துவமனைக்கே வந்துசேர்ந்தாள். பிறந்ததிலிருந்து சேர்ந்துவாழ்ந்த அம்மாவால்கூட தரமுடியாத ஏதோவொரு ஆறுதலை சில நாட்களே அறிமுகமான அந்த வேலைத்தளம் தருவாய்ப்பட்டது. மாலா மாங்குயில் என்ற போராளியிடம்தான் மகப்பேற்றுப் பகுதியில் கடமையாற்றினாள். இப்போது மாங்குயிலைக்கண்டதும் அவளிடம் சொல்லிக்கொண்டு ஒருமூச்சு புலம்பித் தீர்த்தாள் மாலா.

மாலை மயங்கிய கடினமான பொழுதொன்றில் கா்ப்பிணிப் பெண்ணொருவரைத் தூக்கிக்கொண்டு ஒருவா் ஓடிவந்தாா். அந்தக்கணமே குழந்தை பிறந்துவிடும்போல் இருந்தது. மாங்குயிலும் மாலாவும் மருத்துவருக்குச் சொல்லியனுப்பிவிட்டு அவசர சிகிச்சைக்கு அப்பெண்ணைத் தயாா் படுத்தினாா்கள்.

'அடுத்த மாதம் தானக்கா திகதி. இண்டைக்கு எங்கடபக்கம் செல் பராஜ் பண்ணிப்போட்டான். இவ சரியாப் பயந்திட்டா. அதான் பயமாய் இருக்கிதக்கா' என்று பரிதவித்தான் அந்தப் பெண்ணைத் தூக்கிக்கொண்டு வந்திருந்தவன்.

அந்தப்பெண்ணின் முகத்தில் அச்சம் மட்டுமே அப்பிக்கிடந்தது. அவா்கள் அவசரத்தில் வந்ததால் பிரசவத்துக்குரிய எந்தப்பொருளையுமே கொண்டுவந்திருக்கவில்லை. மாங்குயில்தான் வந்திருந்தவரிடம் கேட்டாள்,

'நீங்கள்தான் இவட கணவரா?'

'இல்லக்கா. தம்பி. அக்காட மனுசன் போன கிழமை செல்லடியில அம்பிட்டு செத்திட்டாா்.'

அவனிடம்போய் மகப்பேற்றுக்கான பொருட்களை சேகரித்துவா என்று சொல்லக்கூடிய மனநிலையில் மாங்குயிலுமில்லை. அவளே ஓடோடிச்சென்று தங்கள் மருத்துவமனைக் களஞ்சியத்தில் தேவையான பொருட்களைத் தேடிப்பொறுக்கினாள். மலையாய் குவிந்திருக்கவேண்டிய களஞ்சியத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் சிலப்பல துணிமணிகளே கிடந்தன. தாய்க்கும் சேய்க்கும் தேவையான போா்வையையும் துவாலைகளையும் எடுத்துவந்தாள். மாலாவுக்கு இப்போது வேலைதான் மருந்து. அவளது கவலைகளை நினைக்கக்கூட நேரமற்றுப்போன மருத்துவமனைச் சூழலில் தன் நாட்களையும் கரைத்துக்கொண்டு தன்னை மறந்தாள் மாலா.

## 23 பிணக்கிடங்காகிய பனங்கூடல்

திடுதிப்பென முள்ளிவாய்க்கால் மருத்துவமனையிலும் எறிகணைகள் விழத்தொடங்கின. அந்த மருத்துவமனையின் இருப்பும் கேள்விக்குறியானது. காயப்பட்டவா்களில் பலா் மீண்டும் காயப்பட்டாா்கள். பலா் அங்கேயே உயிரையும் இழந்தாா்கள். மருத்தவமனை இயங்கிய பாடசாலையின் கட்டிடங்கள் பகுதி பகுதியாய் உடையத்தொடங்கின. அங்கு பணியாற்றிய பல பணியாளா்களும் காயமடைந்தாா்கள்.

அந்த மருத்துவமனையில் கடமையாற்றிக்கொண்டிருந்த சமயத்தில்தான் மருத்துவப் போராளி செவ்வாணம் உயிரிழந்தாா். செவ்வானம். அழகான, அற்புதமான போராளி. எப்போதும் புன்னகையுடன் வலம்வந்த செவ்வானம் நீண்டகால மருத்துவ அனுபவம் பெற்றவள். பின்தங்கிய கிராமங்களுக்கான மருத்துவ சேவைக்காக தியாகதீபம் திலீபன் மருத்துவமனைகள் செயற்படுத்தப்பட்ட நாட்களிலிருந்து, ஒரு மருத்துவமனைக்கே பிரதான மருத்துவராகக் கடமையாாற்றிய பொறுப்புவாய்ந்த போராளி செவ்வானம். அந்த அருமையான மருத்துவரை இழந்த சோகம் மருத்துவமனை முழுவதிலும் தெரிந்தது.

வைத்திய அதிகாரி மருத்துவமனையை இடமாற்றம் செய்யத் தீா்மானித்தாா். ஆனால் மக்கள் தொகையால் பிதுங்கிவழியும் வெள்ளை முள்ளிவாய்க்கால் பகுதிக்குள் தறப்பாள் கொட்டிலொன்று போடக்கூட இடமில்லையே. ஆகவே பணியாளா்களை ஆங்காங்கே ஏற்கெனவே இயங்கிக்கொண்டிருக்கும் மருத்துவமனைகளில் சென்று சோ்ந்துகொள்ளும்படி வேண்டிக்கொண்டாா். அனைத்துப் பணியாளா்களுக்குமான கொடுப்பனவுகளையும் கொடுத்து தற்காலிகமாகச் சோ்ந்து பணிசெய்த மாலா போன்றவா்களுக்கான ஆதாரப் பத்திரங்களையும் கொடுத்து அனுப்பிவைத்தாா். அதன்பின்பு அவரும் தன் மனைவி, பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு நடையைக் கட்டினாா். அவ்வளவுதான் மாலாவின் மருத்துவ சேவைக்காலம். ஒரு கனவுபோல ஆரம்பித்து முடிந்துவிட்டது. தாயாருடன் வந்துசோ்ந்து கப்பலடியில் ஒரு தறப்பாளுக்குக்கீழ் இருந்த மாலாவை அறிமுகமான உடனேயே சுமதிக்கு பிடித்துப்போனது.

அதிா்ந்துகொண்டே இருக்கும் வேட்டோசைகளும் குண்டுகளும் எறிகணைகளும் எந்த உயிருக்கும் உத்தரவாதமில்லை என்பதை கணத்துக்குக்கணம் சொல்லிக்கொண்டிருந்தது.

சுமதிக்குத் தெரிந்த போராளி மருத்துவா்கள் பலா் பணியிடத்திலேயே உயிரிழந்தாா்கள். சாவடைந்த ஒருவருக்காக கவலைப்பட்டுக்கொண்டிருக்கும் நேரங்கள் குறைந்து போயின. சாவுகள் சாதாரண நிகழ்வாகிப்போயின. மருத்துவமனைப்பகுதி முழுவதிலும் தாராளமாகப் பிணங்கள் கிடந்தன. கிடப்பதில் பிணங்களெவை இன்னும் உயிரிருக்கும் உடல்கள் எவை என கண்டுபிடிப்பதே சிரமமாகிப்போனது.

முள்ளிவாய்க்கால்வரை பிணங்களை அகற்றும் கடமையை தமிழா் புனா்வாழ்வுக் கழகம் பொறுப்பெடுத்துச் செய்ததுதான். பின்னா் அந்தப் பணியாளா்களும் காணாமல் போய்விட்டாா்கள். அவா்களின்

பிணங்கள்கூட அநாதைப் பிணங்களாக நாறிக்கிடக்கின்றனவோ யாரறிவார்? மருத்துவமனையாக இயங்கிய வளாகத்துள் கிடக்கின்ற பிணக்குவியலை அகற்றவேண்டிய தேவையும் இப்போதில்லை. அடிக்கடி இடம்மாறி மருத்துவமனையே சென்றுவிடுமே. ஒரு பனங்கூடலோ ஒரு பற்றைக்காடோ கிடத்த ஒரு சிறிய இடம் கிடைத்தால்போதும், நான்கு காப்புக்குழிகளை வெட்டி தறப்பாள்களை மேலும் கீழும் விரித்தால் அதுதான் மருத்துவமனை. அதுதான் சத்திரசிகிச்சைக்கூடம். அங்கேயும் சாவுகள் நடக்கும். பிணங்கள் நிறையும். அடுத்த இடம் மாறுவார்கள். முன்னர் கிலோமீற்றர்கணக்கான தூரங்களுக்கு இடம்பெயர்ந்தவர்கள் இப்போது மீற்றருக்கு மீற்றர் இடம் மாறினார்கள். சாவுகளைப்போலவே இடம்பெயர்வும் நிமிடத்திற்கு நிமிடம் நடந்துகொண்டுதான் இருந்தது.

மருத்துவமனையின்றி பனங்கூடல் முழுவதும் காயக்காரர்களால் நிரம்பிவிட்டபோது சுமதி அமுதா போன்றவர்களும் போராளிகளுடன் நின்று ஒவ்வொரு காப்பகழியாகச்சென்று மருந்து கட்டினார்கள். மருந்தென்றால் உண்மையாகவே காயம் துடைத்து, மருந்துவைத்து காயம் கட்டுவதில்லை. கிடைக்கும் சிறுதுண்டுப் பஞ்சையோ கோஸையோ வைத்து குருதி அதிகம் வெளியேறாமல் கட்டிவிடுவது மட்டும்தான். ஓரளவுக்கு உயிர்தப்பக் கூடியவர் என்று இனங்கண்டால் வலி நிவாரணியையோ ஊசியையோ போட்டுவிட்டார்கள். மரணத்தின் தருவாயில் கிடப்பவர்களுக்கு கருணைக்கொலை செய்யக்கூட அங்கு மருந்தில்லை பொழுதுமில்லை. எவருக்காகவும் அதிகநேரத்தை எடுத்துக்கொள்ள முடியாது. உடலை குனிந்துகொண்டுதான் ஒரு பனையடியில் இருந்து இன்னொரு பனையடிக்கு மாறவேண்டும். நிமிர்ந்து நடந்தால் தலையை எறிகணை கொண்டுபோய்விடலாம். அல்லது ஆயிரக்கணக்கில் சீறிவரும் சன்னங்களில் ஒன்றாவது தலையில் இறங்கிவிடலாம். எந்தக்கணமும் சாவு வரலாம். செத்தால் பறவாயில்லை. சாகத்தயார்தான். ஆனால் காயப்பட்டுவிட்டுமட்டும் சாகாமல் கிடந்துவிடக்கூடாது என்றுதான் அதுவரை காயமடையாதவர்கள் நினைத்துக் கொண்டார்கள்.

எவருக்குமே சொல்லிக்கொள்ளாமல் போரின் அந்தக்கட்டம் முடியப்போகிறது என்ற உண்மையை அவர்களில் எவரும் அறியவில்லை. இன்னும்தான் நம்பினார்கள் அந்த அப்பாவிகள். ஐ.நா தலையிடும், அமெரிக்கா தலையிடும், உலகம் இந்தக்கொலைகளை எல்லாம் பார்த்துக்கொண்டிருக்காது என்று கதைத்துக்கொண்டுதான் இருந்தார்கள். ஐ.நாவின் எந்த அதிகாரிக்காவது மனச்சாட்சி துடித்ததா? உலகத்தின் எந்த நாட்டுத் தலைவனுக்காவது இதயம் கொதித்ததா என்று எவருக்கும் தெரியாது. பிணங்களுக்குள் கிடந்த காயமடைந்தவர்களுக்கு அந்த மருத்துவப்போராளிகளின் கைகள் ஓயாமல் சிகிச்சை செய்துகொண்டுதான் இருந்தன. இரவில்கூட ஒருகண் மூடவில்லை. காயம்பட்டவர்களோ எறிகணைகளோஅவர்களை ஒருகணமும் ஓய்வெடுக்க விடவில்லை. அன்றைய நாட்களில் அமுதாபட்ட வேதனைகள் கொஞ்சநஞ்சமல்ல.

காயப்பட்டு வருபவர்களில் பலருக்கும் பல மருத்துவர்களைத் தெரிந்திருந்தது. அதனால் அவர்களின் பெயரைச்சொல்லி கதறுவார்கள். அப்படி எல்லா மருத்துவர்கள் மட்டுமல்ல சாதாரண தாதிகளும் அகப்பட்டுக்கொள்வார்கள். தாராளமாகக் கொடுப்பதற்கு பனடோல்கூட இல்லாத நிலையில் இருக்கும் அவர்கள் நடந்து போகையில் நிலத்தில் கிடப்பவர்கள் காலைப்பிடித்துக்கொண்டு கதறுவார்கள்.

'டொக்ரர் எங்களக் காப்பாத்தாட்டியும் பறவால்ல டொக்டர் சாக்கொல்ல மாட்டிங்களா? தாங்கேலாமல் இருக்கே. நஞ்சூசியாவது அடிச்சுவிடுங்க டொக்டர்.'

அமுதாவால் கணநேரமும் அமைதியாக இருக்கமுடியாது. அப்பாடா என்று நிலத்தில் குந்தினாலும் அடுத்த செக்கனே அவளது பெயர் கூவியழைக்கப்படும்.

'அமுதாக்கா, அமுதா, அமுதாக்கா' என்ற வேதனையும் அவலமுமான குரல்கள் அவளின் முழுநேரத்தையும் வலிநிரம்பியதாயே வைத்திருந்தன.

'அமுதாக்கா, எனக்கு உயிர் வேணாமக்கா. ஊசியொண்டப் போட்விடனக்கா. என்ர அக்கா குப்பியொண்டாவது தாக்கா' இப்படியெல்லாம் கதறுவது போராளிகள் மட்டுமல்ல பொதுமக்களும்தான்.

'அமுதாக்காச்சி என்னடி செய்யிறாய்? எனக்கொரு ஊசி போடனடி அக்காச்சி.' அவள் அவர்களின் கண்களுக்குத் தெரியாமல் குழிக்குள் மறைந்திருந்தாலும் குரல்கள் மூளையை வருத்தும். தலையைப் பிய்த்துக்கொண்டு நிற்பாள். யாருக்கு எதைச்செய்வது என்றறியாமல் தத்தளித்துக்கொண்டு நின்றாள். ஏலுமானளவு ஓடிப்போய் உதவத்தான் செய்தார்கள். அமுதாவை அழைத்தவர்களை சுமதியும் சுமதியை அழைத்தவர்களை அமுதாவும்கூட கவனித்தார்கள். நூற்றுக்கணக்கான காயக்காரரை இல்லாத மருந்துகளுடன் எப்படித்தான் சமாளிப்பது?

அமுதாவுக்காகச் சில ஆண்டுகளாகக் காத்திருந்து அவளின் பிடிவாதம் தெரிந்தபின் விலகி திருமணம் செய்துவிட்டஒருவனும் காயத்தோடு கிடந்தான். அவனுடைய இரண்டு குழந்தைகளும் படுகாயங்களுக்கு உள்ளாகியிருந்தார்கள். அவன் அமுதாவிடம் கெஞ்சினான்,

'என்ர ஒரு பிள்ளையையாவது காப்பாத்தித் தாங்க அமுதா. நான் செத்தாலும் பறவாயில்ல அமுதா. என்ர ரத்தத்த எடுத்து ஏத்தியாவது ஒருபிள்ளைய காப்பாத்துங்க ப்ளீஸ் என்ர மனைவிக்காக' என்றவன் அருகில் நின்றவளின் கையை இறுக்கிப் பிடித்துக்கொண்டான்.

அவனது மனைவியும் குளறி அழுதாள். உடனேயே அமுதா அவனது இரண்டு குழந்தைகளையும் பார்வையிட்டாள். ஓரளவு உயிர்பிழைக்கக்கூடிய நிலையில் இருந்த ஒரு குழந்தையை மட்டும் தூக்கிக்கொண்டு உள்ளே ஓடினாள். அவசரமாகக் காயங்களை துடைத்து வெறுந்துணிகளால் கட்டுப்போட்டு குருதியின் வெளியேற்றத்தை கட்டுப்படுத்தினாள். பனடோல்கள் சிலவற்றை காகிதத்தில் சுற்றிக்கொண்டு குழந்தையையும் தூக்கிக்கொண்டுவந்து அவனது மனைவியிடம் கொடுத்தாள்.

'பிள்ளையக்கொண்டு உடனபோங்க. இதில நிக்கவேணாம்' என்று விரட்டாத குறையாகச் சொன்னாள் அமுதா.

'என்ர மூத்தவனம்மா. இவனையும் ஒருக்கால் பாருங்கம்மா. அவரக் காப்பாத்துங்கம்மா என்று' கண்ணீருடன் கதறினாள் அந்தப் பெண்'

'சொன்னால் கேளுங்க. அவை பிறகு வருவினம். முதல்ல நீங்க இந்தப்பிள்ளையக்கொண்டு இவடத்தவிட்டு வெளியபோங்க.' என்றவாறு அவளை முதுகில் தள்ளிக்கொண்டுபோய் விட்டுவிட்டுத் திரும்பி வந்தவளிடம் பேச்சு மூச்சற்று தன்னருகில் கிடக்கும் தன் மூத்தவனைக் காட்டி,

'அமுதா என்ர மகன் செத்திட்டானா?' என்றான் நம்பிக்கை இழந்தவனாய். அமுதா அவனைப் பார்த்து ஆமெனத் தலையசைத்தாள்.

'என்ர பிள்ளைய ஒருக்கா எனட்டத் தூக்கித் தாங்க அமுதா' என்று கெஞ்சிய அவன் எழுவதற்கு எத்தணித்தான். அவனால் தலையை மட்டும்தான் சற்றுத்தூக்க முடிந்தது. உடலின் வலிமுழுவதும் அவனது முகத்தில் தெரிந்தது. அவனது உடலின் காயங்களிலிருந்து குருதி தாராளமாக வெளியேறிக்கொண்டிருந்தது. தனது காயங்களைக் கட்டுவதன்மூலம் அவனை யாராலும் காப்பாற்றிவிடமுடியாது என்பதை அவனும் உணர்ந்தான்போலும்.

'என்ர பிள்ளைய ஒருக்கா தூக்கிக் காட்டுங்க. அவன்ர முகத்தை காட்டுங்க அமுதா.' அவனுடைய இறுதி ஆசையை அவளால் மறுக்க முடியவில்லை. மெதுவாக அந்தக் குழந்தையைத் தூக்கினாள். மூன்று வயதுக் குழந்தை உயிரறுந்த மலர்ப்பிணமாய் அமுதாவின் கையில் கிடந்தது. அருகில் இழுத்து அந்தக் குழந்தையின் வதனத்தை கண்களில் நிறைத்தவன் நெற்றியில் தன் குருதிதோய்ந்த விரல்களால் வருடினான். அவனது கண்கள் மழையெனப் பொழிந்தன. பெற்றவனல்லவா? தன் மழலையின் நெற்றியில் அழுத்தி முத்தமிட்டான். அந்த முத்தத்தின்மூலம் தன் அத்தனை பாசத்தையும் கொட்டிக் கொடுத்தானா! அவனது பாசத்தின் துயரத்தை அமுதாவால் தாங்கவே முடியவில்லை. அவளது பார்வையையும் கண்ணீர் மறைத்தது. அவனும் வழிந்துகொண்டிருந்த கண்ணீருடன் கேட்டான்,

'என்ர பிள்ளைய புதைச்சி விடுறிங்களா அமுதா?'

ஆமெனத் தலையசைத்த அமுதா குழந்தையுடன் அவ்விடத்தைவிட்டு வேகமாக நகர்ந்தாள். அவள் ஏந்திச்சென்ற குழந்தைப்பிணத்தை குவிந்துகிடந்த பிணங்களோடு வைத்தாள். ஆங்காங்கு காயப்பட்டபடி கிடந்தவர்கள் டொக்டர் டொக்டர் என்று அவளையும் கூவியழைத்தார்கள். அவள் நிற்காமல் ஓடிவந்து சத்திரசிகிச்சைக் கொட்டிலுக்குள் தன்னை மறைத்துக்கொண்டாள். ஓரமாக நின்று ஆழமாக மூச்சை இழுத்துவிட்டு மனதை ஒருநிலைப்படுத்த முயற்சித்தாள். அவனது கண்ணீரும் குழந்தை பிணத்தை அவன் கொஞ்சிய விதமும் வாழ்நாளுக்கும் மறக்கமுடியாத துயரமாக மனதில் வலித்தது. அதை மறக்க நினைத்துத்தான் மீண்டும் காயக்காரரை பார்க்கப் போனாள். அங்கேயும் அவளுக்கு எதிர்பாராத அதிர்ச்சி.

## 24 குழந்தைகளை இழந்தவள்

'டொக்டர் என்ர பிள்ள சாகேல்லத்தானே டொக்டர்? வடிவாப் பாருங்க டொக்டர். என்ர பிள்ளைக்கு உயிர் இருக்கிதுதானே டொக்டர். பாருங்க டொக்டர், பாருங்க டொக்டர்' என்று கதறிக்கொண்டுநின்றாள் ரதி.

பல ஆண்டுகளாகப் பழக்கமான ரதியை இந்த நிலையில் கண்டது அமுதாவுக்குத் தாங்க முடியவில்லை. ரதியும் தேர்ந்த மருத்துவத் தாதிதான். இருந்தும் அவளால் பிள்ளையின் உயிர்த்துடிப்பை நாடிபிடித்தறிய முடியவில்லை. ரதியின் கணவன் மரணமடைந்தும் ஒரு வாரம்கூட கழியவில்லை. இதோ இப்போது இரண்டு குழந்தைகளையும் நிலத்தில் கிடத்திவிட்டு மருத்துவரிடம் மன்றாடிக் கொண்டிருந்தாள்.

'டொக்டர், என்ன டொக்டர். என்ர பிள்ளைகள பாக்க மாட்டிங்களா டொக்டர்? டுரீட்மென்ட் செய்யுங்க டொக்டர். ஒண்டையெண்டாலும் காப்பாத்தித் தாங்க டொக்ட.....ர்..... எனக்காகச் செய்யுங்க டொக்டர்' என்று அவள் உயிரே உருக அழுதாள். அமுதாவைக் கண்டதும் ஓடோடி வந்து அவளின் காலில் விழுந்தாள் ரதி.

'அமுதா அமுதா என்ர குஞ்சுகளக் காப்பாத்தித் தா அமுதா. நான் கேக்கக் கேக்க டொக்டரப்பார் சும்மா நிக்கிறார். நீயாவது ட்ரீட்மென்ட் செய் அமுதா' என்ற ரதியின் ஓலம் அத்தனை எறிகணை வெடிப்பொலிகளையும் விஞ்சி எதிரொலித்துக்கொண்டிருந்தது. அமுதா ரதியை தள்ளிவிட்டு குழந்தைகளிடம் ஓடினாள். அவசரமாக குழந்தைகளைப் பரிசோதித்த அவளுக்கு கைகள் நடுங்கின. செத்துப்போய்விட்ட குழந்தைகளைக் கொண்டுவந்து வைத்துக்கொண்டு உயிராகத் தா என்றால் எந்த மருத்துவரால்தான் உயிர்கொடுக்க முடியும்? செய்வதறியாது குழந்தைகளின் பிணங்களையே பார்த்துக்கொண்டிருந்தாள் அமுதா.

'அமுதா அமுதா நீயும் என்னய கைவிட்டிராத அமுதா' என்ற ரதி நிலத்தில்கிடந்து அமுதாவின் பாதங்களைப் பற்றிப்பிடித்துக்கொண்டு கதறினாள். அவளொரு மருத்துவத் தாதியாக இருந்தும் தன் பிள்ளைகள் இறந்துவிட்டதை அவளால் இன்னுந்தான் உணரமுடியவில்லையா? அப்போதுதான் அமுதா மற்றவர்களை அவதானித்தாள். ரதியைத்தெரிந்த எவருமே அவளின் கண்களில் பட்டுவிடாமல் ஒளிந்துநின்று கண்களைத் துடைத்துக்கொள்வதைக் கண்டாள். அமுதாவின் இதயம் அந்தக்கணம் கல்லாகிக் கனத்தது.

என்ன பாவம் செய்தாள் இந்தப் பெண்? படித்து முடித்த காலத்திலிருந்து மருத்துவப்பணிதானே செய்தாள். எத்தனை உயிர்களைக் காப்பாற் உதவியிருக்கிறாள். இப்போது அவள் நிற்கும் நிலை? ஊர் பிள்ளையை ஊட்டிவளர்த்தால் தன் பிள்ளை தானாய் வளரும் என்பார்களே. இவள் எத்தனை பிள்ளைகளுக்கு தன் குருதியையே கொடுத்து உயிரைக் காப்பாற்ற உதவியிருக்கிறாள். இருந்தும் அவளின் இரண்டு குழந்தைகளுமே பறிக்கப்பபட்டு விட்டார்களே. கணவனையும் இழந்து பிள்ளைச் செல்வங்களையும் இழந்து தட்டத் தனிமரமாய் நிற்கிறாளே. சாவு இவளைமட்டும் எதற்காக விட்டுவைத்தது என்றெல்லாம் அமுதாவுக்கும் ரதிமீது அநுதாபப்பட மட்டுமே முடிந்தது. ரதியை கைபிடித்துத் தூக்கி அழைத்துச்செல்ல முயன்றாள்.

'என்ன அமுதா என்ர பிள்ளகளப் பாக்கமாட்டியா அமுதா?' என்று கெஞ்சிய ரதியோ குருதியால் நனைந்திருந்தாள். அவள் அழும் கண்ணீர் அவளில் படிந்திருந்த குருதியை காயவிடாமல் ஈரமாயே வைத்திருந்தது.

'முதல்ல நீ வா ரதி' என்ற அமுதா அவளை தறதறவென இழுத்துச்சென்று குழந்தைகள் கண்ணில்படாத இடத்தில் இருத்தினாள்.

'ரதி உனக்கொண்டும் நான் புதுசாய் சொல்லத் தேவையில்லை. ட்ரீட்மென்ட் செய்யக்கூடிய கட்டத்தில உன்ர பிள்ளைகள் இல்லை எண்டது உனக்குத் தெரியேலையா? கொஞ்சம் யோசிச்சுப்பார். நீ எத்தினபேருக்கு ட்ரீட்மென்ட் செய்திருக்கிறாய்? எத்தினைபேரை செய்யயேலாமல் விட்டிட்டு விட்டிட்டு ஓடியிருக்கிறாய்? தயவுசெய்து அழாத ரதி. இப்ப நான் தண்ணி ஒழுங்கு படுத்துறன். நீ கட்டயாயமாய் குளிச்சிட்டுஉடுப்ப மாத்திறாய். சரியா?' என்று தன்னிடமிருந்த சவர்க்காரம் உடை என்பவற்றைக் கொடுத்து கிணற்றடிக்குத் தள்ளிச்சென்றாள்.

'சரி அமுதா நான் குளிக்கிறன் அமுதா. ஆனால் உன்னத்தானமுதா நம்பியிருக்கிறன். நீ ஓடிப்போய் என்ர பிள்ளைகள தியட்டக்கு எடு என்ன' என்றபடியே தலையில் தண்ணீரை ஊற்றினாள்.

அடுத்த ஐந்தாவது நிமிடமே அமுதாவை வந்து பிடித்துக்கொண்ட ரதி குழந்தையைப்போல கெஞ்சியழுதாள்.

'அமுதா என்ர பிள்ளைகள தியேட்டரால கொண்டந்தாச்சே? நான் பாக்கலாம்தானே? என்ர பிள்ளைகள்.... பிள்ளைகள்...' என்று பிதற்றியவளை அமுதா பிடித்து இருத்தினாள்.

'ரதி உனக்கு விளங்கேலையாம்மா? பிள்ளைகளக் காப்பாத்த முடியேல்ல ரதி. அதுகளும் தங்கட அப்பாவோட நிம்மதியாப் போய்ச் சேந்திட்டுதுகள்.' என்று அமுதா சொல்லி வாய்மூடமுதல் ரதி நிலத்தில் விழுந்து குளறத் தொடங்கினாள். பயித்தியம் பிடித்தவளாய் அழும் ரதியை பார்க்கப் பார்க்க வேதனையும் வெப்பியாரமும் பொங்கியது அமுதாவுக்குள். அவளது அழுகுரல் ஓலமாகி அத்தனை வேட்டோசைகளையும் வெடியோசைகளையும் விஞ்சி பேரண்டத்தை நிறைப்பதாய் இருந்தது. ரதியைப்போல நூற்றுக்கணக்கான

தாய்களின் குரல்கள் உலகத்தின் செவிகளில் ஒருதுளியேனும் கேட்டிருக்குமா? அவளின் அழுகை இப்போதைக்கு ஓயப்போவதில்லை. அதற்காக அமுதா அங்கேயே குந்தியிருக்க முடியுமா? மெதுவாக ரதியின் தலை தடவிச் சொன்னாள்,

‘ரதி எனக்கு வேலை இருக்கடா. நீ இங்கயே இரு வாரன்’ என்று அவளை நிலத்திலேயே கிடத்திவிட்டுப் புறப்பட்டாள் அமுதா. என்னதான் முயன்றும் அமுதாவால் நிதானமாக இருக்க முடியவில்லை. சுமதியைத் தேடிக்கொண்டு போனாள். ஒருவவரை ஒருவர் கண்டதும் இருவரும் அழத்தொடங்கிவிட்டார்கள்.

‘என்னால எதையுமே தாங்க முடியேல்ல அமுது. லோலோன்ர மனுசி அவன்ர கையில குப்பியக் குடுத்திட்டுப் போறா.’

‘ஆர் மலைமகளா?’

‘என்ன நடக்கிதெண்டே தெரியேல்ல. எங்கபோய் முடியப்போகுதோ’ என்று பெருமூச்சுவிட்டாள் சுமதி.

சுமதி வா போய் காயங்களை கட்டுவம். காயப்பட்ட சனங்களெண்டா வந்து மலையாக் குவியது. இனிக் கப்பலும் வராது. கருமாதியும் வராது. தப்பிறதுகள் தப்பட்டும். ஏலுமானளவு ஏதாவது செய்வம் வா.’ என்றவள் அங்குநின்ற சிலரைப்பிடித்து சிகிச்சையளித்த காப்பகழியருகே கிடந்த பிணங்களை அகற்றினாள். காயப்பட்டவர்களை தூக்கிக்கொண்டுவந்து மருந்துகட்டச்சொல்லி கேட்டவர்களுக்கு காயந்துடைத்துக் கட்டுகளை போட்டுவிட்டார்கள். ஒவ்வொரு பனையோடும் பற்றையோடும் காப்பகழிக்குள்ளுமாய் கிடந்த ஆயிரக்கணக்கான காயமடைந்தவர்களையும் எந்த மருத்துவர்களாலும் உபசரிக்க முடியவில்லை. என்றாலும் மாறி மாறி பலரையும் பார்வையிட்டார்கள்.

சுமதியும் அமுதாவும் தொடர்ந்து நகர்ந்துகொண்டே இருந்தார்கள். குறைந்தது பெனடோலையாவது கொடுத்து அவர்களின் ஆத்மவலிக்குச் சிறுது ஒத்தடம் கொடுக்க விரும்பினார்கள். ஒருவரை பார்த்துக்கொண்டிருக்கும்போதே நிலத்தில் கிடக்கும் இன்னொருவர் ‘டொக்டர், டொக்டர்’ என்று பின்னால் சட்டையைப் பிடித்து இழுத்தார்கள். எதுவும் செய்யமுடியாத இக்கட்டான நிலையிலும் அவர்களால் சும்மா இருந்துவிட முடியவில்லை. அவர்களின் கண்கள் லோலோவைத் தேடின.

லோலோ மருத்துவப் பிரிவில் ஒரு முக்கியமான போராளி. அவன் படையினரின் எறிகணைத் தாக்குதலில் காயமடைந்தான். அவனது காயங்கள் அவனை நடக்கவோ இருக்கவோ முடியாமல் படுக்கையில் கிடத்திவிட்டது. அவனது துணைவியான மலைமகள் ஒரு எழுத்தாளராக இருந்ததால் பலருக்கும் தெரிந்தவளாக இருந்தாள். லோலோவிடம் இவர்கள் சென்றபோது அவன் கரும்புகை கவிந்த ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டு கிடந்தான் அவனருகேயே சில பிணங்களும் கிடந்தன. காயப்பட்டவர்களின் வேதனை அலறல்களிடையே அவன் தன் வேதனையைத் தாங்கிக்கொண்டு மௌனமாய் கிடந்தான். இவர்களை அருகில் கண்டதும் அவன் குப்பியை மறைத்தான்.

அமுதாவுக்கு சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை. போராளிகள் காயப்பட்டவுடன் அவர்களிடமிருந்து குப்பியை பறித்தெடுப்பதெல்லாம் ஒரு காலம். இப்போது அப்படியில்லை. பறித்துவிட்டு இன்னும் இழுபட்டுச் சா என்று விட்டுவிடுவதா. எதுவானாலும் அது காயப்பட்டவரே முடிவெடுக்கட்டும் என்று விட்டுவிட வேண்டிய சூழலல்வா இது.

‘பறிக்க மாட்டன். வைச்சிருங்க. ஆனால் அவசரப்பட்டுக் கடிக்கவேணாம். ஏனெண்டா இங்க கிடக்கிற ஆயிரக்கணக்கான காயப்பட்ட ஆக்களும் குப்பிகடிச்சே சாக ஏலாதுதானே’ என்றாள். அவன் சோகமாய் சிரித்தான். அவர்கள் மீண்டும் தங்கள் கொட்டிலுக்குள் வந்து முடங்கியபோது இதயம் பாறையாய் கனப்பதை உணர்ந்தார்கள்.

இப்படி இன்னும் எத்தனை நாட்களை எதிர்கொள்ளவேண்டி வருமோ? கஞ்சியும் பருப்புத் தண்ணீரும் குருநெல் அரிசிச்சோறும் நாளுக்கு இரண்டுதடவை கிடைப்பதே கேள்விக்குறியாகிப்போனது. மருந்தும் ஆகாரமுமின்றி யாராலும் உயிர்வாழ முடியாது. படையினர்சொன்ன அத்தனை பாதுகாப்பு வலயங்களும் மரணத்தின் வலயங்களாகவே மாறி மாறி விரட்டினாலும் அடுத்த பாதுகாப்பு வலயம் என்று அறிவிக்க படையினருக்கும் இடமில்லை. ஆகவே மக்களை தங்களிடம் வரச்சொல்லி படையினர் அழைத்தார்கள். அழைத்துக்கொண்டே இருந்தார்கள். கொல்வது மாதிரி கொன்றுகொண்டே பாதுகாப்பது மாதிரி அழைத்துக்கொண்டும் இருந்தார்கள்.

போராளிகளோ பொதுமக்களோ அடிப்படை உணர்வில் இப்போது ஒன்றுபோலவேதான் இருந்தார்கள். விட்டுவிட்டு ஓடிப்போன போராளிகளும் இருந்தார்கள். நான் செத்தாலும் சாவனே தவிர ஆமியிட்டப் போகமாட்டன் என்று கதறிய பொதுமக்களும் இருந்தார்கள். தனது கொட்டிலுக்குப் பக்கத்தில் இருந்த குடிலில்கேட்ட அழுகைச்சத்தம் சுமதியை உலுப்பி எழுப்பியது.

‘நீ வேணுமெண்டால் போ. போடா. ஆனா நான் வரமாட்டன். வரவே மாட்டன். என்ர குமருகளக் கூட்டிக்கொண்டு நான் கடலுக்க வேணுமெண்டாலும் விழுந்து சாகிறன். ஆமிட்ட மட்டும் வரமாட்டன். குமருகளக் கெடுத்தத கண்ணால பாத்தவடா நான், கண்ணால பாத்தவ. ஒருக்காலும் வரமாட்டன். நீ போ’

அந்தக் குரலுக்குரிய பெண்ணின் தம்பியோ மகனோ இவர்களையும் படையினரிடம் செல்ல அழைக்கிறார்கள். அதை ஏற்றுக்கொள்ள முடியாத தாயின் மனவெடிப்புத்தான் அது. சுமதி வாமனை நினைத்துக்கொண்டாள்.

வாமன் இப்போது என்ன செய்துகொண்டிருப்பான்? பிணங்கள் குவியும் நந்திக்கடலோரம் நிற்பானா? அல்லது பாதையெடுத்து அணியொன்று போகப்போகிறது என்று கதைக்கிறார்களே, அங்கேதான் நிற்பானா? அவர்களோடு இவனும் போய்விடுவானா? அல்லது என்னைத்தேடி வருவானா? யாருக்குப் பாதுகாப்பு வழங்க யாரால் முடியும்? அவரவர் பாதுகாப்பே கேள்வியாகிவிட்ட இந்நிலையில் வாமன் ஏன் இன்னும் வரவில்லை என்றெல்லாம் யோசித்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு இப்போது வாமனைப்பற்றிய கவலை மட்டுமே இருந்தது.

சுமதிக்கு காதுகள் வலித்தன. வலிதாங்க முடியாமல் அமுதாவிடம் காட்டினாள்.

‘சரியா நோகுது அமுது. ஸ்டெதஸ்கோப காதில மாட்டவே முடியேல்ல. ஒருக்கா பார்’

பார்த்த அமுதா தன் காதுகள் எப்படியிருக்கும் என்பதையும் பார்த்தமாதிரி இருந்தது. ஏனெனில் அவளுக்கும் காதின் உள் மடல்கள் கன்றிச்சிவந்து வலித்தன.

‘எனக்கும் சரியாய்த்தான் நோகுது சுமதி. ஸ்டெதஸ்கோப் தொடர்ந்து கொளுவுறதால தோல் உராய்ஞ்சுபோட்டுது. இப்ப ஸ்டெதஸ்கோப்ப காதில கொளுவுறத நினைக்கவே உயிர் போகுது’ என்றாள் அமுதாவும்.

## 25 பிணத்தின் மடியில்

பொதுவாகவே காயக்காரர் அதிகமாகும் போதுகளில் இப்படித்தான் காது வலியாலும் அவதிப்பட்டார்கள். ஆனால் அப்படி முன்னர் அவதிப்பட்டதெல்லாம் சில வாரங்களோ சில மாதங்களோ தானே. இந்தக் கடின உழைப்போ இப்படி ஆண்டுக்கணக்காய் நீள்கிறதே. இங்கிருந்தும் கலைபட இனி இடமில்லை. அடுத்த கட்டம் என்ன என்ற குடைச்சல் அவளையும் வாட்டியது.

‘அமுதா… அமுதா… அமுதா….’ என்ற ஆண்குரல் அவளை வெளியே அழைப்பது கேட்டது. அந்த ஈனக்குரல் எதையோ உணர்த்த விரைந்தோடினாள். வெளியில் கிடந்த காயமடைந்தவர்களிடையே பார்வையை விசிறினாள். காயம்பட்ட மனிதர்கள் அழுக்கும் குருதியும் வேதனை முனகலும் விம்மலும் கதறலுமாய் கடல்போலக் கிடந்தார்கள். அதற்குள் இருந்துதான் அந்த ஒற்றைக்குரல் அவளை கூவி அழைக்கிறது. அக்குரலை நோக்கி விரைந்துசென்றவள் குரலுக்குரியவனைக் கண்டதும் திடுக்கிட்டாள். குற்றுயிராய்கிடந்து அவளை அழைத்தவன் சேரன்தான். அமுதாவின் பழைய நண்பர்களில் ஒருவன். அவனோடு அவள் கதைக்காமல்விட்டே பல ஆண்டுகள் ஆகிவிட்டன.

‘அமுதா வாழ்க்கை என்றது வாழத்தான். ஒரு நண்பன் செத்திட்டானெண்டா இன்னொரு நண்பனத் தேடிக்கெள்ளுறம் தானே. அதப்போல நீங்கள் ஓமெண்டால் நான்….’ என்றவனை எரித்துக் கருக்குவதுபோலப் பார்த்துவிட்டுச் சென்ற அமுதாதான் இன்றுவரை அவனோடு முகம்கொடுத்து கதைத்ததில்லை. ‘செய்தால் உங்களத்தான் செய்வன். இல்லாட்டில் உங்களப் போலவே உங்களுக்காக நானும் தனியவே வாழுவன். என் மரணம்வரை உங்களுக்காகக் காத்திருப்பேன்.’ என்று எழுத்தில் அனுப்பியவன் உண்மையில் அவளுக்காகவேதான் காத்திருந்தான்.

இதோ மரணம் அணைக்கப்போகும் தருவாயில் அவன்.

அமுதா துயரத்தோடு அவனைப்பார்த்தாள். உயிர்பிழைக்கக்கூடிய நிலையில் அவனில்லை என்பது புரிந்தது. அவளுக்கு உடல் பதறியது. கால்கள் நடுங்கின. அவளால் அவனை மரணத்தின் பிடியிலிருந்து மீட்டெடுக்கவே முடியாது. மார்பு கிழியக்கிடக்கும் அவனது தோற்றம் அவளை அறைவது போலிருந்தது. ஒரே ஓட்டமாய் திரும்பி ஓடினாள். பின்னே அவனது குரல் அவளை துரத்திப்பிடித்தது.

‘அமுதா போகாதை. என்னய விட்டிட்டுப் போகாதையடி. அமுதா.’ என்ற குரல் பலரையும் திரும்பிப்பார்க்க வைத்தது. அமுதாவிடம் வந்த சுமதி அவளை பிடித்து நிறுத்தினாள். என்ன என்று பார்வையால் கேட்டாள். பின்பு அவளே சொன்னாள்.

'எங்க போறாய்? அவன் சாகப்போறான்? போ அமுது. கொஞ்சநேரம் அவனடில நிண்டிட்டு வா' என்று அமுதாவைத் திருப்பிவிட்டாள் சுமதி. அமுதா தன் கண்களைத் துடைத்துக்கொண்டு நின்றாள். எல்லோரும் அவளைப் பார்ப்பது அவளுக்கு மனக்கஸ்ரமாய் இருந்தது.

'அமுதா வா அமுதா' என அவன் ஓயாமல் சத்தமிடுவது அவளுக்கு என்னவோவோல இருந்தது. மற்றவர்கள் அவளை என்ன நினைப்பார்கள்? எனினும் அமுதா அவன்முன்னால் சென்று நின்றாள். அவனோ நம்பமாட்டாதவனைப்போல அவளைப் பார்த்தான். உலகத்தின் வேதனை அனைத்தையும் அப்போது சேரனின் முகத்தில் பார்க்க முடிந்தது. குருதிவழியும் கைகளால் மெதுவாக அமுதாவின் கையைப் பிடித்தான். எதையோ சொல்லத் துடித்தான். எதுவுமே சொல்லாமல் கண்களை அமுதாவின் முகத்தில் பதித்தான். அந்தக்கண்கள் மெதுமெதுவாய் உயிர்வற்றிப்போயின.

அமுதா தன் நடுங்கும்விரல்களால் அவனது இமைகளை மூடினாள். தன் கையை அவன் பிடியிலிருந்து விடுவித்து அவனது கைகளிரண்டையும் சீராக அவன்மீது வைத்துவிட்டாள். சிலைபோல அசைந்துவந்த அமுதாவைப்பிடித்து சுமதி நிலத்தில் இருத்தினாள்.

'இஞ்சபார் அமுது, எல்லாரும் போகப்போயினம் எண்டு கதைக்கினம்'

'எங்க?' என்றாள் அமுதா. சேரனுக்காக அழக்கூட அவளுக்கு நெரமில்லையா? அடுத்தடுத்து வந்த செய்திகள் அத்தனையுமே அவளை அப்படியா காயப்படுத்த வேண்டும். அவனுக்காக அழவேண்டும்போன்று கிளம்பிய உணர்வு அப்படியே அவளுக்குள் கல்லாக இறுகியது.

'என்ன சுமதி சொல்றாய்? எங்க போகப் போயினம்?'

'போராட்டம் முடிஞ்சிதாம். எல்லாரையும் போகட்டாம்.'

'என்ன சுமதி? என்ன சொல்றாய்? எங்க போறதாம்?'

'ஆமியிட்டத்தான்'

'உண்யைாவா சொல்றாய்?'

'ஓ நீயும் போ. நீ போகாட்டில் அம்மா தனிச்சிருவா.'

'ஏன்? நீ' என்ற அமுதாவின் வார்த்தைகள் ஒலிவற்றிக் காற்றாகின.

'வாமன் வராமல் நான் முடிவெடுக்க மாட்டன் அமுது'

'நானும் உன்னோட நிக்கிறன்'

'வேண்டாம் அமுது. அம்மா பாவம் அவவுக்காக எண்டாலும் நீ போகத்தான் வேணும்'

அங்குநின்ற அனைவரும் படையினரிடம் எப்படிச் சரணடைவது என்பதைப் பற்றியே கதைத்தார்கள். அமுதா எந்த அபிப்பிராயமுமே சொல்லாமல் எழுந்து சென்றுவிட்டாள். தம்மைச் சுற்றிலும் கேட்டுக்கொண்டிருக்கும் காயமடைந்தவர்களின் கதறலுக்காக இனி அவர்களாலும் எதுவும் செய்யமுடியாது. காதுகளை முழுமையாகச் செவிடாக்கும்படி அயல்முழுவதும் எறிகணைகள் வெடித்தன. குண்டுகளும் துப்பாக்கிச் சன்னங்களும் மழைபோலப் பொழிந்தன. சுமதி தலையை கையில் தாங்கியபடி நிலத்தை வெறித்துக் கொண்டிருந்தாள். அவளது மனமோ இப்படி மழையாகக் குண்டுகளைப் பொழிய இந்த அரசபடையால் எப்படி முடிகிறது என்று கேள்விகேட்டது.

'போறதுதான் முடிவெண்டால் போங்களன். பிறகேன் மினக்கெடுறிங்கள்?'என்று அவளை மாறி மாறிப் பார்த்துக்கொண்டு நின்றவர்களிடம் சொன்னாள்.

'நீங்களும் வாங்களனக்கா. நீங்க எங்கட அக்கா எண்டு கூட்டிக்கொண்டு போறம்' என்று கெஞ்சலாய் கேட்டார்கள் இரு தம்பிமார்.

'இல்ல நான் இன்னும் வாரதா முடிவெடுக்க இல்லை. நீங்க போங்க. வாமன் வந்தால் வாறன்.' படையினர் மிகமிக நெருங்கி வந்துகொண்டிருப்பது புரிந்தது. அங்கு நின்ற எல்லோருமே விரைவாக நகர்ந்தோடினார்கள். சுமதி மருத்துவ அதிகாரியைத் தேடி ஓடினாள்.

'எல்லாரும் எங்க போறிங்க? எங்கள விட்டிட்டு ஓடுறிங்களா?' என்னும் கதறல்கள் ஓடிக்கொண்டிருந்த சுமதியின் பின்னே கேட்டன. அந்தக்குரல்கள் சுமதியை மட்டுமல்ல பலரின் இதயங்களையும் சாட்டையால் அடித்தமாதிரித்தான் இருந்தன. ஆனால் அதைப்பற்றியெல்லாம் வேதனைப் பட்டுக்கொண்டிருக்கவோ அவர்களை காப்பாற்றவிடவோ முடியாத நிலையில்தான் எல்லோருமே இருந்தார்கள்.

நடக்கக்கூடிய நிலையில் இருந்த காயப்பட்டவர்கள் தாமே எழுந்து நடந்தார்கள். சிலர் நடந்துவருவது உலும்புக்கூடுகள் நகர்வதைப்போன்றிருந்தது. உலக வரலாறுகளைச் சொல்லும் சில திரைப்படங்களில்தான் சுமதி அப்படியான காட்சிகளைப் பார்த்ததிருக்கிறாள். அப்படியொரு நிலைமை தமிழினத்துக்கும் வரும் அதை தானும் கண்களால் காணவேண்டியிருக்கும் என்று அவள் கனவிலும் நினைக்கவில்லை. கிடப்பில்

விழுந்தவர்களின் கதறல்கள் சொல்லில் அடங்காதவை. மரத்துக்கு மரம், பள்ளத்திற்குப் பள்ளம் என்று பார்வைக்குப்பட்ட இடமெல்லாம் காயப்பட்டவர்களின் காட்சிதான். அவர்களின் கதறலும் கண்ணீரும் மட்டுமல்ல இன்னமும் தேடிப்பிடிக்க முடியாமல்போன உறவுகளின் தேடல்குரலும் கதறலும்கூட அவ்விடத்தை சூழ்ந்து இனம் புரியாதவொரு சூனியத்தை ஏற்படுத்தியது. அத்தனையையும் கடந்து ஓட்டமும் நடையுமாய் போனாள்.

'எங்கள விட்டிட்டு போறிங்களா டொக்டரக்கா?' என்று அவளின் பாவாடையை பிடித்திழுத்துக் கதறிய நோயாளியின் கையை பறித்துவிட்டுவிட்டு ஓடிய அவள் போனவேகத்தில் வைத்திய அதிகாரியின் காலடியில் தடக்கிவிழுந்தாள். அவர் கைப்பையும் தோள் குழந்தையுமாக நின்றார்.

'வாங்க சுமதி. இதில இனி நிக்கேலாது. கண்டால் சுடுவான். சனத்தோட போவம்' என்றவரோடு அவரது மனைவியும் நடையைக் கட்டினார்.

'டொக்டர், வாமன்.....?' என்றபடி அவரின் பின்னேயே சென்றாள் சுமதி.

'முதல்ல வாங்கம்மா. பாப்பம். விசாரிப்பம்' என்றவர் நடையை வேகப்படுத்தினார்.

'டொக்டர் வாமனில்லாமல் நான் வரமாட்டன்' என்றவள் தயங்கி நின்றாள்.

'வாம்மா. வானத்தப்பார் எப்பிடி புகை கிளம்புதெண்டு. இதில மினக்கெட்டமெண்டால் காயப்படுவம். வாமனத் தேடிப்பாக்கலாம் வாங்க இப்ப' என்றவர் நடையை மேலும் வேகப்படுத்தினார்.

'டொக்டர், அமுதாவ விட்டிட்டு வாறம்' என்றவளை திரும்பிப்பார்த்த மருத்துவரின் கண்கள் குளமெனத் ததும்பின.

'அந்தத் தெய்வமும் எங்கள விட்டுட்டுப் போட்டுதம்மா' என்றவர் குலுங்கி அழுதார். சுமதியால் நம்பவே முடியவில்லை.

'எப்பிடி டொக்டர்? என்னோடதானே நிண்டவ?' என்ற சுமதிக்கு உலகமே கேட்கக்கூடியமாதிரி சத்தமிட்டு அழத்தோன்றியது. அப்படியே நின்ற சுமதியை வைத்திய அதிகாரியின் துணைவியார் தோளில் தட்டிக்கொடுத்தார்.

'அமுதுக்கு என்ன நடந்ததக்கா? என்று சுமதி விம்மினாள்.

'அப்பதான் இவரிட்ட வந்தா. வாசல்ல நிண்டு என்னவோ சொல்ல வெளிக்கிட்டா. பங்கருக்க வாங்க எண்டு இவர் சொல்லி முடியேல்ல, ரவுண்ஸ் ஒண்டு நெத்திப் பொட்டிலயே இறங்கிட்டுது. சாகிறனெண்டு தெரியாமலேயே ஆள் முடிஞ்சிது. இவர் சரியாய் அழுதுபோட்டார். அப்பிடியொரு நேஸை நான் வாழ்க்கையிலயும் கண்டதில்லையம்மா. அருமையான பிள்ள' என்ற அவரின் வார்த்தைகள் சுமதியை விம்மி விம்மி அழவைத்தன.

சுமதியின் மனம் எரிமலையாய் குமுறிக் கொண்டிருந்தது. எறிகணைச் சத்தமோ அப்பகுதி முழுவதையும் ஆக்கிரமித்திருந்தது. வானம் முற்றுமுழுதாக கரும்புகையாலும் புழுதியாலும் நிறைந்திருந்தது. ஆகாயமே தெரியாத அளவுக்கு அப்புகை கட்டியாய் நிறைத்து காற்று முழுவதையும் தூசியாக்கியது. அந்த இறுதி நாளில் மக்கள் சுவாசித்தது காற்றையே அல்ல, புகையையும் தூசி துகள்களையும்தான்.

வட்டுவாகலை நெருங்கியபோது சுமதியின் கால்கள் நகர மறுத்தன.

'நீங்கள் போங்க டொக்டர். நான் நிண்டு வாமனத்தேடிப் பாக்கிறன்' என்றவள் மருத்துவர் என்ன சொன்னார் என்பதையே கேளாமல் சனத்திரளுக்குள் மறைந்தாள். உயிர்குடிக்கப் பாய்ந்துவரும் சன்னங்களின் ஒலி அவளின் இதயத்தையும் நடுங்கச் செய்தன. அவளது உள்ளமோ வாமன் வாமன் வாமன் என்று உருப்போட்டுக் கொண்டிருந்தது. கால்களோ தொய்ந்து விழப்போகிறேன் என்று பயமுறுத்தின. கண்களை கண்ணீர் மறைத்தது. விம்மும் இதயத்தை அவளால் கட்டுப்படுத்தவே முடியவில்லை. அவளது கால்கள் வந்தவழியை மறந்துவிட்டிருந்தாலும் வந்துகொண்டிருப்பவர்களை விலக்கியபடி எதிர்நடை போட்டன.

தொடர்ச்சியாக வீறிட்டழுதுகொண்டிருந்த ஒரு குழந்தையின் சத்தம் அவளை நின்று பார்க்க வைத்தது. சிறிய மரமொன்றின் அடிவேரில் சாய்ந்தபடி குந்திக்கொண்டிருந்த ஒரு பெண்ணின் மடியிலிருந்துதான் அக்குழந்தை அலறிக்கொண்டிருந்தது. மரத்தில் சாய்ந்திருந்தவள் குழந்தையின் தாயாக இருக்கலாம். அவர்களருகில் எவரும் இருக்கவில்லை. அத்தனை கூட்டத்திற்குள்ளும் தனித்துவிடப்பட்டவர்களாய் தெரிந்தார்கள். அவளின் தலையிலிருந்து குருதி பெருகிக்கொண்டிருந்தது.

'தனியவா வந்திருக்கிறிங்க' என்று கேட்ட சுமதி திடுக்கிட்டாள். ஏனென்றால் அது பதில்பேச முடியாத பிணம்.

வெறுமையாகிவிட்ட சுமதியின் மனத்தால் எதையும் சிந்திக்க முடியவில்லை. எனினும் அழுதுகொண்டிருந்த அந்த குழந்தையை பிணத்தின் மடியிலேயே விட்டுவிட்டு விலக சுமதி என்ற தாதியால் முடியவில்லை.

முற்றும்